Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 54 | சுடர்: 28 | கதிர்: 195 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 26, ஞாயிறு 09.06.2013

# ராஜபக்ஷ-சம்பந்தன் உடன்பாடு வரின் அது நிச்சயம் நியாயமாகவே இருக்கும்

## பங்காளிகளுக்குத் தெளிவுபடுத்துவது ஜனாதிபதியின் பொறுப்பு என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூன் 9

சம்பந்தனும், ராஜபக்ஷவும் ஓர் உடன்பாட்டுக்கு வருவதாக இருந்தால் நிச்சயம் அது ஒரு நியாயமான தீர்வாகத்தானே இருக்கும். அதை விடுத்து எல்லோரையும் அழைத்துப் பேசித் தீர்வு காண முயற்சிப்பது குழப்பத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகத்தான் இருக்கும். அது தீர்வைக் காண்பதற்கு ஆரோக்கியமான முயற்சியும் அல்ல.

இவ்வாறு நேற்று 'உதயனி'டம் கருத்துவெளியிட்டார் தமிழ்த் தேசியக் 'கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இந்தியாவிலிருந்து வந்திருந்த பா.ஜ.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் காணப்படவுள்ள அரசியல் தீர்வு வெறுமனே ராஜபக்ஷ - சம்பந்தன் ஒப்பந்தமாக இருக்கமுடியாதெனத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் வினவியபோதே மேற்கண்ட

தொடர்ச்சி: பக்கம் 04

செய்தி



பக். 05
மதுபான சாலைகள் திறப்பதை எல்லோரும் ஒன்றாக எதிர்ப்போம்

விளையாட்டு



பக். 24
யாழ்.இந்து ஆடவர், கொக்குவில் இந்து மகளிர் மகாணச் சம்பியன்கள்



பக். 25
அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் டோனிக்கு 16ஆவது இடம்

# '13' ஐ செயற்படுத்த இந்தியா தயங்காது

## அடித்துக் கூறுகிறார் நாராயணசாமி

கொழும்பு, ஜூன் 9

"ராஜீவ் காந்தியும், ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அனைத்து அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். இதில் இந்தியா மிக உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கிறது."

நேற்று 'உதயனி'டம் கருத்துத் தெரிவித்த இந்தியாவின் திட்டக்குழு மற்றும் நாடாளுமன்ற விவகார மத்திய இணை அமைச்சர் வீ.நாராயணசாமி இவ்வாறு கூறினார்.

இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானிடம் தெளிவாக எடுத்துரைத்துள்ளதாக வீ.நாராயணசாமி கூறினார்.

அமைச்சர் தொண்டமான் - காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி ஆகியோருக்கு இடையில் அண்மையில் நடந்த சந்திப்பில் வீ. நாராயணசாமியும் கலந்து கொண்டிருந்தார்.



இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

13ஆவது அரசமைப்புத் திருத்தத்திலுள்ள முழுமையான அம்சங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். அதில் இந்தியா உறுதியாகவும், தெளிவாகவும் இருக்

தொடர்ச்சி: பக்கம் 23

### இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு கப்பல் சேவை

சென்னை, ஜூன் 09

இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையிலான கப்பல் சேவையை ஆரம்பிக்க இரு நாட்டு அரசுகளும் முடிவு செய்துள்ளன என்று தென்னிந்தியாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி அமீர் அஜ்வத் தெரிவித்தார்.

கீழ்க் கரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரை நிகழ்த்தியபோதே இலங்கைத் தூதரக அதிகாரி இவ்வாறு கூறினார்.

இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையில் பாரம்பரிய உறவு இருந்து வந்துள்ளது.

தற்போது இராமேஸ்வரம்- தலைமன்னாருக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்க இரு நாட்டு அரசுகளும் முடிவு செய்து பேச்சு நடத்தி வருகின்றன என்று அவர் மேலும் கூறினார். (த-14)

# மோசமான காலநிலையால் மீனவர் ஐவர் கடலில் சாவு

### 17 பேரைக் காணவில்லை
### தெற்குக் கடலில் நேற்று அவலம்



*காலியில் மீட்புப் பணிக்கு தயாராகும் விமானப் படை*

கொழும்பு, ஜூன் 9

நாட்டில் நிலவிவருகின்ற கடும் காற்று, மழையுடன் கூடிய காலநிலையால் பலப்பிட்டிய, பேருவளை மற்றும் தெஹிவளை ஆகிய இடங்களிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற பல படகுகள் கடலில் கவிழ்ந்

தொடர்ச்சி: பக்கம் 23

# புலிகள் மீண்டும் வரலாம் என்ற அச்சத்தில் இலங்கை

### அமெரிக்காவின் அறிக்கை கூறுகிறது

நியூயோர்க், ஜூன் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் உருவாகலாம் என்ற அச்சம் காரணமாகவே சிவில் பாதுகாப்பு நடைமுறைகளில் மாற்றம் கொண்டுவர இலங்கை அரசு பின்னடிக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட 2012ஆம் ஆண்டுக்கான பயங்கரவாத எதிர்ப்புத் தொடர்பான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் தற்போதும் ஆயுதங்களைக் கைப்பற்றி வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. 2009 ஆம்

தொடர்ச்சி: பக்கம் 04

# பயணிகளுடன் வந்த பஸ் பனையை தூக்கி வீசியது

### 17 பேர் காயம்; மிருசுவிலில் நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொழும்பில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டுவந்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மிருசுவில் வைத்திய சாலைக்கு முன்பாக பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாரதி உட்பட 17 பேர் படுகாயமடைந்தனர். மோதிய வேகத்தில் பனை மரம் வேருடன் தூக்கி வீசப்பட்டுள்ளது.



நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்தவர்

தொடர்ச்சி: பக்கம் 04

சிங்கர் வழங்கும் இன்னுமோர் புதிய சேவை

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களை நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ளலாம்

மேலும் கடவுச்சீட்டு,வீசா, சம்பந்தமான உதவிகளை பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கை, உத்தரவாதம், விரைவு

இன்றே நாடுங்கள் அருகிலுள்ள SINGER PLUS SINGER காட்சியறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
சுன்னாகம். 021 224 0555
கொடிகாமம் 0776433888.
சங்கானை 077 2208232
மானிப்பாய். 021 225 5343
நெல்லியடி. 021 226 4937
பருத்தித்துறை 021 226 3411
கிளிநொச்சி 077 4685771
சாவகச்சேரி 021 227 0197
பிரதான வீதி முல்லைத்தீவு 0772475151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளை ஒழிக்க 5000 பிக்குகள் களமிறங்குவர்

## திட்டமிடுகிறது ஹெல உறுமய

கொழும்பு.ஜூன் 09

மாகாணசபைகளை ஒழிக்க வலியுறுத்தி 5 ஆயிரம் பிக்குகளையும், 20 ஆயிரம் சிங்கள உணர்வாளர்களையும் ஒன்று திரட்டிக் கொழும்பில் பெரிய பேரணி ஒன்றை நடத்தும் முயற்சியில் ஜாதிக ஹெல உறுமய இறங்கியுள்ளது.

இதற்காக, மாகாண சபைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 37 சிங்கள, பௌத்த அமைப்புகள் ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையில் ஒன்றிணைந்துள்ளன.

ஹெக்டர் கொப்பேகடுவ நினைவு மண்டபத்தில், அத்துரலிய ரத்தினதேரர், மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே மாகாண சபைகளுக்கு எதிரான தேசிய ஒற்றுமை என்ற பெயரில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



மாகாண சபைகளுக்கு எதிரான கருத்துகளை மக்களிடம் பரப்புவதும், மாகாண சபைகளை இல்லாதொழிக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதுமே இதன் நோக்கம் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

5 ஆயிரம் பிக்குகளையும், 20 ஆயிரம் சிங்கள உணர்வாளர்களையும், ஒன்றுதிரட்டிக் கொழும்பில் பேரணி ஒன்றை நடத்துவதன் மூலம், சிவில் சமூகம் மாகாணசபைகளை ஒழிப்பதில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்ற பலமான செய்தியை அரசியல்வாதிகளிடம் எடுத்துச் செல்வதே இந்த அமைப்பின் முதல் இலக்கு என்று அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (த)

> “ நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 37 சிங்கள, பௌத்த அமைப்புகள் ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையில் ஒன்றிணைந்துள்ளன.

# தேர்தலுக்கு தயாராகிறது தேர்தல் திணைக்களம்



கொழும்பு.ஜூன் 09

வடக்கு மாகாண சபைக்கு எதிர்வரும் செப்ரெம்பரில் தேர்தலை நடத்துவதற்கான தயார்படுத்தல்களை தேர்தல் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரபூர்வ உத்தரவு இன்னமும் கிடைக்காத போதிலும் அதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கியுள்ளோம்.

தேர்தல் வரும் செப்ரெம்பரில் நடைபெறும். இது உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. அதிகாரபூர்வமான உறுதிப்படுத்தலுக்காக நாம் காத்திருக்கிறோம். தற்போது தேர்தல் பணிகளுக்கான அரச பணியாளர்களுக்கான தரவுகளை கோரியுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# மண்டேலா மீண்டும் மருத்துவமனையில்



கேப்டவுன்.ஜூன் 09

தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார். நுரையீரலில் கிருமித் தொற்று மீண்டும் ஏற்பட்டமையினால் அவர் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

94 வயதாகும் மண்டேலாவுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும், அவரது உடல்நிலை மருத்துவ சிகிச்சைக்குக் கட்டுப்படக்கூடிய அளவில்தான் இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் பிரெடோரியாவிலுள்ள பெயர் அறிவிக்கப்படாத மருத்துவமனை ஒன்றில் மண்டேலா சேர்க்கப்பட்டுள்ளார்.

மண்டேலாவைக் குணப்படுத்தவும், அவருக்குக் கஷ்டத்தைக் குறைக்கவும் மருத்துவர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்துவருவதாக அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

இனவெறி ஆட்சியை எதிர்த்து போராடிய மண்டேலா சிறையில் இருந்த 27 ஆண்டு காலத்தில் அவருக்குக் காசநோய் ஏற்பட்டிருந்தது.

வெள்ளையின சிறுபான்மையினரின் இனவெறி ஆட்சியிலிருந்து தென்னாபிரிக்கா ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியபோது அதன் தலைவராக இருந்த மண்டேலா தென்னாப்பிரிக்காவின் தேசத் தந்தையாக மதிக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த)

# 5626 இலங்கைப் படையினருக்கு இராணுவ நீதிமன்றம் தண்டனை

கொழும்பு.ஜூன் 09

2006ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 5626 படையினர் இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளனர் என அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணா நாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த, அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இது தொடர்பானதகவல்களை வெளியிட்டார்.

2006ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட படையினரில், 421 அதிகாரிகளும், 5205 படையினரும் அடங்கியுள்ளனர்.2008-2009 காலப்பகுதியிலேயே அதிகளவிலான படையினர் இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

2008ஆம் ஆண்டில், 36 அதிகாரிகளும், 2634 படையினரும், தண்டிக்கப்பட்டுள்ளனர். 2009 இல் 184 அதிகாரிகளும், 2342 படையினரும் இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

2006 இல் 12 அதிகாரிகளும், 2007 இல் 38 அதிகாரிகளும், 2008 இல் 36 அதிகாரிகளும், 2009 இல் 184 அதிகாரிகளும், 2010 இல் 63 அதிகாரிகளும், 2011 இல் 59 அதிகாரிகளும், 2012 இல் 24 அதிகாரிகளும் இந்தக் காலப் பகுதியில் இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

2006 ஒக்ரோபர் 18ஆம் திகதி காலிக் கடற்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது, உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காமல்,பதில் தாக்குதல் நடத்த உத்தரவிடாமல் தப்பிச் சென்ற கொமடோர் ரி.எம்.பி மென்டிசும், இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட படையினரில் அடங்குகிறார். என்று தெரிவித்தார்.

இந்தப் பதிலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பற்றி விவரங்கள் உள்ளடக்கப்படாதமை குறித்து ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, அது குறித்து தனியாக பதிலளிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.(த)

# களுத்துறையில் 300 வீடுகள் சேதம்



கொழும்பு.ஜூன் 09

களுத்துறையில், சீரற்ற காலநிலை காரணமாக 12 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 292 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை செய்துகொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (த)

# தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை

## அமைச்சர் ஜி.கே.வாசன் தகவல்

சென்னை.ஜூன் 09

இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் மத்திய கப்பல் போக்குவரத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களிடம் பேசினார்.


அப்போது அவர் கூறுகையில்,

வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 49 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இதனால், மீனவர்களின் குடும்பத்தினர் துயரத்தில்

உள்ளனர். தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை பிடித்துச் செல்வது வாடிக்கையாக இருக்கிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை மீட்க வேண்டும் என்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் பேசினேன். சிறையில் தமிழக மீனவர்களுக்கு எந்தவித தொந்தரவும் செய்யக் கூடாது என்றும் வலியுறுத்தினேன்.

இலங்கைக் கடற்படை கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள புதிய கோட்பாடுகளை வரையறுக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கேட்டுக் கொண்டேன்.



இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு சமஉரிமை அளிக்க வேண்டும். அவர்கள் நலன் காப்பாற்றப்பட வேண்டும். தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் அவர்களின் எண்ணத்துக்கு ஏற்ப இரு நாடுகளின் நல்லுறவுகள் பாதிக்காத வகையில் கச்சதீவை மீட்கும் விடயத்தில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.(த)

# அருந்திக எம்.பி. சொல்வது பொய்

பாரிஸ்.ஜூன் 09

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ பொய் கூறுகின்றார் என்று ஊடகவியலாளர் மஞ்சுள வெடி வர்த்தன தெரிவித்தார்.

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட, தனது மனைவியுடன் பிரான்ஸில் வசித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித் திருந்தமை தொடர்பில் பி.பி.சி செய்திச் சேவைக்கு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அருந்திக பெர்னாண்டோவை 2005ஆம் ஆண்டு கொழும்பில் சந்தித்ததன் பின்னர் தான் எங்கேயும் சந்திக்கவில்லை என்றும் பிரான்சில் வசிக்கும் ஊடகவியலாளர் மஞ்சுள வெடிவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

லங்கா ஈ நியூஸ் செய்திச் சேவையின் ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட, கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் திகதி முதல் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் செலுத்திய வரிப் பணம் எங்கே?

## இறைவரித் திணைக்கள ஆணையாளரிடம் தென்மராட்சிப் பகுதி மக்கள் கேள்வி

தென்மராட்சி ஜூன் 9

போரினால் அழிவடைந்த தென்மராட்சி பிரதேச அபிவிருத்திக்கு வெளிநாடுகளே உதவி வழங்கின. எமது மக்களால் அரசுக்கு செலுத்தப்பட்ட வரிப்பணம் ஏன் எமது பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவில்லை.

இவ்வாறு பிரதேச மக்கள் இறைவரி திணைக்கள யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளரிடம் கேள்வி எழுப்பினர்.

**காலத்துக்கு காலம் அரசினால் அறிவிக்கப்படும், விதிக்கப்படும் நேரடி, மறைமுக வரிகளை யாழ்.மாவட்ட மக்கள் தவறாமல் செலுத்தி வருகிறார்கள்.**

யாழ்.மாவட்ட உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சாவகச்சேரி ஐங்கரன் மணி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 'வரி விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்' நடைபெற்ற வரி தொடர்பான கருத்தரங்கிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பட்டது.

காலத்துக்கு காலம் அரசினால் அறிவிக்கப்படும், விதிக்கப்படும் நேரடி, மறைமுக வரிகளை யாழ்.மாவட்ட மக்கள் தவறாமல் செலுத்தி வருகிறார்கள். செலுத்தப்படும் வரிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பெருமளவில் செலவிடப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 30 ஆண்டுகளாக வடபகுதி மக்கள் வரி செலுத்தி வருகின்ற போதிலும் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு அரசின் பங்களிப்பு என்ன?

போரின் பின்னர் பெரிய அழிவுகளைக் கண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக நாடுகளே பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டன - மேற் கொண்டு வருகின்றன. மக்களால் செலுத்தப்படும் வரிப்பணம் மக்களுக்கே என்ற கொள்கைத் திட்டத்தின் கீழ் வடபகுதி மக்களுக்கு அரசினால் ஏன் அபிவிருத்தி நிதி ஒதுக்கப்படுவதில்லை.

நாட்டு மக்களால் செலுத்தப்படும் வரிப்பணம் பகிர்வதில் பாகுபாடு காட்டப்படுவதாகக் கருதுகிறோம் எனக் கேள்விக் கணைகளைத் தொகுத்து அதிகாரிகளை திக்குமுக்காடச் செய்தனர் தென்மராட்சி மக்கள். (த-9)

## சிறுவர் இல்லத்திலிருந்து தப்பிய சிறுமிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றிலிருந்து வெளியே சென்ற 3 பெண்களில் ஒருவர் எங்குள்ளார் என்பது இதுவரை தெரியவில்லை. 2 பேர் கண்டறியப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

குறித்த இல்லத்திலிருந்து 15 வயதுடைய சிறுமியும், 21 வயதுடைய 2 யுவதிகளுமாக 3 பேரும் கடந்த 23ஆம் திகதி வெளியே சென்றுள்ளனர்.

அவர்கள் தேடப்பட்டு வந்த நிலையில் சிறுமியும் யுவதிகளில் ஒருவரும் முல்லைத்தீவில் நின்றிருந்தபோது அந்தப் பகுதி நன்னடத்தை அதிகாரியால் கண்டறியப்பட்டு பொலிஸார் ஊடாக யாழ். சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு மீளவும் அந்த இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று - அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## ஈவினை இந்து மயானத்துக்கு சுற்றுமதில் அமைக்க ஏற்பாடு

வலி.வடக்கு, ஜூன் 9


வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஈவினை பகுதியில் உள்ள இந்து மயானத்துக்கு எல்லைச் சுவர்கள் அமைக்க பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் தெரிவித்தார்.



குறிப்பிட்ட இந்து மயானத்தில் பாதுகாப்பற்ற நிலையில் சடலங்களை எரிக்கும் நிலைமை காணப்படுவதைக் கருத்தில் கொண்டு சுமார் 4 லட்சம் ரூபா நிதியில் எல்லை மதில்களை அமைக்க நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதாகவும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (த-86)

## சட்டவிரோதமான பீடிகள் சாவகச்சேரியில் பறிமுதல்

தென்மராட்சி, ஜூன் 9



சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சட்டவிரோத பீடிக் கட்டுகள் சுகாதாரப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சுற்றாடல் வாரம் தொடர்பாக நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை தொடர்பாகசாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய பரிசோதனைகளின் போது கட்டுத்துண்டு இல்லாத பாவனைக்கு உதவாத பெருமளவு பீடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த வேளையிலே கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கைப் பகுதியில் அனுமதி பெறாமல் தயாரிக்கப்படும் பீடிகள் வடபகுதி வர்த்தக நிலையங்களுக்கு கட்டுத்துண்டு (லேபல்) இல்லாமல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவை சிகரட்டினை விட மோசமான பாதிப்பைத் தரக்கூடியவை என்பதால் கட்டுத்துண்டு இல்லாத எந்த ஒரு புகையிலை, உற்பத்திப் பொருள்களையும் வாங்கிப் பயன்படுத்த வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். (த-9)

## புதிய சமுர்த்தி அலுவலர்களுக்கு பிரதேச செயலர் பிரிவு ஒதுக்கீடு



யாழ்ப்பாணம், ஜூன் 9

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய பிரதேச செயலர் பிரிவு குறித்த நியமனக் கடிதங்கள் பிரதேச செயலர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலகங்களில் கடமையாற்றவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பெயர்ப் பட்டியலைக் பிரதேச செயலர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அனைத்துப் பிரதேச செயலர்களுடன் சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், புதிய நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


நெடுந்தீவுக்கு 8 பேரும், ஊர்காவற்றுறைக்கு20பேரும், காரைநகருக்கு 11 பேரும், வேலணைக்கு 23 பேரும், யாழ்ப்பாணத்திற்கு 21 பேரும், நல்லூருக்கு 29 பேரும், கோப்பாய்க்கு 27 பேரும், உடுவிலுக்கு 23 பேரும், தெல்லிப்பழைக்கு 31 பேரும், சங்கானைக்கு 19 பேரும், சண்டிலிப்பாய்க்கு 24 பேரும், பருத்தித்துறைக்கு 15 பேரும், கரவெட்டிக்கு 14 பேரும், சாவகச்சேரிக்கு 39 பேரும், மருதங்கேணிக்கு 17 பேரும் என 321 பேருக்கு பிரதேச செயலர் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. (த-7)

## ரூ. 41/2 லட்சம் காசோலை மோசடி

வலி. வடக்கு ஜூன் 9

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி சம்பந்தமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி வர்த்தக நிலையமொன்றைச் சேர்ந்த ஒருவர் இந்த மோசடியை செய்துவிட்டு தலைமறைவாகியுள்ளதுடன் வர்த்தக நிலையத்தையும் கைவிட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்ட சந்தேக நபரை தேடிவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-86)



## சங்கானை பிரதேச செயலக நடமாடும் சேவையில் 1,500 பேர்

சங்கானை, ஜூன் 9

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நடமாடும் சேவையில் 1500 இற்கும் மேற்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கு வருகை தந்திருந்தனர்.

காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை இந்தச் சேவை நடைபெற்றது. இந்தச் சேவையில் பிரதேச செயலர், நிர்வாக அலுவலர், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர்கள், எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள் உட்படச் சகலரும் தத்தமது பணிகளை மிகவும் சிறப்பாகச் செய்தனர்.

பொதுமக்கள் தங்குவதற்கான தகரப்பந்தல்கொட்டகைஅமைத்து, இருக்கைகள் போட்டு அவர்களுக்கான வரிசைக் கிரமமான இலக்கங்கள் கொடுக் கப்பட்டன. பின்னர் ஒவ்வொரு பத்துப் பேராகஒழுங்குமுறையில்அழைக்கப்பட்டு அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.



சத்தியக் கடதாசி தேவைப்பட்டவர்கள் அம்மண்டபத்திலேயே அதனைப் பெற்றுக் கொள்ள வசதியாக சமாதான நீதிவான்கள் இருவர் அப்பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். பொலிஸ் முறைப்பாட்டை உடனடியாகப் பெற்றுக் கொள்ள வட்டுக்கோட்டை, மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் சமூகமளித்திருந்தனர். இதேவேளை பவ்ரல் அமைப்பினால் இலவச புகைப்படங்கள் தேவைப்பட்டோருக்கு உடனடியாகவே வழங்கப்பட்டன. 25 கிராம அலுவலர்கள் பிரிவின் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள 19 பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1500 இற்கும் மேற்பட்டோர் சமூகமளித்திருந்தனர். இவர்களில் 1400 இற்கும் மேற்பட்டோருக்கு அன்றைய தினமே அடையாள அட்டை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கூடியதாக இருந்தது. தகுந்த ஆவணங்கள் கொண்டுவராத ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக் கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-29)

## தொடர்ந்தும் மறியல் சிவசங்கருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 9

சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பதில் கிடைக்காததனால் மருத்துவர் எஸ்.சிவசங்கர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை இவர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டார்.

அன்றிலிருந்து இன்று வரை 14 நாள் களுக்கு ஒரு தடவை அவர் நீதிமன்றுக்குக் கொண்டு செல் லப்படுவதும், விளக்க மறியலில் வைக்கப்படுவதுமாக உள்ளார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அவர் தொடர்பான வழக்கின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால் இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும் குற்றச்சாட்டுப் பத்திரமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பயணிகளுடன் வந்த பஸ் பனையை தூக்கி வீசியது

கள் கொடிகாமம், வரணி வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ்களில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு ஆறுபேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.
சிறுகாயங்களுக்கு இலக்கான 11 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வெளியேறினர்.
கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
பஸ் சாரதியான வத்தளையைச் சேர்ந்த ஜே.அலோச்பிரசாத் (வயது-25) மற்றும் பயணிகளான அரியாலை ஆட்காட்டி வீதியைச் சேர்ந்தவர்களான ஜி.அருளினி (வயது-39), கே.பிரதீபா (வயது-30), எஸ்.ஞானேஸ்வரன் (வயது-44), அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த பி.அங்குசன் (வயது-22), வட்டுக்கோட்டை கல்லூரி வீதியைச் சேர்ந்த ஆர்.ரவிதரமோகன் (வயது-46) ஆகியோரே யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவர். (ஒ-9-78)

## புலிகள் மீண்டும் வரலாம் என்ற அச்சத்தில் இலங்கை

ஆண்டு போர் முடிவுக்கு வந்து விட்டாலும் ஆயுதங்களும், வெடிபொருள்களும் மீட்கப்பட்ட வண்ணமே உள்ளது.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தை மாணவர்கள் கொண்டாடும் மாதமாகப் பேரணி நடத்தினர். பேரணியின் போது 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். புலிகளின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் இயங்கிக்கொண்டிருக்கின்றனர் என்று இலங்கை அரசு கருதுகிறது.
வெளிநாடுகளில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்ட பலர் பணம் அனுப்பி வருகின்றமை குறித்தும் அக்கறை செலுத்தி வருகின்றது.
அத்துடன் புலிகளின் சர்வதேச பொருளாதாரத்தைத் தடுப்பதற்குப் பல வழிகளில் இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.
இந்த நிலையில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாகலாம் என அச்சமடைந்து முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தி வருகின்றது - என்றுள்ளது.
(த-14)

## ராஜபக்ஷ-சம்பந்தன் உடன்பாடு வரின் அது நிச்சயம் நியாயமாகவே இருக்கும்

வாறு குறிப்பிட்ட சம்பந்தன் இது குறித்து மேலும் கூறியதாவது:
சம்பந்தன் ஒரு தீர்வுக்கு வரத் தயார். நான் தான் தயாரில்லை என்பது போலல்லவா ஜனாதிபதியின் கருத்து இருக்கிறது. சம்பந்தன் ஒரு தீர்வுக்கு வருவாராக இருந்தால் தனது பங்காளிகளை அழைத்து செயற்பட வேண்டியது பற்றிப் பேசுவது ஜனாதிபதியின் பொறுப்பு.
தீர்வைப் பற்றி ஏன் அவர் தனது பங்காளிக் கட்சிகளுடன் பேசக்கூடாது. ராஜபக்ஷவின் அரசியல் அந்தஸ்தும் அவரது பங்காளிக் கட்சிகளின் அந்தஸ்தும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமல்லவா?
நானும் சம்பந்தனும் நியாயமான ஒரு தீர்வுக்கு வரத் தயார். இதை ஏற்போம் என்று ஏன் அவரால் சொல்ல முடியாது? தீர்வுக்கான ஆதரவு தமிழ் மக்களிடமிருந்து எனக்குக் கிடைக்குமாக இருந்தால் சிங்கள மக்களின் ஆதரவுள்ள ராஜபக்ஷவும் ஒளிவுமறைவின்றி உண்மையாகவும், நேர்மையாகவும் செயற்பட முன்வர வேண்டும்.
சம்பந்தனும், ராஜபக்ஷவும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் நிச்சயம் அது நியாயமான ஒரு தீர்வை நோக்கியதாகத்தான் இருக்கும். நியாயமான ஒரு தீர்வுக்கு சம்பந்தன் தயார் என்பது அவருக்கும் தெரியும்.
அதேவேளை இந்தியா, அமெரிக்கா, சர்வதேச சமூகம் ஆகியவை தன்பக்கம் இல்லையென்பதும் அவருக்குத் தெரியும். தீர்வுக்காக எல்லோரையும் அழைத்துப் பேசுவது என்பது குழப்புவதற்காகத்தான். நேர்மையாகத் தீர்வைக் காண்பதற்கல்ல.
இவ்வாறு சம்பந்தன் கூறினார்.

---

**கோழி எரு விற்பனைக்கு**

கோழி எரு உடனடி விற்பனைக்கு.
தொடர்பு: 0778448300
வீனஸ்பாம் கலாசாலை வீதி, முத்துதம்பி ம.வித்தியாலய வடக்கு லேன், திருநெல்வேலி.

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாள்கள் நிரம்பிய கறுப்பு பொம் மேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776062747 (38169)

**விற்பனைக்கு**

பெரிய இன ஆடு, மாடுகள் விற்பனைக்கு உண்டு. கோண்டாவில்.
தொடர்பு: 0755113457

**German Swiss மொழிகள்**

தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறுகிறது. Goethe Instituteல் Exam நடைபெறும்
#10, Palaly Road, Jaffna.
Mrs.Kajenthini
தொடர்பு: 0771604823 (38171)

**காணி, வீடு விற்பனைக்கு**

கே.கே.எஸ். றோட், துரைவீதி இணுவில் தெற்கில் 3½ பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு மற்றும் உடுவில் மேற்கு, சுன்னாகத்தில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில்) 5 பரப்பும் 17குழி காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0775408757

**ஆனைமுகன் அரைக்கும் ஆலை**

கே.கே.எஸ் வீதி, இணுவில். Tel-0775029703
- கொப்பறாத் தேங்காய் எண்ணெயாக்கி கொடுக்கப்படும்.
- மிளகாய், அரிசி, ஈர அரிசி, கோப்பி அரைத்துக் கொடுக்கப்படும்.
- கொப்பறா வாங்கப்படும்.

**ACCA**
**பட்டய சான்றிதழ் பெற்ற கணக்கஞர்கள் சங்கம்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 15/06/2013, 22/06/2013
★DECEMBER 2013 பரீட்சைக்குரிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★விரிவுரைகள் , செயன்முறை பயிற்சிகள் வார இறுதிநாள்களில் நடைபெறவுள்ளன.
★அனுமதிகளை தொழில்சார் கற்கைகள், நிறுவனம் (IPS) யாழ். பல்கலைக்கழகம் முன்பாகபெற்றுக்கொள்ளவும்.
முகாமைத்துவ சபை (38149)
ACCA கற்கை வழிகாட்டல் அலகு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0779239334 (38177)

**விற்பனைக்கு**

அல்ஷேசன் ஜேர்மன் (செப்பட்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779346599
துர்க்கா பாம் சுன்னாகம்.

**அறைகள் வாடகைக்கு உண்டு**

இராமநாதன் றோட், திருநெல்வேலியில் உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக மாணவர்களுக்கு (பெண்கள் மட்டும்) சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. (38173)
தொடர்பு:0784899953, 0779906362

**வேலை ஆள் (பெண்) தேவை**

பண்ணையில் சிட்டை எழுதுநராக (BILL CLEARK) பணியாற்ற ஆள் தேவை. ஆர்வம் உடையோர் நேரில் வரவும். 0778448300
வீனஸ்பாம் கலாசாலை வீதி, முத்துதம்பி ம.வித்தியாலய வடக்கு லேன், திருநெல்வேலி.

**வேலை ஆள் தேவை**

வாகனத்தில் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு முன் அனுபவம் உள்ள விநியோக உதவியாளர் (ஆண்) இருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0773923036 (38156)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1979, மூல நட்சத்திரம் 7 இல் செவ்வாய் உடைய நோர்வேயில் PR உள்ள மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
T.P- 077 966 7533 (38150)(3.6.7.11)

**மணமகள் தேவை**

வவுனியாவிலுள்ள 32 வயது 5'4'' உயரம் கொண்ட D.C.S படித்த J.C.B ஒப்பறேற்றர் வேலையில் உள்ள, மாதம் 50,000/= மேல் வருமானமும், எந்தத் தீய பழக்கமும் அற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
தொடர்பு:077 153 9977 (38456) (3.6.7.11)

**யாழில் இயங்கும் அச்சக நிறுவனத்துக்கு பின்வரும் வேலைவாய்ப்புகள்**

I *கணினி வடிவமைப்பாளர்* (Computer Designer போட்டோசொப், கொறல்றோ- Photoshop, Coredraw)
II *நேரச்சு இயக்குநர்* (மெசின்மைண்டர்- Kord Machin minder)
III *புத்தகம் கட்டுபவர்* (பைண்டர்-Binder)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (38174) (EPF, ETF உண்டு)
தொடர்புகளுக்கு: 0758511915, 0718612783

**அக்ஷயா**

பேசியல், மேக்கப், ஹெயாஸ்டைல், தலைமுடி அயன்பண்ணுதல், சுருட்டுதல், கேளிங், சாறிவுளவுஸ் கட்டிங் மேற்படி பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல்எடை கூட்டும் குளிசை, உடல் எடையைக் குறைக்கும் பால்மா, கறுப்பு, பிறப்பில் கறுப்பு, நாட்பட்ட பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் ''வைத் நிங்கிறீம்'' தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்கு உண்டு.
பதிவு இல: 16168
0772106155
வைத்நிங் பேசியல் செய்து கொள்ளலாம்.
அக்ஷயா,
நாவலர் றோட், (பிறவுண் றோட், சந்தி அருகில்) யாழ். (38167)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழில் புதிதாக இயங்கிவரும் பிரபல நிறுவனத்துக்கு முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், விற்பனை விநியோகஸ்தர்கள் உடனடியாகத் தேவை.
- ★ முன் அனுபவம் அவசியமில்லை
- ★ தகுந்த பயிற்சி வழங்கப்படும்
- ★ சம்பளமாக 17, 200/- வழங்கப்படும் (பதவிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்)
- ★ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- ★ தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்
- ★ வவுனியா கிளைக்கும் விண்ணப்பிக்கலாம்.

(38114)
தொடர்புகளுக்கு: இல.320, A2/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 0774301972
யாழ்.: 0775065219
வவுனியா: 0775141131

**நன்றி தெரிவிக்கின்றோம்**

எமது ஆலயத்திற்கு மின்சாரம் பெற்றுத்தந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் அவர்களுக்கும் மற்றும் தவிசாளர் திருமதி.நா.ஐங்கரன் அவர்களுக்கும் எங்களுடைய நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவர்களுடைய பணி சிறக்க கறுத்தார் வைரவரின் அருளாசியை வேண்டி நிற்கின்றோம்.
ஆலயத்தினர், கறுத்தார் வைரவர் ஆலயம், தேவாலய வீதி, சங்கானை. (38163)

**விற்பனை பிரதிநிதி தேவை**

Laboratory & Medical Equipment வழங்கும் பிரபல்யமான தனியார் நிறுவனமான P&T Trading (PVT) LTD நிறுவனத்தின் யாழ்.கிளைக்கு விற்பனை பிரதிநிதி தேவை.
தகைமைகள்: 20-35 வயதுக்கு உட்பட்டவராகவும், க.பொ.உ யர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் சித்தியடைந்தவரும், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும், மேற்படி துறையில் அனுபவம் உடையவராகவும், யாழ். மாவட்டத்தை பிறப்பிடமாக கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.
உங்கள் விண்ணப்பத்தினை 15.06.2013 ஆம் திகதிக்கு முன்னர் Ptsd@Sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேற்படி பணிக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு தலைமை அலுவலகத்தில் 03 மாத கால பயிற்சி வழங்கப்படும்.
(சி/9284) (45.6.3.7)

**சுன்னாகத்தில் மங்களகரமான ஆரம்பம்**

**Nalin City Showroom**

(காட்சியறை மற்றும் சேவைநிலையம்)

**09-06-2013**

உங்கள் அனைத்து கணினித் தேவைகட்கும் நாடுங்கள்.

NALIN
116-G, K.K.S Road Chunnakam.
Phone no- 0212242222 Hotline - 0777140431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான சாலைகள் திறப்பதை எல்லோரும் ஒன்றாக எதிர்ப்போம்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9
எல்லோரும் ஒன்று சேர்ந்து இங்கு மதுபான சாலைகள் திறக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
பல்வேறு பிரச்சினைகள் உருவாகுவதற்கு இதுவே முக்கிய காரணமாக இருந்து வருகிறது என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.
நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இங்கு மதுபான சாலைகள் திறக்கப்படுவதை எல்லோரும் ஒன்று சேர்ந்து தடுத்து நிறுத்த வேண்டும். மதுபானம் அருந்துவோராலேயே பல பிரச்சினைகள் உருவாகின்றன.
இங்கு இடம்பெறும் விபத்துக்களுக்கு இதுவும் காரணம். இது தவிர விழுமியங்கள் பின்பற்றப்படாது போகின்றன. குடும்பத்தில் கௌரவப் பிரச்சினை ஏற்படுகிறது. ஒழுக்கம் சீர்கெட்டுப் போகிறது. குடித்துவிட்டு வாகனங்கள் ஓட்டுகிறார்கள். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.
குடித்துவிட்டு பொது இடத்தில் இடையூறு விளைவிக்கிறார்கள். வீதியால் சென்று வருபவர்களுடன் இடையூறு செய்கிறார்கள்.
இவ்வாறு இடையூறு செய்பவர்களை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கின்றனர். எனினும் இடையூறு விளைவிப்பது தொடர்கிறது.



தவிர குடித்துவிட்டு வீடு செல்வதனால் வீட்டில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்றலில் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். தேவையில்லாது வாக்குவாதப்படுவதாலும் கைகலப்பில் ஈடுபடுவதனாலும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்படுகிறது.- என்றார். (த-4-86)

## இருநூறு ஹெக்ரேயரில் வாழைச் செய்கை பாதிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்.குடாநாட்டில் அண்மையில் வீசிய 'மகாசென்' புயலினால் 200 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வாழைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
காற்றின் தாக்கத்தினால் கூடுதலான வாழைகள் குலைகளுடன் முறிந்து விழுந்து சேதமாகியுள்ளன.
பாதிக்கப்பட்ட வாழைச் செய்கை தொடர்பாக முழுமையான விவரங்கள் விவசாய சம்மேளங்கள் விவசாய போதனாசிரியர் பிரிவுகள் ஊடாகத் திரட்டப்பட்டன.
கோப்பாய், நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி, உரும்பிராய், ஊரெழு, மாசிவன் போன்ற இடங்களில் உள்ள வாழைத் தோட்டங்களில் பாதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளன.
அதேசமயம் கடந்த சில நாள்களாகவீசிவரும்பருவப்பெயர்ச்சி காற்றினாலும் வாழைகள் பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளன. (த-17)

## தெல்லிப்பழைச் சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தேர்தல்

வலி.வடக்கு, ஜூன் 9
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான புதிய பணிப்பாளர் சபையைத் தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் சங்கத்தின் நிதி நிலைமை இது வரைகாலமும் நன்றாக இருப்பதாகவும் இலாபத்தில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்பட்ட போதிலும் தற்போது சங்கம் நட்டத்தில் இயங்குவதாகவும் கோடிக்கணக்கான கடன் வங்கிகளுக்கும் அரசுக்கும் செலுத்த வேண்டி உள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.
இந்த முறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணிப்பாளர் சபைக்கான தெரிவில் இரண்டு குழுக்கள் களமிறங்க தயாராகியுள்ளதுடன் தேர்தல் கடும் போட்டியானதாக இருக்கும் எனவும் பொதுச் சபை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.
சங்கத்தின் பணிப்பாளர் சபை மற்றும் தேர்தலில் போட்டியிடும் குழுக்கள் பொதுச்சபை உறுப்பினர்களுடைய வீடுகளுக்குச் சென்று பிரசாரத்திலும் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். (த-86)

## 4 வீதிகள் புனரமைக்கப்படும்

வலி.வடக்கு, ஜூன் 9
உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட நான்கு வீதிகளை'பிரதேச சபையின் நிதியில் இருந்து திருத்துவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச சபை மேற் கொண்டுள்ளதாக வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஸ் தெரிவித்தார்.
வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தாவடி பத்தானை வீதி, இணுவில் நியாம்பத்தை வீதி, ஏழாலை இலந்தைக் கலட்டி வீதி, சங்குவேலி அந்திரான் வீதி என்பனவே புனரமைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.
குறிப்பிட்ட வீதிகளை அதிகளவிலான பொது மக்கள் பயன்படுத்துகின்றபோதிலும் நீண்ட காலமாக அவை திருத்தப்படாது இருந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-86)

# தமிழ் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர்கள் யாழ்.மருத்துவர்கள்

## மருத்துவர் லோஷினி அஞ்சலி நிகழ்வில் மன்னார் ஆயர் புகழாரம்





யாழ்ப்பாணம், ஜூன் 9
எமது பிரதேசத்தில் கடவுளுடைய பிரசன்னம் இருந்தாலும் எல்லாவிதமான தீமைகளும் இனக் கலவரங்களும் தாராளமாக நடைபெறுகின்றன. இதற்கு மத்தியில் முழுமையான ஆன்மாவைப் பெற்றுக் கொடுப்பதற்காக அர்ப்பணிப்பான சேவைகளைச் செய்பவர்கள் மருத்துவர்கள் என்று மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசேப் ஆண்டகை தெரிவித்தார்.
யாழ்.போதனா வைத்திய சாலையின் உணர்வழியியல் துறை மருத்துவர் லோஷனி லக்ஷ்மனின் ஆத்ம அஞ்சலி நிகழ்வும் நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
ஆயர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-
மனிதனுடைய முழு வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக தங்களுக்கு என்றுமட்டுமல்லாது தமிழினத்தின் துன்பங்களை அதாவது உடலில் இருக்கும் நோயைக் குணமாக்கியவர்கள் மருத்துவர்கள்.
அவ்வாறனதொரு நிலையில் மக்கள் மீது வைத்த பாசத்தோடு அவர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள்.
அவ்வாறானதொரு மருத்துவ சேவையை வழங்கியவர்கள் மருத்துவர் லக்ஷ்மனின் குடும்பம். இவர்களின் பெயர் சொல்லி இன்னும் பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.
எமது பிரதேசத்தில் கடவுளுடைய பிரசன்னம் தாராளமாக இருந்தாலும் எல்லாவிதமான தீமைகளும் இனக் கலவரங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆயினும் நோயில் வாடும் மக்களின் ஆன்மீக விடுதலையைக் கொடுப்பதற்காக இறைவனோடு இறைவனாக இருந்து மனதார சேவையாற்றும் மருத்துவர்களை நன்றியுடன் நினைவு கூருகிறோம். - என்றார்.
இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் 'மகிழ்வுடன்' எனும் சிறப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது. (ஒ-14)

# குருநகர் மீனவர் படுகொலை நினைவு நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 9
மண்டைதீவு கடற்பகுதியில் கடந்த 1986.06.10ஆம் திகதி இடம்பெற்ற குருநகர்மீனவர் படுகொலையின் 27ஆவது நினைவுதினம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
அன்றையதினம் குருநகர் ஆலயங்களில் விசேட ஆராதனை வழிபாடுகளும் குருநகர் சனசமூக நிலையத்தில் உள்ள நினைவு தூபிகளில் நினைவு நிகழ்வும் இடம் பெறும்.
1986ஆம் ஆண்டு குறிப்பிட்ட தினத்தன்று கரைவலைத் தொழிலை மேற்கொள்வதற்காக தூய ஒளி படகில் சென்ற குருநகரைச் சேர்ந்த இளைஞர்கள், முதியவர்கள் என 31 மீனவர்கள் மண்டைதீவு கடற்பகுதியில் கடற்படையினரின் கொடூர தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-7)



# கண்ணகி அம்மன் துறையூடாக நயினை செல்வதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9
நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்துக்குச் செல்லும் ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறை முகத்தின் ஊடாக தமது பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இந்தப் பகுதி மக்களின் வசதிக்காக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.
இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் உற்சவத்தையொட்டி காலை 9.30 மணிக்கு கண்ணகியம்மன் துறைமுகத்தில் இருந்து நயினாதீவுக்கு படகு புறப்படவுள்ளது.
இது பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் அப்படகு கண்ணகி அம் மன் துறை முகத்தை வந்து சேரும்.
விசேட உற்வசகாலங்களில் மக்களின் வரவுக்கேற்ப படகுகள் போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடுத் தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, புங்கன் குளம் வீதியில் அமைதியான சூழலில் 2¼ பரப்புக்காணியில் அமைந்த நன்னீர் கிணற்றுடன் கூடிய ஓட்டு வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 720 9686

(38131)(3.5.6.7)

## காணி விற்பனைக்கு

யாழ்.கே.கே.எஸ். வீதியில் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு (சுற்று மதிலுடன்) உண்டு.

தொடர்பு: 077 836 1422, 077 165 1621

(38152)(2)

## சேவை

இலங்கையில் முதன் முறையாக Canada, Australia வில் சிறு வயது பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியும். (8 வயது முதல்) இத்தோடு பாதுகாப்பு முறையில் தாய்,தகப்பனும் செல்ல முடியும். இந்த சந்தர்ப்பத்தை இலங்கையில் எங்கள் நிறுவனம் மாத்திரமே முதன் முறையாக அறிமுகப்படுத்துகிறது.

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

தொடர்பு: 077 363 7864

(இ/8932)(3.5.6.7)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு: 021 5671111

advt@uthayan.com

## கார் விற்பனைக்கு

K.K இல மாருதி Zenstlo VXI சில்வர் கலர் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 495 7323

(38140)(3.5.6.7)



சரவணை, மயிலைப்புலம், திருப்பொலிகட்டுவன்வான்

# அருள்மிகு ஐயனார் திருக்கோயில்

## திருக்குடமுழுக்குப் பெருவிழா

12.06.2013 (புதன்கிழமை)

**சுபவேளை**

முற்பகல் 11.20 மணிதொடக்கம் 11.55 மணிவரை

10.06.2013 திங்கட்கிழமை காலை 6மணிக்கு கிரியை ஆரம்பம்

**எண்ணெய்க்காப்பு**

11.06.2013 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5மணி வரையும் அனைவரும் கலந்துகொண்டு ஐயனாரின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய திருப்பணிச் சபையினர்

அறங்காவற் சபையினர்.

(38134)(4.5.7)

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடத்திற்கான நேர்முகப்பரீட்சை

1. எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்
2. எரிபொருள் நிரப்பு நிலைய உதவியாளர் (பம்பர்)
3. கிளை முகாமையாளர்


மேற்படி பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14.06.2013 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு சங்கத் தலைமையலுவலகத்தில் நடைபெற வுள்ளதால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த தகைமையுடைய விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். எரிபொருள் நிரப்பு நிலைய உதவியாளர் (பம்பர்) இற்கு தகைமை கருத்தில் கொள்ளப்படமாட்டாது. தெரிவு செய்யப்படுவோர் ரொக்கப்பிணை செலுத்துவதற்கு தகுதி உடையவராக இருத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தலைவர்,

காரைநகர் ப.நோ. கூ.சங்கம் (வ.து)

(c/9653)(3.6.7.11)

## கடைச்சல் இயந்திரம் / Lathe Machines



- ★ கடைச்சல் இயந்திரம் / Lathe Machines
- ★ பவர் பிரஸ் / Power Press
- ★ உருவமைக்கும் இயந்திரம் / Sheper Machine

சீனா, தாய்வான், இங்கிலாந்து, ரஷ்யா / சிங்கபூர் உற்பத்தி கடைச்சல் இயந்திரம் (2' தொடக்கம் 7' வரை) இயந்திர விசை உருவமைக்கும் இயந்திர புதிய தொகை கூடிய மலிவு விலையில். உத்தரவாதத்துடன்

**Bhathiya Trading Co. (Pvt) Ltd.**

7, Katukurunduwatte Road, Ratmalana.

011 7388161-2, 071 6246123 (Anjana)

(D/8928)

## நீலக்கடல் சுற்றுலா விடுதி

### BLUE OCEN RESORT

(அல்லைப்பிட்டி)



வியாபாரப் பங்குதாரர் அல்லது ஹோட்டல் முழுவதையும் வாடகை அடிப்படையில் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பொருத்தமான ஒருவர் தேவை

- ★ வெண்மணல் கடலோரத்தில் கவர்ச்சிகரமான அமைவிடம்
- ★ 8 நிமிட நேர பயணம்... யாழ்.பண்ணைப் பாலத்தில் இருந்து..
- ★ திருமண மண்டபம், வியாபார நிலையம், நீச்சல் தடாகம், கரப்பந்தாட்ட, பூப்பந்தாட்ட மைதானங்கள் மற்றும் மனதை மயக்கும் இசைக்குழு என்பன ஒருங்கே அமையப்பெற்ற இடம்.

(38124)(2.6.3)

மேலும் இந்த Hotel இல் இளம் ஆண்/ பெண்களுக்கான வேலை வாய்ப்புகளும் உள்ளன.

மேலதிக தொடர்புகளுக்கு: சபின்ஸ் (உரிமையாளர்)

077 835 0478 jj@legendtrading.com

## காணி விற்பனைக்கு

யாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் பலாலி வீதியில், 9½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு : 0773658485

## விற்பனைக்கு

டயலொக்புறோட் பான்ட் (Wi-Max-Unlimited),இணைப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 314 6078

(38133)(3.5.6.7)

## வீடு வாடகைக்கு

கெருடாவில் தொண்டமனாற்றில் புதிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 199 6912

(வி/9655)(2.6)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் 2¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P-077 671 3599,077 051 7001

(35065)(3.6.11)

## சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை

கந்தர்மடத்தில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்தில் உதவியாளராக சேவை பழகுவதற்கு 30 வயதிற்குட்பட்ட பெண் பாலாரிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும். ஆர்வமுடையவர்கள் தங்களது விவரங்களை சுயமாகத் தயாரித்து தபால் மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள்

வைத்திய அதிகாரி,

198, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(38104)(3.6.7.11)

## காணி விற்பனைக்கு

வல்வெட்டிச் சந்தியில் இருந்து ஊர்க்காடு றோட்டில் வரும் முதற்சந்தி வேலியன் தோட்ட வீதிக்கு வடக்குப் புறமாக உள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தொ. பே. 077 077 6231

## வேலைவாய்ப்பு

### வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி தொழில்கல்வி நிலையங்களில்

வெற்றிடங்கள் – போதனா ஆசிரியர்கள்

**வவுனியா - Electrician**

விண்ணப்ப இறுதித் திகதி 16.06.2013

**முல்லைத்தீவு**

Electrician, Motorcycle Mechanic, Sinhala Language

விண்ணப்ப இறுதித் திகதி 23.06.2013

**கிளிநொச்சி - Electrician**

விண்ணப்ப இறுதித் திகதி 23.06.2013

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை தொடர்பு இலக்கத்துடன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலும் செய்யலாம்)

**THE ADMINISTRATIVE OFFICER**

23-1/1, Gregorys' Road, Dehiwala.

Email. ilead.colombo@gmail.com

## மணமகள் தேவை

மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை

மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்

sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். 30 நாட்கள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com 011 4380900 0114344230 (D/8920)

No Dream is too big at

MALAYSIAN COMPANY

# IBC TOURS NOW IN SRI LANKA

TO CHANGE PEOPLES HOLIDAY DESTINATIONS IN THE WORLD

**BRANCH WILL BE OPERATING FROM 10TH JUNE 2013**

WE WILL BE SPECIALIZED ON:

→ Inbound Tours → Outbound Tours → Ticketing → Visa Processing → Hotel Booking → PR Visa → Investor Visa → Residential Visa for Malaysia, Singapore, Bangkok, Dubai, All Europe Countries, USA, Canada, Australia, New Zealand & all other countries.

LOW RATES | LOW PAYMENTS |

GUARANTEED VISA APPROVALS WITH HIGH CUSTOMER SATISFACTION

WHY US: Pioneers in the travel industry for more than 20 years among the top travel agents from all over the world !!!

IBC TOURS

No: 214 Camway Plaza, SrimathBandaranayake Mw, Colombo 12.

Tel: +94 11 2330501, 2330503 Tele Fax: +94 11 2330505

For ENGLISH & SINHALA plz contact Mr. Kasun - 0777798766

For TAMIL plz contact Mr. Dinesh & Kapil - 0777797962, 0777796684

E-Mail: syedibctours@gmail.com, kasunibctours@gmail.com

Web: www.ibclankatours.com

(38192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ அரச உத்தியோகத்தர் அழகான பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:077 284 4179,
Suganthant1983@gmail.com

## விற்பனைக்கு/வாடகைக்கு

NP.PU-XXXX இலக்க டிமோ பட்டா வாகனம் விற்பனைக்கு/ மாத வாடகைக்கு உண்டு
தொடர்பு: 077 137 9676 (38016) (3.5.6)

# இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்
# நிதிக் கூற்றுக்கள் - 2012

### திட்டத்தின் முக்கிய பண்புகள்

| | |
|---|---|
| அங்கத்தவர்கள் | அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும். |
| தகுதியான வைப்புக்கள் | அங்கத்துவ நிறுவனங்களின், இலங்கை அரசினது, பணிப்பாளர்கள், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய தொடர்பான தரப்பினர்களின் வைப்புக்கள், ஏதாவது வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்கு எதிராக பிணையாக வைத்திருக்கப்படும் வைப்புக்கள், கைவிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் செயற்படாத வைப்புக்கள் எனக் கருதப்படக் கூடிய வைப்புக்கள் நீங்கலாக கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள். |
| தவணைக் கட்டண விதிப்பனவு | தகுதியான வைப்புக்கள் மீது ஆண்டுக்கு 0.10% - 0.15% கொடுப்பனவு மாதாந்தம்/ காலாண்டுக்கு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டியது. |
| நட்டஈட்டுக் கொடுப்பனவு | நாணயச் சபையின் கட்டளைப்படி, அங்கத்துவ நிறுவனமொன்றின் உரிமம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்/ இரத்துச் செய்யப்படும் வேளையில், நிறுவனம் ஒன்றின் வைப்பீட்டாளர் ஒருவருக்கு, ஆகக் கூடிய தொகையாக ரூ.200,000 வரை நட்டஈடு வழங்கப்படும். வைப்புக் காப்புறுதி நிதியத்திலிருந்து பெறத்தக்க நிதியின் அளவுக்குப் பொறுப்பு மட்டுப்படுத்தப்படும். |

### அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு | 2012 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு (மீளக்குறிப்பிடப்பட்டவை) |
|---|---|---|
| வருமானம் | | |
| இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்ற காசு | - | 68,039 |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து வருமானம் | 3,588,286 | 3,051,513 |
| நிதியியல் சாதனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி | 746,672 | 286,555 |
| மொத்த வருமானம் | **4,334,958** | **3,406,107** |
| செலவு | | |
| வாடகை மற்றும் நிர்வாகச் செலவுகள் | 6,247 | 2,999 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கட்டணங்கள் | 3 | 4 |
| மொத்தச் செலவு | **6,250** | **3,003** |
| வருமான வரிக்கு முந்திய காலப்பகுதிக்குரிய வருமான மிகை | **4,328,708** | **3,403,104** |
| கழி: வருமான வரி ஏற்பாடு | 57,151 | 27,512 |
| வருமான வரிக்குப் பிந்திய காலப்பகுதிக்குரிய வருமான மிகை | **4,271,557** | **3,375,592** |
| ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | - | - |
| மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | **4,271,557** | **3,375,592** |

### நிதியியல் நிலைமைக் கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் உள்ளவாறு 2012 | 2011 (மீளக்குறிப்பிடப்பட்டவை) |
|---|---|---|
| சொத்துக்கள் | | |
| வங்கியிலுள்ள பணம் | 181 | - |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து பெறக்கூடியவை | 847,378 | 753,306 |
| முதலீடுகளில் செலுத்தப்பட்ட திரண்ட வட்டி | 1,149 | 11,410 |
| கருத்தில் கொள்ளப்பட்ட வரி வரவு | 99,827 | 95,806 |
| முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் | 8,831,227 | 4,678,161 |
| மொத்தச் சொத்துக்கள் | **9,779,761** | **5,538,683** |
| பொறுப்புக்கள் | | |
| சில்லறை கடன் வழங்குநர் | 1,861 | 3,007 |
| செலுத்தத்தக்க வருமான வரி | - | 29,334 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **1,861** | **32,341** |
| உரிமை மூலதனம் | | |
| வைப்புக் காப்புறுதி நிதியம் | **9,777,900** | **5,506,343** |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **9,779,761** | **5,538,683** |

மேலுள்ள நிதிக்கூற்றுக்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் நாயகத்தால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது என்று நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

(திருமதி) டி எம் ஜே வை பி பர்னாந்து
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் (C/8913)

2013 ஏப்பிறல் 02

## இருமாடி வீடு வாடகைக்கு உண்டு

உப்புமடம் பிள்ளையார் வீதி,கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடன் (வாகனத் தரிப் பிட வசதி) கூடிய இருமாடி வீடு யாழ்ப்பா ணத்தில் இருந்து 4km தூரத்தில் வாட கைக்கு உண்டு.(நிறுவனங்கள் விரும்பத் தக்கது.)
தொடர்பு: 077 044 3306

## வீட்டுடன் கூடிய காணி,வெறும் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி பிரதான வீதியில் அன்னம்மாள் கோயிலுக்கு அருகில் 03 பரப்பு காணியுடன் கூடிய மேல்மாடி வீடும்,03 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு.
வெறும் காணிக்குரிய பாதை புங்கன்குளம் வீதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.
தொடர்பு: 077 614 5305,077 473 7600

## திருமண சேவை

கொழும்பு மாநகரில் பல திருமணங்களை நிறைவேற்றி முன்னணியில் திகழும் சாயிநாதன் திருமண சேவையினர் யாழ். மக்களின் நன்மை கருதி இம் மாதம் 12, 13, 14, 15 ஆம் திகதிகளில் இல. 401, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோயிலுக்கு அருகில்) அமைந்துள்ள Resilience Information Solution private ltd என்னும் கட்டடத்தில் நடமாடும் திருமண சேவை நடத்த தீர்மானித்துள்ளனர். இதற்கு எவ்வித பதிவுக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (இலவசப் பதிவு) ஆண், பெண் சகல துறைகளிலும் உள்ளவர்களின் குறிப்புக்கள் ஏராளம் உண்டு. குறுகிய காலத்தில் நிறைவேற்றித் தரப்படும்.
யாழ். T.P No- 077 735 5428, 011 344 3929
கொழும்பு T.P No- 011 236 4146, Fax-011 236 3436
E mail:saainathan.lk.@gmail.com
பதிவு நேரம்: காலை 9.00 - மாலை 5.00
முக்கிய குறிப்பு: ஜாதகரின் மூலப் பிரதியும், படமும் கொண்டு வரவும். விவாகரத்துப் பெற்றவர்களின் சாதகமும் ஏற்றுக் கொள்ளப்படும்.
(38005)(6.11)

## விற்பனை பிரதிநிதி தேவை (வாகன பற்றரி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களுக்கு வாகன பற்றரி விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவை.

உங்கள் விண்ணப்பங்களை கீழ்கண்ட விலாசத்துக்கு உடன் அனுப்பவும்.

முகாமையாளர் பற்றரி பிரிவு,

E. B. CREASY & CO., PLC.
98, Sri Sangaraja Mawatha,
Colombo 10.
Tel: 0777-772251
(C/8914)

## வகுப்புக்கள்

தரம் 3-5 வகுப்பு மாணவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:071 809 8062
(மாலை 7 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்) (38089)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978, திருவோணம், 7 இல் செவ்வாய் கிரகாவம் 77¼, பிரபல தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளராக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
விளம்பர இல. 4455,
மே/பா, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கோப்பாய், இராச வீதி சந்தியில் (சந்திக்கும்- கிருஷ்ணன் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில்) மானிப்பாய் பக்கமாக பிரதான வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:071 8380 471

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்றுபேர் கொண்ட இந்து கௌரவ அரச உத்தியோக குடும்பத்துக்கு கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் பகுதிகளில் தேவை.
தொடர்பு: 077 571 3187 (38077) (3.5.6)

## Investments PLC

மாதம் - 24%, 3 வருடம் -30% 30 June வரைக்கும்.
தொடர்பு: 021 568 5999, 077 060 2224
நிபந்தனைக்குட்பட்டவை.

## மணமகன் தேவை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் (PR உள்ள) 1984.11.11, 5' 6" உயரம்,றோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த மணமகளுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 077 022 2147

## வீடு வாடகைக்கு

பலாலி வீதிக்குச் சமீபமாக கோண்டாவில் டிப்போவுக்கு எதிராக விசாலமான வீடு. பல வாகனங்கள் நிறுத்தக் கூடிய இடவசதியுடன் குடும்பத்தினருக்கோ, அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களுக்கும் உகந்தது.
தொடர்பு: 077 810 5330

## முல்லைத்தீவில் வீடு/காணி வாடகைக்குண்டு

1. முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் 4 அறைகள், இணைந்த குளியலறை கொண்ட வீடு வாடகைக்குண்டு.
2. முல்லைத்தீவு நீதிமன்றுக்கு அருகில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட இடம் Bank/Showroom அமைப்பதற்கு நீண்டகால வாடகைக்குண்டு.

தொடர்பு: 077723 8378

## FOR HIRE/வாடகைக்கு விடப்படும்



JCB(Backhoe), Dozer(D4E & mini), Exavator with Braker (heavy&Light), Tractor with Trailer or Carrier, Bowser Lorry with full body, Half body, With out body.Contract for Land Cleaning, Land Scaping, Fencing and Planting.
எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும்.
(38036) (6,3)
தொடர்பு:0722263778,0714167878

## Business Studies A/L,O/L Special class

Medium: English, Tamil
யாழ். நகரை அண்டிய பகுதிகளில்
by: Mano (BBA Hons.)
Contact: 0777375336

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் அத்தியார் இந்துக்கல்லூரிக்கு முன்னால் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (38044)(6.2)
தொடர்பு: 077 513 8843

## புத்தக விற்பனையாளர் தேவை

பிரபல பீனிக்ஸ் புத்தக நிலையத்துக்கு (முன்னைய K.V.Printers இயங்கிய பகுதி) பெண் விற்பனையாளர் தேவை. A/L இல் Accounting படித்தவர்களும், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களும் விரும்பத்தக்கது.
386,Clock tower road,Jaffna.
Tel: 077 063 3116,021 720 0237

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.எஸ்.பி 15-40 டீசல் என்ஜின் ஓயில் உள்நாட்டில் அறிமுகம்

இலங்கையில் ExxonMobil உயவுப்பொருட்களை (லுப்ரிகன்ட்ஸ்) வகைகளின் ஏக விநியோகத்தர்களாக திகழும் மெக் லாரன்ஸ் லுப்ரிகன்ட்ஸ் லிமிடெட் நிறுவனம், டீசல் வாகனங்களில் பயனபடுத்தக்கூடிய Mobil Delvac MX ESP 15W-40 எனும் நவீன உயவுப்பொருளை சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

நிறுவனத்தின் டீசல் என்ஜின்களுக்கான தெரிவுகளில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள இந்தத் தயாரிப்பு, நாட்டின் டீசல் என்ஜின் பாவனையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பான தயாரிப்பை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலதிக உயர் வினைத்திறனை வழங்கக்கூடிய என்ஜின் ஓயில் என தரப்படுத்தப்பட்டுள்ள இந்த Mobil Delvac MX ESP 15W-40, நவீன, உயர் வினைத்திறனை வழங்கக்கூடிய மற்றும் குறைந்த மாசை வெளியிடக்கூடிய என்ஜின்களுக்கு உகந்த வகையில் அமைந்துள்ளது.

அத்துடன், Exhaust Gas Recirculation (EGR) மற்றும் After treatment Systems உடனான Diesel Particulate Filters (DPFs) மற்றும் Diesel Oxidation Catalysts (DOCs) என்பவற்றுக்கும் உகந்தது.


நவீன என்ஜின்களில் உயர்ந்த வினைத்திறனை வழங்கக்கூடிய வகையில் அமைந்த ஓயில், பழமையான என்ஜின்களுக்கும் உயர் வினைத்திறனை வழங்கும் வகையில் அமைந்துள்ளன.

LAPC விருதுகள் வழங்கும் நிகழ்வில் சர்வதேச ரீதியில் சிறந்த தொலைத்தொடர்பாடல் திறன்களை வெளிப்படுத்துபவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். இப் போட்டியில் கலந்து கொள்வதற்கு சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து நூற்றுக்கும் அதிகமான சமர்ப்பித்தல்கள் கிடைக்கின்றன.




## Wisdom Business Academy புதிய கிளை யாழ்ப்பாணத்தில்

மாணவர்கள் தம் பாடசாலைக் கல்வியை முடித்தவுடன் தம் உயர் கல்வியை நோக்கி சரியான திசையில் நகரக் காத்திருக்கும் நிலையில் நிதியியல் மற்றும் முகாமைத்துவப் பாடநெறியை தெரிவு செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. மாணவர்கள் இந்தத் துறையை பெரிதும் விரும்புவதற்கான காரணம் யாதெனில், சந்தையில் இந்தத் துறையில் காணப்படும் வேலை வாய்ப்பு மற்றும் வரவேற்பு என்பனவாகும். இந்த நிலையினைக் கருத்திற்கொண்டு உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள் இந்தத் துறையில் சிறந்த கற்கைநெறியை பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட Wisdom Business Academy நிதியியல் மற்றும் வியாபார முகாமைத்துவத் துறையில் உயர் கல்விக்கான தெரிவுகளுக்கு பெயர் பெற்று விளங்குகின்றது.




போர் முடிவடைந்த நிலையில் வடக்கு, கிழக்குப் பிரதேச மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தொடரவிருந்த சிக்கல் நிலைமை நீக்கியமையால் அந்தப் பிரதேச மாணவர்கள் தமது உயர் கல்வியினைத் தொடர்வதற்காக கொழும்பு போன்ற வெளிமாவட்டங்களை நோக்கி வந்தனர். இதன் காரணமாக அவர்களுக்கு போக்குவரத்து மற்றும் தங்குமிடம் காரணமாக மேலதிக காலத்தையும், நேரத்தினையும் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்திற்கொண்டே Wisdom கல்வி நிறுவனம், தனது மற்றுமொரு கிளையினை தற்போது இல. 154 4/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறக்கின்றது.

இந்தக் கிளையானது Wisdom கல்வி நிறுவனத்தின் கொழும்பு பிரதான காரியாலயத்தில் உள்ள அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் திறமைவாய்ந்த போதனாசிரியர்களை உள்ளடக்கியதாக உள்ளது. இதன் காரணமாக யாழ்.பிரதேச மாணவர்கள் தம் சொந்த மண்ணிலேயே எவ்வித அசௌகரியமும் இன்றி தமது Cima பாடநெறியினை தொடர முடியும்.

இலங்கையில் Cima பாடநெறியில் முதன்மை வகிக்கும் Wisdom கல்வி நிறுவனம் வருடம் ஒன்றுக்கு 5,000க்கும் அதிகமான மாணவர்களை உள்வாங்கி சிறப்பான போதனா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ISO 2001-2008 தரச்சான்று அங்கீகாரத்துடன் Cima தரப்பங்காளராகவும் திகழ்ந்து வருகின்றது.

இந்த நிறுவனம் சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் மிகுந்த ஒரு பட்டத்துக்கு இணையான தகைமையை இலங்கையில் உள்ள மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கில், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள றொபேர்ட் கோர்டன் பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்து எம் இலங்கை மாணவர்கள் கணக்கியல் கலைமாணி மேற்படிப்பு ஒன்றைப் பின் தொடர்வதற்கான புதிய வழிமுறைகளை விஸ்டம் பிசினஸ் அக்கடமி ஏற்படுத்தியுள்ளது. இந்த அரிய வாய்ப்பினையும் யாழ். மாணவர்கள் Wisdom இன் புதிய யாழ்ப்பாணக் கிளையில் பெற்றுக்கொள்ள முடியும். (த)

## கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளி செயற்பாடு

கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளி செயற்பாடு கடந்த முதலாம் திகதி வங்கியின் அனைத்து கிளைகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

வங்கிகளுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதன் பொருட்டு கொமர்ஷல் வங்கியின் அனைத்து கிளைகளிலும் சேமிப்பு ஒளி செயற்பாடு ஜூன் மாதம் முழுவதும் இடம்பெறுமெனவும், இந்த மாதத்தில் வங்கியின் சேமிப்பில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனம் நிதியியற் துறையினுள் பிரவேசம்

ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனமானது, இலங்கையின் பழைமை வாய்ந்த பெரிய நிறுவனங்களுள் முதன்மை வாய்ந்த, 80 வருடங்களுக்கும் மேலான வெற்றிகரமான வரலாற்றினைத் தன்னகத்தே கொண்ட நிறுவனமாகும். இத்தகைய சிறந்த அனுபவம் மற்றும் வெற்றிகரமான வரலாற்றைக் கொண்ட நிறுவனம் தனது கிளை நிறுவனமாக ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ ஃபைனேன்ஸ் லிமிட்டட் (RPAF) இணை நிறுவுவதன் மூலமாக தனது புதிய பிரவேசத்துக்கான அத்திவாரத்தை இடுகின்றது.

ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனத்தின் முழு உரித்துடைய கிளை நிறுவனமான RPAF நிறுவனமானது அண்மையில் இலங்கை மத்திய வங்கியின் சட்டபூர்வ நிதி நிறுவனமாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் எந்தவொரு நிதி நிறுவனமும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்திராத புதிய நிதித் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் தனது சேவையினை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ள உறுதிப்பாடு மற்றும் நிதி நிலைச் சக்தி என்பவற்றைப் பயன்படுத்தி சமூகம் மற்றும் பங்குதாரர்களின் தேவையை முதன்மையாகக் கொண்டு, இலங்கையின் வேறு எந்த நிதி நிறுவனங்களும் பெற்றுக்கொடுத்திராத தன்னிகரற்ற பிரத்தியேகமான நிதித் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனமானது, தனது பெரிய உற்பத்தித் துறையான இறப்பர், டயர் வகைகள், பிளாஸ்ரிடிக் உற்பத்திகள், சில்லறை விற்பனை மற்றும் விநியோகம், தோட்டங்கள், நிதியியற் சேவைகள் மற்றம் நிர்மாணத்துறை எனப் பல்வேறு சர்வதேச தரத்திலான உலகளாவிய சந்தை கேள்விகளுக்கேற்ற உயர் தரத்திலான உற்பத்தி மற்றும் சேவைகளது விநியோகத்தின் மூலமாகப் பெற்ற ரூபா 25 பில்லியனுக்கும் அதிகமான அடிப்படை ஆதனத்தை தன்னகத்தே கொண்டுள்ளமையானது, இலங்கை உள்நாட்டு சந்தையில் முன்னணியில் திகழ்கின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில் அதன் நிதியியல் நிலையியற் தன்மைக்கு சிறந்த உதாரணமாகும்.

அத்துடன், ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனமானது, தனது செயற்பாட்டு ரீதியிலான இலாபமாக ரூபா 32 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், அண்மையில் நிறைவுற்ற கலண்டர் வருடத்தினுள் தனது 48 கிளை நிறுவனங்கள் மூலமாக ரூபா 3.2 பில்லியனைப் பதிவு செய்துள்ளது. அத்துடன் தன்னகத்தே 30,000 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் வளத்தையும் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

ரிச்சர்ட் பீரிஸ் குழும நிறுவனத்தின் தலைவராக, இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரித்தானிய விஞ்ஞானி, பொறியியலாளர் மற்றும் சுவிஸ் நாட்டை மையமாகக்கொண்டு சேவையாற்றுகின்றார்.



லூக்காஸ் பற்றரி நிறுவனத்தின் முகவரான செல்வம்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை திறப்பு விழா அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் லூக்காஸ் பற்றரி நிறுவனத்தின் உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். பற்றரி விற்பனையில் கடந்த பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயற்பட்டுவரும் செல்வம்ஸ் இப்போது யாழ்ப்பாணத்திலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16,614 தொன் தானியங்கள் கடந்த போகத்தில் உற்பத்தி

## வடக்கில் மட்டும்



யாழ்ப்பாணம், ஜூன் 9
கடந்த வருட காலபோகத்தில் வடமாகாணத்தில் 14 ஆயிரத்து 737 ஹெட்ரேயரில் தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 16ஆயிரத்து 614 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாயத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதனடிப்படையில் தானிய வகைகளான உழுந்து, பயறு, கௌப்பி, கச்சான், எள்ளு என்பன அந்தந்த விவசாயப் பிரதேசங்களில் மொத்தமாக 14 ஆயிரத்து 737 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டுள்ளது.

இதன் காலபோக விளைச்சலாக 16ஆயிரத்து 614 மெற்றிக்தொன் உற்பத்தியாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. 2011 ஆம் ஆண்டு காலபோக உற்பத்தியைவிட 2012ஆம் ஆண்டு காலபோக உற்பத்தியில் இரு மடங்காக தானிய உற்பத்திகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட 2010ஆம் ஆண்டு 6ஆயிரத்து 692 ஹெக்ரேயரில் தானியங்கள் பயிர் செய்யப்பட்டு 7 ஆயிரத்து 447 மெற்றிக்தொன் உற்பத்தியும், 2009ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 70 ஹெக்ரேயரில் தானியங்கள் பயிரிடப்பட்டு 5,676 மெற்றிக்தொன் உற்பத்தியும் பெறப்பட்டன.

2011ஆம் ஆண்டு 17 ஆயிரத்து 240 ஹெக்ரேயரில் தானியங்கள் பயிரிடப்பட்ட போதும் உற்பத்தி மிகக் குறைவாக 8 ஆயிரத்து 106 மெற்றிக் தொன் உற்பத்தியாகக் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனினும் 2012ஆம் ஆண்டு 14ஆயிரத்து 737 ஹெக்ரேயரில் தானியங்கள் பயிர் செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு உற்பத்தியைவிட இரு மடங்கு உற்பத்தியாக 16ஆயிரத்து 614 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் 2012ஆம் ஆண்டு காலபோகத்தில் 6 ஆயிரத்து 450 ஹெக்ரேயரில் உழுந்து பயிரிட்டு செய்யப்பட்டு 6 ஆயிரத்து 339 மெற்றிக் தொன் உற்பத்தியாகவும், ஆயிரத்து 573 ஹெக்ரேயரில் பயறு பயிரிடப்பட்டு ஆயிரத்து 568 மெற்றிக்தொன் உற்பத்தியும், ஆயிரத்து 204 ஹெக்ரேயரில் கௌப்பி பயிரிடப்பட்டு ஆயிரத்து 245 மெற்றிக்தொன் உற்பத்தியும், 4ஆயிரத்து 96 ஹெக்ரேயரில் கச்சான் பயிரிடப்பட்டு 6ஆயிரத்து 687 மெற்றிக்தொன் உற்பத்தியாகவும், ஆயிரத்து 414 ஹெக்ரேயரில் எள்ளு உற்பத்தி செய்யப்பட்டு 775 மெற்றிக்தொன் உற்பத்தியாகவும் பெறப்பட்டிருந்தது.

தானிய உற்பத்தியில் கடந்த வருட காலபோகத்தில் அதிகூடியதாக உழுந்து பயிரிடப்பட்ட போதும் இவ்வருடம் கச்சான் உற்பத்தி அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள் ளது. மிகக் குறைந்த உற்பத்தி விளைச்சலாக எள்ளு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

> உழுந்து, பயறு, கௌப்பி, கச்சான், எள்ளு என்பன அந்தந்த விவசாயப் பிரதேசங்களில் மொத்தமாக 14 ஆயிரத்து 737 ஹெக்ரேயரில் பயிரிடப்பட்டுள்ளது.

## முகாமையாளர் பதவி விலகியதால் ஊழியர்களுக்கு இல்லை கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூன் 9
கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திடீரென பதவி விலகியதால் அதில் பணியாற்றும் பணியாளர்கள் தமது கொடுப்பனவைப் பெறமுடியாது போயுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த மே மாதம் தொடக்கம் சங்கத்தின் தலைவரும், பொது முகாமையாளரும் சுகவீன விடுப்பில் சென்றதால் அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் நாளாந்தம் பிரித்து வழங்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது பொது முகாமையாளர் பதவி விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், புதிய முகாமையாளரை நியமிக்கும் வரை அங்கத்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்குவது சாத்தியம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-9)

## சட்டவிரோத செயலில் ஈடுபட்ட 142 பேர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9
சாவகச்சேரி மதுவரித் திணைக்களப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட 142 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை 142 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் சட்டவிதிமுறைகளுக்கு எதிராக சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

சட்டவிரோதமாக அரச சாராயம் விற்பனை செய்தவர்கள், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த வர்த்தகர்கள், கசிப்பு உற்பத்தி மேற்கொண்டவர்கள் உள்ளடங்கலாக 142 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் பிரதான குற்றச் செயலாக சரசாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் செயற்பட்டமை தெரிய வந்துள்ளது.

கசிப்பு உற்பத்திக்கு எனப் பாவிக்கப்பட்ட உபகரணங்களும், உற்பத்தியாளர்களும் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

வேலணை பிரதேச செயலர் பிரிவுகளில்

## துரித கதியில் இந்திய வீட்டுத்திட்ட பணிகள்



யாழ்ப்பாணம்.ஜூன் 9
வேலணை பிரதேச செயலகத்தின் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகளில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 407 வீடுகளின் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வீட்டுத் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றிக் கொள்வதில் பயனாளிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். குறித்த வேகத் திட்டங்களை செவ்வாய்க்கிழமை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் நேரடியாகச் சென்று அவதானித்துள்ளார்.

புங்குடுதீவு கிராம அலுவலர் பிரிவுகள் ஜே/14, ஜே/17, ஜே/26 களில் 67 பயனாளிகளுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கவும் அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)



யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் இங்கிலாந்திலுள்ள பழைய மாணவர் ஒருவரின் நிதிப்பங்களிப்பினூடாக நிழற்பிரதி இயந்திரம் ஒன்றை பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். அதனைப் பாடசாலை அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபெல்லிடம் பழைய மாணவர் சங்கத்தினர் வழங்குகின்றனர். (ந)

## வரணி வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

தென்மராட்சி, ஜூன் 8
வரணி நாவற்காடுப் பகுதியில் வதியும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு 'வைக்ரோ' நிறுவத்தினரின் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நாவற்காடு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தரூபன் தலைமையில் நடைபெற்ற



நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்வதார உதவிகளை வழங்கினர்.

தையல் இயந்திரங்கள், நீரிறைக்கும் இயற்திரங்கள் உட்பட நிதி உதவியும் வழங்கப்பட்டன. நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சூ.அலெக்ஸாண்டர், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.ஞானலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-9)

## வீதி அகலிப்புக்காக மூடப்படும் பழைமை வாய்ந்த பொதுக்கிணறு


தென்மராட்சி, ஜூன் 9
பருத்தித்துறை நகரில் பழைமை வாய்ந்த பருத்தித்துறை பொதுச் சந்தைக் கிணறு ,வீதி அகலிப்புக்குட்படுவதால் மூடப்படவுள்ளது.

நகரில் சந்தை வியாபாரிகள் மற்றும் கடை, வர்த்தகர்களின் தண்ணீர்த் தேவையை இந்தக் கிணறு பூர்த்தி செய்து வந்தது.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ள நவீன சந்தைக்கான குழாய் நீர் விநியோகத்துக்கு பழைய வெட்டுக் கிணற்றிலிருந்தே தண்ணீர் பெறப்படவிருந்தது.

பழைமையான வெட்டுக்கிணறு மூடப்படுவதால் அதற்குப் பதிலாக நவீன சந்தைக்கான தண்ணீர் விநியோகத்துக்கென சந்தையுடன் அண்மித்த பகுதியில் பெரிய குழாய்க்கிணறு ஒன்றை அமைக்க பருத்தித்துறை நகர சபை நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)

## தம்பு தோட்ட மக்களின் பாவனைக் கிணற்றின் நிலை



தென்மராட்சி, ஜூன் 9
சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அல்லாரை தம்பு தோட்டப்பகுதி மக்களால் கடந்த ஐந்து வருடங்களாக பாவிக்கப்பட்டு வரும் குடிதண்ணீர் பொதுக்கிணறு மிகவும் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது.

கச்சாய் கிராம சபையினால் கடந்த 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கிணறு பல குடும்பங்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வந்தது.

கடந்த 1996 ஆம் ஆண்டு தம்பு தோட்டப் பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த 2008 ஆம் ஆண்டு மீண்டும் பொதுமக்களது பாவனைக்கு விடப்பட்டது. அந்த வேளையில் உடைந்த நிலையில் காணப்பட்ட கிணற்றை துப்புரவு செய்து பொது மக்களால் பாவிக்கப்பட்டு வருகிறது. ஆபத்தான நிலையில் காணப்படும் கிணற்றை புனரமைத்து வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் அந்தப் பகுதி மக்கள் முறையிட்ட போதிலும் பயன் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா ஆஸ்பத்திரி சிற்றூழியர் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

## நேற்று அமைச்சர் ரிஷாத்தின் நிகழ்வின் போது...

வவுனியா,ஜூன் 9
வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில், ஒப்பந்த அடிப்படையில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றுவோர், சுத்திகரிப்பாளர்கள் நிரந்தர நியமனம் கோரி நேற்று சனிக்கிழமை போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் அமைச்சர் றிஷாத் பதியூதீனின் ஏற்பாட்டில் நேற்று பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம், திணைக்களங்களுக்கான சிற்றூழியர் நியமனம் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நியமனம் உட்பட சுமார் ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்பட உள்ள நிலையில் இந்தப் போராட்டம். இந்த நிலையிலேயே வவுனியா பொது வைத்திய சாலை வளாகத்தில் இருந்து நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்ட ஊர்வலம், வவுனியா பொது வைத்தியசாலையின் முன்பாக பி.ப. ஒரு மணி வரையும் பின்னர் வவுனியா கண்டி வீதியூடாக, வவுனியா நகர சபை ஊடாக வந்தடைந்தது. ஊர்வலத்தில் வந்தவர்கள் பல்வேறு சுலோ கங்களை எழுப்பினர்.

எமக்கு உடனடியாக நியமனம் வழங்கு இதுவரை காலமும் சேவை புரிந்த எம்மையும் மதி, மேலதிகாரிகளே எமது குடும்பங்களையும் சற்று சிந்தியுங்கள், எம்மை நம்பி வாழும் எமது குடும்பங்களைக் காப்பாற்றுங்கள், எமக்கு நியமனம் வழங்கிய பின்பு மற்றையோருக்கு வழங்கு போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கி இருந்த அவர்கள் ஆக்குரோஷமாக குரல் எழுப்பினர்.

இதனை அவதானித்த அமைச்சர் றிஷாத்தின் ஆதரவாளர்கள் மற்றும் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட 5 பேரை அழைத்து பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அவர்களிடம் அமைச்சர் உரையாடினார். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நியமனம் வழங்கப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டது. அதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.



அவர்கள் எழுத்துமூலமான கோரிக்கை மனு ஒன்றையும் அமைச்சர் றிஷாத் பதியூதீனிடம் கையளித்தனர். (ஒ-402)

### வேகத் தடையை ஏற்படுத்த பெற்றோர் கோரிக்கை

அக்கராயன்,ஜூன்9
கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனியாக ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பாடசாலையின் முன்பாக பிரதான வீதியில் வேகத்தடை மற்றும் வீதிக் குறியீடுகள் அமைக்கப்பட வேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் இருந்து அம்பலப் பெருமாள் சந்திவரை பிரதான வீதி தார் இடப்பட்டுள்ளதால் அதனூடாக வாகனங்கள் மிக வேகமாகப் பயணிக்கின்றன.

பாடசாலை கடவையோ, வீதிக் சமிக்ஞைகளோ இடப்படாத நிலையில் தற்போது ஆரம்பப் பாடசாலையும் தனியாக இயங்க ஆரம்பித்துள்ளது. இதனால் சிறுபிள்ளைகள் வீதியைக் கடக்க முற்படும் போது விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பாடசாலைக்கு முன்பாக இரண்டு பக்கமும் வேகத்தடையை உருவாக்குவதுடன் வீதிக் கடவையையும் உருவாக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (ஐ-18)

### பூநகரி மருத்துவமனையில் நிரந்தரமாக வைத்தியர் இல்லை

#### நோயாளர்கள் அவதி


கிளிநொச்சி, ஜூன் 9
பூநகரி மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் இன்மையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பூநகரியில் நெருக்கடிகளுடன் வாழ்ந்து வரும் குடும்பங்கள் தமது மருத்துவத் தேவைக்காக வேறு தூர இடங்களுக்கே செல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக தூர இடங்களான முழங்காவில் மருத்துவமனை, யாழ்ப் பாணத்திலுள்ள மருத்துவ மனைகள் அல்லது கிளிநொச்சி பொது மருத்துவ மனை என்பவற்றுக்கே செல்ல வேண்டியுள்ளது.

பின்தங்கிய பகுதிகளில் அவசர நோயாளர்கள் தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வது பெரும் நெருக்கடியாக உள்ளது எனவும், சிலவேளைகளில் உயிர் ஆபத்துக்களை சந்திக்க வேண்டி ஏற்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமது நிலையைக் கருத்தில் கொண்டு வைத்தியர் ஒருவரை நியமித்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ-426)

### வீதிகளைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை



வவுனியா, ஜூன் 9
வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம், கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் போன்ற பாடசாலைக்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் சைக்கிள், ஓட்டோ என்பவற்றில் பயணிக்கும்போது மண் புழுதிகள் பட்டு ஆடைகள் அழுக்கடைவதாகவும் தற்போது வீசும் பலத்த காற்றினால் மண் மேலெழுவதால் வீதியில் பயணிக்க முடியாத அளவுக்கு சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமன்றி அடிப்படைத் தேவைகளுக்காக வெளி இடங்களுக்கு செல்லும் போதும் மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

எனவே உரிய வகையில் இந்தப் பாதையை சீர் செய்து தருமாறு கூமாங்குளம் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-402)

### குளம் புனரமைப்பு சீரில்லை

அக்கராயன், ஜூன் 9
துணுக்காய் பழைய முறிகண்டிக் குள்த்தின் புனரமைப்புப் பணிகள் திருப்தியாக இல்லை என அந்தக் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

46 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த இந்தக் கிராமத்தின் குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் குளத்தின் கீழ் 300 ஏக்கர் வரையான வயல் காணிகள் உள்ளன. இந்த நிலையில் குளக்கட்டு புனரமைக்கப்பட்டாலும் நீர் விநியோக வாய்க்கால்கள் சீராக அமைக்கப்படவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது போலவே மேலதிக நீர் வெளியேறும் வான் பகுதியும் சீரான வகையில் புனரமைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)




வவுனியா, நெளுக்குளம் இந்து மயானத்துக்கு புதிதாக அமரர் வைகாளி சிற்றம்பலம் நினைவாக முன்வளைவு அமைக்கப் பட்டுள்ளது. (ஐ-402)

### மாந்தை கிழக்கு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

அக்கராயன், ஜூன் 9
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஒருங்கிணைந்த திணைக்களத் தலைவர்களையும் தவாறாது கலந்து கொள்ளுமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் அறிவித்துள்ளார்.

இதே நாளில் செல்வபுரம் பொது மண்டபம் நட்டாங்கண்டல் முன்பள்ளி, பாண்டியங்குளம் கால்நடை வைத்தியர் அலுவலகம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன. (ஒ-18)

### புதூர் நாகதம்பிரான் பொங்கல் நாளை

வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. நாக வழிபாட்டுக்கு சிறப்புப் பெற்ற இந்தக் கோயிலில் மருந்து மண் வழங்கப்படும் நிகழ்வு இடம்பெறுகின்றது.

இம்முறையும் இந்த ஆலயத்தில் பல பாம்புகளுக்கு வழிபாடுகள் நடைபெற்று திங்கள் இரவு பூசை முடிந்த பின்னர் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள், ஆடுகள் வழமை போன்று ஏலத்தில் விடப்படும். (ஒ-422)

### குளக்கட்டு வீதியை புனரமைத்துத் தருக

பண்டாரிக்குளம் குளக்கட்டு வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த வீதியில் ஓட்டோ ஒன்று தடம் புரண்டதில் அதில் பயணித்த நால்வர் சிறுகாயங்களுடன் தப்பினர். இந்த விபத்து குளக்கட்டு வீதி சேதமடைந்த காரணத்தாலேயே ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த வீதியை புனரமைத்துத் தரவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். மாடசாமி கோயிலடி, பண்டாரிக்குளம், உக்கிளாங்குளம் உட்படப் பல்வேறு கிராமங்களுக்கு செல்லும் பண்டாரிக்குள குளக்கட்டு வீதியை பெருமளவான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மிகவும் ஒடுங்கிய நிலையில் காணப்படும் இந்த வீதியில் வாகனங்கள் எதிரெதிரே விலத்திச் செல்ல முடியாது போவதால் விபத்துக்கள் நிகழ்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே குளக்கட்டு வீதியை பயணிகளின் பாதுகாப்புக் கருதிப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ-402)

### தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் சில

தமிழ்த்தினப் போட்டியில் மன்னார் மூன்றாம் பிட்டி அ.த.க. பாடசாலை மாணவர்கள் வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் சிறந்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதன்படி கதை கூறல் பிரிவு I இல் கு.மிதுளன் வலய, மாவட்ட மட்டங்களில் முதல்ாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

பாவோதல் பிரிவு II இல் அ.நிலாமதி வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பேச்சு பிரிவு II இல் அ.ஒனிசன் அன்ரனி வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

பேச்சு பிரிவு III இல் அ.லக்ஷினி வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சமூக நாடகம்- திறந்த போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடமும், மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடமும் இந்தப் பாடசாலைக்குக் கிடைத்துள்ளது.

இசை- பிரிவு II இல் முல்லைத்தீவு தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலையின் தரம் 6 மாணவன் பிரபாகரன் இனியவன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஐ)

# கிரவல்மண் அகழ்வில் தப்பவில்லை கோட்டைகட்டிய குளமும்

அக்கராயன், ஜூன் 9
கோட்டைகட்டியகுளம் பகுதியிலும் 'கிரவல்' மண் அகழ்வு தொடங்கப்பட்டுள்ளதால் அங்கு உருவாகும் குழிகளால் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அவலம் தோன்றும் என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் பகுதிகளில் ஏற்கனவே கிரவல் மண் அகழ்வு இடம்பெற்றதால் பெரும் குழிகள் ஏற்பட்டுள் ளன.

தொடர்ச்சியாக டிப்பர் வாகனங்களில் கிரவல் மண் அகழ்ந்து ஏற்றும் பணி இடம்பெறுவதால் பெருமளவான காடுகளும் அழிவடைகின்றன.'

இதனால் வெள்ளப்பெருக்கும், சூழல் பாதிப்பும் ஏற்படும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

[illegible] காட்டு மரங்களும் தறிக்கப்பட்டு ஏற்றப்படுவதாகவும், மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது பகுதிகளில் கிரவல் , [illegible] என்பன [illegible]ப்படுகின்றன. ஆனால் எங்கள் வீதிகள் திருத்தப்படவில்லை. வீட்டுத் திட்டம் முழுமையாகத் தரப்படவில்லை. தொழில் செய்ய வசதிகள் இல்லை. இதனால் நாம் நாளாந்தம் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறோம் என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மாணவர்களின் கல்வித்துறையில் ஒளிவீசும் அறிகுறி எதனையும் காணோமே...

வடக்கில்-யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில்- இதுவரையில், அதாவது போரின் பின்னர் 86 பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. அதாவது ஏற்கனவே இயங்கிய 1,055 பாடசாலைகளில் 8 வீதமானவை நிரந்தரமாக அடித்து மூடப்பட்டுள்ளன. அவை மீண்டும் திறக்கப்படுவதற்கான எந்தவிதமான அசுகை தானும் இல்லை.

குறிப்பிட்டுச் சொல்வதானால் வலிகாமத்தில் பதினேழு பாடசாலைகளும், தீவகத்தில் பதினாறு பாடசாலைகளும், கிளிநொச்சியில் ஒன்பது பாடசாலைகளும், வவுனியா தெற்குப் பிரதேசத்தில் எட்டு பாடசாலைகளும், யாழ். கல்விப் பிரதேசத்தில் பதினான்கு பாடசாலைகளும் உட்பட மொத்தமாக 86 பாடசாலைகள் கல்வி அமைச்சினால் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

மூடப்பட்டுள்ள பாடசாலைகளில் மிக அதிகமானவை எமது பிரதேசங்களில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்தவை என்பதனைக் கல்விப் பகுதியினரின் தரவுகளில் இருந்து கணித்துக்கொள்ள முடிகிறது.

மூடப்பட்டுள்ள பாடசாலைகள் விடயம் ஒருபுறம் இருக்க, வடமாகாணத்தில் போரின் பின்னர் திறக்கப்பட்டு இயங்கும் பாடசாலைகளில் பெரும்பாலானவை வளப்பற்றாக் குறைகளுடன் இயங்குகின்றன. அதனால் அந்த மாவட்ட மாணவர்களின் கல்வி நிலை பின்னடைவைக் காணும் மற்றொரு ஆபத்துக்கான அறிகுறியும் துலக்கமாகத் தெரிகிறது.

மீள ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான பாடசாலைகளில் பிரதான, முக்கிய பௌதிக வளங்கள் பெருமளவில் பற்றாக்குறையாகவே உள்ளன. கட்டட வசதி, வகுப்பறைகள் போதாமை, தளபாடப் பற்றாக்குறை, மின்சார வசதி மற்றும் மலசலகூட வசதி என்பன இல்லாமை ஆகியவற்றால், மாணவர்கள் எல்லோருமே ''மெல்லக் கற்கும்'' வகையினராக மாற்றப்பட்டுள்ளனர் எனலாம்.

இந்தப் பற்றாக்குறைகளைவிட, வன்னி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தேவைப்படும் எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இல்லாமை மிகப் பெரும் பின்னடைவை தோற்றுவித்துள்ளது.

ஆரம்பக் கல்வி ஆங்கிலம், இடைநிலைக் கணிதம், இடைநிலை விஞ்ஞானம், இடைநிலை ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறை பெரியளவில் உள்ளதையும் மேற்கண்டவற்றுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் மற்றும் வளப்பற்றாக்குறைகள், இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் என்று பெற்றோர்களும் கல்விசார் வட்டாரத் தரப்புகளும் கவலை தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் மட்டுமன்றி முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா வடக்கு வலயம் ஆகியவற்றிலும் மனித வளம் மற்றும் பௌதிக வளம் என்பன கல்வித் துறையில் தேய்ந்து போயுள்ளன.

நாடளாவிய கல்வி நிலையில், போர்க் காலத்தில் ஒன்பதாவது மாகாணமாக கடைநிலையில் இருந்த வடமாகாணம், கடந்த வருடம் எட்டாவது நிலைக்கு உயர்ந்தமை ஒரு முன்னேற்றம் என்பது வாஸ்தவமே.

மூன்று அல்லது நான்கு தசாப்தங்களுக்கு முன்னர், கல்வி நிலையில் மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு முதலாம், இரண்டாம் இடங்களை வடமாகாணம் பிடித்திருந்ததை மறக்க முடியாது.

எனினும், அந்த நிலையை இனிமேலும் எட்டலாம் என்ற நிலைமை இனிமேல் உண்டாகும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அரசியல் உரிமைகளில் மட்டுமன்றி, முதன்மைத் துறைகளில் முக்கியமான கல்வித்துறையிலும் தமிழ் மக்களை கீழே தள்ளிவிட்ட கபடத்தனங்களும் சூக்குமங்களும், அரசுக்கு அரசு, ஆட்சிக்கு ஆட்சி, உத்வேகம் கொண்டமை இப்போது சரித்திரமாகிவிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரம் ஆண்டு அபிவிருத்தி சார் ஏழு இலக்குகள் (Goals) இருபத்திரண்டு சுட்டிப்பான குறிக்கோள்களாக (Targets), வகுக்கப்பட்டுள்ளன. அந்தக் குறிக்கோள்களில், கல்விசார் அபிவிருத்தி இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட குறிக்கோளை இலங்கை அண்மித்து வருவதாக ஐ.நா.சபையின் புள்ளி விவரங்கள் தொட்டுக் காட்டுகின்றன.

அவற்றின் பிரகாரம் -

வடக்கில் ஒரு சில பாடசாலைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. எனினும் ஒட்டுமொத்தத்தில், வடக்கின் கல்வித் துறை விரைந்து மீண்டு எழுவதற்கு- அதன் முந்தைய பொற்காலத்துக்கு மீண்டு எழுவதற்கான அடித்தளம் எதுவும் வெளிச்சமாகத் தெரியவில்லை.

வழமைப் பிரகாரம், பொறுத்திருந்து பார்ப்போம், காலம் கனியும் என்று காத்திருக்கும் நிலையே மிஞ்சுமோ? எல்லாம் அரசின் சித்து விளையாட்டில் தங்கியுள்ளது...!

# பல்கலைக்கழக அனுமதிக்கு வழிகோலும் ஊடகக் கல்வி

ஆர்.கே.மேனன்

மாணவர்களின் அடைவு மட்டப் பரீட்சைகள் பல தரங்களில் வகைப்படுத்தப்பட்டாலும் எதிர்கால வாழ்வியலைத் தீர்மானிப்பது உயர்தரப் பரீட்சை மாத்திரேமே. க.பொ.த. சாதாரண தரம் என்பது ஒரு தடை தாண்டலே தவிர, க.பொ.த. உயர்தரமே கல்விக் கௌரவத்தைக் கொடுக்கும் உயர் பட்டப்படிப்பினைத் தீர்மானிக்கின்றது. இந்தப் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் பல்கலைக்கழக அனுமதிகள் பல வழிகளில் பறிபோகின்றன. தற்போது கடின உழைப்பின் மத்தியில் படிப்பது என்பதற்கு அப்பால் பாடத் தெரிவுகளில் அவதானம் இருக்க வேண்டியது கட்டாய தேவையாக அமைகிறது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றும் கூட பல்கலைக்கழக அனுமதியின்றி தெருவோரம் விடப்படும் ஓர் தெரிவு முறைமை தற்போது உயர் தரத்தில் பலருக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. இது அனைத்தையும் தெரிந்திருந்தும் மாணவர்கள், பெற்றோர்கள் பாடத் தெரிவுகளில் கவனமெடுப்பது இல்லை.

இந்தப்பிரச்சினைகளைத் தீர்க்கும் ஓர் பாடத் தெரிவாகவே உயர்தரத்தில் தொடர்பாடலும், ஊடகக்கல்வியும் எனும் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படையாக தரம் 10,11 இல் தொகுதி பாடப்பரப்பில் ஓர் தெரிவுப் பாடமாக இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள், பெற்றோர்கள் இந்தப் பாடத் தெரிவு தொடர்பான விடயத்தில் மிக அவதானமாக செயற்படுவது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றென்பதை மறந்து விடாதீர்கள். பாடசாலைகளுக்காகவோ, ஆசிரியர்களுக்காகவோ பாடத்தைத் தெரிவு செய்யாதீர்கள். சாதகமான பாடத்துறைகள் பாடசாலையில் இல்லை எனில் பாடசாலையினை மாற்றுங்கள். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத் தோல்விக்கு யாரும் பதில் சொல்ல மாட்டார்கள்.



### வடமாகாண கல்விப் பணிப்பாளரின் கருத்து

வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராஜா அவர்கள் யாழ். பல்கலைக்கழக ஊடக நிலைய மண்டபத்தில் (M.R.T.C ) ஊடகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சான்றிதழ் கற்கை நெறியினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது இந்தப் பாடப்பரப்பு தெரிவு நிலை முக்கியத்துவம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மாணவர்கள் பல வழிகளில் இந்தப் பாடத்தைத் தெரிவதனால் நன்மையடைய முடியும எனவும், பாடசாலைக் கல்விக்குள் இருக்கும் மாணவர்களின் விகிதாசாரத்துடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழக அனுமதியினைப் பெறும் விகிதாசாரம் மிகவும் குறைந்தது எனவும் சுட்டிக்காட்டிய பணிப்பாளர் இந்த மாணவர்களை அரங்கேற்றும் பணியில் ஆசிரியர்கள் இந்தப் பாடத்தினை மையப்படுத்தி வழி காட்ட வேண்டும் என கோரியுள்ளார்.

### பாட உள்ளடக்கமும் பாடத் தெரிவின் சாதகமும்

கலைத்துறை சார் ஈடுபாடுடைய மாணவர்களுக்கு கணிதத் துறைசார் பாடங்கள் உதாரணமாக அளவையியல், பொருளியல் போன்றவை பெறுபேற்றுத் தடைகளை உருவாக்கி பல்கலைக்கழக அனுமதிக்குத் தடை போடுகின்றது. அந்த வகையில் கட்டுரை வடிவ வினாக்களையும், செய்முறைப் பயிற்சிகளையும் தன்னகத்தே கொண்டதொரு பாடமாக அமைவது தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் பாடமாகும். சமூகமயமாக்கலோடு ஒன்றிணைந்த பாடமாக அது இருப்பதனால் மாணவர்கள் பெறுபேற்றினை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முடியும்.

பாடத்தை தெரிவு செய்ய விருப்பம் இருப்பினும், பாடசாலைகளில் இந்தப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரிய வளங்கள் இல்லாமையால் இதுவரை காலமும் இந்தப் பாட பரவலாக்கம் தடைப்பட்டிருந்தது. தற்போது புதிய ஆசிரியர்கள் வடமாகாண கல்விப் பணிமனையின் செயல்திட்டத்தின்கீழ் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்கள் பாடசாலைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும் போது இதில் உள்ள தடைகளும் நீக்கப்படும். இது தவிர இந்தப் பாடத் தெரிவால் வரும் மிகப் பெரிய சாதக அம்சம் யாதெனில் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே தற்போது இந்தப் பாடத்தைத் தெரிவு செய்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக விசேட கற்கை நெறிக்கான அனுமதி வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படும்.

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரின் கருத்து

க.பொ.த. உயர்தர பரீட்சை தொடர்பான விடயத்திலும், பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விடயத்திலும் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன, என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஷனிகா ஹிரும்பு ரோகம தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தரத்தில் ''சற்ஸ்கோர்'' எனும் வெட்டுப்புள்ளிக்கு அமைவாக மாணவர்கள் பலரை உள்வாங்கும் நோக்குடன் பல பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றுதான் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் பாடமாகும், என்று கூறிய ஆணைக்குழுத் தலைவர் பல விசேட பல்கலைக்கழகங்களும் ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவித்தார். தற்போதுள்ள பல்கலைக்கழகங்களின் தரத்தைக் குறைக்காது பெரும்பாலான மாணவர்களை உள்வாங்கும் நோக்குடனும் பல விசேட பல்கலைக் கழகங்களை நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் சிறந்த உயர்தர பெறுபேற்றினைப் பெற்றும் கூட பல்கலைக்கழக அனுமதியினைப் பெற முடியாது மன உளைச்சலுக்கு உள்ளாகும் மாணவர்களின் துன்பத்தை நீக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே மாணவர்கள், பெற்றோர்கள் இந்தப் பாடத் தெரிவு தொடர்பான விடயத்தில் மிக அவதானமாக செயற்படுவது இன்றைய கட்டாய தேவைகளில் ஒன்றென்பதை மறந்து விடாதீர்கள். பாடசாலைகளுக்காகவோ, ஆசிரியர்களுக்காகவோ பாடத்தைத் தெரிவு செய்யாதீர்கள். சாதகமான பாடத் துறைகள் பாடசாலையில் இல்லை எனில் பாடசாலையினை மாற்றுங்கள். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத் தோல்விக்கு யாரும் பதில் சொல்ல மாட்டார்கள். பாடசாலையில் உள்ள ஆசிரியர்களும் தங்கள் பாடத்தை அதிக மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பதற்காக பல அழுத்தங்களை சுயநலப் போக்கில் திணிக்கின்றார்கள். அதிபர்களும் பாடசாலை நிர்வாகத்துக்கு சாதகமான முறையில் பாடத் தெரிவுகளை முன் வைக்கிறார்கள். பிள்ளைகளின் எதிர்காலத்தை சிந்திப்போர் யாருமில்லை. இதைப் பெற்றோர்கள் உணர வேண்டும். என்பதே எமது ஆதங்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறனுள்ள முறையில் கைகளைக் கழுவுதல்

## ஒரு நியம பாதுகாப்பு முறையின் அங்கம்

எமது சூழலில் காணப்படும் அனைத்துப் பொருள்களிலும் ஏதோ வகையான கிருமிகள் காணப்படுகின்றன. நாம் அவற்றைத் தொட்டு விட்டு உணவு சமைக்கும்போதோ, உண்ணும் போதோ அல்லது கிருமித் தொற்றுக்கு ஆளாகக் கூடிய பச்சிளங் குழந்தைகளைத் தொடும் போதோ கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.

மேலும் தற்போதுள்ள இன்புளுவென்சா வைரசு தொற்றுக்கு தொடுகையும் ஒரு காரணமாகும். எனவே கிருமித் தொற்றுக்களிலிருந்து நம்மையும், எமது பச்சிளங்குழந்தைகளையும் பாதுகாக்க நாம் கைக்கொள்ள வேண்டிய மிக முக்கிய பாதுகாப்பு முறை வினைத்திறனுள்ள கை கழுவுதல் (Effective Hand washing) ஆகும். அதற்காக எமக்கு அதிக நேரமோ அல்லது செலவோ ஏற்படாது. எமக்குத் தேவையானவை சவர்க்காரம் போன்றவையும் சுத்தமான நீரும் தான். அதற்காக நாம் எடுக்கும் நேரமும் ஒரு நிமிடத்திலும் குறைவே. எனவே அனைவரும் வினைத்திறனான முறையில் கைகளைக் கழுவி கிருமித் தொற்றிலிருந்து எம்மையும் பிறரையும் பாதுகாக்கலாம். அது பற்றிய படிமுறைகளும், விளக்கப் படமும் இங்கு தரப்பட்டுள்ளன.




சாதாரண அல்லது கிருமி கொல்லி சவர்க்காரத்தைக் கைகளில் பூசி நுரை உண்டாகும் வரை உரசிய பின்னர்.

1. ஒரு வட்ட வடிவில் உள்ளங்கைகளை ஒன்றோடு ஒன்று உரசுங்கள்.
2. கை விரல் இடுக்குகளுக்கு இடையில் கையின் வெளிப்பக்கமாக இரண்டு கைகளிலும் தேய்க்கவும்.
3. பின்னர் விரல் இடுக்குகளுக்கு இடையில் உள்ளங்கைகளைத் தேய்க்கவும்.
4. ஒரு கை விரல்களால் மறு கையின் விரல்களின் வெளிப் பக்கங்களை மாறிமாறி உரசுங்கள்.
5. இரண்டு பெருவிரல்களையும் நன்றாக உரசவும்.
6. இரண்டு உள்ளங்கைகளிலும் விரல் நுனிகளைத் தேய்க்கவும்.
7. இரு மணிக்கட்டு பகுதிகளையும் சுற்றித் தேய்க்கவும்.

மேற்கூறிய முறையில் கைகளை உரசிய பின்னர் ஓடும் சுத்தமான நீரில் கைகளைக் கழுவி, தூய்மையான துவாயினால் துடைக்கவும். கைகளில்' வெளிப்படையாக அழுக்கு இல்லாவிடில் நீரையோ சவர்க்காரத்தையோ பயன்படுத்தாமல் மதுசாரம் (Alcohol) கலந்த கைக் கிருமி நீக்கியை (Alcohol Hand Gel) பயன்படுத்தி மேற்கூறிய படிமுறைகளில் பூசித் தேய்த்து காற்றில் உலர விடுவதன் மூலம் கைகளைத் தூய்மைப் படுத்த முடியும். இந்த மதுசாரம் கைக்கிருமி நீக்கிகள் சற்று விலை அதிகமாயினும் மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கெட்டுகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**Dr. ந. ஸ்ரீசரவணபவானந்தன்,**
**குழந்தை வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

# சூழல் மாசடைதலும் மிரட்டும் நோய் ஆபத்தும்

சூழல் மாசடைதல் என்றால் என்ன? அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் என்ன? இதைப்பற்றி நாம் எதற்குத் தெரிந்து கொள்ள வேண்டும்?

இவையெல்லாம் உங்கள் மத்தியில் தோன்றக்கூடிய கேள்விகள். உண்மையில் சூழல் மாசடைதலென்பது சூழலின் கூறுகளான மண், நீர், வளி என்பன மனிதச் செயற்பாட்டினாலும், நுண்ணங்கிகளாலும், சேதன, அசேதனக் கழிவுகளினாலும் அவற்றை நுகர்பவர்களுக்குத் தீங்கு பயக்கக் கூடிய மாறுதல் ஆகும். மாசாக்கம் பெற்ற சூழல் மனித வாழ்க்கைக்கும் ஏனைய உயிரினங்களின் வாழ்வாதாரத்துக்கும் ஒவ்வாததாக மாறுவதுடன், நோயை விளைவிக்கும் நுண்ணங்களின் பெருக்கத்துக்கும் காரணமாக இருந்து நோய்களை ஏற்படுத்தி விடுகின்றது.

உதாரணமாக வளிமாசடைதலை எடுத்துக் கொள்வோமானால், அது சகல மாசடைதல்களைக் காட்டிலும் அதிகமான பாதகமான விளைவுகளைத் தருவதாக இருக்கின்றது. காரணம், நாம் விரும்பியோ விரும்பாமலோ ஒவ்வொரு கணமும் சுவாசித்தலாலேயே சீவிக்கின்றோம். வளியில் இரு வகையான மாசுக்கள் காணப்படலாம்.

1. வாயு
2. particulate matter (நுண்மாசுத் துணிக்கைகள்)

இவை நமது சுவாசத்தினூடாக உள்ளெடுக்கப்பட்டு குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து விடுகின்றன. இதனால் குருதியினூடு சகல உடற்கூறுகளுக்கும் கடத்தப்பட்டு நோயை ஏற்படுத்தி விடுகின்றன.

சாதாரணமாக மாசடைந்த வளியினால்
1. கண்ணெரிவு 2. மூக்கு, தொண்டை, வாய் அரிப்புகள் 3. தலையிடி 4. தலைச்சுற்று 5. வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வுகள் ஏற்படலாம். இவ்வாறான அறிகுறிகள் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியர் ஒருவரை அணுகி வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது. அதைவிட நீண்டகால அடிப்படையில் பல்வேறுபட்ட சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக,

1. ஆஸ்துமா
2. COPD
3. நுரையீரல் செயற்பாட்டுத் திறன் குறைவடைதல்
4. நுரையீரல் புற்றுநோய்
5. Mesothelioma
6. pneumonia (நிமோனியாக் காய்ச்சல்)

இவற்றில் ஆஸ்துமாவைப் பற்றி அறிந்து கொள்வோமேயானால் ஏற்கனவே ஆஸ்துமா நோயுள்ள ஒருவர் மாசடைந்த வளியை உள்ளெடுப்பதால் அவருடைய நோய் நிலைமை மேலும் சிக்கலடைகின்றது. ஆரோக்கியமாக இருக்கும் நீங்கள் கூட மாசடைந்த வளியுள்ள பிரதேசத்தில் வசிப்பீர்களாயின் ஆஸ்துமா நோயாளியாக வாய்ப்புண்டு. இதை (occupational Asthma) என அழைப்பார்கள்.

இதைவிட (COPD) Chromic obstructive pulmonary disease என்று அழைக்கப்படும் சுவாசப்பாதை நீண்ட கால அடிப்படையில் குறுகலடைவதால் ஏற்படும் நோய் நிலைமை. மாசடைந்த வளியைச் சுவாசிப்பதால் நுரையீரல் அழற்சி ஏற்படும். மீண்டும் மீண்டும் நுரையீரல் அழற்சி ஏற்படுமாயின் COPD ஏற்படுகின்றது.

Emphysema என்று அழைக்கப்படும் ஒரு வகையான சுவாச நோய்க்குப் பிரதான காரணம் புகைத்தலாகும். மாசுற்ற துணிக்கைகள் நுரையீரல்களில் சேர்ந்து சீதப் பாதிப்பை உருவாக்குகின்றன. இதனால் அழற்சித் தொற்றுக்கள் ஏற்பட்டு இந்நோய் நிலைமை ஏற்படுகின்றது. உலக சுகாதார அமைப்பின் புள்ளி விவரப்படி ஒரு வருடத்துக்கு 2.4 மில்லியன் பேர் மாசடைந்த வளியை சுவாசிப்பதால் நோய்களுக்கு ஆளாகின்றனர்.

இதைவிட இன்று பெரிய பூகோள ரீதியான பிரச்சினையாக உருவெடுத்திருப்பது நீர் மாசடைதலாகும். நுண்ணுயிர்க் கொல்லிகளினாலும், தொற்றுநீக்கப் பயன்படும் இரசாயனங்களினாலும், பெற்றோலியப் பொருள்களினாலும், பார உலோகங்களினாலும் நீரானது மாசுபடுத்தப்படுகின்றது. இதனால் நீர் வாழ் உயிரினங்கள் மட்டுமின்றி நீரைப் பயப்படுத்தும் மனிதனும் பாதிப்படைகின்றான். உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரங்களின்படி நீர் மாசடைதலால் ஒவ்வொரு நாளும் 4.1 வீதமான மக்கள் நோய் நிலைமைகளுக்கு ஆளாவதுடன் வருடத்துக்கு 1.8 மில்லியன் மரணங்களும் ஏற்படுகின்றன.

மாசடைந்த நீரானது நோய்களை உண்டாக்கும் நுண்ணங்கிகளின் பெருக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது. பக்றீரியாக்கள், புரொட்டோ சோவாக்கள் போன்ற நுண்ணங்கிகள் உணவுக் கால்வாயூடாகப் பயணித்து ஏனைய உடற்கூறுகளுக்கும் கடத்தப்பட்டு நோய் நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. கொலரா (Cholera), தைபோய்ட்டு (Typhoid), Botulism என்பன மாசடைந்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் நிலைமைகளாகும். இதைவிட அசுத்த நீரானது நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்துக்குக் காரணமாகவிருந்து டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய் என்பன ஏற்படக் காரணமாக அமைகின்றது. நீர் சார்பான நோய் நிலைமைகளைப் பொறுத்தவரையில் அதில் பாதிப்பங்கு (Diarrhoae) வயிற்றோட்டமாகும். இதனால் தனிமனித ரீதியிலும் சமூக ரீதியிலும் பெரியளவில் உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

வளி, நீர் ஆகியவற்றைப் போலவே சூழலின் பிரதான கூறுகளில் ஒன்றான மண் மாசடையச் செய்யப்படுகின்றது. இது இரசாயனப் பதார்த்தங்களால் மட்டுமின்றி இயற்கைக்கு மாறான மனிதச் செயற்பாடுகளினாலும் மாசாக்கம் அடைகின்றது. இதுவே பல பாரதூரமான நோய் நிலைமைகளுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. இதனால் பிறப்பு ரீதியான நோய்கள் (congenital disorders) அதிகளவில் ஏற்படுவது மட்டுமன்றி புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் ஏற்படுகின்றது. மண்ணில் கலக்கப்படும் பென்சீன் இரசாயனத்தால் (lerremoia) இலியூக்கேமியா என்ற நோய் நிலைமை ஏற்படுகின்றது.

அதைவிட மண்ணில் கலவையடையும் இரசம் CHGL போன்ற பார உலோகங்கள் சிறு நீரகக் கோளாறுகளை உருவாக்குகின்றன. Organaphosphate வகைப் பூச்சி நாசினிகள் எமது உடலில் சேர்வதால் நரம்புக் கடத்தலில் பிரச்சினை ஏற்பட்டு திறனாற்றலைக் குறைவடையச் செய்கின்றது. இதைவிட ஈரல் நஞ்சுபடல், சரும நோய்கள் போன்றனவும் மண் மாசடைவதால் ஏற்படுகின்றன.

நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்படுவதன் மூலம் எம்மை மட்டுமல்லாது எம்மைச் சூழவுள்ளவர்களையும் பாதுகாத்துக் கொள்வதோடு வளமான ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். "சூழலைக் காப்போம் பொறுப்புணர்வுடன் செயற்படுவோம்".

மருத்துவபீட மாணவர்கள்
சி.துசாரன்
ர.அபிராமி
எச்.பி.எஸ். தீபமாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வான், 4' பிறிச் மற்றும் அனைத்து உபகரணங்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 076 0539

(38109)(3.6.7.11)

## காணி தேவை

வீடு கட்டக்கூடிய 2 பரப்புக்காணி தேவை. மல்லாகம், சுன்னாகம் போன்ற பகுதிகள் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 075 708 8433

பிரதான வீதிக்கு அருகில் விரும்பத்தக்கது.

## உடனடியாகத் தேவை

Wanted வவுனியாவில் உள்ள எமது (தனியார்) காரியாலயத்திற்கு சிங்கள மொழி பேசக் கூடிய O/L, A/L கல்வி கற்ற 18-28 வயதுடைய பெண்கள் (எழுதுவினைஞர்) வேலைக்குத் தேவை. சம்பளம் 12000/= (திருமணம் முடிக்காதவர்கள்/மேலதிக வகுப்புகளுக்கு செல்லாதோர் விரும்பத் தக்கது) வவுனியாவில் உள்ளோர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:

077 5561 883

(35266)(3.6.11)


## மு/யோகபுரம் மகா வித்தியாலயம்

### பொன்விழா மலர் வெளியீடும் இறுவட்டு வெளியீடும்-2013



காலம் : 11.06.2013
நேரம் : மு.ப. 10 மணி
இடம் : பாடசாலை மண்டபம்
தலைவர் : திரு. த. யோகானந்தராசா (அதிபர்)
பிரதம விருந்தினர் : திரு. எஸ். சத்தியசீலன் (செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு-வடமாகாணம்)

இந்த நிகழ்வில் எமது பாடசாலை முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



மலர் வெளியீட்டுக் குழு,
மு/யோகபுரம் ம.வி. யோகபுரம்.

38119)(10.6.3)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 5 சிறி தொடரிலக்க முடைய மொறிஸ் மைனர் கார் மற்றும் கடைக்கு பாவிக்கக் கூடிய 04 அலுமாரி, 02 கடை சோக்கேஸ் என்பன விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 159 8281
077 159 8221

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (சோடக் கம்பனி ஒழுங்கை)

தொடர்பு: 077 753 2994

(38130)(3.6.11)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் B.M.C.ஒழுங்கை (மணிக்கூட்டுவீதி)யில் நெற்பரப்பு 2¼ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 529 6290

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் A9, வீதி, 156ஆம் கட்டை 100 மீற்றர் தூரத்தில் 1 ஏக்கர் மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :

0779494436
0775476689

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக 1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



## யாழ். கலாலயா

பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதான வைத்தியசாலை பின் புற வீதி)

Yaal Kalaa layah Academy
Victoriya Road, Jaffna



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல் , Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)





- முக அழகுக் கலை (Facial)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-06-2013
புதன் காலை 9.30 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 22-06-2013
சனி காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கில் இந்துக் கல்லூரிக்கு அருகில் 5பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்பு :

0779442687

## விற்பனைக்கு

கிளிநொச்சியில் இயங்கி கொண்டிருக்கும் GAME ZONE விற்பனைக்கு உண்டு

தொடர்பு:

0773 951 525

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை வீதியில் 100 மீற்றர் தூரத்தில் உள்ள வன்னியசிங்கம் வீதியில் 2 பரப்புகளாக 3 துண்டு காணி விற்பனைக்குண்டு

தொடர்பு :

0779007481

## காணி விற்பனைக்கு

கரணவாய் தெற்கில் முத்து விநாயகர் கோவிலில் இருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் 5½ பரப்பு வீடு கட்டக் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு

0771 749 369

## யாழ். நகரில் நடைபெறும் வியாபாரத்தில் சிறிய முதலீட்டுக்கு அதிக வருமானம்

★ வியாபார நிலையம் தேவையில்லை.
★ வாடகை இல்லை.
★ வீட்டில் இருந்தவாறும் வருமானம் பெறலாம்.
★ தினமும் வருமானம் பெறலாம். அல்லது மாத முடிவில் வருமானம் பெறலாம்.

விபரங்களுக்கு

077 8730129, 0757274217

(38118)(07.17)

## விநியோகஸ்தர்கள் தேவை

உயர்தரமான தேயிலையைச் சந்தைப்படுத்தும் கம்பனி ஒன்றுக்குப் பின்வரும் பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.

கொழும்பு கிழக்கு, பாணந்துறை, மாத்தறை, இரத்தினபுரி, அவிசாவளை, ஹோமாகம, நிட்டம்புவ, வத்தளை, நீர்கொழும்பு, புத்தளம், குருநாகல், கேகாலை, கண்டி, மாத்தளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், மொனறாகலை, பதுளை மற்றும் நுவரெலியா.

விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்போது விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களாயின் முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:-

071 916 2107 கமல்

(சி/8915)(6.2.7)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP-VO-XXXX 125 T பேஸிக் யப்பான் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (விலை 250,000 /-)

T.P-075 040 2496

(35064)(3.6.11)

## வீடு வாடகைக்கு

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியில் (மகளிர் கல்லூரிக்கு அருகில்) வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 045 2175

(35063)(3.6.11)

## விற்பனைக்கு

Hero Honda Hunk Black DD XN-XXXX, CD 125 Benley Red JPXXXX, Pleasure Red VL-XXXX உடன் விற்பனைக்கு.

T.P- 077 833 8993

(38125)(3.6.11)

## வீடு விற்பனைக்கு

பற்றிக்ஸ் பள்ளிக்கூடச் சந்திக்கு அண்மையாக பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி நிலையத்திற்கு முன்பாக ஒரு பரப்பும் 4.12 குளியும் கொண்ட வீடு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 712 0968

(38127)(3.6.11)

## விற்பனைக்கு

WO - X X X X எனும் இலக்கமுடைய 180 Pulser (Black) விற்பனைக்குண்டு

தொடர்பு: 075 835 0792

## மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள YAMAHA NEWSMATE-V-50 JT-XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

T.P-072 958 6931 நல்லூர்.

(38111)(3.6.11)

## Mohan Building Construction

வீடு, பல அடுக்குகளைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 898 9436

பதிவு இல. NAL/DS/1228

## காணி விற்பனைக்கு

வதிரி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு அருகில், வீதியின் முன்பக்கமாக 3½ பரப்பு, 4 பரப்பளவு கொண்ட இரு காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 011 267 0088 (இரவு 7 மணிக்கு மேல்)

(ட/8917)(3.6.7.11)

## தென்னங் காணி விற்பனைக்கு

பளை A-9 கண்டி வீதியில் தெங்கு ஆராய்ச்சி நிலையத் திற்கு அருகில் தென்னங் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 413 1423

(இரவு 7மணிக்குப் பின்பு)

## வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 710 0884

(38107)(3.6.6)

## வீடு வாடகைக்கு

A- 9 வீதியில் இல. 491 இல் 4½ பரப்புக் காணியில் நவீன சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 535 7061

## House For Rent

A house with modern facilities situated at A9 Road,No 491 including 4½ Lacham (LMs) Land is available for Rent. NGO'S Preferable


Contact No 077 535 7061

(38123)(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானம் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. (ஒ-51)



வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவையின்போது பொது மக்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வந்திருந்த வேளை... (ஒ-29)




கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் உரையாற்றுவதையும் கல்லூரி அதிபர், மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (ஒ-400)



திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலில் அண்மையில் நடந்தேறிய கந்த புராணப் பூர்த்தி விழாவின் போது கலாபூஷணம் பௌராணிகர் சுப்பிரமணியம் சிவராசா ஆலய குருவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட போது. (ஒ)



இணுவில் மத்திய கல்லூரியின், 'மத்தியதீபம்' சஞ்சிகை வெளியீட்டு விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் நூலை வெளியிட்டு வைக்கின்றார். அருகே கல்லூரி அதிபர் அ.சதானந்தன் காணப்படுகின்றார். (ஒ)



யாழ். மாவட்ட சிறு தோழரின் இந்த வருடத்தின் முதலாவது கூட்ட விடுமுறை, யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் ஒரு காட்சி. (ஒ)



யாழ். நகர் மடத்தடிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர்த்தாங்கியில் குளவிக் கூடுகள் காணப்படுகின்றன. காற்று வீசும் போது குளவிகள் கலைந்து வீதிகளில் செல்வோரையும் பதம் பார்த்து விடுகின்றன. (ஒ-ரி-14)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து ஓய்வு பெற்ற திருமதி மா. அரியானந்தம், திருமதி தி.கணேசலிங்கம் ஆகியோரின் மணிவிழாவை முன்னிட்டு சிறுவர் கட்டுரை மாலை நூல் வெளியீட்டு வைபவத்தில் அதிபர், மணிவிழா நாயகிகள் நூல் வெளியிட்டு செய்வதைக் காண்கிறீர்கள். (ஒ)




கைதடி அரச முதியோர் இல்லத்தில் வடமாகாண ஆளுநரின் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட விடுதியை அண்மையில் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் இல்லத்தில் வசிக்கும் முதியவர் ஒருவரும் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றனர். (ஒ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்த் தினப் போட்டியில் கோவலன் கண்ணகி இசை நாடக போட்டியில் வலய, மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று, மாகாண மட்ட போட்டியில் கலந்து கொண்ட மன்னார் இலுப்பைக் கடவை அ.த.க.பாடசாலை மாணவர்களும் அதிபர் ஆசிரியர்களும். (எ)




கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தின் புதிய மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில். (18)



வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணி விழாவில் நாகேஸ்வரன் தம்பதி அழைத்து வரப்படுகின்றனர். (எ-400-402)







வவுனியாவில் இரண்டாவது ரயில் நிலையமாக விளங்கும் ஈரப்பெரியகுளம் ரயில் நிலையம் கவனிப்பாரற்ற நிலையில். (எ-421)




வவுனியா நகரின் சந்தை சுற்றுவட்ட வீதியின் அருகே நின்ற பல ஆண்டுகள் பழைமை வாய்ந்த மரம் வெட்டி வீழ்த்தப்பட்டது. (எ-421)



தொழில்துறை திணைக்களத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொழில் முயற்சியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-435)





அக்கராயன் ஆரம்ப வித்தியாலய முதலாவது கட்டடத் திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். புதிய கட்டடத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் திறந்து வைக்கிறார். (ஒ-18)



புதிதாக திறக்கப்பட்ட அக்கராயன் ஆரம்ப வித்தியாலய கட்டடத்தில் அதிபருடன் ஆசிரியர்கள். (ஒ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்திருவிழாக் காணும் "நாகம் வழிபட்ட நாயகி" ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்


தலவிருட்சம் வன்னிமரத்துடன் ஆலய முகப்புத் தோற்றம்



*''தனம் தரும் கல்வி தரும் ஒரு*
*நாளும் தளர்வு அறியா*
*மனம் தரும் தெய்வ வடிவும் தரும்*
*நெஞ்சில் வஞ்சம் இல்லா*
*இனம் தரும் நல்லன எல்லாம்*
*தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள் அபிராமி*
*கடைக் கண்களே''*

அம்பிகையின் கடைக் கண்பார்வை எல்லாவற்றையும் தரும் என அபிராமிப்பட்டர் அம்பிகையின் திருவுருவத்தின் மீது மனதைப் பறிகொடுத்து தம்மை மறந்த நிலையில் பாடிய பாடல் இது.

சர்வமத சந்நிதியாக அருள்பாலிக்கும் அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணியின் இந்த வருட பெருந்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஆதிபரா சக்தி மனிதர்களை தன்பால் ஈர்த்து அருள் புரிந்து காப்பதற்காகத் திகழ்ந்து கொண்டிருப்பவையே சக்தி பீடங்களாகும். உலகத்துக்குத் தாயாகி அன்னை பல சக்தி பீடங்களில் அமர்ந்து அருளாட்சி செய்கிறாள். காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் அமர்ந்திருக்கும் அன்னையானவள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ''புவனேஸ்வரி'' பீடமாக அமர்ந்து அருள் பாலித்து அனைத்து உயிர்களையும் காத்து வருகின்றாள். சக்தி பீடங்களுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். ஏழ் கடல் சூழ் சமுத்திரத்தின் மத்தியில் அருட்பொலிவும், ஆன்மிகச் சிறப்பும் பெற்று சரித்திர வரலாறுகளுடன் திகழ்வது நயினாதீவாகும். ''மணிபல்லவம்'' என்று போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் இதற்குண்டு. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றவள் அன்னை நாகபூஷணி. ''ஓம் சக்தி'' எனக் கடல் அலைகள் துதிபாட, உதயசூரியனின் வெண் பொற்கதிர்கள் கோபுரத்தின் மீது படர்ந்து பளிச்சென ஒளிவீச நயினையில் அருளாட்சி செய்கின்றாள் அன்னை பராசக்தி. அலை கடலில் நீந்தி அருட்கடலை நாடி வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களை அன்னையின் அருட்கோபுரம் வரவேற்கின்றது.

வருடந்தோறும் நடைபெறுகின்ற உற்சவத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் பங்கு கொண்டு தத்தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர். அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லியாக, அன்பர் என்பவர்க்கு நல்லனவெல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி அருளாட்சி நடத்துகின்றாள்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட நாக வழிபாட்டை எடுத்துக்காட்டும் சின்னமாக இந்த ஆலயம் அமைந்துள்ளது. தூய்மையான நாக வழிபாட்டை நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் காணலாம். நெடுங்காலம் பிள்ளைப் பாக்கியம் இல்லாதிருப்போர் நாகபூஷணியை வழிபட்டு, நாகப்பிரதிஸ்டை, நாகசாந்தி செய்தால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் இன்றும் காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் ஒரு சர்ப்பம் நெடுநாள்கள் இங்கே வசித்து தவம் செய்து, அம்பிகையின் அருளால் தனது சாபம் நீங்கப் பெற்றது. சாபம் நீங்கப் பெற்ற நாகபாம்பைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்து அருளியமையால் இங்கு எழுந்தருளியிருக்கும் அம்பிகை ''நாகபூஷணி'' என்ற பெயரைப் பெற்றாள் எனச் சரித்திர வாயிலாக அறியப்படுகின்றது. நயினாதீவு நாகபூஷணியின் மூல விக்கிரகம் பூர்வீகமான பழைமை மிகுந்த மகிமைச் சிறப்பைக் கொண்டது என்பது நம்பிக்கை.

நாகபூஷணி அம்பாளுக்கு ''நாகேஸ்வரி'' என்ற திருநாமமும் உண்டு. நாகம் வழிபட்டதால், நாகத்தால் பூஜிக்கப்பட்டதால் அம்பாளுக்கு இத்திருநாமம் அமைந்தது.

நாகம் வழிபட்டதற்குச் சான்றாக அம்பிகை ஆலயத்தின் வடகடலில் ''பாம்பு சுற்றிய கல்'', ''கருடனிருந்த கல்'' என இரண்டு கற்கள் காணப்படுகின்றன. இந்தக் கற்கள் இரண்டையும் அடியார்கள் வழிபட்டு வருகின்றனர்.

நாகத்தில் அம்பாள் பவனி வருகின்ற காட்சி, தேவலோகக் காட்சி, கைலாச வாகனத்தில் அம்பாள் பவனி வருகின்ற காட்சி என்பவற்றைக் காணக் கோடி கண்கள் வேண்டும். வாயு பட்சண நாகபூசையும், கருடபூசையும் மெய் சிலிர்க்க வைப்பவை. பதினோராம் திருநாளன்று நடைபெறும் கருட பூசையின்போது ஆகாயத்தில் வட்டமிடும் கருடனைக் காணும் பக்தர்களது மெய்ப்பாடு மிகவும் உணர்வு பூர்வமானது. கண்ணீரைச் சொரிய வைப்பது, மயிர்க்கூச் செறிவது, விபரிக்க முடியாதது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ நல்லருள் தரும் அம்பிகையின் இந்த வருட பெருந்திருவிழாவைக் காண வாருங்கள். அருளமுதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**நயினை நா.க.குமாரசூரியர். J.P**

## நாடுவோர்க்கு நலமருளும் நாகபூஷணி கொடியேற்றம் காண்கிறாள் நயினையிலே

அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகிறாள். சூரியனில் ஒளியாகவும், நீரில் தண்மையாகவும், நெருப்பில் வெப்பமாகவும், பூவில் மணமாகவும் விளங்கி நிற்கின்றாள். ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்கும் நீங்கமற நிறைந்து நிற்கும் அன்னை, ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அகிலமெல்லாம் உய்ய அறம் வளர்ந்திட்ட பெருமையுடையவள் ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமோ'' என்ற மணிவாசகரின் மணிவாக்கின்படி, அன்னை பராசக்தியும் பல்வேறு வடிவங்களையும் நாமங்களையும் பெற்றவளாக அருட் கடாட்சம் புரிகின்றாள்.

அந்த மகா சக்தியின் மகத்துவ வடிவங்கள் பற்றியும் அவற்றின் பெருமைகள், சிறப்புக்கள், பேருண்மைகள் பற்றியும் தெரிந்து கொள்ளுதல் சாலச் சிறந்தது. சக்தி வழிபாடே தாய் வழிபாடு, அன்னை வழிபாடு என்றெல்லாம் கூறப்படும். ஆதிசேடன் சக்தியின் சின்னம் என்பர். பொதுவாகப் பாம்பு சக்தியின் சின்னமாகும். மிகப் பழங்காலத்தில் நாக தேவதை வழிபாடே நிலவியது. நாக தேவதை சக்தியின் வடிவம். சக்தியின் சின்னமாகிய நாகதேவதை வழிபாட்டின் தொடர்ச்சியாகவே இன்றும் நாகப்புற்றில் வழிபாடு செய்து வருகின்றனர். நாகதேவதை வழிபாட்டின் அடியாகவே நாககன்னியர் வழிபாடும் தோன்றியது.

அன்னை சக்தியானவள் அணுமுதல் அண்டம் வரையுள்ள அனைத்திலும் நிறைந்திருக்கின்றாள். அவளது திருவிளையாடல்களில் பயனளிக்காத செயல் எதுவுமின்றி சக்தி எப்போதும் தோற்றுவித்தருளும் செயல்களில் மேலான நோக்கம் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முத்திறச் சிறப்புக்களோடு விளங்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றப் பெருவிழா பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

நயினை நாகபூஷணி அம்பாளின் ஆலய கருவறையில் சுயம்புவாய் விளங்கும் நாகமும் அன்னையும் சிற்ப வடிவிலே செதுக்கியோ செப்புருவாய் வார்த்தெடுத்தோ பிரதிஷ்டை செய்யப்படாது நயினை ஆலயத்தின் கருவறையிலே ஐந்துதலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது.

நாகவழிபாட்டிலே தொடங்கி காலப் போக்கில் நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து அந்த வழிபாட்டின் ஆறாத் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

இந்த மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும், நாகம்-நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதனாலும் இலங்கை எங்கணுமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழைமை வாய்ந்தது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமே என்பதும் ஐயமின்றிப் பெறப்படுகிறது.

இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்ட நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பக்திப் பரவசத்துடன் வழிபட சர்வமங்கள வாத்திய கோஷம் ஒலிக்க அரோகரா பேரொலியுடன் அம்பாளின் கொடியேற்றப் பெருவிழா நடைபெறுகிறது.

நாகபூஷணி அம்பாளின் அனுக்கிரகம் வேண்டி அவளைத் தொழுதேத்தி அருட் கடாட்சம் பெற்றுய்வோம்.

**காரை. எம். பி. அருளானந்தன்**

## சர்வமெங்கும் சாந்தி நிலவிட கொடியேறு!

பூதங்க ளைந்தாய் பொலியும் பூரணி
புண்ணிய தாரணி புஜங்க பூஷணி கொடியேறு
மாதங்கி மாலினி வரத மனோன்மணித் தாயே
மந்திர ஆகம வாசகி சாம்பவி கொடியேறு
திருவளம் சுரக்கும் நாகேஸ்வரி நந்தினி
கருணாகரியே வெண் கமலாசினி கொடியேறு
மிடிநோய் பிறவி வினை தீர்ப்பவளே
விரதத்தின் பலனருள் பவளே கொடியேறு
[illegible] நிதியும் [illegible] அருளும் பொலிந்திட
சாந்தியும் சமாதானமும் சர்வமெங்கும் நிலவிட கொடியேறு



**தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள்.

**இடபர்:** உங்கள் மீது சிலர் பழி சுமத்துவார்கள். மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டாம். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும்.

**மிதுனர்:** மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். அரச காரியங்கள் இழுபறியாகும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**கடகர்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகள் ஒத்துழைப்பார்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். முகப் பொலிவு கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும்.

**சிங்கர்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராகும். கணவன் -மனைவிக்குள் அன்னியோன் னியம் பிறக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**கன்னி:** மனச்சாட்சிக்கு விரோதமின்றி செயல்படவேண்டுமென நினைப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

## நாளை

வைகாசி-27 திங்கட்கிழமை 10.06.2013
திதி: துதியை பி.இ. 01.27 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ. 01.36 வரை
சுபநேரம்: 11.52- 01.22 வரை
இராகுகாலம்: 07.22 - 08.52 வரை

**துலார்:** உதவி கேட்டு உறவினர்களும், நண்பர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**விருச்சிகர்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள் . வாகனத்தைச் சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மகரர்:** பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பர்:** குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். சகோதர வகையில் நன்மை கிட்டும். பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**மீனர்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகள் பெருகும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களை சந்திப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 8 | | | 4 | | | |
| | 7 | 9 | 1 | 3 | 8 | | 2 | |
| | | | | | | 5 | 3 | |
| | 3 | | | 1 | 7 | | 9 | |
| 1 | | | | 9 | | | | 4 |
| | 4 | | 8 | 5 | | | 6 | |
| | 1 | 6 | | | | | | |
| | 5 | | 7 | 4 | 1 | 6 | 8 | |
| | | | 2 | | | 7 | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 5 | 6 | 3 | 1 | 2 | 9 | 8 |
| 6 | 2 | 9 | 4 | 8 | 5 | 3 | 7 | 1 |
| 1 | 8 | 3 | 7 | 9 | 2 | 6 | 4 | 5 |
| 5 | 4 | 1 | 8 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 9 | 3 | 7 | 1 | 2 | 4 | 8 | 5 | 6 |
| 2 | 6 | 8 | 3 | 5 | 9 | 7 | 1 | 4 |
| 7 | 9 | 4 | 2 | 1 | 8 | 5 | 6 | 3 |
| 8 | 5 | 6 | 9 | 4 | 3 | 1 | 2 | 7 |
| 3 | 1 | 2 | 5 | 7 | 6 | 4 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1- 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

2013 இற்கான புதிய அனுமதிகள்
BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை
11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை
★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori +Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவர்.
★ விளையாட்டுப் போட்டி
English Concert
முத்தமிழ் விழா
சித்திரக்கைவேலைக் கண்காட்சி
Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்
தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி நல்லூர்
யாழ்ப்பாணம்: 573, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம். (சந்தி அருகாமை)
நீர்வேலி: 1வது மைல் கல், இராச வீதி
கோப்பாய்: பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி
சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை
மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி.
அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை
மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துகல்லூரி வீதி)
சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி)
சுன்னாகம்: Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம்
வடமராட்சி: பருத்தித்துறை வீதி, மாலு சந்தி, கரவெட்டி.

சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்
Certificate in English – இலக்கணம். பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
Diploma in English – G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
ESOL A1, A2 – Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
IELTS – உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
★ Pre Foundation
★ Foundation
★ Level 1, 2, 3, 4
பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British Business College – Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
Tel : 077 4682951, 077 6646357
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை [illegible]
Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No. P 9718

ST.JOHN`S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS` COLLEGE, JAFFNA
ADMISSION- 2014 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10 & A/L


தரம்: 01, தரம்: 04, தரம்: 06, தரம் 10, தரம்: 12 இற்கான அனுமதி - 2014

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.07.2013 முதல் 15.07.2013 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 19.07.2013 வெள்ளிக்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
02. தரம்: 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒருமணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000/=
05. வயதெல்லைகள்:
அ. தரம்: 01 விண்ணப்பதாரி 01.02.2008இக்கும் 31.01.2009 இக்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம்: 04 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ. தரம்: 06 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. தரம்: 10 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம்: 12 (A/L) 2016 Batch) விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம்: 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 21.09.2013 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசால் வழங்கப்படும் ஆண்டு 05 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02. சென். ஜோன்ஸ் கல்லூரியில் தரம்: 12 இற்கும் (A/L 2016 Batch) தமிழ் / ஆங்கில மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2013/2014 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2014 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2014 ஆரம்பமாகும்.
03. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ ஆங்கிலமொழி) மூலம் 2016 [illegible] விண்ணப்பதாரிகள் (O/L) பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

[illegible] (6.3.45)
-அதிபர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

அதிகாரிகள் திடீர்ப் பாய்ச்சல்:

# மாட்டினர் வர்த்தகர்கள் 9 பேர் செலுத்தினர் தலா 10 ஆயிரம்

தென்மராட்சி, ஜூன்9
கொழும்பிலிருந்து வருகை தந்த பாவனையாளர் அதிகார சபையின் உயர் அதிகாரிகள் நடத்திய திடீர் பரிசோதனையில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 9 வர்த்தகர்கள் அகப்பட்டனர்.

இவர்களுக்கு சாவகசசேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உயர் அதிகாரிகள் வர்த்தக நிலையங்கள் மீது திடீர்ப் பரிசோதனை நடத்தினர். இதன்போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, நிறை குறைவாக விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ந-9)



நயினாதீவுக்குத் தெற்கே வங்களாவடிப் பகுதி கடலில் திமிங்கில இனத்தைச் சேர்ந்த சுமார் 20 அடி நீளமான இராட்சத மீன் ஒன்று வயிறு கிழிந்தும் அழுகிய நிலையிலும் கரை ஒதுங்கியது.
யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர், அது தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். அதன்படி குறித்த மீனை அங்கிருந்து அகற்றி புதைத்து விட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஒ-4)

# புடைவை கைத்தொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9
புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளால் நடத்தப்படும் கைத்தறிப் புடைவைக் கைத்தொழில் பயிற்சிகளைப் பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கைத்தறி புடவைத் தொழில் ஆரம்பப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளவிரும்புபவர்கள் ஆண்டு 8 கல்வித் தகைமையுடைய 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும்

இறுதிச் சான்றிதழ் பயிற்சி பாட நெறிகளுக்கு க.பொ.த.சாதாரண தரம் தமிழ், சிங்களம் ஆங்கிலமொழி ஒன்றுடன் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த 18 முதல் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 100 வும் சீருடையும் வழங்கப்படும்.

பயிற்சி நெறிகள் தமிழ்மொழி மூலம் 194, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள புடைவைக் கைத்தொழில் நிலையத்திலும் சம்மாந்துறையில் புடைவைக் கைத்தொழில் பாடசாலையிலும் இடம்பெறும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிவரக் கோவையை பதிவுத் தபால் மூலம் இம்மாதம் (ஜூன்) 10 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக கிடைக்கத்தக்கதாக பணிப்பாளர், புடைவைக் கைத்தொழில் திணைக்களம், இல. 111 டீபி. ஜெயமாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகிறார்கள். (ந-7)

# அபிவிருத்தி நிதி போய்விட்டது திறைசேரிக்கே உறுப்பினர்களின் இழுபறியால் பாதிப்பு மக்களுக்கே

## வலி.தென்மேற்கு ஆளுங்கட்சியினரைச் சாடுகிறார் எதிரணி உறுப்பினர்

வலி.தென்மேற்கு, ஜூன் 9
ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மையும் அலட்சியப் போக்கும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன. இந்த நிலை தொடர்வதற்கு மக்களும் அனுமதிக்க மாட்டார்கள். அதேநேரம் நாங்களும் அனுமதிக்கமாட்டோம். எனவே மாற்று நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் எதிரணி உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான அன்ரன் ஜோன்சன், வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் நிலை குறித்துத் தெரிவித்துள்ளார்.

பிரதேசத்தின் அபிவிருத்திக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை பற்றியும் அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றியும் எதிரணி உறுப்பினர் தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது:

பிரதேச சபையின் நிர்வாகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்ற காலத்திலிருந்தே ஆளும்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடு நிலவுகின்றது. பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரசால் வழங்கப்பட்ட 60 மில்லியன்ரூபா நிதி திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுள்ளது. இதனால் உறுப்பினர்களுக்குப் பாதிப்பில்லை. மக்களுக்குத்தான் பாதிப்பு. பிரதேச சபையின் அதிகாரம் எமது கட்சியிடம் இருந்த காலப் பகுதியில் போர்ச் சூழ்நிலையிலும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் அனுப்பப்பட்ட பணம் ஒரு ரூபாவும் திரும்பிச் செல்லாத வகையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஒப்பந்த வேலை செய்பவர்களின் சீர்கேட்டினால் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தாமதமாகின்றன. இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள்தான். மக்களினதும் பிரதேசத்தினதும் வளர்ச்சிக்காக நாம் சகல விடயங்களையும் விட்டுக் கொடுத்து ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். பிரதேச சபையின் நான்கு வருட ஆட்சிக் காலப் பகுதியில் இரு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. ஆனால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

ஒவ்வொரு வேலைத் திட்டத்துக்கும் அமைக்கப்பட்ட குழுக்கள் இயங்காமல் இருப்பதனால்பல அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றது. மீண்டும் குழுக்களை நியமிக்குமாறு தவிசாளரைக் கோரியிருந்தபோதும் அவர் குழுக்களை நியமிக்காமல் நிர்வாகத்தை நடத்தி வருகின்றார். அபிவிருத்திதடைப்படுவதற்கு இந்த நிலையும் ஒரு காரணமாக அமைந்துள்ளது.

வருமானத்தை மட்டும் கருத்தில் கொண்டு பிரதேச சபை இயங்கி வருகின்றது. மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மாதகல் மற்றும் காக்கைதீவு ஆகிய பிரதேசங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை நிவர்த்தி செய்ய பிரதேச சபை முன்வரவில்லை- என்றார். (ஒ-115)



மாநகர சபை வளாகத்துக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரை வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கடந்த கால போர் நடவடிக்கைகளினால் இந்தப் பாலம் பெரும் சேதமடைந்த் நிலையில் காணப்பட்டது. தற்போது இந்தப் பாலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. (ந-17)

# பகல் பராமரிப்பு நிலையத்துக்கு நடப்பட்டது அடிக்கல்

நவாலி, ஜூன் 9
சண்டிலிப்பாய் மத்திய பகல் பராமரிப்பு நிலையத்தினை சொந்தக் காணியில் நிரந்தரமாக அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்தப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு கொற்றாவத்தை சுந்தரம் குடும்பத்தினர் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் ஒரு பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

நிலையம் அமைப்பதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்பதற்கு கனடா நாட்டில் வாழும் வி.குசேலர் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல வருட காலங்களாக தனியார் கட்டடத்தில் முதியோர் சங்கமாக இயங்கி வந்த இந்த சங்கம் வளர்ச்சியடைந்து தற்போது பகல் பராமரிப்பு நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது அந்தப் பகுதி முதியோர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. (ந-100)

# புத்தூர் நவக்கிரியில் 3 நாள்களுக்கு சித்த மருத்துவ மாநாடு-கண்காட்சி

## மூலிகைத் தோட்ட வளாகத்தில்

சித்த மருத்துவ மாநாடும்-கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு புத்தூர் நவகிரி சித்த மருத்துவ மூலிகைத் தோட்ட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள ஆரம்ப விழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக சுதேச வைத்தியத் துறை அமைச்சர் சாலிந்த திஸநாயக்கா, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர்ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண, பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கர, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் பாலித வீரக்கோன், யாழ்பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி சே. சிவசண்முகராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

10 ஆம், 11ஆம், 12 ஆம் திகதி ஆகிய மூன்று நாளும் கண்காட்சி இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் சித்த மருத்துவத்துறை ஆர் வலர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டு பயன்பெற லாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவ மாநாடு மற்றும் கண்காட்சிக்கான விரிவான ஏற்பாடுகளை வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் செய்துள்ளது.(ஒ-11-288)

மானிப்பாய் வைத்தியசாலையில்

# வைத்தியர் விடுதி அமைக்க தீர்மானம் நிறைவேற்றம்

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு வைத்தியர் விடுதி ஒன்று விரைவில் அமைக்கப்படவேண்டுமென்று புதன்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரதேச வைத்தியசாலைகளில் தற்போது பணிபுரியும் வைத்தியர்கள் குத்தகை அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களது இடத்துக்கு புதிய நிரந்தர வைத்தியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். இந்த நிலையில் இங்கு வைத்தியசாலைக்கு நியமனம் பெறும் வைத்தியர்கள் தங்குவதற்கு விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் இந்த விடயமாக பணிப்பாளருடன் கலந்துரையாடுவது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந-100)

# கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூன் 9
கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி கலைவாணி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். கழகத்தில் அங்கம் வசிக்கும் சனசமூக நிலையங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை வருகை தருமாறு கழகத் தலைவர் இ.கந்தசாமி அறிவித்துள்ளார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளர் தேவை

**பணிநிலை-பிரதேச விற்பனை முகாமையாளர்**

பிரபல சிமெந்து ஏக விநியோக நிறுவனம் ஒன்றின் வடமாகாண கிளையினருக்கு பிரதேச விற்பனை முகாமையாளர்கள் தேவையாக உள்ளனர். பின்வரும் பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**யாழ்.மாவட்டம், வலிகாமம் பிரதேச செயலர் பிரிவு:** (யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை)

**வவுனியா மாவட்டம் பிரதேச செயலர் பிரிவு:** (வவுனியா, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம்)

## விண்ணப்பதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகுதிகள்

1. மேற்குறித்த பிரதேசங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
3. சந்தைப்படுத்தல் துறைசார்ந்த தொழில் முன் அனுபவம் உள்ளவராக இருப்பின் வரவேற்கத்தக்கது.

## சம்பளத்திட்டமும் சலுகைகளும்

* அடிப்படைச் சம்பளம் 25,000/= + மேலதிக விற்பனைத்தரகு
* பணி நிமித்தமான வாகன வசதிகள், தொலைத் தொடர்பாடல் வசதிகள் என்பன நிறுவனத்தால் வழங்கப்படும்
* விண்ணப்பதாரியின் ஏனைய வரையறைகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

*குறிப்பு:-விண்ணப்பதாரிகள் சுயவிவரக் கோவையுடன் 10.06.2013 தொடக்கம் 14.06.2013 வரை அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.*

**தலைமைக்காரியாலயம்:**
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட நிறுவனம்
102C, டாம் வீதி,
கொழும்பு-12,
011 245 8244

(38154)(3.6.7.11)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வடபிராந்தியக் காரியாலயம்
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட நிறுவனம்,
இல.91,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 7603

## காணி விற்பனைக்கு

இணுவிலுக்கும் மருதனார் மடத்துக்கும் இடைப்பட்ட ஆஞ்சநேயர் கோயிலுக்கும் அண்மையாக K.K.S.வீதியிலிருந்து 2ஆவது காணி 4 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 658 7795

(வி/8931)(3-5-6-7)

## வான் வாடகைக்கு

ஹயஸ் VAN வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 373 4109

(38142)(45,6,7)

## தேவை

Keetha Consulting (Pvt) Ltd is looking for Programmers. English Graduates, Social Media Writers. மேலதிக தகவல்களுக்கு.
http://www.keethaconsulting.com

(வி/8930)(3-5-6-7)

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் பாடசாலையில் இருந்து 500யார் தூரத்தில் கொழும்புத்துறை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 073 6183

(வி/8929)(3-5-6-7)

# கேள்வி அறிவித்தல்

## வலயக்கல்வி அலுவலகம் -முல்லைத்தீவு

TSEP திட்டத்தின் கீழ் அலுவலகப் பாவனைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

* கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் - 17.06.2013 மு.ப.10.00
* கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 19.06.2013 மு.ப. 10.30

கோரப்படும் பொருள் விவரம் பின்வருமாறு...

| Se. No. | Details | Quantity | Price per unit |
|---|---|---|---|
| 01 | Desktop Computer | 01 | |
| 02 | Laptop Computer | 01 | |
| 03 | Pen Drive | 01 | |
| 04 | Scanner | 01 | |
| 05 | Photo Copier | 01 | |
| 06 | Duplo | 01 | |
| 07 | Computer Table | 01 | |
| 08 | Speech Stand | 01 | |
| 09 | BrailleWriters | 01 | |
| 10 | Abacus | 01 | |
| 11 | Braille Slate | 01 | |
| 12 | Camera | 01 | |
| 13 | Curtain | 01 | |

கேள்விப் பத்திரங்களை இரட்டைப் பிரதிகளில் பூரணப்படுத்தி வெவ்வேறு கடித உறைகளில் இட்டு மூலப்பிரதி வைக்கப்பட்டுள்ள கடித உறையில் மூலப்பிரதி எனவும் மற்றையதில் பிரதி எனவும் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, மேற்கூறிய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும்.

தொ.பே.: 021 229 0015

(வி/9652)(3-5-6-7)

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,முல்லைத்தீவு.

# திறப்பு விழா

"மஞ்சவனப்பதி முருகன்" துணையுடன்

இன்று மாலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையிலுள்ள சுபநேரத்தில் பின்வரும் நிறுவனங்களை ஒரே கூரையின் கீழ் ஆரம்பிக்க உள்ளோம்

## Sunjeys Multi Marketing Center சண்ஜெ பல்பொருள் வாணிபம்

Fresh Vegetable மரக்கறி
Fresh Sea food, Mutton, Chicken (Ready to Cook)
கடல் உணவு, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி (உடனடி சமையலுக்கு)
All grocery எல்லா வகையான குறோசரி
Stationery காகிதாதிகள்

Free delivery within Jaffna Municipal. Value morethan 5000/=
5000/= விற்குமேல் கொள்வனவுக்கு இலவச விநியோகம். யாழ் மாநகர சபைக்குள்



713, Hospital Road, Jaffna.
Phone No: / தொலைபேசி இல: 021 510 6445

713, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

திறந்து வைப்பவர்: செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் (ஜனாதிபதி சட்டத்தரணி)

## Sunjeya Foodland and Guest House (Branch)

### சண்ஜெய உணவகம் மற்றும் விருந்தினர் விடுதி (கிளை)

A/c, Non A/c rooms குளிரூட்டப்பட்ட/படாத அறைகள்
Mainly Jaffna traditional food veg and Non veg
முக்கியமாக யாழ்ப்பாண பாரம்பரிய சைவ அசைவ உணவுகள்
We accept veg, Non veg Food order for functions
சகல வைபவங்களுக்கும் சைவ, அசைவ உணவு ஓடர் ஏற்றுக்கொள்ளப்படும்.
Free delivery within Jaffna Municipal. Value morethan 500/=
500/= விற்குமேல் கொள்வனவுக்கு இலவச விநியோகம். யாழ் மாநகர சபைக்குள்

திறந்து வைப்பவர்:-
E.S.P. நாகரட்ணம்
(உரிமையாளர், கஜமுகன் ஹாட்வெயார் etc)

Phone No: / தொலைபேசி இல.: 021 221 7070, 077 677 7500

## Sunjeys Printers and Publication

### சண்ஜெ பதிப்பகம் மற்றும் தொடர்பாடல்

Photo copy - பிரதி எடுத்தல்
Laminating - லமினேட்டிங்
Fax - தொலை நகல்
Duplo Printing - டுப்ளோ

திறந்து வைப்பவர்:-
E. பிறேமராஜன்
Manager
Bank of Ceylon
Jaffna 2nd super grade branch

Phone No: தொலைபேசி இல. / Fax No: தொலைநகல் இல.: 021 221 7077

## Sunjeys Tourisum

### சண்ஜெ உல்லாசப்பிரயாணம்

We provide A/c bus couch services to through out the Island 28 seater with coolbox, A/c T.V and adgestable seat 65/= per km
நாடு முழுவதற்குமான குளிரூட்டப்பட்ட 28 இருக்கைகள் உள்ள குளிரூட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியுடனான பஸ் சேவைகள். ஒரு கிலோமீற்றருக்கு 65/=
வான் சேவையும் உண்டு.

திறந்து வைப்பவர்:-
இ. இளங்கோவன்
(யாழ் மாவட்ட ஆளுநரின் செயலாளர்)




Phone No: / தொலைபேசி இல: 0777 474 111

அன்பர்கள் வாடிக்கையாளர்களை அன்புடன் அழைக்கும்

*"Try hard to serve u"*

உரிமையாளர்: லயன் அ. ஜெயேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



பிறப்பு
30.01.1956
இறப்பு
21.05.2012


**அமரர் பொன்னம்பலம் நடராசா**
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், பண்ணாகம்)

திதி: பிரதமை (09.06.2013)

ஆண்டு ஒன்று கடந்துவிட்டது ஐயா உங்கள் நினைவை நாம் எவ்வாறு மறப்போம் நாம் எங்கள் நினைவை எவ்வாறு மறப்போம். எங்கள் நினைவை நாம் கண்ணீராலே போக்கி வாழ்கின்றோம் ஐயா! எங்கள் வாழ்வு வளம்பெற உங்கள் கடைக் கண்பார்வை போதும் ஐயா! தாங்கள் அமைதியுடன் ஆண்டவன் அடியில் இருக்க நாம் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
பண்ணாகம் தெற்கு.சுழிபுரம். அம்மா, பிள்ளைகள், குடும்பத்தினர்.
(38086)(2.6.3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
22.07.1935
மறைவு
11.05.2013


**அமரர் நாகலிங்கம் சண்முகநாதன் (J.P)**

கடந்த (11.05.2013) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் சண்முகநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.06.2013) திங்கட்கிழமை காலை 6 மணியளவில் நயினாதீவு தீர்த்தக்கரையிலும், அன்று மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**(அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்).**

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (38000)(2.6.3) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
29 – 03 – 1975

ஆண்டவன் அடியில்
21 – 05 – 2012

**அமரர் நவரத்தினம் சிறீஸ்குமார் (சிறி)**
(கிராமசேவையாளர், நெல்லியடி கிழக்கு)

புன்சிரிப்பு எப்போதும் மலர்ந்திருக்கும் உன் முகத்தில்
சிறி என்ற பெயர் கொண்ட நீ பூவுலகில் வாழ்வினை முடித்துவிட்டாய்
பிரியவில்லை உன் நினைவு எம் மனதில்
ஓராண்டு கடந்திருக்கும் இந்நாளில் உன் ஆத்மா சாந்தி பெற வணங்குகின்றோம்.

அன்னாரது முதலாம் அண்டு நினைவுப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று(09.06.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(சி9650)(3.5.6)

மயூரா கொமினிகேஷன்
அராலி றோட்,சங்கானை. குடும்பத்தினர்.

## திக்கம் பொது சந்தைக்கு புதிய கட்டடத் தொகுதி

வடமராட்சி, ஜூன் 9
திக்கம் மானான்டிச் சந்தியில் புதிய சந்தைக்கான கட்டடம் ஒன்று 18.79 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 'புறநெகும' திட்டத்தின் கீழ் இந்த புதிய சந்தை கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக் கடைகள் என்பன அடங்கும் என பருத்தித்துறை பிரதேச சபை தெரிவித்துள்ளது.

புதிய சந்தைக் கட்டட கட்டுமானப் பணி நடைபெறுவதால் மரக்கறி, மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் என்பன மானான்டிச் சந்தைக்கு எதிர்ப்புறத்தில் உள்ள தனியார் காணியில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றன. (ஐ-8)

## குடிமகன் ஒருவருக்கு அபராதம் 6 ஆயிரம்

வடமராட்சி, ஜூன் 9
வதிரிப் பகுதியில் மது போதையில் பொது மக்களுக்கு இடையூறு செய்த குடி மன்னர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பொது மக்கள் தெரிவித்த புகாரை அடுத்து அந்தப் பகுதிக்குச் சென்ற நெல்லியடிப்பொலிஸார் குறித்த நபரை கைது செய்து பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர் தனது குற்றத்தைப் ஒப்புக் கொண்டார். இதனையடுத்து குடிமன்னரை 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-8)

# ஈராண்டு நினைவினிலே

**அமரர் கணேஸ் இராஜறஞ்ஜனி**



அன்னை மடியில்: 13 - 04 - 1968
இறைவன் அடியில்: 02.06.2011

கனவுகள் சுமந்த கண்கள் கண்ணீரில் வாடுதம்மா!
நினைவுகளில் என்றும் நீங்காது வாழுகின்றீர்!
ஈராண்டு சென்றாலும் ஆறாத் துயரில் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடை இருகரம் கூப்பி
இறைவனை வேண்டுகின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
கணேசன் லலித்திரா தமிழ்ச் செல்வன்,
தமிழ் அழகன் (சி-9657)

மீசாலை கிழக்கு
மீசாலை

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் திருமதி சுவாமிநாதன் கனகம்மா**



என் அருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நிகழ்வுகள்
என்றும் எம்மை விட்டு நீங்காது.

தோற்றம் 18 – 08 – 1946
மறைவு 09 – 06 – 2012

சொட்டியார் தோட்டம்,
நல்லூர். (39172) குடும்பத்தினர்.

# 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்:
1987.09.29
மறைவு
2008.06.09

**அமரர் செல்வி ஸ்ரீஸ்கந்தராஜா பிரவீனா**

நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு (2 கொரி 5 : 1)

கண்ணீருக்கு தடை போட்டது போல
உம் நினைவுகளுக்கு எடைபோட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து நிதர்சனமாய்
சென்று விட்ட எம் உறவே.

தகவல்:
ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம்.

7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு (38161)

# 20 ஆம் ஆண்டில் ஈர நினைவுகளைச் சுமந்தபடி...



தோற்றம்
23*10*1926
மறைவு
22*06*1993

**அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை**
(விவசாய நண்பன், கைதடி கிழக்கு, கைதடி)

ஈர்பத்து ஆண்டுகள் ஈசன் பாதம் எய்தி எம் இல்லம் உங்களை இழந்து தவிக்கிறதே!!!
இருள் நீங்கி ஒளி வருவது போல் நோய் நீங்கி நீங்கள் எம்மை தேடி வருவீர்கள் என ஊரே
உங்களிற்காய் அன்று வாசலில் காத்திருந்ததுவே! ஆனால் வந்த செய்தியோ
எம்மை இருபது ஆண்டுகளாகக் கதிகலங்க வைக்கிறதே!!!

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம் எனும் பொன்மொழிக்கேற்ப
குடும்பத்தையும், உற்றோரையும் உயிர்போல் காத்துவந்தவரே!!!
வழிவந்த விவசாயத் தொழிலை தனி வழி நின்று ஏர்பிடித்து அனைவர் மனதிலும்
இடம் பிடித்து குடும்பத்தின் தூணாய் உயர்ந்து நின்றவரே!!!

உறவுகள் வளர்ந்து விருட்சம் பெற்று ஊர் செழிக்க வாழ்வதை உங்கள் கண்கள் குளிர
நீங்கள் கண்டுகளிக்க எம்முடன் இன்று இல்லையே!!!
அன்பான துணைவனாய், ஆசை அப்பாவாய், மாமனாய், அன்பின் ஊற்றாய் எமை
அரவணைக்கும் அம்மப்பாவாய், அப்பப்பாவாய், அருமைப் பூட்டனாய் எம் வழி நடந்து எமை
வழிநடத்த நீங்கள் இன்று எம்முடன் இல்லையே!!!

எங்கள் வம்சத்தின் ஒளி விளக்கு எம்மைவிட்டுப் பிரிந்து 20 அகவைகள் உருண்டோடினாலும்
எம் வாழ்வை வழிகாட்டி வாழவைக்கும் எமது தெய்வத்தின் இனிய நினைவுகளுடன்....

(38070)(2.6.3)

இல்லம்,
கைதடி கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.
(மனைவி திருமதி சங்கரப்பிள்ளை, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த முகாமை வதிவிடப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கான இரு நாள்கள் வதிவிடப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 17, 18 ஆகிய திகதிகளில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ -9)

### கண்ணீர் அஞ்சலி

யா/ நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவியும்
கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்க நிர்வாக
மூத்த உறுப்பினருமாகிய
**டாக்டர் திருமதி சகுந்தலா சற்குணசீலன்**
அவர்களின் மறைவையொட்டி பிரிவுத் துயரால் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(38160)
*பாடசாலைச் சமூகம், யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.*

### இதய அஞ்சலி

கலாபூஷணம் தெல்லிப்பழை
துர்க்காபுரம் சிற்பக் கலைஞர்
**A.V.ஆனந்தன்**
அவர்கள் 03.06.2013 இல்
காலமானதையிட்டு அதிர்ச்சியும்
கவலையும் அடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தாரின்
துயரில் பங்கு கொள்கின்றோம்.



E.V.நிதியம் சார்பாக,
நாவலடி,
உடுப்பிட்டி. (சி/9649)(3.5.6) கோ.குணசிங்கம் (J.P.),Dr. சி.ஆ.குணரத்தினம்.

### மரண அறிவித்தல்கள்



*சீவரத்தினம் தவசேகரன்*
(யாழ்/ கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் தவசேகரன் நேற்று (08.06.2013) சனிக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - அஞ்சலிதேவி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி (உரும்பிராய்) தம்பதியரின் மருமகனும் சுபாங்கனியின் (ஆசிரியர், யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) அன்புக் கணவரும் திவாகரி (யாழ்/ இந்து ஆரம்பப் பாடசாலை), சுவர்மன் (Kids Park), கேஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் லம்போதரன் (கிராம சேவையாளர்-பருத்தித்துறை), இலகுமிகரன் (ஆசிரியர், யா/நுணாவில் அ.த.க. பாடசாலை), காலஞ்சென்றவர்களான பிரபாகரன், தவஜங்கரன் மற்றும் பாலதயாகரன் (ஆசிரியை, யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), பிறேமினி ஆகியோரின் சகோதரனும் தர்சினி (காணி நிர்வாக திணைக்களம், யாழ்ப்பாணம்), இராஜதீபன் (பிரான்ஸ்), சுபோதினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் புன்னாலைக்கட்டுவனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விலங்கன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மணியகாரன் வீதி,*
*புன்னாலைக்கட்டுவன் தெற்கு.* (38165) *0777941834* *தகவல் குடும்பத்தினர்.*



**கனகசிங்கம் நேமிநாதன் (நேமி)**

19, சுப்பிரமணியம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் நேமி நாதன் (நேமி) 05.06.2013 புதன்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா- வேதநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், உதயராணியின் அன்புக் கணவரும், கார்த்தியாயினி, அம்பாலிகை, விஜயலட்சுமி, லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அஜந்தினி, நிஷாந்தினி, நிவேந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனகனின் அன்பு மாமனும், சிங்கராசா, காலஞ்சென்றவர்களான தர்மகுலசிங்கம், தவக்குமார் மற்றும் ஜெகரஞ்சிதம், திருமதி கனகாம்பிகை மகேந்திரன், திருமதி புவனேஸ்வரி அரியரெத்தினம், கிருஷ்ணசாமி,திருமதி இராஜேஸ்வரி சிங்கராசா, திருமதி சந்திரபவானி சிவதாஸ், கிருஷ்ணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2013) திங்கட்கிழமை பிரான்ஸ் நேரப்படி 9 - 10 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

அன்னாரின் துக்கநிகழ்வு 19, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை. (38138) (45.6) தகவல்: குடும்பத்தினர்.

## வேலையற்றோருக்கு தொழிற்பயிற்சி

வடமராட்சி, ஜூன் 9

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரி வில் தொழில் அற்ற இளைஞர்களுக்கு மேசன், மரவேலை தொழில் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகி ன்றது. இந்திய அரசின் நிதி உதவியுடன் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து இந்தத் தொழில் பயிற்சியை நடத்த உள்ளன.

3 மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறிக்கு பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவும் வழங்கப்படும். பயிற்சி முடிவுற்றதும் தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பருத்தித்துறைப் பிரதேச தேசிய இளைஞர் சேவை மன்ற எஸ். கோகுலராஜா தெரிவித்தார். (ஜ-8)

## காலாவதியான பொருள்கள்; நெல்லியடியில் 11 பேருக்கு அபராதம்

வடமராட்சி, ஜூன் 9

காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த 11 வர்த்தகர்களுக்கு 74 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கரவெட்டிப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் குழு நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது, காலாவதியான பொருள்களை வைத்திருந்த 11 வர்த்தகர்கள் அகப்பட்டுக்கொண்டனர். அவர்கள் அனைவர் மீதும் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது 11 வர்த்தகர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 6 வர்த்தகர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபா வீதம் 54 ஆயிரம் ரூபாவும், எஞ்சிய 5 வர்த்தகர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா வீதம் [illegible] (ஜ-8)

# சட்டத்தையும் நீதியையும் ஒழுங்காக செயற்படுத்துக

## இலங்கையிடம் கோருகிறார் அமெரிக்கத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கையில் சட்டத்தையும் நீதியையும் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிஸன் தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் நீதி அமைச்சின் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்குப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நீதியும் சட்ட ஒழுங்குகளும் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அமெரிக்கா நீதித்துறை சார்ந்த உதவிகளை வழங்கி வருகின்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் 2.1 மில்லியன் டொலர் நிதியில் டீ.என்.ஏ. பரிசோதனை நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக இலங்கை மக்கள் யாவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நீக்கிக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது . இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா எப்போதும் தயாராகவே உள்ளது - என்றார். (த-14)

### மரண அறிவித்தல்கள்

*திருமதி செல்லம்மா முருகேசு*



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா முருகேசு கடந்த 08.06.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் செல்லத்துரை (இ.மி.ச.), இராஜேஸ்வரி, தவத்துரை (கனடா), அருமைத்துரை (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் பாக்கியகௌரி, கனகம்மா, பரமேஸ்வரன் (இ.போ.ச.), அன்னலட்சுமி (கனடா), ஆனந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.06.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று குடமியன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வரணி,**
**இயற்றாலை.** (சி/9658) *தகவல்: குடும்பத்தினர்.*

**சரவணமுத்து சுப்பிரமணியம்** (மணியம்)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் (06.06.2013) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம்-தெய்வமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும்,சிவலோயினியின்(ராதா) அன்புக் கணவரும், தயேந்திரா(கனடா), சுபாசன்(ஓமான்), லுயிநந்தா, திஷாந்தன்(செல்லா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரணவனின்(கனடா) பாசமிகு மாமனாரும், சுந்தவனம், காலஞ்சென்ற தெய்வானை ஆகியோரின் சகோதரனும், சுபாஜினி (கனடா), சிவபாத சுந்தரம்(கனடா), சிவபாக்கியம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், பாலச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி(கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(09.06.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஏழாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை காடாகடம்பை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்மஜோதி வீதி,
இலந்தைகட்டி வைரவர் கோயிலடி,
ஏழாலை கிழக்கு,ஏழாலை. (38136)(3.5.6) தகவல்: குடும்பத்தினர். 077 711 4952

**தேவராசா தில்லைராசா** (வட்டியர்-காரைநகர்)



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் புதூர் சந்தி, புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் நீலிப்பந்தனை, காரைநகரை தற்காலிக வசிப்பிடமாகவும் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான தேவராசா தில்லைராசா (வட்டியர்) (08.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவராசா- கமலாம்பிகை தம்பதியரின் மகனும், அமுர்தவல்லியின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், நமலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பிறேமலதா நாகரூபன் மற்றும் தனுசன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், திலகவதி, புனிதவதி, லீலாவதி, காலஞ்சென்ற சண்முகராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நீலிப்பந்தனை இல்லத்தில் இன்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீலிப்பந்தனை,
காரைநகர். (38146)(3.6.7.11) தகவல்: நமலாதேவி (மனைவி), தனுசன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மோசமான காலநிலையால் மீனவர் ஐவர் கடலில் சாவு

துள்ளன. இந்த அனர்த்தத்தில் சிக்கிய மீனவர்களில் நேற்று மாலைவரை 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் 17 பேர் காணாற்போயுள்ளனர். கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த 20 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

காலி, பலப்பிட்டிய கடலுக்கு மீன்பிடிக்க சென்ற 20 மீன்பிடி படகுகளில் 18 படகுகள் கடலுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளன. அந்த படகுகளில் சென்ற மீனவர்களில் மூவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். அதே வேளை, கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 12 மீனவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை, பேருவளையில் கடலுக்கு சென்ற 12 மீனவர்களைக் காணவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். அதே வேளை, கடலுக்குச்சென்ற மீனவர் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளையிலும் 12 மீனவர்களைக் காணவில்லை. சீரற்ற காலநிலையினால் அனர்த்தத்திற்கு இலக்கான மீனவர்களை மீட்கும் பணியில் விசேட விமானம் மற்றும் ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று விமானப்படை தெரிவித்துள்ளது.

இதற்கமைய தெஹிவளை கடலில் அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ள மீனவர்களை காப்பாற்றுவதற்காக பெல் - 412 ரக ஹெலிகொப்டர் ஒன்று நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

பலப்பிட்டிய மற்றும் களுத்துறை கடற் பிரதேசங்களை கண்காணிப்பதற்காக வை - 12 ரக விமானம் ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்று விமானப் படைத்தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, காணாமற்போன மீனவர்களை மீட்கும் பணியில் கடற்படை படகுகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த-ரி)

### ‘13’ ஐ செயற்படுத்த இந்தியா தயங்காது

கிறது என்பதை நாங்கள் சொல்லியிருக்கிறோம்.எங்களைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தத்திலுள்ள அனைத்து அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான். தலைவி சோனியாவும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளார். இதனை நாங்கள் தெளிவாக சொல்லியிருக்கிறோம் - என்றார். (த-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா வைத்திலிங்கம் (பாக்கியம்)

மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா வைத்திலிங்கம் நேற்று (08.06.2013) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2013) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- மேலதிக விவரங்கள் (10.06.2013) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

*2/3, -16, முதலாம் சப்பல்லேன்,*
*வெள்ளவத்தை.*

(38176)

*வை.குணரட்ணம் (மகன்)*
*0112589885, 0773279807*

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.05.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கனகசபை காலிங்கராஜா

**(சின்னமணி)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 10.06.2013 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகைதந்து அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொ ர்ந்து நடை பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வெண்ணம் அன் ப ன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்பகர் இணுவில் தெற்கு,
இணுவில்.

(38175)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### முத்துவேலு சீவரத்தினம்

*(முன்னாள் அலுவலர், கரைச்சி பிரதேசசபை )*

அராலி கிழக்குகைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கரைச்சி பிரதேசசபை அலுவலர் முத்துவேலு சீவரத்தினம் நேற்று (08.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாணிக்கம், பஞ்சரத்தினம் அம்மாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் கலைதேவி, கலைச் செல்வன், கலைரதி, காலஞ்சென்ற கலைஜீவன் மற்றும் கலைமாறன், கலைச்செல்வி, கலைவாணன் (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), கலைநிதி, கலைமகள், கலை அமுதா (வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவஞானசுந்தரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியரும் யாழ்.இந்துக் கல்லூரி விடுதிப் பொறுப்பாளரும்), ஆறுமுகதாசன், பத்மாவதி, இரத்தினகோபால், அல்பிரட்றொபின்சன், வுளோரினா, யோகேஸ்வரி (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), சிவராசன், கண்ணன், நிமலன் (ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் சிவசௌமியா, சிவசொரூபன், சிவபாஸ்கர், சிவசௌகார்த்திகா, ஜீவிதன், ஜீவர்னிகா, தனஞ்சயன், ஜீவாஞ்சயன், அபினயா, ஜீவின், இவோனா, ஜீவந்தன், விதுசன், ஜனுசா, ஜீவநிதன், ஜீவர்ஷா, சிவானியா, சிவஜீவன், சிவாஞ்சன், சிவாநிதன், வந்தனா, சகானா, பாவனா, கோகுலன், ஜீவநிஷா, ஜெயகாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல 56, கனகபுரம்,**
**கிளிநொச்சி.**
**0778815755- 0775506256-**
**0770652989**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(37457)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

வடமாகாண பாடசாலைகளுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்

# யாழ்.இந்து ஆடவர், கொக்குவில் இந்து மகளிர் மகாணச் சம்பியன்கள்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி



கொக்குவில் இந்துக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், ஜூன் 9
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆடவர் பிரிவிலும், கொக்குவில் இந்துக்கல்லூரி மகளிர் பிரிவிலும் சம்பியனாகத் தெரிவாகின.

நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென். பற்றிக் கல்லூரி அணியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 73:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் அணியை வீழ்த்தியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி களமிறங்கியது. அதில் யாழ். மத்திய கல்லூரி அணி 46:25 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலை அணி மோதியது. இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டதால் ஆட்டம் பரபரப்பு நிறைந்ததாகக் காணப் பட்டது. இறுதியில் கொக்குவில் இந்து கல்லூரி அணி 43:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23-433)


இறுதியாட்டத்தில் ஆக்ரோஷமாக மோதும் யாழ்.இந்துக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள்.

## தாச்சி இறுதியாட்டம் இன்று


பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர்

கைதடி, ஜூன் 9
இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் தாச்சி விளையாட்டை மேம்படுத்துவதற்காகப் பாடுபட்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ற-288)


ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம்

## மாவட்டங்களுக்கிடையான ஹொக்கி இருபிரிவுகளிலும் யாழ். சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 9
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் ஆடவர், மகளிர் இருபிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்று சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

அதில் யாழ்.மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிறப்பாட்டக்காரருக்கான விருதை யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த இ.ஜெயரூபன் பெற்றுக் கொண்டார்.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி களமிறங்கியது.

அதில் யாழ்.மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது.

சிறந்த வீராங்கனைக்கான விருதை யாழ்.மாவட்ட அணியைச் சேர்ந்த ஏஞ்சலின் பெற்றுக் கொண்டார்.(ற-23)


சம்பியனாகத் தெரிவாகிய யாழ்.மாவட்ட ஆடவர் அணி

## உடற்பயிற்சி போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 9
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் பெருவிளையாட்டுப் போட்டிகளில், 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை யாழ்.துரையப்பா விளை யாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும், பெண்கள் பிரிவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலமும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற-23)

## மெய்வன்மை தெரிவுப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 9
நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையியே நடத்தப்படும்மெய்வன்மைதெரிவுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை புளியங்குளம்மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற வுள்ளன.(ற-23)

# 'வன்னியின் பெரும் சமரில்' வென்றது கிளிநொச்சி ம.வி.



யாழ்ப்பாணம், ஜூன் 9
'வன்னியின் பெரும் போர்' நட்புக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலம் இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதல் இன்னிங்ஸில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் 43 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த கிளிநொச்சி மகா வித்தியாலய அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 117 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்த கிளிநொச்சி மகா வித்தியாலய அணி [illegible] ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அதில் விந்துஜன் 39 ஓட்டங்களையும், பேபிஷன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.



தனது இரண்டாம் இன்னிஸ்ஸை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 102 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து, இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அதில் சிதுர்சன் 26 ஓட்டங்களையும், ஜிந்துஜன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டநாயகனாக கிளிநொச்சி மத்திய. கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கபிலன் தெரிவு செய்யப்பட்டார். சகலதுறை ஆட்டக்காரராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த விந்துஜன் தெரிவு செய்யப் பட்டார்.

வெற்றிக் கிண்ணத்தை முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வழங்கினார். (ற-400-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை வழியில் ராஜஸ்தான்

ஐ.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் ராஜஸ்தான் உரிமையாளர் ராஜ் குந்த்ரா பதவியை இழப்பதுடன் அவரின் பங்குகளையும் இழப்பார் என்று தெரிவித்துள்ளது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்வாகம்.

### குருநாத்தும் சென்னை அணியும்

ஐ.பி.எல். சூதாட்டக் குற்றச்சாட்டுகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் 'கௌரவ' உறுப்பினர் குருநாத் மெய்யப்பன் பொலிஸாரிடம் சிக்கினார். அதையடுத்து சுப்பர் கிங்ஸ் அணி ஐ.பி.எல். தொடரில் இருந்து நீக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்தது. அதனால் குருநாத்துக்கும் சென்னை அணிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்ற தோற்றம் உருவாக்கப்பட்டது.


### குந்த்ராவும் ராஜஸ்தான் அணியும்

தற்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் இணை உரிமையாளரான ராஜ் குந்த்ரா ஆட்ட நிர்ணயக் குற்றச்சாட்டுகளில் சிக்கியிருக்கிறார். குருநாத் மெய்யப்பன் விவகாரத்தில் எந்த வழியில் சென்னை அணி நிர்வாகம் செயற்பட்டதோ அதே வழியில் இறங்கியுள்ளது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்வாகம்.

அந்த அணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''எங்கள் அணியின் பங்குதாரர்களில் ராஜ் குந்த்ராவும் ஒருவர். அவருக்கு அணியில் 11.77 வீதப் பங்குகள் உள்ளன. எனினும் அணி செயற்படுவதில் அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை. விதிகளை அவர் மீறியிருந்தால் அவர் இடைநீக்கப்படுவதோடு, தனது பங்குகளையும் இழப்பார்'' என்று கூறியுள்ளது.

ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் சிக்கும்வரைதான். சிக்கினால் 'கௌரவ' உறுப்பினர்தானே. (ற)



### தொடரும் சூதாட்டத்தால் அதிர்ச்சி

ராஜஸ்தான் அணியின் உரிமையாளர் ராஜ் குந்த்ரா ஆட்டநிர்ணயம் செய்ததை ஒப்புக்கொண்டமை அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் செயலர் சஞ்சய் ஜக்டலே.

''ராஜ் குந்த்ராவிடம் அளவுக்கு அதிகமாக பணம் உள்ளது. இந்தநிலையில் ஆட்ட நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது எனத் தெரியவில்லை. அவருக்காக பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை'' எனவும் அவர் கூறினார். (ற)

# சச்சினை மறக்க செய்தார் தவான்

## கபில்தேவ் புகழாரம்

''சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தவானைப் பற்றியே அனைவரும் பேசினர். சச்சின், சேவாக் இல்லாததை இரசிகர்கள் உணரவில்லை'' என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியாவின் ஷிகர் தவான் தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே கபில்தேவ் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

''இந்திய அணியின் எதிர்கால நட்சத்திரமாக ஷிகர் தவான் திகழ்கிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் துணிச்சலாக ஆடினார். ஆரம்ப வீரரான ரோகித்தின் ஆட்டமும் சிறப்பாக இருந்தது. அதனால்தான் கூடுதல் இலக்கை எட்ட முடிந்தது. தற்போது இந்திய அணி இளம் வீரர்களின் வசம் சென்று விட்டது.

அணியில் சச்சின், சேவாக் இல்லை என்பதை என்னால் உணர முடியவில்லை. அந்தளவுக்கு தவானின் ஆட்டம் இருந்தது. இரசிகர்களும் இவரை பற்றி மட்டுமே பேசினர்.'' என்று தெரிவித்துள்ளார் கபில்தேவ். (ற)


ஷிகர் தவான்

# அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் டோனிக்கு 16ஆவது இடம்

அதிகளவில் பணம் சம்பாதிக்கும் சர்வதேச விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டிலை வெளியிட்டுள்ளது அமெரிக்காவின் 'போர்ப்ஸ்' பத்திரிகை.

அமெரிக்க கோல்ப் வீரரான டைகர் உட்ஸ் அதில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்தபடியாக ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் இரண்டாம் இடத்தையும், அமெரிக்க கூடைப்பந்து வீரர் கோபே பிரையன்ட் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனியும் இந்தப் பட்டியலில் உள்ளார். 16 ஆவது இடத்தில் உள்ள டோனி, விளம்பர ஒப்பந்தங்கள் மற்றும் பரிசுத் தொகை என்பவை மூலம் கடந்தாண்டு சுமார் 360 கோடி ரூபா சம்பாதித்துள்ளார்.



அதேநேரத்தில் வீராங்கனைகளில் மூன்று பேர் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை 22 ஆவது இடத்திலும், அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம் 68 ஆவது இடத்திலும், சீன ரென்னிஸ் வீராங்கனை லீ நா 85 ஆவது இடத்திலும் உள்ளனர்.(ற)

# நடப்புச் சம்பியனை வீழ்த்தியது இங்கிலாந்து



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணப் போட்டியின் மூன்றாவது ஆட்டத்தில் நடப்புச் சம்பியனை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது இங்கிலாந்து.

இலண்டன் பேர்மிங்ஹா மைதானத்தில் நேற்று நடைபெற்ற பகலிரவு ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலிய அணியும், இங்கிலாந்து அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்டர் குக் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இதனை அடுத்து குக், இயன் பெல் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கி அணிக்கு நல்லதொரு அடித்தளம் இட்டு கொடுத்தது. அணி 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது குக்கின் இலக்கு வீழ்த்தப்பட்டது. அவர் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து பெல்லுடன் இணைந்த ரூட் தனது பங்குக்கு ஒத்துழைப்பு கொடுக்க பெல் அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடியின் துணையுடன் இங்கிலாந்து அணி 168 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ரூட் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

சிறிது நேரத்தின் பின் 91 ஓட்டங்களுடன் பெல்லும் பவிலியன் திரும்ப இங்கிலாந்தின் ஆட்டத்தில் சற்று தளர்வு நிலை காணப்பட்டது.

இருந்த போதிலும் ஆறாவது இலக்க வீரராக களமிறங்கிய பொபரா அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்தினார். இவர் 32 பந்துகளைச் சந்தித்து 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இவரின் உதவியுடன் 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது இங்கிலாந்து அணி. பந்து வீச்சில் மெக்கே, வூட்னர் ஆகியோர் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.



270 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்து பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஆரம்பம் முதல் இறுதி வரை தட்டுத்தடுமாறி ஓட்டங்களைச் சேர்த்தது ஆஸ்திரேலிய அணி. அவ் வணியின் முன்னணிவீரர்களான வர்னர் -09, வற்சன் -24, ஹக்ஸ்-30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ஒருபக்கம் விக்கெட்டுக்களை இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் பறித்தாலும் மறு முனையில் நிதானமாக அணியின் நிலையறிந்து பெய்லி மற்றும் வுட்லனர் இருவரும் அணியின் வெற்றிக்காகப் போராடினர். இருந்த போதிலும் 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 221 ஓட்டங்களை மட்டுமே ஆஸ்திரேலியாவால் பெறமுடிந்தது. இதனால் 48 ஓட்டங்களால் தோல்வியினை தழுவியது. அவ்வணியின் பெய்லி 55 ஓட்டங்களையும் வுட்லனர் ஆட்மிழக்காது 54 ஓட்டங்களையும் பெற்றார். பந்து வீச்சில் அன்டர்சன் 3 இலக்குகளையும், பிரிஸ்னன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் இயன்பெல் தெரிவு செய்யப்பட்டார். (400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி வாங்குவதற்கு

பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி வைத்திய சாலை வரை A9 வீதியின் ஓரமாக உள்ள 10 முதல் 20 பேர்ச் வரை வெற்றுக்காணி அல்லது கட்டடங்களுடன் வாங்குவதற்கு தயாராக உள்ளோம்.

தொடர்புகளுக்கு:
**0714814192**

(37455) (10,6,3)

## கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
0718454025

# ஐ.நா. விசாரணைக் குழுவில் இலங்கை நீதிபதி விலகினார்

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவொன்றிலிருந்து இலங்கை நீதிபதி ஒருவர் விலகியுள்ளார்.

தென் சீனக் கடல் தொடர்பில் சீனாவுக்கு எதிராகப் பிலிப்பைன்ஸ் செய்த முறைப் பாட்டை ஐந்து பேர் அடங்கிய ஐக்கிய நாடுகள் நீதிபதி குழுவொன்று விசாரணை நடத்தி வருகின்றது.இந்த விசாரணைகளில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாக இலங்கை நீதிவான் கிறிஸ் பின்டோ தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டுள்ளதனால் இந்த விசாரணைகளில் பங்கேற்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பின்டோவின் பதவி விலகல் விசாரணைகளை பாதிக்காது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.(த)

### அனர்த்த முகாமை செயலமர்வு

தென்மராட்சி, ஜூன் 9

அனர்த்த முகாமைத்துவமும் அதன்செயற்பாடுகளும் தொடர்பான மாவட்ட மட்ட விழிப்புணர்வும் செயலமர்வும் எதிர்வரும் 13 ஆம் திகதி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் நிலப் பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் (அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள பட்டதாரி பயிலுநர்கள்) ஆகியோரை கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-9)



## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விஜய வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் இன்று (09.06.2013) ஞாயிற்றுக்கிழமை பூர்வ பட்ச பிரதமை திதியும் சூலம் யோகமும் பாலவம் கரணமும் சித்தாமிர்த சுபயோகமும் மிருகசீரிட நட்சத்திரமும் கூடிய சுபவேளையுமான காலை 7.20-8.40 நிமிடம் வரையில் வரும் மிதுன லக்கினமும் கூடிய சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## ANNA SUPPER SHOP

(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக)

ஸ்தாபனத்தை
**வலி. தென்மேற்கு பிரதேச செயலர்**
**சம்பிரதாய பூர்வமாக திறந்துவைப்பார்**
அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



**கே.கே.எஸ். றோட், இணுவில்.**
(இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக)
021 321 8143

**அண்ணா தொழிலகம்**

(C/9651)(10,6,3)

## யாழ் நகரில் Diploma in Mass Media அறிவிப்பாளர் பயிற்சி

வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ புதியபிரிவுகள் ஆரம்பம் 08.06.2013 காலை 9 மணி வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளர்களாக உருவாக்கி வரும் வவுனியா Sun British College பெருமையுடன் அறிமுகப்படுத்தும் யாழ் மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சி நெறி. (Diploma in Mass Media). வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரத் தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 06 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் சந்தர்ப்பம்). இலங்கையிலும், சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக, ஊடகவியலாளராக [illegible]?

**தயாராகுங்கள், பதிவுகளுக்கு விரையுங்கள்...**

| வவுனியா, முல்லைத்தீவு மாணவர்கள் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாணவர்கள் |
|---|---|
| **Sun British College** | **IISEES NALLUR CAMPUS** |
| No-26,Station Road, Vavuniya. | No-762, Point Pedro Road, Nallur, Jaffna. |
| T.P: 0777929475. | T.P: 0777929475/ 0212224728. |

குறிப்பு: எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச, தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளர்களாக கடமையாற்றுகின்றார்கள். (35257) (10,6)

## வேலைவாய்ப்பு

கொழும்பில் இயங்கிவரும் தனியார் கட்டட நிறுவனத்திற்கு திறமையானதும் சுறுசுறுப்பானதுமான மேசன் (Mason)/ உதவியாளர்கள் உடனடியாகத் தேவை.
**மாத வருமானம் 40000/= - 45000//= வரை.**
தொடர்புக்கு:- 0777065127

## German Language Academy

★ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு மிகச் சிறந்த முறையில் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம்.
★இங்கு கற்கும் மாணவர்களுக்கு எமது ஆசிரியர் அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

**German Language Academy**
**#23, Palaly Road, Jaffna.**
**0779707322**

**Jaffna Technical InStitute**

(37986)(6.2)

## வீனஸ் கல்வி நிலையம் கிளிநொச்சி

A/L 2013
கருத்தரங்கு
**வரலாறு**
காலம்: 10.06.2013
9.00-3.00
அலகு: பகுதி-I
படவேலை
ஆசிரியர் S.S.தாஸ்
BA (Hons) SP
தொடர்பு:
0778652448

(38135)

## பணியாளர் தேவை

கொடிகாமத்திலுள்ள பிரபல்ய கடை ஒன்றுக்கு கணினி அறிவுடைய வேலையாள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.
தொடர்பு: 0775936958

(38126) (10,6,3)

## கடைகள் வாடகைக்கு

தட்டாதெரு சந்திக்கு அண்மித்ததாக K.K.S. Road இல் கடைகள் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/வியாபார நிலையங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 0759237546

(38104) (10,6,3)

## அறை வாடகைக்கு உண்டு

மருதனார்மடம்-உரும்பிராய் வீதியில் நுண்கலைப் பீடத்துக்கும், கல்வித் திணைக்களத்துக்கும் சமீபமாக அனைத்து வசதிகளும் கொண்ட அறை வாடகைக்கு உண்டு. வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0772980757

(C/9648) (10,6,3)

## வாகனம் விற்பனைக்கு

WPHU 1009-ELF TRUCK
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 787 6805

(35100) (3,5,6)

## காணி விற்பனைக்குண்டு

கோயில் கடவை பிள்ளையார் கோயில், துன்னாலை மத்தி, கரவெட்டியில் அமைந்துள்ள நிலப்பரப்பு 6 குளி 16 15/32 விற்பனைக்குண்டு. (காணியின் பெயர் கொள்வழி)
மேலதிக விபரம்:- ப.இரவீந்திரதாஸ் 0777 966 509
உரிமையாளர்:- நி.நல்லையா(பணக்கார நல்லையா)
துன்னாலை வடக்கு, கரவெட்டி
077 322 3171
(இறுதித்தீர்மானம் உரிமையாளர் எடுப்பார்)

(35285)(6,3)

## Personal Class(கணினி)

★ 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
★MS Office 2013,Internet&Email, DTP, Web Design,Graphic Design,சிறுவர்களுக்கான பயிற்சி நெறி.
★பெறுமதியான சான்றிழ்கள் வழங்கப்படும்.
**குறிப்பு:** கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
ஆசிரியர்: KRC
Tel: 077 967 2038 நல்லூர்.

(38081)(3,5,6)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registoring more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 08-06-2013 | 10-06-2013 | 15-06-2013 | 17-06-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, ... Lane, Vairavarkovil Veethy,
Vairava... Vavuniya.
Tel: 024 324 5287.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, ...

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2**
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs

Be a power speaker
INTENSIVE COMMUNICATION PROGRAM

- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை [illegible]
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட [illegible] கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

...y Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பமசம் 09 06 2013




ஆயிரத்தில் ஒருத்தி

காயும் கானகத்தில் இருந்து ஒரு கதை



குருதியால் ஒரு வேள்வி



உலகறிந்த

## அறிவியல் தமிழன்

ஈழம் தந்த பௌதிக ஞானி

போராளிகளாகவும் தற்கொலைத் தாக்குதல்களின் முன்னோடிகளாகவும் உலகறிந்த ஈழத் தமிழர்களை அறிவியல் மேதைகளாக நவீன உலகில் நிலைநிறுத்தியிருக்கிறார் பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன். அறிவுப் புலம்பெயர்வின் அங்கமாக அமெரிக்க மண்ணில் காலூன்றிக் கொண்டாலும் தன்னை ஈழத் தமிழன் என அடையாளப்படுத்திக்கொள்வதில் இன்றும் பெருமை கொள்கிற மனிதர் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 09 06 2013 ஞாயிற்றுக்கிழமை

# மாற்றத்துக்கான சாதனையாளன்

## பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன்



மாற்றங்கள் மட்டுமே என்றும் மாறாதது.

அருள்கூா

இலங்கையில் போர் முடிந்ததற்குப் பின்னர் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், திடீரென தமிழ்ப் பேராசிரியர் ஒருவருக்கு வெள்ளை மாளிகையில் விருது கொடுக்கப்பட்ட செய்தி உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அல்குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடனைக் கொன்ற அமெரிக்கப் படைகளுக்கு இவர் உதவினார் என்று கிளம்பிய செய்திகள் மேலும் ஆர்வத்தைத் தூண்டி இருக்கின்றன. ஆனால், ஈழ மண் தந்த பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் பின்லேடனுக்கு எதிரான நடவடிக்கை எதிலும் நேரடியாகத் தொடர்புபட்டவர் அல்லர். நிலவே எறிக்காத ஒரு இருண்ட நாளில் அமெரிக்கப் படைகள் ஒஸாமா வின் மறைவிடத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்துவதற்கு இவரது இருளை ஊடுருவிப் பார்க்க உதவும் 'இன்ப்ஃரா ரெட்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர அந்தத் தாக்குதலில் எந்த வகையிலும் இவருக்கான தொடர்புகள் இல்லை. என்றாலும் இவரது ஆய்வுகள் அமெரிக்கப் படைகள் இருளை வெல்வதற்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. இதனால் 'இருளின் நண்பன்' என்ற விருதை 2005ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தின் இருள் பார்வை மின்னியல் உணர்திறன் பணியகம் (U.S.A. Army Night Vision and Elect ronic Sensors Directorate) வழங்கியிருக்கிறது. இது மட்டுமல்ல தனது ஆயுவுகளுக்காக மேலும் பல விருதுகளையும் அவர் பெற்றிருக்கிறார்.

புலம்பெயர் அமெரிக்கக் குடிமக்கள் எதிர்காலத்துக்கு வழிகாட்டியவர்களுக்கான அதியுயர் கௌரவத்தை அமெரிக்க ஆளும் மாளிகையான வெள்ளை மாளிகை வழங்கி வருகின்றது. 'மாற்றத்துக்கான சாதனையாளன்' என்ற அந்த விருது மே 29ஆம் திகதி சிவானந்தனுக்கு வழங்கப்பட்டது. "எதிர்பாராமல் கிடைத்த விருது" என்று கூறும் சிவானந்தன் தான் அந்த விருதைப் பெற்றுள்ள முதல் தமிழர்.

கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்முனைவுகளில் ஈடுபடும் புலம்பெயர்ந்தவர்களுக்கு அமெரிக்க அரசால் இந்த விருது வழங்கப்படுகின்றது. "அமெரிக்காவில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதிலும் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் உலகில் அமெரிக்காவை எப்போதும் முதன்மைப் போட்டியாளராக நிறுத்துவதிலும் அமெரிக்காவுக்கு உதவி புரிந்த உலகம் எங்கும் இருந்து வந்த சிறந்தவர்களுக்கும் பிரகாசமானவர்களுக்கும் கொடுக்கப்படும் விருது" என்று வெள்ளை மாளிகை வர்ணித்துள்ளது.



பேராதனைப் பல்கலைக் கழக பௌதிகவியல் பட்டதாரியான சிவானந்தன். தனது முதுமாணி மற்றும் கலாநிதிப் படிப்புகளை அமெரிக்காவின் சிக்காக்கோ மாகாணத்தில் உள்ள இல்லினோஸ் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். இன்று அதே பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும்பணியாற்றிவருகிறார். சிவானந்தன் 'செமி கெண்டக்டர் மெட்டீரியல்' மற்றும் 'மெர்க்குரி கட்மியம் டெலுராய்ட்' போன்ற துறைகளில் தீவிரமாகப் பணியாற்றுகிறார். இரவுப் பார்வையின் இதயமாக இந்தத் தொழில் நுட்பங்களே இருக்கின்றன. இவைதான் பின்லேடன் தாக்கு தலை நிலவு வெளிச்சம்கூட அற்ற இரவில் நடத்துவதைச் சாத்திய மாக்கின.

அமெரிக்காவின் இல்லினோஸ் மாநிலத்திலுள்ள பொலிங்புறூக் நகரில் சிவானந்தன் ஆய்வுகூடத்தை உருவாக்கி நடத்தி வருகிறார். 'இன்ப்ஃரா ரெட்' தொழில்நுட்பம், கதிரியக்கத் தடுப்பு, உணர்கருவி ஆய்வு போன்ற துறைகளில் இந்த ஆய்வு மையம் இயங்கி வருகிறது. அது மட்டுமல்லாமல் சூரிய கலம் (சோலர்) மேம்பட்ட ஆய்வுகளிலும் அவர் தீவிரம் காட்டி வருகின்றார். அடுத்த தலைமுறை சூரிய கலம் உற்பத்திகளே அவரது இலக்கு. அந்தத் துறையில் இலங்கையில் உள்ளவர்களையும் அவர் தன்னுடன் இணைத்துக் கொண்டு பயணிக்கிறார். எதிர்காலத்தில் மிகப் பெரிய சக்தி வளத் துறையாக வளரக்கூடிய இந்தத் துறையில் தலைமைதாங்கும் இடத்தை நோக்கி அவர் நகர்ந்து கொண்டிருக்கிறார். விழவிழ எழமுடியும் என்பதுதான் அவரது ஒரே தாரக மந்திரம். அவர் தமிழர்களுக்குக் கற்றுத் தந்திருக்கும் பாடமும்கூட.

## விழவிழ எழலாம் விழுந்ததும் விட்டுவிடக்கூடாது

*உங்களைப் பற்றி?*

எனது தந்தையார் வல்வெட்டித்துறை ஊரிக்காட்டைச் சேர்ந்தவர். சிவலிங்கம் மாஸ்டர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டவர். தாயார் மட்டுவிலைச் சேர்ந்தவர். பெற்றோர் இருவருமே ஆசிரியர்கள். அன்பான மனைவி இந்துமதி, பிள்ளைகள் அபிராமி மற்றும் ஆரணியுடன் அழகான குடும்பம், அமைதியான வாழ்க்கை என்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

*அண்மையில் நீங்கள் பெற்றுள்ள 'Champion of Change' என்ற விருது நீங்கள் எதிர் பார்த்த ஒன்றா?*



இல்லை. இது எதிர்பார்க்காத ஓர் ஆச்சரியம். வெள்ளை மாளிகையிலிருந்து இதுபற்றிய அறிவித்தல் கிடைத்ததும் எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி . நான் வேறு துறைசார் விருதுகளில் ஆர்வம் கொண்டிருந்தேன். இந்த விருதை எதிர்பார்க்கவில்லை.

இந்தப் பெருமை எனக்கு மட்டும் உரியதல்ல, என்னோடு சேர்ந்த சகலருக்கும் உரியது.

*உங்களின் தொழில்நுட்பப் பங்களிப்புடன் தான் அல்குவைதா தலைவர் ஒஸாமா பின்லேடனை அமெரிக்கப் படை கள் கொன்றன என்று கூறப்படுகின்றதே, உண்மைதானா? அதற்காகத்தான் இந்த விருதைக் கொடுத்தார்களா?*

இது முற்றிலும் தவறானது. அமெரிக்காவின் படைத் துறைக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. பாதுகாப்பு அமைச்சகத்தின் அனுமதிகூட எனது ஆய்வு நிறுவனத்துக்குக் கிடைக்கவில்லை.

அமெரிக்கப் படைத்துறையினர் எனது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் மட்டுமல்ல இராணுவ நோக்கங்களுக்காக பல படைகள் எனது நைட் விஷன் (Night Vision Technology) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. ஆனால் அதற்கும் எனக்கும் தொடர்பு இல்லை.

சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தவெனக் கண்டுபிடிக்கப்பட்ட கத்தியை யாராவது கொலைசெய்யப் பயன்படுத்தினால் அதற்கு கத்தியைக் கண்டுபிடித்தவர் பொறுப்பாளியாக முடியாமா என்ன?

**சூரியக் கலம் ஆய்வு நடவடிக்கைகளுக்கான களம் – சந் தர்ப்பம் இலங்கை யிலேயே அதிகளவில் உண்டு. அதைவிட ஆய்வாளர்களின் கடும் முயற்சி – உழைப்பு நிறை யவே உண்டு. அங்குள்ளவர்கள் என்னைவிடத் திறமைசாலிகள்.**

விண்வெளி ஆய்வுகளில் எனது கண்டுபிடிப்பு அதிகம் பயன்படுகிறது. சந்திரனில் நீர் இருப்பு தொடர்பான ஆய்வுக்கும், செவ்வாய்க் கிரகத்தில் நடக்கும் ஆய்வுக்கும் எனது தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. மிகப் பெரிய கட்டடத் தொகுதி தீ பற்றிக் கொண்டால் உள்ளே மனிதர்கள் சிக்கிக் கொண்டுள்ளார்களா என்பதைக் கண்டறிய எனது தொழில் நுட்பம்தான் உதவிக்கு வர வேண் டும். கப்பல்கள் காணாமற்போகின்ற சந்தர்ப்பங்களிலும் மீட்புப் பணிகளுக்கு – குறிப்பாக மனிதர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு இந்த 'இன்ப்ஃரா ரெட் சென்ஸர்' தொழில் நுட்பம் பயன்படுகின்றது.

*உங்களுடைய சிவானந்தன் ஆய்வு மையம் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் சூரியக் கலம் (சோலர் சிஸ்டம்) ஆய்வு முயற்சிகளுக்கு ஐம்பது லட்சம் ரூபாவுக்கும் மேற் பட்ட நிதியுதவி அளித்திருக் கின்றது. அந்த ஆய்வுகளை இங்கு செய்ய என்ன கார ணம்?*

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களான யாழ்ப் பாணம், களனி, பேராதனை, ருகுண ஆகியவற்றில் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள பேராசிரியர்களை சிவானந்தன் ஆய்வு மையத்துக்கு அழைத்து சூரிய கலம் ஆய்வு தொடர்பிலான பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

நான் நினைக்கின்றேன் இலங்கையில் பல வருடங்களுக்கு முன்பே சூரியக் கலம் ஆய்வுகள் தொடங்கப் பட்டு விட்டன. உண்மையில் இவை என்னால் ஆரம்பிக்கப்படவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லக்ஸ்மன் திசநாயக்க, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பௌதிகவியற்றுறை பேராசிரியர் ரவிராஜன் போன்றவர்களால் மிகுந்த சிரமங்களின் மத்தியில் நீண்ட காலத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. நாங்கள் சிவானந்தன் ஆய்வு மையத்தினூடாக அதற்கான ஆதரவுகளைத்தான் வழங்கி வருகின்றோம்.

சூரியக் கலம் ஆய்வு நடவடிக்கை களுக்கான களம் – சந் தர்ப்பம் இலங்கையிலேயே அதிகளவில் உண்டு. அதை விட ஆய்வாளர்களின் கடும் முயற்சி – உழைப்பு நிறையவே உண்டு. உண்மையில் அங்கு உள்ளவர்கள் என்னை விடத் திறமைசாலிகள். சந்தர்ப்பமும், வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் இன்னும் முன்னேற முடியும். இது தான் எனது விரும்பமும்கூட.

தனித்தனியாக ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவதைவிட கூட்டாக ஆய்வு செய்யும்போது மிகச் சிறந்த பெறுபேற் றைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனையே நாங்கள் செய்கிறோம்.

மற்றவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக சிவானந்தன் ஆய்வு மையம் எடுக்கும் ஒரு முயற்சி என்றே இதனைப் பார்க்க வேண்டும். அங்கு ஆய்வுகளைச் செய்த பின் அங்கு வந்து கருத்தமர்வுகளை நடத்துவதன் மூலம் இது பற்றிய அறிவை எல்லா மட்டங்களிலும் பகிர்ந்து கொள்ள முடியும்.

அடுத்த வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஏற் பாட்டில் சிவானந்தன் ஆய்வு மையத்தினரால் துறைசார் வளவாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டு பயிற்சிப் பட்டறையை நடத்த உத்தேசித்துள்ளோம். அதற்கான நிதியுதவியையும் சிவானந்தன் ஆய்வு மையமே வழங்க இருக்கின்றது.

அத்துடன் இந்த ஆய்வுகளின் நிறைவில் யாழ்ப்பாணத்தில் சூரியக் கலம் உற்பத்தி நிலையங்களை நிறுவ முடியும். அதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு பெறக் கூடியதாக இருக்கும். பொருளாதார ரீதியாக இலங்கையை சூரியக் கலம் உற்பத்திக்கான ஒரு களமாக உருவாக முடி யும் என்று நம்புகிறேன்.

*இன்று சர்வதேச ரீதியாகப் பேசப்படும் ஒரு தமிழன் என்ற பெருமையோடு, புகழ்பூத்த*

*பக்கம் 20 பார்க்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## ஏகாதிபத்திய அரசுகளும் காலனி நாடுகளும்

03

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலை நிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



தேசிய இனங்களும் - தேசங்களும்" என்னும் கோட்பாடு ஐரோப்பாவில் தான் முதன்முதல் பிறந்தது. அதற்கு முன்பாக ஐரோப்பிய மக்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாகக் கிறிஸ்தவ மதம் திகழ்ந்தது. மத உணர்வால் பிணைப்புண்ட மக்கள் சிறிது சிறிதாக சமூக உணர்வை எப்படிப் பெற்றார்கள் என்பதை அறிஞர் எஸ்.வி.இராசதுரை மேனாட்டு அறிஞர் வழியாகப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்.

"ஐரோப்பாவில் தேசங்கள் தோன்றுவதற்கு முன்பாக கிறிஸ்தவ மதம் தான் ஐரோப்பிய மக்களிடம் தாங்கள் ஒரு சமூகம் என்ற உணர்வை உருவாக்கி வளர்த்து வந்தது" என்று ஆண்டர்சன் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசியத்தின் எழுச்சி, மதச் சிந்தனைகளின் வீழ்ச்சி ஆகிய இரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். இது குறித்து அவர் மேலும் விளக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஒரு மாபெரும் பண்பாட்டு அமைப்பாக இயங்கிய மதத்தின் செயற்பாடுகள் வலுவிழந்த நிலையில் இந்தச் செயற்பாடுகளை வேறு வகையிலும், வேறு வடிவங்களிலும் நிறைவேற்றக் கூடிய பண்பாட்டு அமைப்பாக, பரந்துபட்ட மக்களிடையே தோழமையுணர்வையும், கூட்டுணர்வையும் நிறுவி மானுட வாழ்வுக்குப் பொருள் வழங்கும் அமைப்பாகத் தேசம் செயற்பட்டது என்று ஆண்டர்சன் கூறுகிறார்.

தேசம் என்ற அமைப்பு உருவாகியதற்கான பிற காரணங்கள் என அவர் கூறுபவை; படிநிலைச் சமூக அமைப்பின் நிலைத்த தன்மை உலுக்கப்பட்டமை (சந்தையின் வளர்ச்சியும், பூர்ஷ்வா வர்க்கத்தின் எழுச்சியும், முடி மன்னனின் செல்வாக்குக் குறைந்தமையும் புனித மொழியான இலத்தீனுக்குச் சவாலாகப் பிற ஐரோப்பிய மொழிகள் வளர்ச்சியடைந்தமையும் உலகில் பிற நாடுகள், பிற சமூகங்கள், பிற பண்பாடுகள் ஆகியன இருப்பது பற்றி ஐரோப்பியர்கள் அறிய வந்தமையும் விஞ்ஞான வளர்ச்சிகள், தகவல் தொடர்பு ஊடகங்களின் (நாவல்கள், செய்தித்தாள்கள் முதலியன) வளர்ச்சியும் காலம் பற்றிய கிறிஸ்தவ மதக் கண்ணோட்டம் மறைந்தமையும் வரலாற்றுணர்வு வளர்ச்சியடைந்தமையும்.பரந்தசந்தையைப் பிடிப்பதற்கான பூர்ஷ்வா வர்க்கத்தின் தேடலும் அதற்கிருந்த உந்துதலும் மட்டும் தேசங்கள் உருவாக்கக்காரணமில்லை என்று ஆண்டர்சன் கூறுகிறார்.

குறிப்பிட்ட புவியியல் பகுதியில் மக்கள் பேசி வந்த மொழிகள் ஏதோ ஒன்றுடன் முதலாளித்துவம் ஏற்படுத்திக் கொண்ட பிணைப்பும் முக்கிய பங்கு வகித்தது என்கிறார். இந்த மொழிகள் பழைய புனித மொழியின் (இலத்தீன்) அல்லது நிர்வாக நோக்கத்துக்காக அரசர்களால் பயன்படுத்தப்பட்ட அயல் மொழிகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. மார்ட்டின் லூதர் கிங் தொடக்கி வைத்த புரோட்டஸ்டண்ட் சீர்திருத்தக் காலத்தில் விவிலியம், ஜேர்மானிய மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு இலத்தீன் மொழி அறிவைக் கொண்டிராத பாமரமக்களும்கூட இலத்தீன்மொழிப் புலமையுடைய பாதிரிமார்களின் உதவி இல்லாமலேயே ஆன்மிக உலகை நேரடியாகச் சென்றடைவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டது.

தாய்மொழி வழியாக ஆன்மிக உணர்வு பெறத் தொடங்கிய மக்களை மொழியின் அடிப்படையில் அமைந்த பண்பாடு மேலும் இணைத்தது. ஒரு மொழி பேசிய மக்கள் பொதுப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் மூலம் ஒரு சமூகமாகத் திரளத் தொடங்கினார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுவில் வால்டர், ரூசோ போன்றோர் சுதந்திரம்- சமத்துவம்- சகோதரத்துவம் ஆகிய ஜனநாயகக் கோட்பாடுகளை முன்வைத்தனர்.

கி.பி. 1789 ஆம் ஆண்டு தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சி பத்தாண்டுகள் நீடித்தது. மன்னராட்சி ஒழிக்கப்பட்டு சகல அதிகாரங்களும் மக்களிடம் போய்ச் சேர்ந்தன. ஆனாலும் இது நீடிக்கவில்லை.

1799 ஆம் ஆண்டு திடீர்ப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய நெப்போலியன் 1804 இல் பிரெஞ்சுப் பேரரசனாக முடி சூட்டிக் கொண்டான். ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் கைப்பற்றினான். இறுதியாக ஆங்கிலேயரிடம் தோற்றுச் சிறைப் பிடிக்கப்பட்டு மாண்டான். அவன் மறைவுக்குப் பிறகு பிரெஞ்சுப் பேரரசில் இருந்த பல நாடுகள் ஒவ்வொன்றாகப் போராடி விடுதலை பெற்றன. இந்தக் கால கட்டத்தில்தான் தேசிய இன உணர்வு பிறந்ததாக வரலாற்று ஆசிரியர் சிலர் கருதுகின்றனர்.

"ஐரோப்பாவில் நெப்போலியனுக்கு முன்பாகத் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய சிந்தனை இருந்திருக்கவில்லை" என்ற கருத்து சரியானதல்ல என்னும் கருத்தோட்டமும் உள்ளது. ஐரோப்பாவில் உள்ள பல்வேறு நாடுகளையும் இணைத்து ஐரோப்பியப் பேரரசு ஒன்றை அமைக்க வேண்டும் என நெப்போலியன் செய்த முயற்சியின் விளைவாகத் தேசிய அரசு என்பதற்கான சட்டரீதியான மற்றும் அரசியல் ரீதியான விளக்கங்கள் பிறந்தன. இதனையொட்டி நிலவியல், கலாசாரம், இனம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. தனிப்பட்ட பற்றுதலின் அடிப்படையில் தங்களை ஆண்டு கொள்ள அனுமதியளிக்கப்பட்டதை விட உறுதியான உடன்பாட்டின் அடிப்படையில் தங்களை ஆளும் அரசுக்கு அனுமதியளிப்பது சிறந்ததாகும் எனக் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் அரசியல் நிறுவனங்களும் சட்டங்களும் பிறந்தன. இந்தச் சிந்தனைகள் காலப்போக்கில் வளர்ச்சி பெற்று தேசிய இனம், தேசிய இன உணர்வு, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை ஆகிய தத்துவங்கள் பிறக்க வழிவகுத்தன.



### சுயநிர்ணய உரிமை (Self Determination)


18 ஆம் நூற்றாண்டில் தனி மனிதர்களின் சுதந்திரம், விருப்பம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு தோன்றியது. ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் தேசிய இனங்களின் உரிமைகளுக்கான கோட்பாடாக இது மாறியது.


ஆஸ்திரேலிய, ஜெர்மானிய, ஆட்டமான் பேரரசுகளின் கீழ் இருந்த நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்குவதற்காக இந்தக் கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டது. முதலாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கக் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சன் வகுத்த 14 அம்சத் திட்டத்தில் நாடுகளின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு முக்கிய இடம்பெற்றது. அதற்கிணங்க மேற்கண்ட 3 பேரரசுகளுக்கு உட்பட்ட பல நாடுகளுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட்டது.

1945 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா. பேரவையின் பட்டயத்திலும், 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குடியேற்ற நாடுகளுக்கும் அவற்றின் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவதற்கான பிரகடனத்திலும் 1970 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைத்து நாட்டுச் சட்டக் குறிக்கோள்கள் பற்றிய பிரகடனத்திலும் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# புனைவின் இருளும் சந்தியாவின் தேடலும்....

நம்பிக்கை என்ற சிறு மெழுகுவர்த்தியை ஏந்திக்கொண்டு தன் புதல்வர்களோடு தேடிக் கொண்டேயிருக்கிறாள் சந்தியா.

ஒவண்யான்

பிரகீத் எக்னெலிகொட. கண்களில் இலட்சியமும், செயலில் தேடலும் கொண்ட ஓர் ஊடகப் போராளி. எப்போதும் அவனது பேனா முனை அதிகாரத்துக்கு அடிபணிந்தது இல்லை. பொய்மையின் இருளைக் கிழிக்கும் கூர் வாளாகவே பிரகீத்தின் எழுத்துகள் பிறப்பெடுத்தன. தனியே எழுத்துகள் வடிவில் செய்தி சொல்லியாக மாத் திரமல்லாமல் கேலிச் சித்திர வரைஞனாக, ஆவணப்பட இயக்குநராக பிரகீத்தின் அவ தாரங்கள் வெவ்வேறு முகம்கொண்டவை. ஆனாலும் எல்லா முகங்களும் அதிகாரத்தை நோக்கி, அதன் அராஜகங்களை எதிர்த்து காறி உமிழத் தவறவில்லை. அதனால் குறிவைக் கப்பட்ட ஊடகவியலாளர்களில் அவரும் ஒருவரானார். பெண்ணியச் செயற்பாட்டாள ரான சந்தியாவை கரம் பிடித்த பிரகீத், இரு ஆண்குழந்தைகளின் தந்தையாவார்.

2009 ஓகஸ்ட்.

எக்னெலிகொட முதல் முறையாக கடத்தப்பட் டார். வாகனங்களில் வந்தவர்கள் கோழிக்குஞ் சைக் கௌவும் பருந்து போல ஓர் இரவின் துணையோடு, அவரை அள்ளிக்கொண்டு போனார்கள். அன்றைக்கு ஊடகங்களின் முதன்மைச் செய்தியாகிப் போனார் பிரகீத். பல்வேறு தரப்புகளும், அரசே அவரைக் கடத்தி விட்டதாகக் குற்றம் சாட்டியிருந்தனர். ஏனெனில் அதற்கு சில நாள்களுக்கு முன்னரே அவர் "போர் ஒன்றை வெற்றி கொள்வதற்கான இரக சியங்கள்" என்ற 40 நிமிடங் களைக் கொண்ட ஆவணப் படம் ஒன்றைத் தயாரித்திருந்தார்.

அந்த ஆவணப்படம் சரத் பொன்சேகாவை மையமாகக் கொண்டது. இறுதிப் போரில் பெற்ற வெற்றியில் பொன்சேகாவுக்கு துளி அளவுகூட பங்கில்லை என்று அரசு சிங்கள வரலாற்றின் பக்கங்களிலிருந்து பொன்சேகாவின் பெயரை தேடித் தேடி அழித்துக்கொண்டிருந்தபோதுதான் பிரகீத்தின் இந்த ஆவணப்படம் வெளிவந்திருந்தது.

*புலிகளை வெல்வதற்கு, புலிகள் கைக்கொள்ளும் வியூகங்களை படையினரும் செய்யவைத்தல், படையினரிடம் பொதுமக்களுடனான நல்லுறவைப் பேணுதல், ஆள ஊடுருவும் படையணிமூலம் புலிகளின் முக்கிய தளபதிகளைக் கொல்லுதல் அல்லதுஅவர்களின் நட மாட்டங்களைக் கட்டுப்படுத்துதல் புதிதாகக் கைப்பற்றிய பிரதேசங்களில் முகாமிட்டு தங்கியிராமல், புலிகள் ஓய்வெடுப்பதற்கான அவகாசத்தை வழங்காமல் தொடர்ந்தும் படைகள் முன்னேறிக்கொண்டிருத்தல்*

என பொன்சேக கொண்டுவந்திருந்த புதிய பொறிமுறைகளே புலிகளின் வீழ்ச்சிக்கு வித்திட்டது என்று அந்த ஆவணப்படம் வெற்றியின் முழுமையான உரிமையாளனாக பொன்சேகாவை நோக்கி கைநீட்டி நின்றது.

இரண்டாவது தடவையாக இலங்கைத் தீவின் அரியணையில் ஏறும், மஹிந்தவின் கனவை கலைப்பதுபோல மக்கள் மத்தியில் பெரும் விம்பமாக பொன்சேகா எழுந்திருந்த காலமது. போதாக்குறைக்கு இந்தப் படம்வேறு பொன்சேகாதான் போரின் நாயகன் என்று ஆதாரங்களோடு, பேசியதால் அதிகாரத்தின் அக்கினிப் பார்வை பிரகீத்தின் பக்கம் திரும்பியது. அதனால்தான், அவர் 2009 ஓகஸ்டில் கடத்தப்பட்டு பல்வேறு தரப்புகளின் அழுத்தங்களைத் தாங்கமுடியாமல் விடுவிக்கப்பட்டிருந்தார். "அரசுக்கு எதிராக கருத்து வெளியிடக்கூடாது" என்ற நிபந்தனை அவரின் விடுவிப்புக்குப் பின்னே மறைந்திருந்தது.

2010 ஜனவரி 24.

வழக்கம்போல் அலுவலகப் பணிகளை முடித்துக் கொண்டு, வீடு திரும்பிக்கொண்டி ருந்தார் பிரகீத். கொஸ்வத்தையை அவர் நெருங்கிக்கொண்டிருந்தபோது அவரருகே கிறீச்சிட்டபடி வந்து நின்றது ஒரு வாகனம். அப்போது நேரம் இரவு 8.30. அந்த வாகனம் பிரகீத்துக்கு ஏற்கனவே பரிச்சயமானதுதான். ஓகஸ்டிலும் இதே வாகனம் தான் அவரைக் கவர்ந்து சென்றிருந்தது. எப்படியாவது யாருக்கேனும் தான் இன்னொருமுறை காணாமல் போய்க்கொண்டிப்பதை பற்றி தகவல் சொல்ல பிரகீத் விரும்பினார். ஆனால், அதற்கு வந்தவர்கள் அவகாசம் கொடுக்கவில்லை. கடந்த முறையை விடவும் இந்தமுறை, அவர்களின் பார்வையில் கொடூரம் அதிகமாக இருந்தது. எந்தவித கனிவும் காட்ட அவர்கள் தயாராக இல்லை. பிரகீத் அந்தக் கணத்தில் இருந்து நிரந்தரமாக காணாமல் போனோர் பட்டியலில் இணைந்துகொண்டார்.

**ஒரு கைதியின் வாக்குமூலம்.**

"எங்களுக்கு துமிந்த சின்ன ஐயா. அவர் அடிக்கடி நிறைய வேலைகள் சொல்லுவார். செய்து போட்டு வந்தால், சொன்னதை விடவும் நிறையக் காசு தருவார். இதால எவ்வளவு ஆபத்தான வேலை எண்டாலும், நாங்கள் துணிஞ்சு செய்வம். பொலிஸிடம் பிடிபட்டாலும், பிரச்சினை இல்லை. சின்ன ஐயா ஒரு போன் எடுத்தால் அடுத்த நிமிசமே எங்களை விட்டுடுவாங்கள். ஆனாலும், சின்ன ஐயாவுக்கும் அடிக்கடி பெரிய ஐயா தான் முக்கியமான வேலைகளை செய்யச் சொல்லுவார். இப்பிடித்தான் போன ஜனவரியில தங்களுக்கு எதிரா எழுதுற ஒராளை தூக்க வேணும் எண்டு, சின்ன ஐயா சொன்னார். சொன்னபடியே நாங்களும் தூக்கிட்டம். சாக்கில கட்டிக்கொண்டு வந்து சின்ன ஐயாவுக்கு முன்னால போட்டம். அவரை என்ன செய்யிறது எண்டு பெரிய ஐயாவுக்கு போன் பண்ணிக் கேட்டார் சின்ன ஐயா. "அவனைத் தூக்கி கடலுக்க எறியுங்கோ" எண்டு, பெரிய ஐயா சொல்லியிருக்க வேணும். அடுத்த அரை மணித்தியாலத்துக்குள்ள அவர் சொன்னபடி சாக்கு மூடைக்க இருந்தவரை அப்பிடியே தூக்கி கடலுக்குள்ள போட்டுட்டம்."

(நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா கொலை வழக்கில் கைதான பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவனின் வாக்குமூலம்).

**புனைவின் கடைசி அத்தியாயம்**

"அண்மையில் நான் பிரான்ஸுக்குச் சென்றிருந்தேன். அப்போது எனது நீண்டநாள் நண்பரும் ஊடகவியலாளருமான மஞ்சுள வெடிவர்த்தனவை சந்தித்தேன். அவரோடு, இன்னொருவரும் கூட இருந்தார். குள்ளமான அவர், தலையை மொட்டை அடித்திருந்தார். "இவர்தான் பிரகீத் எக்னெலிகொட" என்று மஞ்சுள எனக்குச் சொன்னார். நான் அதனை உறுதிப் படுத்திக் கொள்ள மொட்டை அடித்திருந்த அந்த நபருடன் உரையாட முற்பட்டபோது, அவர் அங்கிருந்து நழுவிட்டார்.

இதே மொட்டைத் தலை நபர், அண்மையில் ஜெனிவாவில் நடத்தப்பட்ட அரசுக்கு ஆதரவான போராட்டத்தை குழப்ப முயன்றிருந்தார். அதன்போது, அவருடன் இன்னொரு ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய பக்கத்தில் இருந்தார். தாய் நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்திவிட்டு, பிரான்ஸில் பிரகீத் உல்லாசமாக இருக்கிறார். இது அவரது மனைவிக்கும் தெரியும். எப்படி அவர் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றாரே அதே போல் அவர் மீள நாட்டுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அதன்மூலமே இலங்கைக்கு நேர்ந்த அவமானம் துடைக்கப்படும். அரசு மீது அபகீர்த்தியை ஏற்படுத்தியமைக்கு சர்வதேச நாடுகள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று "அரசு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அருந்திக பெர்னாண்டோதான் இந்தக் கடைசிப் புனைவை நாடாளுமன்றில் ஒப்பேற்றியிருக்கிறார்.

**தேடிக்கொண்டிருத்தல்.**

பிரிவின் துயர் கொடியது. அது சர்வகாலமும் பிரிந்து போனவர்களை தேடிக் கண்டறியும் வரை அடி மனதில் தொடர் வலியை எழுப்பிக் கொண்டேயிருக்கும். காலம், உணவு, உறக்கம் எல்லாவற்றையும் மறக்கடிக்கச் செய்து, பிரியத்துக்கு உரியவர் இருக்கும் இடம் தேடி அலைய வைத்துக்கொண்டே இருக்கும். சந்தியாவும் அப்படித்தான் பிரிவின் வலி சுமந்தவளாக பிரகீத்தை தன் இரு புதல்வர்களோடு, தேடிக்கொண்டேயிருக்கிறார். கண்களில் பெருகி வழியும் விழி நீரோடும் கைகளில் பிரகீத்தின் விம்பத்தைத் தாங்கிய பதாகைகளோடும் அவளின் தேடல் தொடர்ந்தபடியே இருக்கிறது. ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள், மனித உரிமையில் அக்கறை உள்ளவர்கள் சர்வதேச அமைப்புகள் என்று அவள் காலில் விழுந்து கதறிக்கொண்டேயிருக்கிறாள், "என் பிரகீத்தை மீட்டுத் தாருங்கள்" என்று. அவளின் கண்ணீர் சர்வதேசத்தை இலங்கை மீது எப்போதும் கோபப் பார்வையை வீச வைத்தது, வைத்துக்கொண்டிருக்கிறது. அதனால், சந்தியாவின் கண்ணீரை அவமானச் சின்னமாக கருதுகிறது இலங்கை. அதனைத் துடைக்க வேண்டுமாயின் பிரகீத்தை கொண்டுவர வேண்டும். ஆனால், அது முடியாத செயல் என்பதாலோ என்னவோ, எங்கோ ஒரு தேசத்தில் அவர் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு உல்லாச வாழ்வில் மிதப்பதாக கதைகளை அதிகாரம் புனையத் தொடங்கியுள்ளது.

ஆனாலும் எந்தப் புனைவுகளும் சந்தியாவின் கண்ணீருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போவதில்லை. சீதை இருக்கும் இடத்தை கண்டறிந்து, அடையாள மோதிரத்தைக் கொடுக்க இராமனுக்கு அனுமன் இருந்தான். ஆயினும், பிரகீத் இருக்கிறாரா இல்லையா என்பதைக்கூட அறிந்து சொல்வதற்கு சந்தியாவுக்கு யாருமே இல்லை. புனைவுகளால் அவள் கணவர் எங்கோ வாழ்ந்துகொண்டிருப்பதாக தன் எதிரே நீண்டு கிடக்கும் எல்லை தெரியாத இருளினூடே அன்பின் துணைகொண்டு, நம்பிக்கை என்ற சிறு மெழுகுவர்த்தியை ஏந்திக்கொண்டு தன் புதல்வர்களோடு தேடிக் கொண்டேயிருக்கிறாள் சந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காயும் கானகத்திலிருந்து ஒரு கதை

# ஆயிரத்தில் ஒருத்தி

து.ஜெயராஜா
முதுகலை மாணவன்
சென்னைப் பல்கலைக்கழகம்

காய்ந்தே கிடக்கிறது அந்தக் கிராமம். வன்னியின் அநேகக் கிராமங்களின் புறத்தோற்றம் இப்போது அப்படித்தான் இருக்கின்றது. ஆனாலும், அதிலும் அந்தப் பெண்ணின் வளவு மிகமோசமாக சருக்காகிக் காட்சியளிக்கின்றது.

சூரியனிலிருந்து பறக்கும் மொத்த வெயில் கீற்றுக்களும் அந்த வீட்டின் மேலும், கால் ஏக்கர் பரப்பிலான காணித்துண்டுக்குள்ளும் விழுந்து நொருங்குவதை அந்த இடம்காட்டுகின்றது. சில தகரங்களும், ஓலைகளும் கலந்து வேயப்பட்ட வீட்டுக்குள் இந்தக் காலத்தில் சூரிய ஒளியும், இன்னும் சில காலத்தில் மழைத் துளியும் அனுமதியின்றி இறங்க வாய்ப்பிருக்கின்றது. முற்றத்தில் எப்போதோ நடப்பட்ட பூக்கன்றுகள் காய்ந்தும், காயாமலும் நிற்கின்றன. நாளை சாகத் தயாராய் நிற்கும் மரவள்ளிச் செடிகளுக்குள் ஒட்டியுலர்ந்த வயிற்றுடன் படுத்துக்கிடக்கின்றது ஒரு நாய்க்குட்டி. அந்தக் குட்டியால் இழுத்துச் செல்ல முடியாதளவு பாரமுடைய சங்கிலி அதன் கழுத்தில் பிணைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குடும்பத்தின் மொத்தப் பாதுகாப்பும் அதனிடத்தில் அடைவு வைக்கப்பட்டிருப்பதால் அதற்கு அவ்வளவு பாதுகாப்போ! விண்ணாங்கு மரத்தை பிளந்து தயாரிக்கப்பட்ட படலையை தொடக்கூட யாரையும் அனுமதிக்காத குட்டிநாய் குரைத்துக் கொண்டே கிடக்கின்றது. நாய் குரைப்பின் வீரியம் அதிகமாக மேல் சட்டை அணியாத குழந்தையொன்று ஓடிவந்து எட்டிப்பாக்கிறது. ''அம்மா யாரோ வந்து நிக்கினம்'' என்ற முகவரியிடலில் அம்மாவை முற்றத்துக்கு இழுத்து வந்து விடுகிறாள் 5 வயது மதிக்கத்தக்க அவள்.

யாரது? ஏன்? என்ற வினாக்களை 30 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணின் பார்வைகள் இலகுவில் பகிர்ந்து விடுகின்றன. மகளின் தலையை தடவியபடி எண்ணிக்கைகளுக்குள் அடங்காத கேள்விப் பார்வையை அலையவிடுகிறாள். வெயில் கால்களுக்கு தீயிடுவதால் வீட்டுக்குள் வரவேற்கிறாள் அந்தப் பெண். கதவுக்குள்ளால் குனிந்து நிமிர்கையில் இரண்டு படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இரண்டும் நேற்று மாட்டியவை போல பளபளக்கின்றன. ''இது அப்பா'', ''இது அப்பப்பா'' பழக்கப்பட்ட பதிலை கேள்வி கேட்க முன்பே அந்தக் குழந்தை சொல்லி விடுகிறது. தங்களுக்கு உதவி செய்ய வந்திருப்பவர்கள் என்ற நம்பிக்கையில் அந்தக் குழந்தை இன்னும் பரபரப்பாகின்றாள். படத்தை கொஞ்சம் அவதானிப்பவர் அவளின் அப்பா இறுதிப் போர் வேளையிலும், அவளின் அப்பப்பா, கடந்த ஆண்டு தாக்கிய கடலலைச் சூறையிலும் சிக்கி மரணித்தவர்கள் என்பதை தெரிந்து கொள்வர்.

பிளாஸ்ரிக் கதிரைகளுக்கும் துருப்பிடிக்கும், சிரங்கு நோய் வரும் என்பதை அவள் தந்த கதிரை உதாரணப்படுத்துகின்றது. இருந்ததைக் கொடுத்துவிட்டு தன் கதை சொல்ல ஆரம்பிக்கிறாள் அவளின் அம்மா. காய்ந்த கண்ணீர் பசையாகி சுருங்கிய விழியின் ஓரத்தில் படையாகியிருக்கின்றது. மகளுக்கு ஒரு மேல் சட்டையை அணிவித்தவாறு, தன் கடந்த காலத்துக்குள் பயணிக்கிறாள்.

''நாங்க யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு பிறகுதான் வன்னிக்கு வந்தம்'' பிறகு சமாதான காலம் அவளின் குடும்பத்தை சொந்த இடத்துக்கு மீள அழைத்துக் கொண்டது. அவள் மனதையும், உயிரையும் வன்னியிலேயே பறிகொடுத்துவிட்டு தாயகம் திரும்பியதாக சொல்கிறாள். வன்னியில் அவளின் பக்கத்து வீட்டு, புலனாய்வுத்துறை பேஸ் பெடியன் அந்த இரண்டையும் (மனசு, உயிர்) பறித்து தன்னோடு வைத்துக் கொண்டதாக சொல்கின்றாள். காதல் தொடர்பினால், அவள் வன்னிக்கு திரும்பிவிடவே ஆசைப்பட்டாள். வன்னியிலிருந்த உறவுக்காரர்களின் வீட்டில் தற்காலிகமாகத் தங்கியிருந்த காலத்தில் அவளுக்கும், அந்த இதயக் கொள்ளையனுக்கும் இடையில் திருமண நிச்சயிப்பு நடந்தது.

அந்தக் காலத்தில் நடந்த போராளிகளின் திருமணங்கள், தமிழ் சமூக விதிமுறைகளை உடைத்தெறிந்திருந்தன. திருமணத்தின்போது பார்க்கப்படும் கட்டாயத் தகுதியான ''பெடியன் என்ன ஆக்கள்'' என்ற வினாவை அந்த உடைப்பு தற்காலிகமாக அழித்திருந்தது.

அவன் மலையகத்தை சேர்ந்தவன் என்பது அவளுக்கு மட்டுமே திருமணம் வரையில் தெரிந்திருந்தது. திருமணத்தின் பின் சில முணுமுணுப்புக்களோடு பெற்றோரும் ஏற்றுக் கொண்டனராம். அவன் போராளியாகவும், அவள் முன் பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றி குடும்பத்தை நடத்தினர்.

போர் விசுவமடுவை நெருங்குகையில் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. போராளிகள் மத்தியில் பிரபலமான மருத்துவர் மகப்பேறு பார்த்திருக்கின்றார். அதன் பிறகு அவன் வீட்டுக்கு வருவது அருகியது. தொடர்ச்சியாக அவளும், அவனும் இடம்மாறிக் கொண்டிருந்தனர். அவனின் பெற்றாருடன் அவளை சேர்த்துவிட்டிருக்கிறான். அவர்களின் இடப்பெயர்வு மாத்தளனின் மிஞ்சியிருக்கையில், ''பேஸ்'' சாமான்களை ஏற்றிச் சென்ற அவனின் வாகனம் குண்டுத்தாக்குதலுக்குள்ளானது. பிறந்து சில மாதங்களான குழந்தையை மாமியிடம் கொடுத்துவிட்டு, மாமாவோடு வள்ளிபுனம் பாடசாலை நோக்கி செல்மழையில் நனையாது தப்பித்துப் பறந்தாள்.

அந்தப் பாடசாலை மருத்துவமனையாக இயங்கியது. இரத்த நெடி வீசிய அதற்குள் அவனைத் தேடினாள். ஒரு சுவரில் சரித்து வைக்கப்பட்டிருந்த அவன், அவளின் பெயரை இயன்ற வரை குரலுயர்த்தி கூப்பட்டான். குடல் அவ்வளவும் வயிற்றுக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது. இலையான்கள் அவனின் குடலை மேய ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தன. (இதை சொன்னபோது பொங்கிய கண்ணீரை என்ன செய்வதென்று தெரியாது அமைதியானாள்). தொடைப்பகுதியிலும் ஒரு காயமிருந்தது. இரண்டிலும் இருந்து இரத்தம் பெருக்கெடுத்தது. புதிதாக இணைக்கப்பட்டிருந்த மருத்துவப் போராளிகள் அவனின் காயத்துக்கு எப்படி மருந்திடுவது என்று தெரியாமல் அனுபவசாலிகளை கண்டுபிடிக்க ஓடித்திரிந்தனர். அதற்குள்ளும் அவன் குழந்தையை விசாரித்தான்.

என்னைய கப்பலில ஏத்திருவினம். வீட்டுக்குப் போய் பிள்ளையையும் ஐ.சியையும் எடுத்துக் கொண்டு வா. போகலாம் என்று சொல்லியிருக்கிறான். நல்ல தண்ணி எடுத்து வா என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவள் மாத்தளன் செல்ல, அவனின் உயிரும் அதிக இரத்தப் போக்கினால் மரணத்தை தொட்டது. அவளுக்கு மரணச் செய்தி அறிவிக்கப்பட்டபோதிலும் அதனைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அவனின் தந்தை சென்றாராம். 100க்கணக்கான உடலங்களுக்குள் ஒன்றான அவனின் உடலத்துக்கும் ஒரே கிடங்கில் மண்போட்டு மூடியதாம் பெக்கோ இயந்திரம்.

மீளக் குடியேற்றத்துடன் அவளின் காணிக்கே திரும்பினாள். அது கால் ஏக்கர் பரப்பளவான காணி. இப்போது தடைசெய்யப்பட்டிருக்கும் நிறுவனமொன்று புலிகளின் காலத்தில் அவர்களுக்கு வழங்கி

(20 ஆம் பக்கம் பார்க்க)

---

**கிளிநொச்சி மாவட்டம் 2011**

பெண்தலைமைத்துவ குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை- 6170

கரைச்சிப்பிரதேச சபை - 3783
கண்டாவளைப் பிரதேச சபை - 1188
பூநகரி பிரதேச சபை- 952
பளைப் பிரதேச சபை - 247

**முல்லைத்தீவு மாவட்டம்- 2011**

பெண்தலைமைத்துவ குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை -3936

மேல்பற்று பிரதேச சபை- 1345
புதுக்குடியிருப்பு பிரதேச சபை- 950
ஒட்டுசுட்டான் பிரதேச சபை- 843
துணுக்காய் பிரதேச சபை- 451
மாந்தை கிழக்கு பிரதேச சபை - 347


*நன்றி- கிளிநொச்சி மாவட்ட செயலகம்*

---

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோல்வியை நோக்கிய இந்தியாவின் ராஜதந்திரம்

சந்திரசேகர் ஆஷாத்



“ எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களை மேற் கொண்டாலும் இலங் கையை இந்தியாவின் உண்மையான நண்ப னாகத் தக்க வைக்க முடியாது. இதை இந்தியக் கொள்கை வகுப்பாளர் கள் எப்போது ஏற்றுக் கொள்கின்றனரோ அன்று தான் இலங்கை யின் பக்கம் சார்வதை அவர் களால் நிறுத்த முடியும்.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ சீன பயணத்தை மேற்கொண்டு அங்கு பல்வேறு தரப் பினருடனும் பேச்சுக்களை நடத்தி பல் பொருளாதார ஒப்பந்தங்களையும் மேற்கொண்டு வெற்றிகரமாக நாடு திரும்பியுள்ளார். இவற்றில் செய்மதித் தகவல் தொழில்நுட்பம், வீதி அமைப் புக்கள் போன்ற உட்கட்டுமானப் பணிகள் தொடர்பான ஒப்பந்தங்கள் முக்கியமானவையாகும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் இலங்கை யின் தகவல் தொழில்நுட்பம் செய்மதி மயப்படுத்தப்படும் எனத் தெரிவிக் கப்படுகிறது. அதாவது சீனாவின் அனுசரணையுடன் இலங்கையின் செய்மதி வானில்செயற்பட ஆரம்பிக்கும். அதன் தரைத் தொடர்பு மையமாக சீனாவால் அமைக்கப்படும் 'லோட்டஸ்' தொலைத் தொடர்புக் கோபுரம் விளங் கும் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

அதேவேளையில் ஜனாதிபதியின் சீனப் பயணம் தொடர்பாக அறிக்கை வெளியிட்ட வெளிவிவகார அமைச்சு சீனாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற் பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் எந்தவொரு நாட்டுக்கும் பாதகமாக அமையாது எனவும் இலங்கைக்கு இந்தியாவும் சீனாவும் சம அளவிலான நட்பு நாடுகள் எனவும் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் பாதுகாப்பு தரப்பிலி ருந்தும் எந்தவொரு நாட்டுக்கும் எதிராகப் பிறிதொரு நாடு இலங்கையின் தரை, கடல், வான் பரப்புக்களைப் பாவிக்க அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன இலங்கை உறவுகள் தொடர்பாக இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ எந்தவொரு கருத்தும் வெளியிடாத நிலையில் வெளிவிவகார அமைச்சாலும் பாதுகாப்புத் தரப்பாலும் இப்படியான அறிக்கைகள் விடப்படுவது தொடர்பாகச் சில கேள்விகள் எழத்தான் செய்யும். அவற்றுக்கான பதிலை உண்மை களின் அடிப்படையிலும் இலங்கை யின் நகர்வுகளின் அடிப்படையிலும் தேடப் போனால் அது இந்தியாவுக்கு சாதகமற்ற ஒரு நிலைப்பாட்டையே வெளிப்படுத்தக்கூடும். குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந் தியாவின் மேலாதிக்க நிலைப்பாட்டைப் பலவீனப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், இலங்கைக்கு வழங்கப்படும் உதவி கள் என்ற பேரில் மேற்கொள்ளப்படு வதாகவே ஒரு தோற்றப்பாடு வெளிப்படு கிறது. அதாவது சீனாவின் முத்துமாலைத் திட்டம் தென்னாசியாவில் பலம் பெற இலங்கை ஒரு கேந்திர நிலையமாக மாறக் கூடிய சாத்தியங்கள் இருப்பது தென்படுகின்றது.

இந்தியா இதை நன்றாகவே புரிந்து வைத்துள்ளது. ஆனால் இந்தியாவின் விட்டுக் கொடுத்து அணைக்கும் ராஜதந் திரம் தொடர்ந்து இலங்கையைப் பொறுத்த வரையில் தோல்வியே கண்டு வந்துள் ளது. இலங்கைக்கு இந்தியாவும், சீனாவும் சம அளவிலான நண்பர்கள் எனக் கூறிக் கொண்டே இலங்கை இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு பெரும் தோல்வியைப் பரிசாகக் கொடுத்துள் ளது. அண்மையில் இடம்பெற்ற மஹிந்த ராஜபக்ஷவின் சீன பயணமும் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் இந்தியாவுக்குக் கிடைத்த பெரும் தோல்வி என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. அன்றிலிருந்து இன்று வரை இந்தியா இலங்கையை தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை அடிப்படையாக வைத்தே கையாண்டு வந்தது. அந்த விடயத்தில் இந்திரா காந்தி தமிழர் தரப்பைப் பலப்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்து அதன் மூலம் இலங்கையைப் பணிய வைக்கும் தந்திரத்தைக் கையாண்டார். அதேபாணியில் ஆரம்பித்த முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி, இலங்கை, இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய பின்பு புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது என்ற பேரில் தமிழர் தரப்-பைப் பலவீனப்படுத்தும் வகையில் செயற்பட ஆரம்பித்தார். அதன் பயன் இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டு அவமானத்துடன் வெளியேற வேண்டிய நிலை எழுந்தது.

அதையடுத்து இந்தியா–இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு தலையிடாக் கொள்கையைக் கடைப் பிடிப்பதாக வெளியே காட்டிக் கொண்டு விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற் கான சகல விதமான உதவிகளையும் இந்தியா மறைமுகமாக மேற்கொண்டு வந்தது. குறிப்பாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச் சுகள் இடம்பெற்ற காலப்பகுதியில் நோர்வே யூடாக பேச்சுகளின் ஒவ் வொரு நகர்விலும் இந்தியாவின் தலையீடு இருந்தது.

2006 ஆம் ஆண்டு மஹிந்த அரசுக் கும் விடுதலைப் புலிகளுக்கும் இறுதி கட்டப் போர் ஆரம்பித்த பின்பு இந்தியா பகிரங்கமாகவே ஆயுத உதவி, ஆயுதப் பயிற்சி, புலனாய்வுத் தகவல்கள், தொழில்நுட்ப உதவி எனப் பல்வேறு வழிகளி லும் இலங்கைக்கு உதவி செய்தது.

அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் விடுதலைப் புலிகளின் பலத்தைச் சிதைப்பதில் முனைப்புக் காட்டின. அவை, என்றுமே விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் தீர்மானிக்கும் சக்தியா கப் போராட்ட அமைப்புக்கள் தீர்மானிக் கும் சக்தியாகப் பலம் பெறுவதை விரும் புவதில்லை. மாறாகத் தமக்கு அடிபணிய மறுக்கும் நாட்டு அரசுகளை தொல்லை கொடுத்து ஆட்டம் காணுமளவுக்கு விடுதலை அமைப்புக்கள் இருந்தால் போதும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

ஆனால் விடுதலைப் புலிகளோ தமக் கென ஒரு பிரதேசத்தில் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி முப்படை களையும் கொண்டு ஒரு தனிநாட்டுக்கான அத்திபாரத்தை அமைத்திருந்தனர். எனவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு அமெரிக்காவும் பெரும் உதவிகளைச் செய்தது.

ஆனால் அமெரிக்கா விடுதலைப் புலிகளை முழுமையாக அழிக்க விரும்பவில்லை. ஏனெனில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கை தங்களிடம் வரவேண்டிய தேவை குறைந்துவிடும். எனவேதான் அமெரிக்கா போரின் இறுதிக் கட்டத்தின்போது போர் நிறுத்தம் ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டது. எனினும் அது இந்தியாவின் ஆலோசனை காரணமா கச் சாத்தியமற்றுப் போய்விட்டது.

இந்தியாவோ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்குத் தீவிர ஆலோசனை வழங்கி யது. அதுவே இந்தியாவின் ராஜதந் திரத் தோல்வியாகவும் அமைந்துவிட் டது. தட்டிக் கேட்க ஆளில்லாத நிலை யில் இலங்கை தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை மேலும் மேலும் ஆழப்படுத்தி வருகிறது. அதுமட்டு மன்றி இந்தியாவின் ஆலோசனை களைப் பொருட்படுத்தாத நிலையும் உருவாகிவிட்டது.

ஆனால் தொடர்ந்தும் தோல்விய டைந்து வரும் இலங்கை தொடர்பான தனது ராஜதந்திரத்தை இந்தியா இன்னும் மாற்றவுமில்லை, மாற்றுவதற் கான அறிகுறிகளும் இல்லை.

இலங்கையோ இந்தியாவைக் கணக் கிலெடுக்காத ஒரு போக்கையே தொடர்ந்து பின்பற்றி வருகின்றது.

1 அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. இதை ஓர் உள்நாட்டு விவகாரம் எனப் புறந்தள்ளிவிட முடியாது. இதுஇரு நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தத் தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அந்த ஒப்பந்தம் இன்னும் இரத்துச் செய்யப்படாத நிலையிலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பல அதிகா ரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. வடக்கு, கிழக்கு பிரிப்பு, வாழ்வின் எழுச்சி சட்டம், பொது நிர்வாக சேவையில் ஆளணிக் குழு என்பவற்றின் மூலம் 13 ஆவது திருத்தத்தின் பல பகுதிகள் செய லிழந்து போயுள்ளன. மேலும் அரசி னால் வழங்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களும் பறிக்கப்படும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இம்முறை மீறல்கள் தொடர் பாக இந்தியா மௌனம் சாதித்து வரு கிறது. இந்த நடவடிக்கைகள் தொடர் பாக இந்தியா தனது கண்டனத்தைக் கூடத் தெரிவிக்கவில்லை. அதாவது விட்டுக் கொடுப்பே ஒரே மார்க்கமாக இந்தியா செயற்பட்டு வருகிறது.

கச்சதீவை இந்தியா மீளப் பெற வேண்டும் என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது இலங்கைக் கடற்படை யினர் கச்ச தீவைச் சுற்றித் தங்கள் போர்க் கப்பல் களை நிறுத்தி வைத் துள் ளனர். அதாவது கச்ச தீவு விவகாரத்தில் தாங்கள் இந்தியா விடம் சண்டை செய்யத் தயார் என்ற செய்தியை இலங்கை சொல்லாமலே சொல்லி விட்டது.

இலங்கை – இந்தியக் கடற்பரப்பில் தமி ழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் கொல்லப்படுவது, அடித்து நொருக்கப்படுவது, மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுவது, கைது செய்யப்படுவது என்பன தொடர்பாகவும் இந்திய மத்திய அரசு பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. தமிழக மீனவர்களின் போராட்டங் களைக் கூடப் பெரிதுபடுத்துவதில்லை. ஒட்டு மொத்தத்தில் இந்திய ராஜதந் திரம் இலங்கைத் தமிழ் மக்களின் நலன் களையும் இந்திய மீனவர் களையும் பலி கொடுத்து இலங்கை இந்திய நல்லுறவைப் பாதுகாக்க முயல்கிறது. இவற்றுக்கு இந்தியா பெற்றுக் கொள்ளும் விளைவு அவ மதிப்புகளும் பின்னடைவுகளும் தான். இலங்கையுடனான நட்புறவைப் பேணா விடில் இலங்கை இந்தியாவின் கையை விட்டுப் போய் முற்றுமுழு தாகச் சீனாவின் பக்கம் விழுந்து விடு மென இந்தியக் கொள்கை வகுப்பாளர் களால் காரணம் கூறப்படுகிறது.

ஆனால் இந்தியா எப்படி நடந்து கொண் டாலும் இலங்கை சீனா பக்கம் சாய்வது தவிர்க்க முடியாதது என்பதை அண்மைய சம்பவங்கள் தெளிவாகவே காட்டுகின்றன. அதுமட்டுமன்றி இந்தியா வின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் சவால் விடுக்குமளவுக்கு இலங்கையில் சீனாவின் நிலை பலம் பெற்று வருகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், தென்பகுதி நெடுஞ் சாலைகள் என எங்கும் சீனாவின் பிரசன்னம் பலம் பெற்று வருகிறது. செப்ரெம்பரில் இயங்கவுள்ள இலங்கை யின் செய்மதித் தளம் தாமரைத் தடாகம் தகவல் தொடர்புக் கோபுரம் என்பவற்றின் மூலம் முழு இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும் சீனாவால் அவதானிக்க முடியும். அது மட்டுமன்றி இந்தியாவின் ஒவ்வொரு பாதுகாப்புத் தொடர்பான நகர்வுகளையும் கண் காணிக்க முடியும்.

இதை இந்தியா தடுத்து நிறுத்தவோ கண்டிக்கவோ முடியாது. ஒரு நாடு தனது செய்மதிக் கட்டமைப்பை உருவாக் குவது அதன் உள்நாட்டு விவகாரம்.

இந்திய ராஜதந்திரத்துக்குக் கிடைத்த ஒரு மாபெரும் தோல்வி இதுவாகும். இந் தியா தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் ஒடுக்குமுறை நட வடிக்கை களுக்கு ஆதரவு அளிப்ப தன் மூலம் இலங்கை அரசை திருப்திப்படுத்த முடி யும் என நம்புகிறது. ஆனால் சிங்கள ஆட்சி யாளர்களும் பேரினவாத சக்திகளும் இந்தியாவுக்கு எதிரான மனப்போக்கை யும் சீனா வுக்கு ஆதரவான ஒரு நிலைப் பாட்டை யும் உரு வாக்கு வதில் தீவிர அக்கறை காட்டி வருகின் றனர்.

**ஞாயிறு காரம்**

இப்படியான நிலையில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டா லும் இலங்கையை இந்தியாவின் உண்மையான நண்பனாகத் தக்க வைக்க முடியாது. இதை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் எப்போது ஏற்றுக் கொள்கின்றனரோ அன்று தான் இலங்கையின் பக்கம் சார்வதை அவர்களால் நிறுத்த முடியும்.

தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தி இலங்கை அரசை வலுப்படுத்தும் ராஜ தந்திரம் இந்திய அரசுக்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது கடந்த கால வரலாறு. எப்படியிருப் பினும் இந்தியாவின் தோல்வியடைந்த ராஜதந்திரம் மேலும் மேலும் தென்னா சியப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை மேலோங்கவே வைக் கும். எதிர்காலத்தில் அதற்கான மைய மாக இலங்கை விளங்கப் போவதும் தவிர்க்க முடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்க கேட்கலாம்

கேள்விகளை 361, கஸ்தூரியார் வீதி, முகவரிக்கு அனுப்புங்கள்

? வடக்கு மாகாண சபையில் நிர்வாகம் இத்தனை சீரழிந்திருக்கிறதே, என்ன காரணம்?

*விக்னேஷ், நயினாதீவு*

"ஒரு நாள் முல்லா கழுதையில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார். கண்டவர்கள் எல்லோரும் முல்லா இவ்வளவு வேகமாகப் போகாதீர்கள் என்று சொன்னார்கள். முல்லா அதைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. மறுநாள் முல்லாவை நேரில் கண்டவர்கள் அத்தனை வேகமாக அவர் போனதற்காகக் கடிந்து கொண்டார்கள். முல்லாவுக்கு இத்தனை வேகம் ஆகாது என்று அறிவுரை கூறினார்கள். அதற்கு முல்லா சொன்னார். நான் ஒரு கழுதை வாங்கினேன். அது முன்னே போனாலும் பின்னே போனாலும் நான் சொல்வதைக் கேட்பதில்லை. வேகமாகப் போகாதே என்றாலும் அது கேட்பதில்லை. இப்போது நான் அதற்கு எதுவும் சொல்வதில்லை. அதன் போக்கிலேயே விட்டு விட்டேன். அதனால் நீங்கள் எனக்குக் கூறிய புத்திமதிகளை அந்தக் கழுதைக்குத்தான் கூறவேண்டும். அந்தக் கழுதை மாதிரித்தான் வட மாகாண சபையும்."
இந்தக் கதையை நான் கூறவில்லை. மாகாண சபையில் உயர் பதவியில் இருக்கும் அதிகாரி ஒருவரே கூறினார்.

? பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடுக்கு பிரிட்டிஷ் மகாராணி வராமல் ஒதுங்கிக் கொண்டது இலங்கைக்குப் பெரிய அடிதானே?

பொதுநலவாய நாடுகள் அமைப்பு என்பது ஒரு வகையில் நவீன அடிமைத்தனத்தின் வடிவம். 2ஆம் உலகப் போரின் பின்னர் தனது பிடியின் கீழ் இருந்த நாடுகள் அனைத்துக்கும் பிரிட்டன் சுதந்திரம் கொடுத்தது. ஆனால், சூரியன் மறையாமல் ஆட்சி செய்த தனது பெருமையை இழக்க விரும்பாததால் தனது அடிமைகளாக இருந்த நாடுகள் அனைத்தையும் சேர்த்து பொதுநலவாய நாடுகள் என்று ஆக்கிக் கொண்டது. அதனால்தான் இப்போதும் அந்த அமைப்பை பிரிட்டனின் முடிக்குரியவர் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைக்கிறார். அவர்கள் ஆண்டவர்கள் நாங்கள் அடிமைகள் என்று இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பறைசாற்றுவதைத் தவிர அந்த அமைப்பு உருப்படியாகச் செய்ததென்று இதுவரை எதுவும் இல்லை. எனவே அந்த அமைப்பிலுள்ள நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை மகாராணி தொடக்கி வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதே நவீன அடிமைத் தனத்தின் வெளிப்பாடுதான். இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மதிக்கப்படுவதில்லை என்பதற்காகத்தான் மகாராணி வரவில்லையாக இருந்தால், தான் வளர்த்த அடிமை தன் சொல்லைக் கேட்கவில்லை என்ற அவரது கோபமாகத்தான் அதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

? கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி மஹிந்த ராஜபக்ஷவின் காலில் விழுந்திருக்கிறாரே?

கால் தடுக்கித்தான் அவர் விழுந்தவராம். காலில் விழும் தமிழகக் கலாசாரம் இங்கும் வந்து விட்டதோ என்று நீங்கள் ஒன்றும் பயப்பட்டுவிடாதீர்கள். அதற்கு இன்னும் கொஞ்சம் காலம் இருக்கிறது.

? படித்து ரசித்த பகிடி ஏதாவது?

ஓர் ஆணும் பெண்ணும் மின்தூக்கியில் (எலிவேட்டர்) சந்தித்துக் கொண்டார்கள். "எங்கே போகிறீர்கள்?" என்று அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்டான் ஆண். "குருதி கொடுக்கப் போகிறேன்" என்றாள் அந்தப் பெண். அவளது செயலைப் பாராட்டிய அவன் மெல்லக் கேட்டான், "எவ்வளவு தருவார்கள்?" என்று. பெண்ணோ சாதாரணமாக "2,000 ரூபா" என்றாள். அதைக் கேட்டுச் சிலாகித்த ஆண், "நான் எனது உயிரணுவைத் தானம் செய்யப் போய்க் கொண்டிருக்கிறேன். அங்கு எனக்கு 10,000 ரூபாய் தருவார்கள்" என்றான். அதைக் கேட்ட அந்தப் பெண் சிறிது நேரத்தில் கோபத்துடன் மின்தூக்கியிலிருந்து வெளியேறினாள். அடுத்த நாளும் அந்த இருவரும் மின்தூக்கியில் சந்தித்துக் கொண்டார்கள். "ஆச்சரியமான சந்திப்பு மீண்டும்" என்று கூறிய அந்த ஆண் "இன்று எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றான். அலட்டிக்கொள்ளாமல் "உயிரணு வங்கியிலிருந்து" என்றாள் அந்தப் பெண்.





19 வருடக் காத்திருப்புக்குப் பின்னர் கிடைத்த உன்னத தருணம்.

# தாயை மீட்ட தனயன்

ஆங்கில எழுத்தாளரும் சமூக விமர்சகருமான சார்ள்ஸ் டிக்கின்ஸின் நாவலில் வரும் கதை போல் இருக்கிறது அந்தச் சம்பவம்.
ஆடைத் தொழிற்சாலையில் இரவு பகல் பாராமல் ஓடாய் உழைத்துப் பணம் சேர்த்த இந்தியப் பையன் ஒருத்தன் தன்னைப் பெற்ற தாயை சிறையில் இருந்து பிணை எடுத்திருக்கின்றான்.
தாயைப் பிணை எடுக்க இந்திய ரூபாய் 5,000 தேவைப்பட்டது (இலங்கை ரூபாய் சுமார் 12,500). அந்தக் காசைச் சேர்க்க கங்கையா குமாரி கடந்த ஒரு மாதமாக இரவு பகல் என்று இடைவிடாது - ஓய்வேயில்லாமல் - உழைத்திருக்கின்றான்.

### தாய்க்கு தண்டனை

அவனது தாயார் விஜயா குமாரி (48) 1993இல் சிறைக்குச் சென்ற போது கங்கையாவை மூன்று மாதக் கர்ப்பமாக வயிற்றில் தாங்கியிருந்தாள். கங்கையாவின் வயது இன்று 19.
அலிகார் நகரில் இருக்கும் அவர்களது வீட்டு அயலவரைக் கொலை செய்ததாள் என விஜயா மீது குற்றஞ் சாட்டப்பட்டது. அதற்காக நீதிமன்றம் ஆயுள் தண்டனையும் விதித்தது. ஆனால் அவளது மேல் முறையீடு தீர்ப்பளிக்கப்படாமல் இருப்பதால் 1994இல் அவளுக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்.
ஆனாலும் அவளால் வெளியே வர முடியவில்லை. பிணைத்தொகையை நீதிமன்றம் கேட்ட 5,000 ரூபா அவளிடம் இல்லை. உறவுகள் யாரும் உதவ முன்வரவில்லை.

### அன்புக்கு ஏங்கிய தனயன்

எனவே உத்தரபிரதேஷ் மாநிலத்தின் லக்னோ நகரில் உள்ள நாரி நிகேட்டன் சிறையில் விஜயாவும் கங்கையாவும் வாடவேண்டியதாயிற்று. யுவேனில் விளக்கமறியல் இல்லத்துக்கு 6 வயதில் அனுப்பப்படும் வரையில் கங்கையாவுக்கு நாரி நிகேட்டன்தான் வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தது.



தாயைப் பிரிந்த போது பிஞ்சு கங்கையா.

சிறையில் தாயிடம் இருந்து பிரிக்கப்பட்டதும் கங்கையா சோர்ந்து போனான். அம்மாவைப் பிரிந்ததும் தனக்கு யாருமே இல்லாமல் போனார்கள் என்று வேதனைப்பட்டான். தாயைப் பிரிந்திருந்த வேதனை அவளுடன் மீண்டும் சேர வேண்டும் என்ற மன வைராக்கியத்தை உருவாக்கியது. கடந்த வருடம்தான் அவன் விளக்க மறியல் இல்லத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டான்.
வெளியே வந்ததும் அவசர அவசரமாக ஒரு வேலை தேடிக் கொண்டான் கங்கையா. தாயைப் பிணை எடுக்க வேண்டும் என்பதுதான் அதற்கான ஒரேயொரு காரணம்.
வேலைக்குச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை முதலாளி ஏ.ஆர்.ரஹ்மானின் கையைக் காலைப் பிடித்து, இரவு பகல் என இரு நேரங்களிலும் வேலை செய்ய அனுமதி பெற்றுக் கொண்டான். அவன் மீது இரக்கப்பட்ட முதலாளியும் சம்மதித்தார்.

### 19 ஆண்டுத் தவம்

அம்மாவைப் பிணை எடுப்பதற்கான 5,000 ரூபா மட்டுமே கங்கையாவின் உயிர் மூச்சாக நாள் முழுவதும் மாறிப் போனது. இறுதியில் சிறையில் அடைக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்து, அகதாபாத் நீதிமன்றத்தில் தனது தாயை பிணையில் விடுவிப்பதற்கான பணத்தைச் செலுத்தினான் கங்கையா. அன்றுதான் மீண்டும் முதல் முறையாக அவனது தாய் வெளி உலகத்தைப் பார்த்தாள்.
"என் தாயின் விடுதலைக்காக நான் மிக மிகக் கடுமையாக உழைத்தேன்" என்று சந்தோஷமாகக் கத்தும் கங்கையா, "இப்போது மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்கிறான்.

**ரேணுபிரேம்**



இரண்டாம் உலகப் போர் நடந்தபோது தென்பசுபிக் கடலில் இருந்த சூக் என்ற கடற்பாதை ஜப்பானிய கடற்படையின் முக்கிய தளமாக இருந்தது. 1944இல் அமெரிக்க இந்தத் தளம் மீது நடத்திய மூன்று நாள் திடீர் தாக்குதலில் அங்கிருந்த 60 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இன்று உலகின் மிகப் பெரிய கடலடி போர்க் கப்பல் புதைகுழியாக இது காணப்படுகின்றது. இப்போது அது ஆழ்கடல் சுற்றுலா மையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கோதை



சென்ற வாரத் தொடர்.........

பெண் குழந்தை பெரியவர்களிடம் தன் கருத்தைச் சொல்ல முனையும்போது, அல்லது அதிக குறும்புத்தனம் செய்பவளாக இருக்கும்போது, ''பெண் பிள்ளையாக அடக்க ஒடுக்காமாக இரு'' என்று அவளை அடக்குவதும், பாடசாலையில் சக மாணவனிடம் இருந்து அடி வாங்கி அழுது கொண்டு வரும் பையனைப் பார்த்து, ''நீ ஆண்பிள்ளையா? இப்படி அடிவாங்கிக் கொண்டு வாறாயே! திருப்பி அடிக்க வேண்டியது தானே!'' என உசுப்பி விடும் பெற்றோரும் இருக்கிறார்கள். இன்னும் ஓர் உதாரணம்; நினைத்துப் பார்க்கும்போது கொஞ்சம் வினோதமாகக் கூடத் தோன்றும். ஒரு குழந்தை தவறிக் கீழே விழும் போது பலர் அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்த ஓடிப்போய்.. ''இந்த நிலமோ பிள்ளையை அடிச்சது? அடி...அடி... இனி பிள்ளைக்கு அடிப்பியா? அடிப்பியா?'' என்று நிலத்துக்கு உதைந்து அடித்ததும் பிள்ளை சிரிக்கும். எமக்குத் தெரியாமலே பிள்ளைக்குள் வன்முறையை வளர்க்கிறோம். இந்தப் பிள்ளை வளர்ந்து வரும்போது தன் சகோதரர்களோடு சண்டை பிடிம்போது தன் சகோதரன் தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும். இப்படியே அடுத்தவர் துன்பத்தைக் கண்டு சிரிக்கும் சமுதாயத்தை நாம் உருவாக்கி விடுகின்றோம். இதற்குப் பிறகு இயல்பிலேயே மென்மையாக இருக்கும் பெண்களைப்பற்றிச் சொல்லவா வேண்டும்...

சரி இந்த நிலையில் இருந்து எப்படி மீள்வது?

இதற்கான பல முயற்சிகள் நடந்து கொண்டிருந்தாலும் சில நல்ல முன்னுதாரணங் களாகத் திகழ்ந்தாலும், பலர் தவறான வழிகாட்டிகளாகவே இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. பெண்களின் கல்வி முன்னேற்றம், தொழில் செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்கல், கருத்துச் சுதந்திரம், சுய விருப்பு வெறுப்பு போன்ற பல விடயங்களிலே இந்தப் பெண்ணியவாதங்கள் முனைப்புறுத்தப்படுகின்றன.

இவற்றோடு கல்வி கற்கும் சுதந்திரம், வேலை செய்யும் சுதந்திரம்,கருத்துச் சுதந்திரம் என்று படிப்படியாக பெண் சுதந்திரம் வழங்கப்பட்டு சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டே வருகின்றது.

ஆனாலும் இதையும் மீறி சில சந்தர்ப்பங்களில் முட்டாள் தனமான பெண்ணியவாதங்கள் மனதை நெருடுகின்றனவாக இருக்கின்றன. பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன், மண்ணுக்குள்ளே சில மூடர் அந்த மாதர் அறிவைக் கெடுத்தார் என்று பாடிய பாரதிக்கு, பிற்காலத் தில் பெண்ணியம் என்ற பெயரிலும் கூட பலர் மாதர் அறிவைக் கெடுப்பார்கள் என்று தெரியாதிருந்திருக்குமோ என்னவோ.

(தொடரும்)

# பேசுவோமா பெண்ணியம்....



நோய்வாய்பட்டு கிட்டத்தட்ட சாவின் வாயிலுக்கே சென்றுவிட்ட நண்பரைப் பார்க்க ஜம்புலிங்கம் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். நண்பரின் அருகில் போய் நின்று அவரைப் பரிதாபத்தோடு பார்த்து ஆறுதல் சொன்னார் ஜம்புலிங்கம். அது வரையும் நலமாக இருந்த நண்பரின் உடல் நிலை திடீரென மோசமடைந்தது. ஜம்புலிங்கத் துக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. '' என்ன செய்கிறது நண்பரே'' என்று கேட்டார். பேச முடியாத நிலையில் இருந்த நண்பர் சைகை மூலம் ஒரு பேப்பரும், பேனாவும் வேண்டுமென கேட்டார். உடனே அதனை ஜம்பு கொடுத்தார். அதில் நண்பர் அவசரமாக ஏதோ எழுதி கொண்டி ருக்கும் போதே அவரின் உயிர் பிரிந்தது. சாகும் தறுவாயில் தன்னுடைய குடும்பத்துக்கு ஏதாவது முக்கியமான விடயத்தை அந்தப் பேப்பரில் எழுதியிருக்கக் கூடும் என ஜம்புலிங்கம் நினைத்தார். அதைத் தான் படிக்கக்கூடாது என நினைத்து அதை

## நண்பனின் பேப்பர்

மடித்து தனது சட்டைபைக்குள் வைத்துக் கொண்டார். நண்பரின் இறுதிச் சடங்குகள் எல்லாம் முடிந்தது. மறுநாள் ஜம்புலிங்கம் நண்பரின் வீட்டுக்கு போனார். அங்கு துண்டு பேப்பர் விஷயத்தை நண்பரின் மனைவியிடம் சொல்லி அதைப் படித்துப் பார்க்க சொன்னார். பேப்பரை பிரித்து படித்த நண்பரின் மனைவி மயக்கம் போட்டு கீழேயே விழுந்து விட்டார், அப்பொழுது தான் ஜம்புலிங்கம் அந்த பேப்பரில்என்னஎழுதியிருக்கிறது என்று பார்த்தார். அதில் ''டேய்! ஜம்பு நீ என் ஒக்சிசன் குழாய் மீது நின்றுக் கொண்டிருக்கிறாய்'' என்று எழுதியிருந்தது.

ஜம்புவின் தடாலடி 1

# நீ மாறு நிலை மாறும் தானாய்

சு.சிவாஜினி, சுன்னாகம்.



நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த வாழ்க்கையில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்களும், ஏமாற்றங்களும், தோல்விகளும்தான் எத்தனையோ? அத்தனையும் தான் எம் வாழ்வில் கிடைக்கப் பெற்று விட்ட மாற்ற முடியாத விதி தந்த சொத்துக்கள் என்று இன்று எத்தனையோ மனித மனங்கள் நினைத்து அருமையான வாழ்நாள் களையெல்லாம் நரகமாக்கி தன்னைச் சார்ந்த இனத்தையும் துன்ப மயமான நிலைக்கு இட்டுச் செல்வது உண்மையில் தாங்கொண்ணா துன்பமே.

எமது வாழ்வில் எதுவுமே நிரந்தரமில்லை, அப்படி இருக்கையில் எதற்காக இழப்புக்களை நினைத்து இடிந்து போக வேண்டும்? துன்பங்களைக் கண்டு துவள வேண்டும்? ஏமாற்றங்களைக் கண்டு ஏங்க வேண்டும்? தோல்விகளைக் கண்டு நொந்து நொடிய வேண்டும்? இவையனைத்தும் எம் வாழ்வுக்கு கிடைக்காது போனால் நாம் பண்பட்டுப் போவதற்கு வழிகள் ஏதும் கிடைக்குமா?

நாம் அனைத்து வகையான வலிகளாலும் மூழ்கி மூச்சடக்குகின்றோம் என்றால் நிச்சயமாக அந்த வலி முத்தெடுப்பதற்கானதாகவே இருக்கும். ஒன்றையும் இழக்காமல் எதுவுமே கிடைப்பதில்லை. படிப்படியான துயரங்கள் நிச்சயம் உருப்படியான வெற்றியைத் தரும். இதற்கு நாம் வைராக்கியம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மலையே இடிந்து எம் தலை மேல் விழுகின்றபோதும் தன் நம்பிக்கை எம்மிடம் வலுப்பெற்று இருக்குமானால் அந்த மலை கூட எம் சக்தியால் நொறுக்கி தூள் தூளாக்கும். இப்படியான மனித மனங்களால் தான் விதியை வெல்ல முடியும்.

இன்று எமது சமூகத்தில் எமது முயற்சிகளுக்கு எத்தனையோ தடைகள், எதிர்ப்புகள், அனைத்தும் எம்மை சோர்ந்து போகச் செய்கின்றதே. நம்மால் நினைத்ததை சாதிக்க முடியவில்லை என்று வெம்பி வெதும்பும் எமது சகோதரிகளே! எமது நிலையை நாமேதான் மாற்ற வேண்டும். இன்று எத்தனை எத்தனையோ துறைகளில் பெண் இனம் சாதனை படைத்து, தமது பெருமையை உலகெங்கும் பறைசாற்றி வருகையில், குறிப்பிட்ட சில பெண் மணிகள் எதிலுமே பிடிப்பற்று வீணாக தமது பொன்னான வாழ்வை மண்ணாக்கி வாழ்வது நியாயமா?

இன்றைய காலம் உள்ளங்கையில் உலகை கொண்டு வந்து விட்ட விஞ்ஞான யுகம், இப் படி இருக்கையில் எம் வளர்ச்சிக்கும், சாதனைக்கும் எந்த தடைகள் வரும். வருகின்ற தடை களும் எமக்கு மனத்திடம் இருந்தால் தவிடு பொடியாகும்.

ஒரு பெண்ணால் எவ்வளவோ சாதிக்க முடியும். நாம் பிறந்த தன் அர்த்தம் வெறுமனே அலங்காரப் பாவைகளாகவும் சமையல் இயந்திரமாகவும் வாழ்வதற்கல்ல. வீணான நாகரிக மோகத்தில் திளைத்து எமது பண்பாடுகளையும் குழி தோண்டி புதைத்து, குடும்பத்தையும் நடு வீதிக்கு கொண்டு வரும் இழி செயல் தான் ஏனோ?

இவை அனைத்தும் தான் நம் உயர்வின் நிலைகளா? இன்று பொழுது போக்குக்கு கொடுக்கின்ற நேரங்கள் பெரும்பாலும் [வீண் அரட் டையடிப்பது கைத்தொலைபேசியில்] தொடர் நாடகம் பார்ப்பதும், இவற்றோடு மட்டுமா. தாய்மை என்ற நிலை மறந்ததும், தாரம் என்ற பண்பு நெறி தவறியும் வழி மாறி தடம் மாறும். எமது மங்கையரே கொஞ்சம் நில்லுங்கள்!

உன் தடம் பற்றி வாழப்போகும் தலை முறைக்கு நீ அமைக்கும் வழி முறைகள் இவை தானா? உன்னைப் பின்பற்றும் உன் பிள்ளை, தங்கை, ஏன் சமூக உறவுகள் அனைவரும் சீர் கெட்டுப் போக நீயே விதை போடலாமா? உயிரை உருவாக்கும் உத்தமி நீ, உன் புனிதம் புவி தனை மேம்படுத்த வேண்டும். உன் நிலையை நீ மாற்றாது போனால் நிலை மாறுமா?

துன்பங்களும் துடைத்து புதிய சகாப்தத்தை உருவாக்கும் உலக மங்கை நீயே. அனைத்தையும் தூக்கி ஏறி மனம் வைத்து முயன்று பார். உன் வாழ்வில் புதிய திருப்பு முனைகள் உருவாகும். உருக்குலைந்த வாழ்வும் பண்பு நெறி தவிறிய வாழ்வும் எம் இனத்தின் ஆணி வேரையே அறுத்தெறியும் கறையான் போன்றது. அதற்கு எங்கும் மாத்திரை இல்லை. அது நீ மனம் வைத்தால் மட்டுமே மாறும். முயன்றிடு முடிந்திடும். நீ மாறு நிலை மாறும் தானாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை தட்டு கடவுளை காணலாம்

ஒரு குருவிடம் பல சீடர்கள் இருந்தனர். குரு சீடர்களுக்கு நற்போதனைகள் செய்வதுடன் அவர்களது சந்தேகங்களுக்கு விளக்கங்களும் கூறுவார். ஒரு நாள், சீடர்களில் ஒருவன், குருவே! பக்தியில் முழுமையாக ஈடுபட என்ன செய்ய வேண்டும்? ஏகாந்த சித்தி ஏற்பட வேண்டுமானால் அதற்கு என்ன வழியைக் கையாள வேண்டும்? என்று கேட்டான்.

அவனைப் பார்த்து மெல்லச் சிரித்த குரு, இறைவனிடம் பக்தி செலுத்த பல வழிகள் உள்ளன. அவரவர் மனப்பக்குவத்துக்கு ஏற்ப அந்தந்த வழி களில் முயன்றால் ஏகாந்த சித்தி ஏற்படும். மௌனமாக இறைவனை வழிபடுவது ஒரு முறை. ஆனால், மனம் இறைவனிடம் ஒன்றாமல் சிதறுமானால், அதை அடக்க இன்னொரு வழி இருக்கிறது. அது கைகளைத் தட்டியபடி இறைவன் பாடல்களைப் பாடுவது. ஒரு மரத்தின் அடியிலிருந்து கை தட்டினால் அம்மரக்கிளைகளில் இருக்கும் பறவைகள் நாலா பக்கங்களிலும் சிறகடித்துப் பறந்து போகும். அதைப்போல இறைவனின் லீலைகளையும் கருணையையும் பாடலாக பாடி நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு கை தட்டினால் மனத்திலுள்ள தீய சிந்தனைகளெல்லாம் அகன்றோடிவிடும். கைகளால் தாளம் போட்டுக் கொண்டே இறை நாம சங்கீர்த்தனம் செய். அப்போது உனக்கு ஏகாந்த சித்தி உண்டாகும் என்று விளக்கினார்.







நடு அறையில் கடிகாரம் பதினொரு முறை அடித்தது. இரவு வானம் நட்சத்திரங்களுடன் மிக அழகாக காட்சி அளித்தது. இன்றும் அழகானவற்றை இரசிக்கும் போது கூடவே வாணியின் நினைப்பும் எழுவதை நிஷாந்தனால் தடுக்க முடியவில்லை.

# காதலாகி...

● குந்தவி

இரவு 10 மணி. நிஷாந்தன், வீட்டின் முன் விறாந்தையிலுள்ள கதிரையில் இருந்து வெளியே வானத்தை அண்ணாந்து பார்த்தான். சந்திரன் சிறு கீற்றாக தெரிந்தான். இராக் கோழியின் சத்தமும் இரவின் நிசப்தமும் மனதை இலோசாக்கியது. சோளகக் காற்று மிதமாக வீசிய போது பக்கத்து வீட்டு வேப்பம் பூவின் மணம் சன்னமாக நாசியைத் தாக்கியது. நிஷாந்தனுக்கு வேப்பம் பூவின் வாசம் மிகவும் பிடித்தமானது. மூச்சினை ஆழமாக உள்ளெடுத்து பூவின் வாசத்தினை நுகர்ந்தான். மனம் நிர்மலமாக இருந்தது. இரவு மிகவும் அழகாக இருந்தது. அழகு என்று நினைக்கும் போது கூடவே வாணியின் நினைவு அழையா விருந்தாளியாக ஞாபகம் வந்தது. மனதின் மூலையில் மிக லேசாக 'முணுக்' என்றுவலி எழுந்தது. இவ்வாறு ஏற்படுவது இன்று நேற்றல்ல கடந்த ஒன்பது மாதங்களாக ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் பெரிய வலியாகத் தோன்றியது இப்போது சற்றுக் குறைந்துள்ளது. நிஷாந்தனின் மனம் சந்தோசமாக உள்ளபோதெல்லாம். வாணியின் நினைவு கூடவே வரும். வாணியை எண்ணினாலே அவளினால் ஏற்பட்ட ஏமாற்றம் வேதனை வலியாகத் தெரிகின்றது. இது நிஷாந்தனுக்கு விளங்காமல் இல்லை. ஆனால் பாழும் மனம்தான் ஏற்குது இல்லையே. நீண்ட பெரும்மூச் சொன்று நாடியில் இருந்து வெளிக்கிளம்பியது. நிஷாந்தனுக்கு மனம் பின்னோக்கி மூன்றாண்டு காலத்துக்கு முந்தைய நினைவுகளுக்குத் தாவியது.

வாணி குறிப்பிடும் படியான அழகு இல்லாவிடினும் பெண்மைக்குரிய இலட்சணங்கள் பொருந்தியவள். அவள் பருவமடையும் முன்னரே அவர்களது உறவினர் முறையான சீலன் என்பவனால் கடத்திச் செல்லப்பட்டு பின்பு பெற்றோரால் தேடிக் கண்டு பிடித்து வீட்டிற்கு கூட்டி வந்தார்கள். அந்த வயதில் வாணிக்கு 'காதல்','வாழ்க்கை' என்பதற்கான அர்த்தங்களே தெரியாமல் இருந்தது. இன்று அவள் ஒரு பல்கலைக்கழக மாணவி. விஞ்ஞான பீடத்தில் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கிறாள்.

நிஷாந்தன் தான் ஊர்க் கோயில் மஞ்சத் திருவிழாவின் போது வாணியிடம் தனது காதலை முதலில் தெரிவித்தவன். வாணிக்கு உடனடியாக அதிர்ச்சியாக இருந்த போதும் அவள் நிஷாந்தனை நிராகரிக்கவில்லை. ஆசையுடன் ஏற்றுக் கொண்டாள்.

காலம் யாருக்காகவும் காத்துக் கொண்டு இருப்பது இல்லையே? அது தன்பாட்டில் ஓடிக்கொண்டு இருந்தது. நிஷாந்தன் வாணி காதல் மெல்ல மெல்ல கிராமத்துக்கு தெரிய வந்தது. பின்பு பெற்றோர்களுக்கு எட்டியது. நிஷாந்தனின் பெற்றோர்க்கு வாணியை திருமணம் செய்வது அதுவும் காதல் திருமணம் செய்வது அவ்வளவு உடன்பாடில்லை. தாம் பேசி சீதனம் கேட்டு ஆடம்பரமாக திருமணம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள் போல. நிஷாந்தன் அவர்களிடம் கெஞ்சி, மன்றாடி அவர்களை சம்மதிக்க வைத்தான். வாணியின் பெற்றோரும் தாம் வாணிக்கு சீதனமாக 10 லட்சம் உடனடியாகக் தருவதாகக் கூறவும் சுமுகமாக இரு வழியிலும் அனுமதி கிடைத்தது. பதிவுத் திருமணத்துக்கு முதலில் நாள் குறித்து அழகிய அழைப்பிதழ் அடித்து உறவினர்களை அழைத்தார்கள். மறுநாள் திருமணப் பதிவு.

மறுநாள் வாணியை காணவில்லை. தகப்பனார் வாடிய முகத்துடன் வந்து சொன்னார். நிஷாந்தனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. மெல்ல மெல்ல சூழ்நிலை தெரிந்ததுடன் இடி விழுந்த மாதிரி இருந்தது. ஆயிரம் வண்டுகள் சேர்ந்து மண்டைக்குள் குடைவது போன்று வேதனையாக இருந்தது. காட்டுத்தீ போன்று விடயம் கிராமத்துக்கு பரவலாயிற்று. அதே நேரம் பின் வீட்டிலுள்ள நாதனையும் காணவில்லை என்று அவனையும் தேடித்திரிந்தனர். மாலை நேரம் வாணி ஓடியது நாதனுடன் தான் என்று தெரிய வந்தது. வாணியால் காதலிக்கப்பட்டு திருமணமும் நிச்சயமான பின்பு இன்னொருவனுடன் ஓடியது நிஷாந்தனுக்கு அதிர்ச்சியாகவும், அவமானமாகவும் இருந்தது. அதனை மறக்கடிப்பதற்காக குடிக்கப் பழகினான். ஒரு கட்டத்தில் மொடாக் குடிகாரனாகினான். குடிக்கப் பழகிய நிஷாந்தனுக்கு சிறுவயதில் வாணியை கடத்திய சீலன் நண்பன் ஆனான். இருவரும் காதல் தோல்வியை குடி போதையில் மறக்க முற்பட்டபோது ,சீலன் குடித்துக் கொண்டிருந்த போது இரத்த வாந்தி எடுத்து இறந்துவிட்டான். இது நடந்து மூன்று மாதங்களாகின்றன.

சீலனின் இறப்புத் தான், நிஷாந்தனுக்கு தனது சாவினைப் பற்றிய பயத்தை தந்தது. குடிக்க இருந்தால் வாணி மாறி சீலன் ஞாபகத்துக்கு வந்தான். குடிக்காது விட்ட போது காதுக்குள் இரைச்சலாக இருந்தது. நித்திரை வராமல் இருந்தது, பயமாக இருந்தது. இது பற்றி பெற்றோரிடம் முறையிட்ட போது தகப்பன் புகழ் பெற்ற இதய சத்திர சிகிச்சை நிபுணரிடம் அழைத்துச் சென்றார். நிஷாந்தன் அவரிடம் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களை எடுத்துக் கூறினான். தனக்கு பயமாக உள்ள போது நெஞ்சு பாரமாக உள்ளதை நெஞ்சு நோவதை கூறினான். அவரும் பொறுமையாக கேட்டுப் பல பரிசோதனைகளைச் செய்தார்.

இறுதியில் நிஷாந்தனை பிரபல உளவியலாளரிடம் பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார். நிஷாந்தனும் அவரிடம் இரு மாதங்கள் சிகிச்சை பெற்றான். அவர் கூறிய ஆலோசனைகளை பிரயத்தனத்துடன் செய்து வந்தான். அதனால் தான் இன்று பழைய நிஷாந்தனாக ஓரளவுக்காவது மாற்றியுள்ளது என்று எண்ணத் தோன்றுகின்றது.

மிகவும் நீண்ட பெருமூச்சொன்று நிஷாந்தனுக்கு மீண்டும் எழுந்தது. அனுபவங்கள் எம்மை எவ்வளவு தூரம் புடம் போடச் செய்கின்றன என்று எண்ணினான். நடு அறையில் கடிகாரம் பதினொரு முறை அடித்தது. இரவு வானம் நட்சத்திரங்களுடன் மிக அழகாக காட்சி அளித்தது. இன்றும் அழகானவற்றை இரசிக்கும் போது கூடவே வாணியின் நினைப்பும் எழுவதை நிஷாந்தனால் தடுக்க முடியவில்லை. கூடவே அவளினால் ஏற்பட்ட வலியும் 'முணுக்' என்று மிக மெல்லிதாக எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை




■ அழகிய பாண்டியன்

02

### அதி புத்திசாலி

அமெரிக்காவின் சியாட்டல் நகரில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த வில்லியம் கேட்ஸுக்கும், ஆசிரியையாகப் பணிபுரிந்த மேரி கேட்ஸுக்கும், 1955 ஒக்டோபர் 28 ஆம் திகதி பிறந்தவர்தான் பில்கேட்ஸ்.

இவர் பிறந்த போது பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் ''வில்லியம் ஹென்றி கேட்ஸ் III' குழந்தையைப் பார்க்க வந்த ஓர் உறவுக்காரப் பெண்மணி, ''குழந்தையைக் காட்டிலும் அதன் பெயர் நீளமாக இருக்கிறது'' என்று கிண்டலடித்தார்.

அதன் பிறகு பெற்றோர் ''பில்கேட்ஸ்'' என்று செல்லமாக அழைக்க அந்தப் பெயரே பிற்காலத்தில் உலகமே உச்சரிக்கும் பெயராக அமைந்து விட்டது.

பில்கேட்ஸ் பிறந்த பொழுது குடும்பத்தில் வசதி வாய்ப்புகளுக்கு எந்த வித குறையும் இல்லை. பில்கேட்ஸின் தந்தை ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞராக இருந்தாலும், அவரது தாயின் ஆசிரியப் பணியும், அந்தக் குடும்பத்தை ஒரு மேட்டுக்குடி குடும்பமாக நிலை நிறுத்தியது.

மூன்று வயது குழந்தையாகப் பில்கேட்ஸ் வளர்ந்து கொண்டிருந்த போதே அவரிடம் புத்திசாலித்தனம், பிடிவாதம் என்ற இரு குணங்களும் வளரத் தொடங்கின!

மகனின் புத்திசாலித்தனத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த பெற்றோரால் அவரது பிடிவாதத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைய முடியவில்லை.

எதையும் ஒரு முறை சொன்னாலே புரிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டிருந்த பில்கேட்ஸ்'' பெற்றோருக்கு மட்டும் கீழ்ப்படிவதில்லை'' என்ற பிடிவாதத்துடன் இருந்தார். அவர்கள் எதைச் சொன்னாலும் அதற்கு ஏறுமாறாக எதையாவது செய்வதைத் தான் தனது வழக்கமாக்கி இருந்தார் பில்கேட்ஸ்.

நான்கு வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்ட பில்கேட்ஸுக்குப் படிப்பில் ஆர்வமும் இல்லை; அக்கறையும் இல்லை; வீட்டில் பெற்றோரிடம் எப்போதும் எதைப் பற்றியாவது கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைப்பது பில்கேட்ஸின் வழக்கம்.

வீட்டில் புத்திசாலியாகத் திகழும் பில்கேட்ஸ், பள்ளியில் மட்டும் பின்தங்கிய மாணவனாக இருப்பது ஏன்? இந்தக் கேள்விக்கு விடை தெரியாமல் பெற்றோர் குழம்பினார்கள். இதற்குத் தீர்வு காண முடியாமல் திகைத்தார்கள்!

> இவரது அறிவியல் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட ஆசிரியர், சிறுவர்களும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இருந்த அறிவியல் புத்தகங்கள் வாங்கிப் பரிசளித்தார்.

சமீப காலமாகப் பில்கேட்ஸ் தனது பெற்றோருக்கு மற்றோர் அதிர்ச்சியையும் கொடுத்தார். அது என்னவென்றால், அவர் மற்ற சராசரி குழந்தைகளைப் போல் விளையாட்டிலும் ஆர்வம் காட்டாமல், தன்னந்தனியே அமர்ந்து யோசனையில் ஆழ்ந்து விடுவதுதான்.

பெற்றோர்கள் அவரை நெருங்கி, ''இங்கே தனியாக நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டால், சற்றும் அலட்டிக் கொள்ளாமல் ''யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று பதில் சொல்ல ஆரம்பித்தார் கேட்ஸ்.

''இந்த வயதில் இவனுக்கென்ன யோசனை வேண்டிக் கிடக்கிறது? என்று குழம்பிய பெற்றோர் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ''பில்கேட்ஸை ஒரு நல்ல மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்'' என்பது தான் அந்த முடிவு.

பல நாள்கள் வரவழைத்துப் பில்கேட்ஸுடன் பேசிப் பார்த்த மனநல மருத்துவர், ஒரு வழியாகப் பில்கேட்ஸின் உள் உலகத்தைப் புரிந்து கொண்டு, அவருடைய பெற்றோரிடம் இப்படிச் சொன்னார்.

''உங்கள் பையன், சராசரி குழந்தைகளைக் காட்டிலும் அதி புத்திசாலியாக இருக்கிறான். அதனால் தான் மற்ற சராசரி குழந்தைகளுடன் அவனால் ஒத்துப் போக முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் நம்மைக் காட்டிலும் அதி தீவிரமாகவும், வேகமாகவும் சிந்திக்கிறான். அவனது வேகத்துக்கேற்ப 'இந்த உலகமும், மனிதர்களும் செயற்பட வில்லை' என்று நினைக்கிறான். அதனால் தான் மற்றவர்களோடு சேராமல் தனியாக அமர்ந்து யோசனையில் ஆழ்ந்து விடுகிறான். அவனை அவன் போக்கிலேயே விட்டு விடுங்கள்.''

மனநல மருத்துவரின் விளக்கம் பில்கேட்ஸின் பெற்றோருக்கு ஆனந்த அதிர்ச்சியாக அமைந்தது. அதே சமயம் மருத்துவரின் அறிவுரைப் படி, பில்கேட்ஸ் தனியாக அமர்ந்து யோசிக்கும் சமயங்களில் குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்களை அவரிடம் கொடுத்தார்கள்.

ஓரிரண்டு கதைகளை வாசித்த பிறகு பில்கேட்ஸுக்கு கதைப் புத்தகங்களின் மீது காதல் ஏற்பட்டது. பெற்றோர் வாங்கிக் கொடுக்கும் புத்தகங்களைப் படித்து முடித்து விட்டு, ''வேறு புத்தகங்கள் இல்லையா?'' எனக் கேட்கத் தொடங்கினார்.


கதைப் புத்தகங்களை வாசித்த அதே ஆர்வத்தோடு பள்ளிப் பாடங்களைப் படித்த பில்கேட்ஸுக்கு கணிதமும் அறிவியலும் கற்கண்டாக இனித்தன. மற்றப்பாடங்கள் வேப்பங்காயாக கசத்தன.

[illegible] ரீதியில் சென்று கொண்டிருந்த பில்கேட்ஸின் கல்விப் பயணத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது அந்த அறிவியல் கண்காட்சி. அறிவியல் புத்தகமும், அறிவியல் கண்காட்சியும் பில்கேட்ஸை ஒரு புதுமையான உலகத்துக்குக் கொண்டு சென்றன. இவரது அறிவியல் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட ஆசிரியர், சிறுவர்களும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இருந்த அறிவியல் புத்தகங்கள் வாங்கிப் பரிசளித்தார்.

அவற்றைப் படிக்கப் படிக்கப் பில்கேட்ஸுக்கு அறிவியல் மீது ஒரு போதையே ஏற்பட்டது. மற்றப் பாடங்கள் எல்லாம் சொன்னதையே திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க அறிவியல் மட்டும் புதிது புதிதான விடயங்களைச் சொல்லிக் கொடுத்தது. 'ஒரே துறையில் எவ்வளவு மாற்றங்களும், புதுமைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன' என்பதை அறிந்தபோது அறிவியலின் மீது அவருக்கு இருந்த ஆர்வம் பன்மடங்காகப் பெருகியது.

எதைப் படித்தாலும் அதை மனப்பாடம் செய்து விடும் அளவுக்கு அவரது நினைவாற்றல் அபரிமிதமாகப் பெருகி இருந்தது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமெனில், ஒருமுறை பர்டன் என்ற பாதிரியார், பைபிளில் வரும் இயேசுவின் மலைப் பிரசங்கத்தை மனப்பாடம் செய்து பாராமல் ஒப்புவிக்கும் மாணவருக்குப் பரிசளிக்கப் போவதாக அறிவித்தார்.

அதன்படி ஒரு குறிப்பிட்ட நாளில் பெரும்பாலான மாணவர்கள் சொல்ல முடியாமல் திக்கித் திணறிக் கொண்டிருக்க பில்கேட்ஸ் மட்டும் அருவி கொட்டுவதைப் போல் அந்த மலைப் பிரசங்கம் முழுவதையும் சொல்லி முடித்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார்.



## நான் ஏன் உயரம்...?

### ஜம்புவின் தடாலடி 2

முதன் முறையாக பாடசாலைக்குச் சென்று விட்டு திரும்பினான் ஜம்புலிங்கம். வந்தவுடனேயே தன் தந்தையிடம் அன்று பள்ளியில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான்.

''அப்பா இன்றைக்கு ஸ்கூலில் தமிழ் எழுத்துக்கள் பற்றி கிளாஸ் நடந்தது. அதில் நான் மட்டும்தான் எல்லா எழுத்துகளையும் சரியாகச் சொன்னேன். மற்ற பிள்ளைகள் யாருமே சரியாகச் சொல்லவில்லை. அது ஏனப்பா, நானும் உங்களைப் போல் புத்திசாலி என்பதாலா?'' என்று கேட்டான். அதற்கு அப்பா சொன்னார்,

''ஆம் மகனே, நீ என்னைவிடவும் புத்திசாலி. அதனால்தான் எல்லா எழுத்துகளையும் சரியாகச் சொல்லி இருக்கிறாய்.''

''அப்பா, பிறகு கணக்கு வகுப்பு நடந்தது. அதில் எல்லோரையும் 1-லிருந்து 20-வரைக்கும் சொல்ல சொன்னார்கள். ஆனால் எல்லோரும் 1 லிருந்து 10 வரைக்கும்தான் சொன்னார்கள், நான் மட்டும்தான் ஒழுங்கா 20 வரைக்கும் சொன்னேன்'' என்று ஜம்புலிங்கத்தின் விவரிப்பு நீண்டது.

அப்பா அவனைக் கட்டியணைத்து ''நீ கணிதத்தில மேதைதான்'' என்றார். சிறிது நேர யோசனைக்குப் பின்

''அப்பா! இன்று மெடிக்கல் செக்-அப் கூட நடந்தது. என்னுடன் படிக்கும் பிள்ளைகள் எல்லோரும் என்னை விட மிகவும் குட்டையாக இருந்தார்கள். ஆனா நான் மட்டும் அவர்களைவிட இரண்டு மடங்கு உயரமாக இருந்தேன். உங்களின் பிள்ளை என்பதாலா இத்தனை உயரமாக இருக்கிறேன்?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டான்.

அப்பா ஒரு பெருமூச்சோடு சொன்னார், ''இல்லையடா மகனே, உனக்கு 31 வயது ஆகிறது இல்லையா? அதனால்தான் நீ ஆறு வயதுப் பிள்ளையை விட உயரமாக இருக்கிறாய்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி




பணம்

பணமில்லாத, வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்குவது முடியாத காரியம். நமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றப் பணம் சேர்த்து வைத்துவிட்டுச் சென்றிருந்தார்கள் என்றால் அப்போது பிரச்சினையில்லை. வருமானமானது நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். அதே சமயம் ஏதேனும் கடன் இருந்தால் அதன் சுமை குறைந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது வாழ்க்கைத் திட்டத்தின் மையமாக இருக்க வேண்டும்.

## உங்களுக்கு எவ்வளவு பணம் தேவை?

இப்பொழுது இருப்பதைவிட இன்னும் கொஞ்சம் இருந்தால் பரவாயில்லை என்றுதான் எப்பொழுதும் நினைப்போம். நம்மில் பெரும்பாலானோர் மாத அடிப்படையில்தான் பணத்தை நிர்வகிப்போம். அந்த மாதச் செலவு போக மீதமானவற்றைச் சேமித்து வைப்போம்.

மேலும் நம்முடைய பல கனவுகளை நிறைவேற்ற நமக்குப் பணம் தேவை. உதாரணமாக விமானத்தில் பறக்கும் அனுபவத்தைப் பெறப் பணம் இல்லாமல் முடியாது. பணத்தைச் செலவழிக்கத் தூண்டும் பல விடயங்கள் உள்ளன. அனைத்தையும் செய்ய ஆசைப்பட்டால், அது கடைசியில் கஷ்டத்தில்தான் போய் முடியும். அதனால் நம்மால் எது இயலுமோ அதை மட்டுமே செய்ய வேண்டும். பின்வரும் அத்தியாயத்தில் நம்மைத் தூண்டும் பத்து விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## உங்களிடம் ஏன் எப்போதும் போதுமான பணம் இருக்காது என்பதற்கான 10 காரணங்கள்

**பொருள்கள் :** நீங்கள் என்னென்ன பொருள்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதை வைத்துத்தான் உலகம் உங்கள் வெற்றியை எடைபோடும். நீங்கள் வாங்க வேண்டிய பொருள்களுக்கு என்றும் குறைவில்லை. அதனால் தேவையான, சிறந்த பொருள்களை வாங்குவதை மட்டும் இலக்காகக் கொண்டு. கௌரவத்துக்காகப் பொருள் வாங்குவதை விட்டுவிட வேண்டும்.

**சேமிப்பு :** நம் முன்னோர்கள் சிறுகச் சிறுகச் சேமிப்பார்கள். நமக்குச் சேமிக்கும் பொறுமையில்லை. அத்துடன் நாம் நினைக்கும் போதெல்லாம் கடனும் கிடைத்துவிடாது. அதனால் எவ்வளவு கடன் வாங்குவது என்று முடிவு செய்துகொண்டு, அதற்கு மேல் கடன் வாங்கக் கூடாது.

**உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....**

**சேகரித்தல்:** நாம் பொருள்களை வாங்கத் தொடங்கி விட்டால், அந்தப் பொருளோடு இன்னும் பல பொருள்களை வாங்கியாக வேண்டும். புதிய சோஃபா ஒன்று வாங்குகிறீர்கள் என்றால், அத்துடன் புதிய கார்பெட்டும் வாங்கியாக வேண்டும். அதனால் தேவையா என்று யோசித்த பிறகே பொருள்களை வாங்க வேண்டும்.

**பொறாமை:** நாம் எப்பொழுதும் அண்டை வீட்டாருடன் நம்மை ஒப்பிட்டுக் கொள்கிறோம். அவர்கள் ஏதாவது பொருள் வாங்கினால், உடனே நாமும் வாங்கியாக வேண்டுமென நினைக்கிறோம். ஒருவர் ஒரு புதிய பொருளை வாங்கியவுடன், அதைப் பார்த்து ஒவ்வொருவரும் நமக்கென்று ஒன்று வாங்குகிறோம். அதற்குப் பதிலாக ஒரு பொருளை வாங்கி அனைவரும் ஏன் பகிர்ந்து கொள்ளக் கூடாது?

**விளம்பரம்:** நம் பணப்பையைக் குறிவைத்துத்தான் கவர்ச்சிகரமான விளம்பர வாசகங்கள் எழுதப்படுகின்றன. விளம்பரத்தில் மயங்கும் நாம், நம் சக்திக்கு அதிகமாகவே செலவழிக்கத் தயாராகி விடுகிறோம். நம்மிடம் மட்டும்தான் அத்தியாவசியமான அந்தப் பொருள் இல்லை என நினைத்துக் கொள்ளக் கூடாது. சக்திக்கு மீறிப் பொருள்களை வாங்கக் கூடாது.

**வெளியே சுற்றுதல் :** மாலை நேரத்தில் வெறுமனே வீட்டில் அமர்ந்திருக்க யாரும் விரும்ப மாட்டார்கள். அது அதிகச் செலவுக்கு வழிவகுத்துவிடும். ஆகையால் குறைந்த செலவில் நல்ல பொழுது போக்கு ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து அங்கே செல்ல வேண்டும்.

**குழந்தைகள் :** உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், செலவுகள் தானாகவே கூடிவிடும். குழந்தைகள் நிறையப் பொம்மைகள் வாங்க நினைப்பார்கள். அதனால் குழந்தைகள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துச் செலவுகளை அதிகரித்துக் கொள்ளாதீர்கள்.

**காதல் உறவு :** புதிதாக உறவைத் தொடங்கி இருக்கிறீர்கள் அல்லது ஒரு சிக்கலான நிலையில் உங்கள் உறவு இருக்கிறதென்றால் அப்பொழுது அற்புதமான பரிசுகளை வழங்க நினைப்பீர்கள். அது போன்ற சமயத்தில் உங்களால் இயன்றது எவ்வளவு என்பதைத் தீர்மானித்துக் கொண்டு வாங்குங்கள். ஏனென்றால் காதலில் பரிசளிப்பவர்கள்தான் முக்கியம், பரிசுகள் அல்ல.

**அடிமையாதல் :** அடிமையாதல் என்பது கடினமான வார்த்தைதான் என்றாலும் அதுதான் உண்மை. நாம் பல விடயங்களுக்கு அடிமையாகிறோம். குடிப்பழக்கம், போதை, புகையிலை என அதிகம் செலவு வைக்கும் கெடுதலான பழக்கங்களுக்கு அடிமையாக இருக்கிறோம். சிலர் அது போன்று பொருள்களை வாங்கிக் குவிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டிருப்பார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

**குறைவான சம்பாத்தியம் :** அதிகமாகச் செலவாகிறது என்பதை ஒத்துக் கொள்ளாமல், அதைச் சரிக்கட்டுவதற்கு வருமானம் போதவில்லை என்று சொல்லி விடுகிறோம். நம்முடைய வருமானம், நாம் செய்யும் செலவு இரண்டையும் திட்டமிட்டேதான் வேண்டும்.



# சிறுநீர் பரிசோதனை

ஜம்புவின் தடாலடி 3

ஒருநாள் ஜம்புலிங்கம் டொக்டரிடம் சென்றார். அவருக்கு என்ன நோய் என்று அறிவதற்காக ஜம்புலிங்கத்தின் சிறுநீரை பரிசோதித்தார் டொக்டர். அதன் பின்னர் சில மருந்துகளைக் கொடுத்து. ''இந்த மருந்துகளை சில நாள்களுக்குப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதாகச் சந்தேகப்படுகிறேன். எதற்கும் மூன்று மாதம் கழித்து சிறுநீரை மறுபடியும் கொண்டு வாருங்கள் பரிசோதித்துப் பார்ப்போம்'' என்றார். மூன்று மாதம் கழிந்தது. மூன்று பெரிய பரல்களைத் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டு டொக்டர் முன் வைத்தார் ஜம்புலிங்கம்.

''ஜம்பு! என்ன இது?'' என்று கேட்டார் டொக்டர். அதற்கு ஜம்புலிங்கம்,

'' நீங்கள்தானே டொக்டர் மூன்று மாதம் கழித்து சிறுநீர் கொண்டு வரச்சொன்னீர்கள். அதுதான் இந்த மூன்று மாதமாக எனது சிறுநீர் முழுவதையும் சேகரித்து இந்த பரல்களில் கொண்டு வந்துள்ளேன்.'' என்று கூறி முடிக்க முன்னரே மூர்ச்சையாகிப் போனார் டொக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பழைய சரக்குத்தான் ஆனால் பானை புதுசு

அருமைநாயகம்



சென்னையில் இருந்து நிலம் வாங்குவதற்காக தனது கார் சாரதியான நாயகனுடன் மதுரை வருகிறார் முதலாளி சித்ரா லட்சுமணன். வந்த இடத்தில் 'ஸ்பொட்'டில் மதுரையை வலம்வரும் நாயகியைப் பார்க்கிறார் நாயகன். பிறகென்ன? பார்த்தவுடனேயே விரட்டுகிறார்; காதலிக்க. தன் மனதுக்குள் அவள் இருப்பதாகத் தனது முதலாளியிடம் சொல்ல... நாயகனை அழைத்துக் கொண்டு நாயகி வீட்டுப் படியேறுகிறார் முதலாளி. நாயகி அப்பாவோ, தன் பிள்ளைக்கு ஏற்கெனவே ஒரு மாப்பிள்ளை பார்த்துவைத்திருக்கும் திமிரில் இவர்களை அவமானப்படுத்தி அனுப்பி வைக்கிறார்.

அப்படியும் நாயகியை மறக்கமாட்டேன் என்று நாயகன் அடம்பிடிக்கிறார். அவள் பின்னாலேயே அலைகிறார். இப்போது நாயகியே, பொறுமை இழந்து தன் பின்னால் அவன் வரக்கூடாது என்று திட்டுகிறாள். அப்போதும் நாயகன் அசரவேயில்லை!

ஒரு கட்டத்தில் பொறுத்தது போதும் என்று பொங்கிய நாயகன் நாயகியைக் கடத்தி விடுகிறார். அதேநேரம் நாயகிக்கு நிச்சயித்த மாப்பிள்ளை சிறையை விட்டு வெளியே வருகிறார்.



கதை சூடாகிறது. நாயகியின் அப்பாவும் தனது ஆட்களை வலை வீசித் தேட... நாயகன் நிலை என்ன ஆகிறது என்பது தான் கதை.

அடம்பிடித்துக்கொண்டு இந்த நாயகி பின்னால் நாயகன் ஏன் தொடர்கிறார் என்பதுதான் படத்தின் மிகப் பெரிய பலம். அதனை 'சஸ்பென்ஸாக' வைத்திருக்கிறார்கள். அதனை இங்கே உடைக்க நான் விரும்பவில்லை. திரை அரங்குக்குச் சென்று பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்..!

இந்தப் படத்தின் பெரும் பலம் திரைக் கதைதான்! ஒரு சின்ன 'சஸ்பென்ஸ்' வைத்துக் கதையைக் கொண்டு போய் அதனை உடைத்த இடமும், அதனை வைத்து முந்தின கதையை அழகாகக் குழப்பமில்லாத வகையில் சொல்லியிருப்பதும் படத்தினை வெகுவாக ரசிக்க வைத்திருக்கிறது.

இதைவிடவும் நாயகன், நாயகி, வில்லன், அப்பாவாக நடித்திருக்கும் 'பசங்க' சசிகுமார், இவரது தங்கை என அனைவருமே அவரவர் பாத்திரத்துக்குப் பங்கம் ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள். 'பாஸ் என்கிற பாஸ்கரனை' விடவும் நல்ல பாத்திரம் சித்ரா லட்சுமணனுக்கு. பெண் கேட்டு போகுமிடத்தில் அவரது பேச்சும், நடிப்பும்தான் அந்தக் காட்சியை வெகுவாக ரசிக்க வைக்கிறது.

தண்ணியடித்துவிட்டு பாதி உளறலுடன், மீதி தெளிவுடனும் நாயகனுக்குச் சமாதானம் சொல்லும் அந்தக் காட்சியிலும் சித்ரா பலே.. பலே.. (தண்ணியடிச்சா எல்லாருக்கும் நடிப்பு தானா வரும்போலிருக்கிறது) நாயகன் புதுமுகம். தமிழ் சினிமாவில் ஒரு சுற்று வருவார். முதற்பாதியில் வருபவரைவிட, இரண்டாம் பாதியில் வரும் அவரது நடிப்பு நன்று. சண்டைக் காட்சிகளைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் படத்தில் குறைசொல்லாமல் இருக்க முயற்சிக்கலாம்.

> அடம்பிடித்து கொண்டு இந்த நாயகி பின்னால் நாயகன் ஏன் தொடர்கிறார் என் பது தான் படத்தின் மிகப் பெரிய பலம். அதனை 'சஸ்பென்ஸாக' வைத்திருக் கிறார்கள்.


ஆத்ரிஷா என்ற தெலுங்கு நடிகை இதில் அறிமுகம். நன்கு நடித்திருக்கிறார். அதிலும் உச்சக் காட்சி ஒன்றே போதும் அவரது நடிப்புக்கு.

> ஒரு பாடலில்கூட இசையின் இரைச்சல் காதுகளைத் துளைக்கவில்லை.

சின்னச் சின்ன அசைவுகளிலேயே இப்போதெல்லாம் நடிப்பை அசத்தலாகக் காட்டலாம் என்று திரையுலகத்தினர் கண்டறிந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. 'நேரம்' படத்திற்குப் பிறகு இதிலும் பார்த்த இடத்திலெல்லாம் சின்னசின்ன 'ஷொட்'களில் தனது பெயரை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் ஆத்ரிஷா.

நான்காவதாக பெரிய பாராட்டு இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவாவுக்கு. இந்தப் படத்தின் அனைத்துப் பாடல்களின் வரிகளும் தெள்ளத் தெளிவாக காதுகளில் விழுகின்றன. ஒரு பாடலில்கூட இசையின் இரைச்சல் காதுகளைத் துளைக்கவில்லை. இந்தப் படத்தில் தனியே தெரியுமளவுக்கு சுதந்திரமாக இசையமைத்திருக்கிறார்.

கிராமத்துக் கதை, வழக்கமான சாதி, கௌரவம் பார்க்கும் அப்பா, கெட்ட வில்லன், நாயகனை முதலில் வெறுத்து பின்பு திடீரென அவன் மீது காதல் கொள்ளும் நாயகி, பரிதாப உணர்ச்சி காதலாக மாறுவது, வில்லன் பெண் கேட்பது, பதவிக்காக அப்பன் ஒத்துக் கொள்வது, செய்த தவறுக்காக வில்லனை நாயகியே மாட்டி விடுவது, திருமண ஏற்பாடுகள், நாயகன் தப்பிப்பது, இறுதியில் உண்மை தெரிவது என்று வழக்கமான கதைதான் என்று இலகுவாகச் சொல்லிவிட முடியும். ஆனால் திரையரங்கில் படம் பார்க்கும்போது யாரும் அப்படி நினைக்கவிடாத அளவுக்குத் திரைக்கதையால் நம்மை ஈர்த்திருக்கிறார் இயக்குநர் கணேசன். ஒருதடவை பார்க்கலாம்.



ஜம்புவின் 4

அமெரிக்க நகர் ஒன்றில், ஜம்புலிங்கம் காரில் தன் மனைவி, அம்மா எல்லோருடனும் சென்று கொண்டிருந்தார். நீண்ட நேரமாக அவரை ஒரு பொலிஸ் ஜீப் தொடர்ந்து கொண்டிருந்தது. ஜம்புலிங்கமும் அதைக் கவனித்துக் கொண்டு தொடர்ந்து கார் ஓடிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பொலிஸ் ஜீப் ஜம்புலிங்கத்தின் காரை முந்திக்கொண்டு சென்று, அவர் கார் முன் நின்றது. இறங்கி வந்த பொலிஸ், ஜம்புலிங்கத்திடம் "குட் ஈவினிங்" என்றது. ஜம்புலிங்கம், "குட் ஈவினிங், ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டார். பொலிஸார், "நாங்கள் இருவரும், உங்கள் காரை அரை மணி நேரமாகக் கவனித்து வருகிறோம். நீங்கள் போக்குவரத்து விதிகளை மீறாமல், வேகக் கட்டுப்பாட்டை ஒரு மைல் கூட அதிகரிக்காமல், சக சாரதிகளை மதித்து காரைச் செலுத்திய விதத்தை பாராட்டுகின்றோம். அதனால், சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, உங்களை சிறந்த சாரதியாகத் தேர்வு செய்து, 10,000 டொலருக்கான இந்த செக்கை அன்பளிப்பாக கொடுக்கிறோம். பெற்றுக் கொள்ளுங்கள்" என்றனர். ஜம்புலிங்கம் சந்தோஷமாக ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னார், "இந்த பணத்தை வைத்து எப்படியாவது ஒரு 'லைசன்ஸ்' கட்டாயம் எடுக்க வேணும்" என்று. பொலிஸ் ஒருமாதிரி பார்க்க, உடனே ஜம்புலிங்கத்தின் மனைவி பொலிஸாரைப் பார்த்து, "தப்பாக நினைக்க வேண்டாம், அவர் குடித்திருப்பதால் உளறுகிறார்" என்றார். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜம்புலிங்கத்தின் காது கேட்காத அம்மா சொன்னார், "நான் அப்பவே சொன்னேன் கேட்டியா, பக்கத்துவீட்டுக்காரன் காரை சொல்லாமல் கொள்ளாமல் எடுத்துக் கொண்டு வந்ததால்தான், இப்ப எல்லோரும் பொலிஸில் மாட்டினோம்.." என்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளர்த்த குருதி மண்ணில் பெருகிக் கிடக்கிறது.

"கொன்றால் பாவம் தின்றால் போகும்" என்று, அலட்டிக் கொள்ளாமல் பதில் சொல்லிக் கொண்டே வேள்விப் பலிகளுடன் வீடுகளை நோக்கி நகர்கிறார்கள் மனிதர்கள்.

# கவுணாவத்தையில் ஒரு குருஷேத்திரம்

## குருதியால் ஒரு வேள்வி

ஷண்

இரண்டாயிரத்து ஒன்பது மே 18. தமிழர்கள் எவராலும் மறக்க முடியாத நாள். தமிழ் இனப்படுகொலையை உலகிற்கு ஒவ்வொரு ஆண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வரும் நாள். அந்த நாள் எம்மவர் வாழ்க்கையில் கொடிய நாள். இது மனிதர்களின் கறுப்பு நாள்.

முள்ளிவாய்க்கால் துயரை எம்மால் எப்படித் தாங்க முடியாதுள்ளதோ அதேபோன்றுதான் ஒவ்வொரு ஆண்டும் கவுணாவத்தையில் ஆடுகள் மீதும் ஒரு படுகொலை நிகழ்த்தப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதலாம் திகதி திரும்பத் திரும்ப இந்தப் படுகொலை தொடர்கிறது.

இதற்குப் பெயர் வேள்வி என்கிறார்கள். ஒன்று இரண்டு ஆடுகள் அல்ல, ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகளை ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் விட்டு வெட்டிச் சாய்த்துக் கொல்கிறார்கள். கோபால் பலி கொடுக்கிறோம் என்கிறார்கள்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும் எண்ணிக்கையானவர்கள் சுற்றி நின்று இந்தக் கொலையை வேடிக்கை பார்க்கிறார்கள்.

### ஊட்டி வளர்த்த கடா

கண்ணன், விஷ்ணு என கடவுள்கள் பெயர்களை ஆசை ஆசையாகச் சூட்டி ஆட்டுக்கடாக்களை வளர்க்கிறார்கள். தன் குழந்தை பிறந்தவுடன் அதை அன்போடு ஒரு தாய் எப்படி அரவணைப்பாளோ அதே போல் ஒரு ஆடு குட்டி ஈன்றவுடன் தாய் ஆடு பராமரிக்கிறதோ இல்லையோ எம்மவர்கள் அந்தக் குட்டியை எடுத்து அதற்கான பணிவிடைகளைச் செய்து அதைத் தங்களில் ஒருவராக வளர்க்கிறார்கள்.

பெரும்பாலும் ஆண்களே கடா வளர்ப்பில் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள் என்றபோதும், சில வீடுகளில் பெண்களும் ஆர்வமாக அவற்றை வளர்க்கிறார்கள். பின்னர் அவை வெட்டப்படும் நாளில் வீட்டிலிருந்து அழுகிறார்கள். சில நாள்களின் பின்னர் மீண்டும் அடுத்த வேள்விக்கான ஆட்டைத் தயார்ப்படுத்தத் தொடங்கிவிடுகிறார்கள்.

பிள்ளைகளை ஊட்டி ஊட்டி வளர்க்கிறார்களோ இல்லையோ ஆட்டுக் குட்டியை கையால் ஊட்டி ஊட்டி வளர்க்கிறார்கள். அப்படிப் பார்த்துப் பார்த்துப் பராமரித்த குட்டி வளர்ந்து கடாவாகியதும் வெட்டிச் சரிக்கப்படுவதைப் பார்க்க அவர்களால் எப்படி முடிகிறது என்பது புரியாத உளவியல். ஒரு நாளில் குருதி தோய்ந்த சகதியில் கால்களையும் தலையையும் மூவர் இறுக்கி இழுத்துப் பிடிக்க ஒருவர் பெரிய கத்தியால் அதன் தலையைத் துண்டாடுவதை எப்படிச் சகித்துக் கொள்கிறார்கள் என்பது அவர்களிடம் ஆராயப்பட வேண்டியதே.

### பலியிடும் முதல்நாள்

கடாவை பலியிடுவதற்கு முதல்நாள் கடாவை வளர்த்தவர்கள் வீடு லட்சுமிகரமாக இருக்கும். வீடுகள் எல்லாம் சுத்தப்படுத்தப்பட்டிருக்கும். வேறு எங்கும் இல்லாத வகையில் ஒருவித உள்ளூர் விளம்பரப்படுத்தல் தனம் இந்த வேள்விக் கடாவைக் காட்சிப்படுத்தும்போது மட்டுமே தமிழர்களிடம் இருக்கின்றது. பாட்டுகள் போட்டு, சுற்றிவர ரியூப் லைற் பூட்டி, நடுவிலே கொஞ்சம் வெள்ளை மணல் பரவி, அதில் கடாவைக் கட்டி வைத்திருப்பார்கள். அன்றைய தினத்தில் கடா வளர்த்த வீடுகள் கடும் பரபரப்பாக இருக்கும். எல்லா ஊரிலும் இருந்து சாரை சாரையாக மக்கள் வந்து கடாவைப் பார்த்துச் செல்வார்கள். வளர்ப்பு முறையைச் சிலாகிப்பார்கள். யாருடைய கடா பெரியது என்று கணக்குப் போட்டுச் சச்சரவுப்பட்டுக் கொள்வார்கள். திருமணச் சடங்கில் மாப்பிளைக்குக் கிடைக்கும் எல்லா மதிப்பும் அந்த ஓர் இரவில் கடாக்களுக்கும் கிடைக்கும்.

பலியாவதற்கு முதல் சில தினங்களில் கடாக்களுக்குத் திரும்பத் திரும்ப பல தடவைகள் உணவு திணிக்கப்பட்டிருக்கும். அதனால் கடாக்கள் பல நீண்ட நேரம் நிற்க முடியாமல் மடிந்து மடிந்து படுத்துக் கொள்ளும். சில சமயங்களில் உணவு அதிகமாகி வேள்விக்கு முதல் இரவிலேயே கடாக்கள் செத்தும் இருக்கின்றன.



### பார்வையாளர்

கடாக்களை பார்வையிட வருபவர்கள் அந்த ஆட்டுக்கடாவின் நிறையையும் தோற்றத்தையும் சுற்றிச் சுற்றி மதிப்பிடுவார்கள். தாங்கள்தான் கடாவுக்குச் சொந்தக்காரர் போன்று கடாவை தடவித் தடவிப் பார்த்து பல கதைகள் சொல்வார்கள். தனது கடாவைப் பலர் வந்து பார்வையிட்டால் அதன் சொந்தக்காரருக்கு அளப்பரிய சந்தோஷம். அவரது கடா வேள்வியில் நல்ல விலை போகும் என்ற கணக்கு அதற்கு மற்றொரு காரணம். பார்க்க வருபவர்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பல இடங்களில் நல்ல உபசரிப்பும் கிடைக்கும். தேநீர், பிஸ்கட் எனச் சிற்றுண்டிகள் தாராளமாகப் புழங்கும்.

### ரசிக்கும் கூட்டம்

அந்த ஓர் இரவுதான் அத்தனை கடாக்களும் உயிர்வாழும் கடைசி இரவு. மறுநாள் கடாக்கள் பலியிடப்படும். அதிகாலையில் எழுந்து, உழவு இயந்திரத்தை சுத்தப்படுத்தி, அலங்காரம் செய்து, ஒளிவிளக்குகள் பொருத்தி, ஒலிக்கருவிகளைக் கதறவிட்டபடி கடாக்கள் ஊர்வலமாக கவுணாவத்தை கோயில் நோக்கிப் புறப்படும். நடக்கப்போவதை அறியாத கடாவும் ராஜா கம்பீரத்தில் தலைநிமிர்த்தி உசாராக நிற்கும். கடாக்களுக்கு தங்கச் சங்கிலிகள் அணிவித்து வீதியுலாக சாமி ஊர்வலம் போன்று கொண்டுவருபவர்களும் இருக்கிறார்கள். கடாக்கள் ஒவ்வொன்றும் 150 கிலோ, 200 கிலோ இருக்கும். பார்ப்பதற்கு அழகாகவும் அற்புதமாகவும் ஆசைப்படும்படியாகவும் இருக்கும்.

### கொலைக்களம் காத்திருக்கும்

பலியிடும் களம் கோவிலின் அருகே இருக்கும் ஒரு முற்றம். வெட்டிச் சாய்க்கப்பட்ட கடாக்களின் குருதியில் வருடா வருடம் தோய்ந்து சகதியாகிப் போகும் இடம்.

பலியிடலுக்கு அடையாளமாக கோயிலில் முதல் கடா வெட்டப்படும். ஆனால் அதிலிருந்து சற்றே தள்ளி சுற்றிவர அடைக்கப்பட்ட திடல் தான் 'கொலைக்களம்'. அதைச் சுற்றி முண்டியடித்தபடி கொலைக்களத்தைப் பார்க்கத் துடிக்கும் மக்கள் கூட்டம் நின்றிருக்கும். நிற்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாகத்தான் இருப்பார். அவர்களின் கால்களுக்கும் கைகளுக்குமிடையே சிறுவர்களையும் காணமுடியும். சுற்றிவர இருக்கும் மரங்கள் அனைத்தும் மனிதத் தலைகளை இலைகளாய்த் தாங்கித் திணறிப் போய்விடப்போவதுபோல ஆடியபடி இருக்கும். விசில் சத்தத்துடன் கைதட்டலுக்கும் கூச்சலுக்கும் குறைவிருக்காது.



இடையே சில பெண் தலைகளும் தெரியும். அவர்கள் கைகளில் விவரம் அறியாக் குழந்தைகளும் இருக்கும் [illegible]கிறார்கள். கடாக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையில் கொலைக்களம் போவதற்குத் தயாராக நிற்கும்.

கொலைக்களத்திற்குள் தங்கள் கடாக்களை முன்னே தள்ளிவிடுவதில் போட்டியும் முட்டி மோதல்களும் இருக்கும். கடாக்கள் வரிசையில் நிறுத்தப்பட்டிருப்பதால் நெரிபாடு அதிகரிக்க அதிகரிக்க கடாக்களில் சில களைத்து வீழ்ந்துவிடும். "ஐயோ! என்ர கிடாய் களைச்சுப் போய்ச்சு. நெரிக்காதேங்கோ. கிடாய்க்குமேல இருக்காதீங்கோ..." என்று கத்தும் உரிமையாளரின் குரல் கூட்டத்தின் கோரச் சத்தத்துக்கு மத்தியில் ஈனசுரமாகக் கதறும்.

### பாரம்பரிய உரிமை

கடாக்களை வெட்டுவதற்கென்று சிலர் இருக்கிறார்கள். பாரம்பரியமாக இந்த உரிமை அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதாம். நீண்ட பெரும் கத்திகளுடன் பார்ப்பதற்குச் சுடலைமாடன் சாமிகள் மாதிரி இருக்கிறார்கள். கடாக்களின் தலையை ஒரே வெட்டில் துண்டாடும் சாதுரியம்தான் அவர்களுக்கு அந்த உரிமையைத் தனிச் சொத்தாக்கித் தந்திருக்கிறதோ தெரியாது. ஒரே வெட்டில் கடாவின் தலை துண்டாடப்படவில்லை என்றால் வெட்டியவருக்குப் பார்வையாளர்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்காது. சில நேரங்களில் திட்டுக்கூடக் கிடைக்கும்.

சில மணி நேரத்தில் பலி நிறைவு பெறும். பலிக்களம் குருதியில் தோய்ந்து சகதியாகிக் கிடக்கும். வெட்டப்பட்ட கடாக்கள் அங்கே தலைகள் ஒட்ட வைக்கப்பட்ட நிலையில் நிலத்தில் சரிந்திருக்கும். அவற்றின் இரண்டு காலைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் செல்வார்கள். சில டிராக்டர்கள் பல கடாக்களின் உடல்களைச் சுமக்கும் பாக்கியம் பெறும். ஏனெனில் வேள்விக்கடா இறைச்சி உண்பதற்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டுமாம்.

### ஏலம்?

வெட்டப்பட்ட கடாக்கள் ஏலத்தில் விற்கப்படும். கவுணாவத்தை வேள்வியில் 20 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் வரை கடாக்கள் விலைபோவது ஒவ்வொரு ஆண்டும் நடக்கிறது.

அதிகாலை 4.30 மணியளவில் ஆரம்பமாகும் இந்த வேள்வி 8 மணியளவில் மந்தமடையும். அதற்கிடையில் பெரிய கடாக்கள் எல்லாம் வெட்டிச் சாய்க்கப்பட்டிருக்கும். ஆனால் பலி முடிந்திருக்காது. பின்னரும் சின்னச் சின்னக் கடாக்கள் வந்துகொண்டே இருக்கும்.

"கொன்றால் பாவம் தின்றால் போகும்" என்று அலட்டிக் கொள்ளாமல் பதில் சொல்லிக்கொண்டே வேள்விப் பலிகளுடன் வீடுகளை நோக்கி நகர்கிறார்கள் மனிதர்கள்.

யாழ். குடாநாட்டில் மேலும் சில இடங்களிலும் இந்த மாதிரியான வேள்விகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எல்லா இடங்களிலும் வேள்வி என்பது ஒரே மாதிரி தான் உள்ளது. குருதி தோய்ந்த சகதியில் தான் அவை முடிகின்றன.

பலியிடலைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்த பல கோயில்கள் இன்று திருந்திவிட்டன. அடையாளத்துக்குப் பூசணிக்காயோ வேறு ஏதோ ஒன்று பலியிடப்படுவதாகப் பாவனை செய்யப்பட்டு தான் பலியிடல் அங்கெல்லாம் இப்போது முடிகின்றது.

### எல்லாக் கொலைகளும் ஒன்று தான்

பலியிடும் முறையைத் தடுப்பதற்காகச் சில இந்து அமைப்புக்கள் இந்த முறை அறிக்கைகளை விடுத்திருந்தன. ஆனால் உறுதியான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உணவுக்காக கொல்களங்களில் நாளாந்தம் பல நூறு ஆடுகளும் கோழிகளும் மாடுகளும் அறுக்கப்படுகையில் இதற்கு மட்டும் ஏன் எதிர்ப்புத் தெரிவிப்பான், என்று கடா பலியிடுபவர்களும் நியாயமான ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். கடாக்களைப் பலியிடுவது நியாயமானால் மனிதர்களை – தமிழர்களை – கொல்வதில் மட்டும் என்ன அநியாயம் இருக்கிறது என்று பதில் கேள்விகளும் தயாராகவே இருக்கின்றன. காலம் தான் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 269

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| ■ | 19 | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | 23 | ■ | 24 | | | |
| 25 | | | | | ■ | 26 | |

அனுப்புபவர் பெயர்:............................................

விலாசம்:............................................

............................................

கையொப்பம்:............................................

### இடமிருந்து வலம்

1. அண்ணளவாக, ஒன்றின் பெறுமதியைத் தீர்மானிப்பதை இப்படிக் கூறுவர்.
6. அழிப்பு
7. சூரியனின் ஒரு பெயர்
9. கன்னிகழியாத இளம் பெண்
11. ஊட்டு
13. இல்லை என்று உரைத்தல்
15. மறி
16. நாட்டில் பெரிய பெரிய நிலைகளில் வீற்றிருப்பவர்
20. செல்வம்
21. சம்மதச் சொல்
22. மகாகவி
24. பெறுமதி
25. மகாபாரத பாத்திரங்கள்
26. ஒரு காட்டு மிருகம்

### மேலிருந்து கீழ்

1. சுமங்கலி நெற்றியை அலங்கரிப்பது
2. அறுசுவையில் ஒன்று
3. சமய
4. பூட்டான் தலைநகர்
5. ஏமாற்று
8. பிடியைத் தளர்த்து
10. கறை
12. மகாத்மா காந்தி அணிந்த ஆடை
14. அறிவு
17. பஞ்சபாண்டவர்களில் மூத்தவர்
18. சந்திரன்
19. ஒத்துவராத் தன்மை
21. ஏதாவது ஒன்றை பிளப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதம்
22. இந்திய ஆன்மிகத் தலைவரொருவர்
23. கெட்டியான

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 267 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அமராவதி (5) ஆவி (7) கதி (8) சினத்தல் (09) வைத்தியம் (11) தரும் (12) அம்மி (14) அல்வா (15) வேலை (16) சவால் (18) சதி (19) பதகளி (21) நகர (22) திடும் (23) கோவலன்

### மேலிருந்து கீழ்

(1) அகவை (2) மதித்தல் (3) வசியம் (4) தினம் (5) ஆதவன் (6) வில் (10) திருவாசகம் (12) அலை (13) மித்திரன் (14) அதிபதி (15) வேல் (17) வாளி (18) சகல (20) தடு (21) நவ

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/-, ரூபா 250/-, ரூபா 200/-, ரூபா150/- ரூபா 100/- பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி
இல. 269**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (19.06.2013 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.269இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.06.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 267 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**குலசிங்கம் அபிலவன்,**
யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**திருமதி சி.மதுரைசிலாம்பாள்,**
தச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு**
**கா.வேலுப்பிள்ளை,**
சாயிராம் கோல்ட் ஹவுஸ், இல.32, மில் வீதி, வவுனியா.

**4 ஆம் பரிசு**
**என்.ஜெயந்தினி,**
இல.44, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**சி.எழில்வேள்,**
அரசினர் வைத்தியசாலை, முழங்காவில்.

**பாராட்டுப் பெறுவோர்**

**செல்வி அனோஜினி லோகேஸ்வரன்**
இல.21 (5/4) முதலாம் சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06


**பொன்னம்பலம் தேனுஜா,**
"இயதை" அல்வாய் கிழக்கு, அல்வாய்.

**திருமதி ஜெ.தவராசா,**
இல.101, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகத்தீ



- முல்லைக்கோணேஸ்

வேணியாக்காவுக்குத் திருமணம் நடக்கும் போது முப்பது வயதாகியிருந்தது. நான் வேணியக்கா வீட்டில் நின்று படிக்கும்போது எத்தனையோ தடவைகள் பெண் பார்க்க வந்திருந்தார்கள். ஒவ்வொரு தடவையும் பெண் பார்க்க வருகின்ற போதெல்லாம் பெரியப்பா கோழியடித்துச் சாப்பாடு போட்டுத்தான் அனுப்புவார். அவர்கள் போகும் போது சொல்லியனுப்புவதாகக் கூறிச் செல்வார்கள். சிலர் தபால் போடுவதாகக் கூறுவார்கள். ஆனால் இத்தனை வருடங்கள் கழித்துத்தான் அவளுக்கு திருமணம் ஒப்பேறியிருக்கிறது. வேணியக்கா வீட்டில் [illegible] படிக்கப் போனதற்கு [illegible] பாடசாலையில் [illegible] ஐந்தாம் வகுப்பு வரைதான் இருந்தது. அதன் பிறகு மேலே படிப்பதென்றால் ரவுண் பாடசாலைக்குத்தான் போக வேண்டியிருக்கும். அதனால் பெற்றோரும் ஐந்தாம் வகுப்போடேயே நிறுத்தி விடுவார்கள். பிறகு பிள்ளைகள் பெற்றோரோடு அவர்கள் செய்கின்ற வேலைகளுக்கு கூட மாட ஒத்தாசையாக இருப்பார்கள். என் வயதுள்ள கெங்கா அங்குதான் படித்தான். ஐந்தாம் வகுப்பு முடிய தகப்பனோடு மாட்டு வண்டியில் தலையைப் பிடித்துக் கொண்டு நின்று போனதைப் பார்த்திருக்கின்றேன். குட்டி பண்ணைற்ற ரவி தமையனோடு வல்லைக்குளத்துக்கு வலையோடு போனான். ஐயா உறுதியாகச் சொல்லிவிட்டார். "அந்தப் பள்ளிக்கூடத்தில் நீ படிச்சு உருப்பட மாட்டாய் அண்ணைற்ற வீட்டில் நிண்டு படிக்கிற ஒழுங்கச் செய்யிறன் அங்க நிண்டு படி" பெரியப்பா வீடு பகலிலும் இருள் கவிந்த மாமரத்[illegible]க்குள் ஒடுங்கியிருந்தது. [illegible] வேலியில் கிளுவை மரமும் இடையிடையே முள்முருக்கு மரமும் சடைத்து நின்றன. வளவின் பின்புறம் [illegible] பற்றிய தென்னை மரங்[illegible] இல்லாமல் இருந்தன. வானம்பாடி புற்கள் இடுப்பளவுக்கு வளர்ந்திருந்தது. மதிய நேரம் வெயில் தென்னை [illegible] தூற்றிக் கொண்டு உக்கி[illegible]. "குக்குறுக் கூ" "குக்குறுக் கூ" என்றும் இன்னும் வெவ்வேறு ஒலிகளும் எழுப்பியபடி பறவைகள் தூங்கிக் கொண்டு [illegible] கிளைகளில் தாவும். பழங்[illegible] தேக்குமர வேலைப்பாடு [illegible] ஓட்டு வீடு ஏதோ அதிசயங்கள் நிறைந்த பழைய அரண்மனை போன்று காட்சியளித்தது. அடைக்கலக் குருவிகள் துரும்புகளைக் கவ்வியபடி 'கீச்.... கீச்' என்று பறந்தபடியிருக்கும். முகட்டு வளையில் ஒரு கடதாசிப் பெட்டியை பெரியப்பா ஓட்டைப் போட்டுக் கட்டியிருந்தார். வரவேற்பறையில் பெரியப்பாவின் இளமைத் தோற்றம் கொண்ட கறுப்பு வெள்ளை நிற அரைப் படம் மாட்டப்பட்டிருந்தது. மான் கொம்புகளில் மாட்டி அதில் வயதான ஒருவரது படம் தொழுவியிருந்தது. படத்துக்கு உருத்திராட்ச மாலை அணிவித்து பளுப்பேறியிருந்ததும். வெள்ளை நிறம் மட்டும் அடிக்கப்பட்ட வீடும் ஒரு வித அச்சத்தை உள்ளூர ஏற்படுத்தியது. பகல் நேரங்களிலும் கூட பின் பக்கத்து அறைகளிலிருந்து வினோத ஒலிகள் எழும்பியபடியிருக்க வேணியாக்கா குசினிக்குள் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பாள். அப்போது வேணியாக்காவுக்கு இருபது வயது தாண்டியிருக்கும். வெள்ளை என்றும் இல்லாமல் கறுப்பென்றும் இல்லாமல் வசீகர நிறத்தில் அழகான தோற்றம் கொண்டிருந்தாள். நீளமான தலை முடியை பின்னி விட்டிருப்பாள். அநேகமான நாள்களில் வீட்டில் சீத்தைத் துணியில் தைத்த கவுன்தான் போடுவாள். நீல நிலத்தில் பூப்போட்ட கவுனும் சிவப்பு நிறத்தில் வெள்ளைப் பூப்போட்ட கவுனுமென்று தன் உடலுக்கு நிறத்திற்கும் எடுப்பாக போடுவாள். இத்தனை அழகு ததும்பும் வேணியாக்காவுக்கு ஏன் இன்னமும் திருமணம் நடக்கவில்லையென்று யோசித்த நாள்களும் எனக்குண்டு. வட்டக்கச்சியில் இருந்து ஒரு நாள் வேணியாக்காவைப் பெண் பார்க்க வந்திருந்தார்கள். மாப்பிள்ளை ஒல்லியாக உயரமாக இருந்தான். வெற்றறியில் வேலை என்றார்கள். தாயை எனக்குப் பிடிக்கவில்லை தங்களைப் பற்றியே பெருமையாகக் கூறியபடியிருந்தாள். பெரியப்பா மௌனமாக இருந்தார். வேணியக்கா எல்லோருக்கும் ரீ கொடுத்தாள். பெரியப்பா கோழியடித்துச் சாப்பாடு போடுவதற்கு நாலு காணி தள்ளியிருந்த வீட்டில் ஊர்ச் சேவல் வாங்கி வந்தார். மாப்பிள்ளைக்கு வேணியாக்காவைப் பிடித்துப் போனதாம் என்று பெரியப்பாவிடம் தாய் கூறினாள். வேணியக்காவிடம் விருப்பு வெறுப்பை யாரும் கேட்கவில்லை அவளை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும். வந்தவர்கள் மாலை நாலு மணிவாக்கில் ஊர் திரும்பினார்கள். வெயில் தாழ்ந்த மாலை வேளை வீடு மீண்டும் தன் கட்டுக்குள் போனது போன்று அமைதியாக இருந்தது. பெரியப்பா வெளியே எங்கோ சென்றிருக்க வேண்டும். குசினிப்பக்கம் விசும்பல் சத்தம் கேட்டது. கதவைத் தள்ளி எட்டிப் பார்த்தேன். வேணியக்கா குசினிச் சுவரில் சாய்ந்த படி நிலத்தில் அமர்ந்திருந்தாள். கைகள் இரண்டையும் முழங்கால்களில் மடித்து வைத்து குனிந்த படி அழுது கொண்டிருந்தாள். என்னரவம் கேட்டதும் சட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். நானும் எதுவும் கேட்கவில்லை. அவளும் எதுவும் சொல்லவுமில்லை. திரும்பி எனது றூமுக்கு வந்து அமர்ந்தேன். யன்னலால் அந்த சோடைக்கன்று தென்னை மரங்களும் வானம்பாடிப் புற்களும் மாலை நேரத்தை சபித்த[illegible] பதின்மூன்று பதினான்கு வயது மதிக்கத்தக்க சிறுமியொருத்தி தன் ஆடுகளைச் சாய்த்தபடி வானம்பாடிப் புற்களினூடே வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். வேணியக்கா யாரையாவது விரும்புகிறாளோ அல்லது மாப்பிள்ளையை அவளுக்குப் பிடிக்கவில்லையோ என்று யோசித்த படி இருக்கும் போதே இருள் அறையெங்கும் வந்த மரத் தொடங்கியது எனக்குரிய லாம்பைப் பற்ற வைத்து புத்தகங்களைப் புரட்டினேன். பாடங்கள் எதுவும் மனதில் படியவில்லை. வேணியக்காவின் விசும்பல் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ஆவணி விடுமுறைக்கு ஊருக்குப் போய் ஒரு மாதம் முடிய பாடசாலை தொடங்குவதற்கு முதல் நாள் விருப்பமில்லாமல் மீண்டும் பெரியப்பா வீட்டுக்குப் போனேன். ஊரே மாறிவிட்டது போல எல்லாம் மாற்றமாக இருந்தது. பெரியப்பாவின் வேலியில் நின்ற கிளுவைகள் வெட்டப்பட்டு வெளிப்பாக இருந்தது. வெளிக் கதவைத் திறந்து உள்ளே போகும் போது முற்றத்து மாமரம் கூட பெரும் மாற்றமாக இருந்தது. மாமரத்தில் சைக்கிள் ஒன்று சாத்தப்பட்டிருந்தது. வெளியில் ஆளரவமற்றுக் கிடந்தது. வளவு வாசல், கதவு பொதுவாகச் சாத்தப்பட்டிருந்து. செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே போகும் போது வரவேற்பறையில் கட்டம் போட்ட நீலச்சாரம் உடுத்தி அதற்குப் பொருத்தமாக இளநீல நிறச் சேட்டை முழங்கையளவுக்கு மடித்தவாறு முப்பத்தைந்து நாற்பது வயதுக்குள் மதிக்கத்தக்க ஒருவர் அமர்ந்திருந்தார். வேணியக்கா குசினிக்குள் இருந்து றேயில் தேநீர் எடுத்த வரும்போது "வா... வா... கிரி எப்படா வந்தனி" என்றாள். 'இப்பதான் வாறன்' என்று கூறியபடி எனது அறைக்குள் உடுப்புப் பையைக் கொண்டுபோய் வைத்தேன். வரவேற்பறையில் வேணியக்காவும் அந்தப் புதிய ஆளும் கதைத்துச் சிரிப்பது கேட்டது. பிறகு வேணியக்கா அங்கிருந்தே உரத்துச் சொன்னாள் "கிரி.....கால் மேலக் கழுவிற்று வா தேத்தண்ணி குடிப்பம்" உடுப்பை மாற்றிக்கொண்டு கிணற்றடிக்குப் போனேன். வாழைகள் எல்லாம் குலை போட்டிருந்தன. கிணற்று முற்றம் பாசி கண்டிருந்தது. வேணியக்காவின் ஆடைகள் கொடியில் காய்ந்து கொண்டிருந்தன. முகத்தைக் கழுவி விட்டு றூமுக்குப் போனபோது ஹோலுக்கு வரச்சொன்னாள் வேணியக்கா. சாரத்தை மாற்றிக்கொண்டு போனபோது, "இவன் எங்கட சித்தப்பான்ர மகன். இஞ்ச நிண்டு தான் படிக்கிறான்" என்று என்னை அறிமுகப்படுத்தினாள். எனக்கு அந்த ஆளைப் பிடிக்கவில்லை. தேநீரை வாங்கிக் கொண்டு எனது றூமுக்கே போய்விட்டேன். மறுநாள் பாடசாலையால் வரும் போதும் சைக்கிள் மாமரத்தில் சாத்தப்பட்டிருந்தது. உள்ளே போன போது அந்த ஆளிருந்தார். பெரிய மீசையும் மேவி இழுத்த முடியும் ஆளை எடுப்பாகக் காட்டியது. "ஆ....கிரி..படிப்பெல்லாம் எப்பிடிப்போகுது?" என்று என் பெயரை உரிமையோடு உச்சரித்துக் கேட்டார். நான் என் பிடியில் இருந்து கொஞ்சம் இறங்கித்தான் போனேன். "பரவாயில்லை" என்று மீதியை சிரிப்பிலேயே பதிலளித்தேன். அன்றைய விசாரிப்பிலிருந்து அவரோடு எனக்குப் பரிச்சயமாகிப்போனது. அவரது பெயரையும் அறிந்து கொண்டதிலிருந்து செழியண்ணை செழியண்ணை என்றே அழைத்துக்கொண்டேன். அவரது சைக்கிளில் அந்த ஊர் ஒழுங்கைகளில் திரிந்தேன். சந்திக் கடையில் செழியண்ணையோடு சர்பத் குடித்தேன். எனது பிறந்த நாளுக்குப் பேனா ஒன்றைப் பரிசாகத் தந்தார். அவரை எனக்கு நன்கு பிடித்துப்போனது. பாடசாலை எப்போது விடும் செழியண்ணரோடு அன்றைய மாலைப் பொழுதை எவ்வாறு கழிக்கலாம் என்ற எதிர்பார்ப்புக்களோடு ஒவ்வொரு நாளும் கழிந்தது. அவர் வராத நாள்களில் அவர் மீது கோபம் கோபமாக வரும். மறுநாள் அதற்காகக் கடிந்துகொள்ளும் அளவுக்கு நெருக்கமாகிப் போனேன். வேணியக்காவுக்கும் செழியண்ணருக்கும் இடையில் இருக்கும் உறவு எத்தகையது. அவர் ஏன் அந்த நேரங்களில் மட்டும் வீட்டுக்கு வருகிறார் என்று ஒரு போதும் எண்ணியிருக்காத பொழுதொன்றில் பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும்போது மாமரத்தில் செழிண்ணரின் சைக்கிள் சாத்தியிருந்தது. இன்று மாலை எங்கே சுத்தலாம் என்று எண்ணியபடியே கதவைத் திறந்தேன். சரேலென்று செழியண்ணரின் அருகிலிருந்து ஆடையைச் சரி செய்தவாறு வேணியக்கா விலகிக் கொண்டாள். நான் எதையும் கண்டுகொள்ளாதவனாக எனது றூமுக்குப் போனேன். நான் ஆடைகளை மாற்றும்போது அவர் புறப்படுவது சைக்கிள் சத்தத்தில் புரிந்தது. அன்றிலிருந்து வேணியக்காவைப் பார்க்க எனக்குச் சங்கடமாக இருந்தது. சாப்பிடும் நேரங்களில் கூட குனிந்தபடியே சாப்பிட்டுவிட்டு எனது றூமுக்குள் போய் விடுவேன். செழியண்ணையும் பின்னர் அந்த வீட்டுப் பக்கமே காணவில்லை.

புத்தகத்தை புரட்டினால் பாடத்தில் கவனத்தைச் செலுத்த முடியாதிருந்தது. யன்னல் வழியே அந்தச் சோடை பற்றிய தென்னந் தோட்டமே எனது லயிப்புக்குள்ளானது. அன்றும் பாடசாலையால் வந்து ஆடைகளை மாற்றும்போது அந்த ஆடுமேய்க்கும் சிறுமி ஆடுகளைக் கலைத்தபடி வானம்பாடிப் புற்களின்மேல் நீந்திச் செல்வதுபோல் போய்க் கொண்டிருந்தாள். கையில் ஒரு பையும் தடியும் வைத்திருந்தாள். அவளுக்கு மார்புகள் சற்று உப்பியிருந்தது. ஊத்தை ஆடைகளென்றாலும் அவளில் ஒரு வசீகரம் இருந்தது. சற்று நேரம் யன்னலோரமே நின்றிருந்தேன். அவள் ஆடுகளோடு புதர்களுக்குள் மறைந்துபோனாள். வெயில் உக்கிரம் கூடியிருந்தது. புலுனிகளின் கத்தல் வெம்மையாக ஒலித்தது. மறுநாள் பாடசாலையால் வரும்போது செழியண்ணர் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார். முன்னால் ஆறு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனும் பின் கரியலில் குண்டான ஒரு பெண் சேலையுடன் கைக் குழந்தை ஒன்றுடனும் உட்கார்ந்திருந்தார்கள். முன்னால் சைக்கிளில் வந்த சாரமுடுத்திய நடுத்தர வயதுக்காரர் ஒருவர் கேட்டார் "என்னப்பா....மனிசி புள்ளயளோட துலைக்கோ" அதற்கு செழியண்ணர் என்னைக் காணாதது போல பாசாங்கு பண்ணிக் கொண்டு, அம்பாள் கோயிலடி வரைக்கும் ஒருக்கால்ப் போய் வருவமெண்டிட்டு" என்று கூறியவாறே சைக்கிளை வேகமாக உழக்கினார். நான் மனதுக்குள்ளேயே அவரைச் சபித்தபடி றூமுக்குப் போய் ஆடைகளை மாற்றிக் கொண்டு கட்டிலில் படுத்தேன். பாழடைந்த கட்டடத்தின் ஒரு பகுதிபோல கூரையின் மேற்பகுதித் தோற்றம் காட்டியது. ஆடு மேய்க்கும் அந்தச் சிறுமியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. யன்னல் வழியாகச் சோடைக் கன்றுத் தென்னந்தோட்டத்தை நோக்கினேன். தோட்டம் வெறுமையாக இருந்தது. வானம்பாடிப் புற்கள் மட்டும் அசைந்தன. புதர்களினூடே அவள் வரக்கூடும் என்று நீண்ட நேரமாக யன்னலோரத்திலேயே நின்றிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ வரிசைப் பழமொழிகள்

1. எட்டுச் சுரக்காய் கறிக்குதவுமா?
2. ஏழையும் வழக்குரைத்தால் நீதி பிறக்கும்
3. ஏழையழுத கண்ணீர் வீண் போகாது
4. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்
5. ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்
6. ஏழை சொல் அம்பலம் ஏறுமா?
7. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்
8. ஏற்றமும் தாழ்வும் மாறி மாறி வரும்

சு.ஆதீசன், தரம்-5டி,
யாழ்ப்பாணக் கல்லூரி.



# உண்மையான நட்பு



ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் பாலு. மற்றவன் பெயர் வேலு. இருவரும் இணைபிரியாமல் எப்பொழுதும் ஒன்றாகவே இருந்தார்.

ஒருநாள் இருவரும் காட்டுக்கு விறகு பொறுக்கச் சென்றனர். அப்பொழுது கரடி ஒன்று எதிர்ப்பட்டது. பாலு உடனே மரத்தின் மேல் ஏறிவிட்டான். வேலுவுக்கு மரம் ஏறத் தெரியாது. செய்வதறியாது திகைத்தான். உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. தரையிலே விழுந்து படுத்து செத்தவன் போலக் கிடந்தான்.


கரடி அவன் பக்கத்தில் வந்து முகர்ந்து பார்த்தது. அவன் மூச்சு விடுவதை நிறுத்திப் படுத்திருந்தான். அவன் இறந்துவிட்டான் என்று நினைத்த கரடி அப்பால் போய்விட்டது. கரடி போன பிறகு பாலு மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தான். வந்ததும் வராததுமாக ''டேய் வேலு! கரடி உன் காதில் என்னவோ சொல்லிற்றே! என்ன அது?'' என்று கேட்டான்.

அதற்கு வேலு, ''ஓ! அதுவா, ஆபத்து வேளையில் நண்பனைக் கைவிட்டு ஓடுபவர்கள் கெட்டவர்கள். அவர்கள் உண்மையான நண்பர்கள் அல்லர். இனிமேல் அப்படிப்பட்டவர்களை நம்பாதே என்று சொல்லிற்று'' என்று சிரித்தபடி சொன்னான்.


இதைக் கேட்ட பாலு வெட்கமடைந்தான். தன் செய்கை பிழையானது என்பதை உணர்ந்து கொண்டான். அன்று முதல் அவர்கள் இருவரும் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமையே பலம்''

நா.ஸ்ரீகிருஷ்ணா, தரம் 4ஏ,
யாழ்ப்பாணக் கல்லூரி.



# வரிக்குதிரை



வரிக்குதிரைகள் மேயும்போது, எல்லாம் ஒரே திசையில் திரும்பியபடி இருக்கும். ஆனால், அவற்றில் ஒன்றுமட்டும் எதிர்திசையில் திரும்பி, பின்பக்கமாக ஏதாவது ஆபத்து வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கும்.

காட்டில் தனியாக ஒரு வரிக்குதிரை மட்டும் மேய வேண்டியிருந்தால், அது தனக்குத் துணையாக 'காங்கோனிஸ்' என்னும் மானைச் சேர்த்துக் கொள்ளும்.


வரிக்குதிரை ஓய்வெடுக்கும்போது, அந்த மான் நின்றபடியே சுற்றுமுற்றும் கவனித்துக்கொண்டிருக்கும். ஆபத்து வரும்போல் தெரிந்தால், எச்சரிக்கை செய்து, வரிக்குதிரையை எழுப்பிவிடும்.


வரிக்குதிரையின் உடலில் ஒரு பக்கம் இருக்கிற வரிகள், அதே அமைப்பில், சிறிதும் மாறாமல் அப்படியே மறுபக்கமும் இருக்கும்.

# பொது அறிவு

* கூர்ப்புக் கொள்கையை வெளியிட்டவர் யார்?
  சார்ள்ஸ் டாவின்
* மனித மூளையின் சராசரி நிறை என்ன?
  1.4 கிலோ கிராம்
* அதிக ஆண்டுகள் பிரிட்டனை ஆண்டவர் யார்?
  விக்டோரியா மகாராணியார்
* இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
  ராகேஸ் சர்மா
* விண்வெளியில் மிக நீண்ட நாள்கள் மிதந்தவர் யார்?
  பஜ் ஆஸ்பிரில்
* சீனப் பெரும் சுவரைக் கட்டிய மன்னன் யார்?
  ரிசன்சி
* சர்வதேச அணுசக்தி நிலையம் எங்கே உள்ளது?
  வியன்னா
* உலக உணவு ஸ்தாபனம் எங்குள்ளது?
  FAO ரோம்
* உடலை விட தலை பெரிதாக உள்ள உயிரினம் எது?
  எறும்பு
* நயாகரா நீர்வீழ்ச்சி எங்குள்ளது?
  அமெரிக்கா - கனடா எல்லையில்
* துன்கிந்த நீர்வீழ்ச்சியின் உயரம் என்ன?
  56.6m
* விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற உயிரினம் எது?
  லைக்கா என்ற நாய்

இ.ரஸ்மினி, தரம் 8 ஏ,
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.





சு.அனபாயன்,
சித்தங்கேணி பாலர் பாடசாலை

# விடை தெரியுமா? 214

## உங்களுக்கும் பரிசுகள்

1. நகர்ந்து செல்லும் தாவரத்தின் பெயர் என்ன?
2. பறக்கும் முலையூட்டி எது?
3. இலங்கையின் தேசிய மலர் எது?
4. மீன் எதனால் சுவாசிக்கிறது?
5. இலங்கையில் அருகிவரும் இனத்தவர் யார்?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 15.06.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடைகள் 212**

1. மே 2 ஆவது ஞாயிறு
2. ஜெருசலேம்
3. ஓசோன்
4. காபன்
5. பிரேசில்

### வெற்றி பெற்றவர் விவரம் (212)

* தி.உஷாந்தி, தரம் 9சி, யா/ [illegible]
* உ.தர்சன், தரம் 10, யா/ கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.



மோ.பிரசாந்தினி, தரம்-6
மானிப்பாய் மகளிர் கல்லூரி



லோ.கோபிகா, தரம்-6
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

09.06.2013 முதல் 15.06.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடர்**- ஆடம்பர செலவுகளை தயக்கமின்றி மேற்கொள்வீர்கள். பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவதால், தேவையற்ற சிரமத்தைத் தவிர்க்கலாம். இல்லறத் துணையின் கருத்துக்களை ஏற்று, மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவீர்கள். தொழில், வியாபார அணுகுமுறையில், நல்லமாற்றத்தைப் பின்பற்றுவதால் வளர்ச்சியும், வருமானமும் கூடும். உறவினர்களை உபசரித்து, பெண்கள் நன்மதிப்பு பெறுவர். மாணவர்கள் பொது அறிவு தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வர்.

**இடபர்**- கவித்துவமும், உண்மையும் கலந்து பேசி நண்பர், உறவினர் களிடம் அதிக மதிப்பு, மரியாதை கிடைக்கப் பெறுவீர்கள். எதிரியின் தொந்தரவு அணுகாத சுமுக வாழ்வு முறை இருக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய ஒப்பந்தம் கூடுதல் வாடிக்கையாளர் கிடைத்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு தாமதமான சலுகைப்பயன் வந்து சேரும். பெண்கள் குடும்பப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு, கணவரிடம் நன்மதிப்பு பெறுவர். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மிதுனர்**- நண்பர், உறவினர்களிடம் பெற்ற நட்பையும், அன்பையும் நல்ல அணுகுமுறைகளால் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். சுற்றுப்புற சூழ்நிலையின் மாறுபட்ட நடவடிக்கை மனதில் சஞ்சலத்தை உருவாக்கும். நல்ல கருத்துக்களை கூட, இடம் சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை, கூடுதல் அக்கறையுடன் பின்பற்ற வேண்டும். பெண்கள், உறவினர் குடும்ப விவகார பேச்சுக்களில் நிதானித்து கருத்து சொல்வது நல்லது.

**கடகர்**- மங்கலத்தன்மையுடன் பேசுவீர்கள். புதிய முயற்சி நிறைவேற, கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர், கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி உற்பத்தி, விற்பனை லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் தொழில்நுட்பங்களை அறிந்து பயன்படுத்துவர். பெண்கள் குடும்ப பண வசதிக்கேற்ப ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் நண்பர் கேட்ட உதவியை மனமுவந்து வழங்குவர்.

**சிங்கர்**- உங்களுக்கு அனுசரணையாக இருந்து, வாழ்வில் கூடுதல் வளம் பெற உதவுகின்றனர். இதனால், மனதில் உற்சாகமும், செயல்களில்உத்வேகமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு கிடைத்து, திருப்திகர பணவரவு பெறுவர். குடும்ப பெண்கள் கணவரின் நல் அன்பு, தாராள பணவசதி கிடைத்து சந்தோஷ வாழ்வு நடத்துவர்.

**கன்னி**-எவரிடமும் இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் மட்டுமே, நற்பெயரைப் பாதுகாக்க இயலும். இளைய சகோதரரின் எதிர்பார்ப்பை, ஓரளவு நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு நற்பயன் பெற உதவும். இயந்திரத் தொழிற்சாலை பணியாளர், பாதுகாப்பு நடைமுறையில் கூடுதல் கவனம் வேண்டும். மாணவர்கள், பெற்றோரின் சூழ்நிலை உணர்ந்து, நடந்து கொள்வது அன்பை வளர்க்க பயன்படும்.

**துலார்**- அளப்பரிய நற்பலன்களை தருகின்றனர். முக்கியமான விடயங்களில் இருந்த குழப்பம் விலகி, மனதில் தெளிவு ஏற்படும். புதிய பணிகளை, உற்சாகமுடன் தொடங்குவீர்கள். பணக்கடன், பிணி தொந்தரவு குறையும். இல்லறத்துணை தகுந்த ஆலோசனை சொல்லி, குடும்ப வாழ்க்கை செழுமையாக்குவர். பணியாளர்கள் கூடுதல் வேலைவாய்ப்பு, அதற்கேற்ப சம்பளம் பெறுவர். மாணவர்கள், நண்பர்களின் உதவியால் புதிய பயிற்சி மேற்கொள்வர்.

**விருச்சிகர்**-தாழ்வு மனப்பான்மையை தவிர்த்து செயற்படுவதால், பணிகளில் முழு அளவிலான நன்மை கிடைக்கும். காலவிரயம் ஏற்படுத்துகிற வகையில், பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. இளைய சகோதரர் முன்னர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறு, தாமதமின்றி சரி செய்வது நல்லது. உத்தியோகத்தர், நிர்வாகத்தின் எதிர்பார்ப்புகளை அதிக பொறுப்புணர்உடன் நிறைவேற்ற வேண்டும். மாணவர்கள், ஆன்மிக விடயங்களை அறிவதில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

**தனுசு** -கடந்த வாரங்களில் இயலாது என, தாமதப்படுத்திய செயல்களை, மாற்று உபாயத்தைப் பின்பற்றி நிறைவேற்றுவீர்கள். வழக்கு விவகாரத்தில், நல்ல தீர்வு கிடைக்கும். இல்லறத்துணையின் மனதில், அதிருப்தி வராத அளவுக்கு நடந்து கொள்வது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, தேவையான அரசு தொடர்பான உதவி பெற, அனுகூலம் உண்டு. உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்களுக்கு, சிறந்த நண்பர்களின் ஆலோசனை, உதவி கிடைக்கும்.

**மகரர்** - மனதில் சிறு அளவிலான சங்கடம் உருவாக்கும். முக்கியமான பணியை, நம்பிக்கையுடன் மேற்கொள்வது அவசியம். பிறருக்கு உதவுவவால், சிலரது அதிருப்தியை எதிர்கொள்ள நேரிடும். கவனம் தேவை. இல்லறத்துணையிடம், தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்களில் சிலர் நிர்வாகத்தின் ஒழுங்கு நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடலாம். மாணவர்கள், பெற்றோரின் அனுமதி இன்றி, தொலைதூர இடங்களுக்குச் செல்லக்கூடாது.

**கும்பர்** - உங்கள் வாழ்வு வளம் சிறக்க, துணை நின்று உதவும். செயல்களில், கூடுதல் நன்மை கிடைத்து, பெருமிதம் கொள்வீர்கள். பூர்வ சொத்தில் பெறுகிற பணவரவு அதிகரிக்கும். நல்ல பழக்க வழக்கத்தைப் பின்பற்றி, உடல்நல ஆரோக்கியம் பாதுகாத்திடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்க நண்பரின் உதவி கிடைக்கும். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள், விரும்பிய பொருள் பெற்றோரிடம் கேட்டுப் பெறுவர்.

**மீனர்**- வாழ்வில் கூடுதல் நன்மை வந்து சேரும். முருகப்பெருமானின் நல்லருள் பலம் கிடைத்து, பணிகளில் வியத்தகு சாதனை புரிவீர்கள். உறவினர்களிடம் நன்மதிப்பும், பாசமும் அதிகரிக்கும். கூடுதல் சொத்துச் சேர்க்கை பெற அனுகூலம் உண்டு. இல்லறத்துணையின் நற்குணம் மற்றும் திறமையை மனமுவந்து பாராட்டுவீர்கள். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும். மாணவர்கள், பெற்றோரின் எண்ணங்களை மதித்து நடந்து கொள்வர்.



## எரிந்த தீக்குச்சி.....

நூலகமே
நானும் நீயும் எஞ்சிய வகையில் சொந்தம்

அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது
எமது முன்னோரின் நூல்களின் வெம்மை
அறிவுச் சுடரேற்றிய நூல்கள்
அடுக்கிய தீக்குச்சிகளாய்

வெம்மை பரவாமல் நீரூற்றியிருக்கலாம்
நெருப்புத் தூளியதாய் நினைவுகள்
தழல் வீரம் செத்துப்போனது நூலெரிந்த சூட்டில்

தீயெரிக்க முன்னரே
நாமே பற்றி எரிந்தோம்
உயிர் கொடுத்துக் காத்த எம் மானத்தின் சின்னமாய்
எஞ்சிய நூலகக் கட்டடம்
எரிந்த தீக்குச்சிகளுக்கிடையே
மருந்திற்காகவேனும்
எரியாத தீக்குச்சி தேடும் நூலகத் தீப்பொறி

வருவோர் போவோர் வல்லோர் பெரியோர்
அனைவரையும் அரவணைக்கும்
தாயிழந்த நூற்குழந்தை - பாவம்.
வாசி வாசி என வரலாறு கொடுக்கும்
தலைப்பிழந்த நூல்கள்

நாமோ இன்னமும்
பருவஇதழ்ப் பக்கங்களில்
'காப்பெற்' நடுச்சந்திகளில்
உயர் அடுக்கு விடுதிகளில்
க(கி)ழிந்து போன காலங்களைப் பேசியபடி
எஞ்சியிருக்கும் வெம்மையையும்
'தண்ணி' ஊற்றி அணைத்தபடி
வெற்றுடலாய் அலைகிறோம்

அயலவர்கள் வெறுந்தலையர் என விரட்ட
மருந்திழந்த (தீக்) குச்சியென
விழுந்திடவா நாம் பிறந்தோம் - இல்லை
இனியாவது நாம் எழுவோம்
வாசிப்பின் மேன்மை போற்றுவோம்
அறிவுத் தீ மூட்டும் தீக்குச்சிகள் சேர்ப்போம்
அவை தரும் மருந்தின் வெம்மைகளை
சிரசில் சேர்ப்போம்
நூலகச் சிறையின் கைதிகள் ஆவோம்
நூலகத் தீ முதல் 'உதயன்' தீ வரை
எண்ணிறந்த தீக்குச்சிகள் வீணாய்ப் போனபின்
எழுத்துக்களா இனிச் சூடேற்றப் போகிறது?

என் எழுத்துக்களைக்கூட சாய்த்தே எழுதுகின்றேன்
நிமிர்த்தி எழுதினால் அவற்றைச் சில பேனாக்கள்
வெட்டும் எரிக்கும். ஏனிப்படி நாம்
எரிந்த தீக்குச்சி ஆனோம்?

இனி பிறக்கும் பிஞ்சுகளுக்கும்
நூலகத்தின் வெம்மை தெரிய வேண்டும்
வாசிப்பின் வலி புரிய வேண்டும்

சுற்றுலாவிகளாய் அன்றி
மனிதம் மிக்க வாசகராய்
இந்நூலாலயத்திற்கு
நித்தம் வருதலின் அர்த்தம் தெரியவேண்டும்

அவர்களைக் கொஞ்சம்
சந்திக்க விடுங்கள் - நூலகத்தைச்
சற்று சிந்திக்க விடுங்கள்

அவர்களையாவது
வாசிக்கப்பழக்குவோம்
வரலாற்றைப் பேணுவோம்


சூடேற்றவாவது இருக்கட்டும்
சில எரியாத தீக்குச்சிகள்

எல்லோரும் உரசிப் போகின்றார்கள்
நாங்கள் பற்றுவதே இல்லை
நூலகம் முதல் உதயன் வரை
எம்முள் வெம்மை விதைக்கப் போராடும்
தீந்தழல் வாழ்க! வெந்தழல் வெல்க!

-ரிதம்

*கடந்த 31 ஆம் திகதி யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட 32 ஆவது நினைவுநாள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கைக்கு அக்கறை கொண்டு சீனா வழங்க விருக்கும் இந்தக் கடன்களில் முழுமையிலும் வெளிப் படைத் தன்மை மற்றும் இவை எவ்வாறு செலவாக் கப்படவிருக்கின்றன என்பவை பற்றியதாம்.

82 அசை போட ஒரு விடயம்

# சீனா தருகின்ற தாராள கடன்கள்

ரம்யன்

சீனாவிடமிருந்து பெரும் கடன் சுமைகளோடு ஆரவாரம் இல்லாமல் ஜனாதிபதி நாடு திரும்பியிருக்கிறார்-உலகவங்கி-சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்று நிபந்தனைகள் எதுவும் பெரிதாக விதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை - இது ஜனாதிபதியுடன் போய்வந்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கும். ஆனால் இந்தக் கடன் சுமையானது இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரின் உழைப்பின் மூலமே கட்டித் தீர்க்கப்பட வேண்டியதாயிருக்கும்.

இதுபற்றி எதிர்தரப்பில் ஐ.தே.க. பலத்த விமர்சனத்தை முன்வைத்துள்ளது. சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் எழுதியுள்ள ஆசிரியர் குறிப்பிலிருந்து ஒரு பகுதியை இங்கு பார்க்கலாம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மிகப் பிந்திய சீனப் பயணமானது ஓர் இரகசியப் பயணம் போல் அமைந்திருந்தது. அவர் புறப்படுவது மற்றும் திரும்பி வந்தது தொடர்பாக சம்பிரதாயபூர்வமான அறிவித்தல் எதுவும் இருக்கவில்லை. அவருடைய காரியாலத்தில் இருந்து வெளியிடப்பட்ட ஒரு குறுகிய ஊடக அறிக்கையில் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் (ரூ.278 பில்லியன்) கடன் பற்றியும் இரு தலைவர்களும் பல்வேறு விடயங்கள் தொடர்பான இருதரப்பு உறவுகள், சீன-இலங்கை உறவுகளைப் பலப்படுத்தல், புதிய நட்புறவுக்கான அடித்தளம் மற்றும் ஒத்துழைப்புகள் பற்றியும் ஆலோசனை நடத்தியதாகக் குறிப்பிட்டிருந்தது. இன்னொரு பந்தியில் இலங்கையின் போக்குவரத்துத் துறை அபிவிருத்திக்கு சீன நிதியுதவிகள் பற்றி விரிவாக விவரிக்கப்பட்டிருந்தது. கொழும்பு-யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு கடுகதி பாதைகள், வீதி வலைப் பின்னல், ரயில் பாதைகள், நீர் விநியோகத் திட்டங்கள் கொழும்பிலுள்ள தேசிய மருத்துவமனை மற்றும் ராகம போதனா மருத்துவமனை ஆகியவற்றை மேம்படுத்தல் போன்றவை இதில் அடங்கும்.

சீன ஏற்றுமதி இறக்குமதி (எக்சிம்) வங்கியுடன் நடத்திய இன்னொரு பேச்சுவார்த்தை தொடர்பாக ஏற்கனவே தெரிந்திருந்த ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கப்படுத்தினார். இலங்கை குடியேற்ற ஆட்சிக் காலத்திலிருந்து வரப்பெற்றிருந்த அபிவிருத்தி மாதிரியை மாற்றிக் கொண்டுள்ளது என்றார் அவர். அவரை இந்த வகையில் மூலைக்குள் தள்ளியிருப்பது மேற்குலகம் என்பது தெளிவு. இதனை இலங்கை வெளியுறவு அமைச்சர் பேஜிங் பத்திரிகையாளர் மாநாட்டில் சீனாவுடன் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்வது தொடர்பாக வெளியிட்ட கருத்துடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். இந்த விஜயத்தின் விளைவாக பூகோள மற்றும் அரசியல் மட்ட நோக்கில் பல்வேறு இடங்களில் அதிர்வு அலைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உண்டு. இதற்கு மேலும் கவலைகளை சேர்ப்பதாக இருக்கிறது இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை சீனாவுக்கு ராஜதந்திர விடயங்களில் பயிற்சி அளிக்கப் பெற அனுப்புவதற்கான முயற்சியாகும்.

## வெளிப்படைத் தன்மை இல்லை

இங்கே நாம் கவனத்தில் கொள்வது என்னவென்றால் கடன்வாங்கும் விடயமாகும். இந்தத் திட்டங்கள் இருக்கும் நிலையில் வரவேற்க வேண்டியவை தான். ஆனால் இதில் எழும் முக்கிய கேள்வி என்னவென்றால் இலங்கைக்கு அக்கறை கொண்டு சீனா வழங்கவிருக்கும் இந்தக் கடன்களில் முழுமையிலும் வெளிப்படைத் தன்மை மற்றும் இவை எவ்வாறு செலவாக்கப்படவிருக்கின்றன என்பவை பற்றியதாகும். சீனாவிடமிருந்து பெறப்படுகின்ற கடன் தொகையில் பெரும் பகுதியும் மீண்டும் சீனப் பொருளாதாரத்துக்கே போய்ச் சேரவிருக்கின்றது. சீன நிறுவனங்கள் ஒப்பந்த வேலைகளை சீனத் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு முன்னெடுக்கிறார்கள். கடந்த நான்கு வருடங்களில் நாட்டில் பல திட்டங்களில் ரூ.391.7 பில்லியன் ரூபாவை இலங்கை செலவு செய்துள்ளது. 5 திட்டங்களில் இந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டது. இவைகளில் மூன்றுதான் முடிக்கப் பெற்றுள்ளன. ஆனால் அவை இன்னமும் சரியான பயனை வழங்கியதாகத் தெரியவில்லை. இந்தத் திட்டங்கள் எல்லாமே சீன நிறுவனங்களால்தான் மேற்கொள்ளப்படுகின்றன. எக்சிம் வங்கியிலிருந்து பெற்ற கடன் மூலம் இவைக்கு நிதி வழங்கப்பட்டது. இவை நீண்டகால கடன்களாகவும் குறுகிய கால கடன்களாகவும் பெறப்படுகின்றன.

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி வேலைகள் சீனத் துறைமுகப் பொறியியலாளர் நிறுவனத்தால் ரூ.149.2 பில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு தெற்கு துறைமுகத்துடன் இணைந்த துறைமுக நகரைக் கட்டுவதற்கும் கடல் பரப்பை சீர்செய்வதற்குமான ஒப்பந்தமும் அதே நிறுவனத்துக்கு ரூ.85.4 பில்லியன் செலவில் வழங்கப்பட்டது. மத்தள விமான நிலையத்துக்கான செலவு மதிப்பு ரூ.22.7 பில்லியன். நுரைச்சோலை அனல்மின் நிலையம் சீன இயந்திர சாதன பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தால் ரூ.51.2 பில்லியனுக்கு மேற்பட்ட தொகைக்கு மேற்கொள்ளப்பட்டது. இப்பொழுது ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரம் ஒன்றை நிர்மாணிக்கும் பணியில் இலங்கை அரசு இறங்கியிருக்கிறது. இது கொழும்பில் டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தைக்கு அருகில் ரூ.11.9 பில்லியன் செலவில் சீனத் தேசிய இலத்திரனியல் இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏரோஸ் பேஸ் லோங் மார்ச் சர்வதேச மின்சார நிறுவனத்தால் மேற்கொள்ளப்படவிருக்கிறது. 2007ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரை சீனாவால் வழங்கப் [illegible] மதிப்பு 2.13 பில்லியன் அமெரிக்க டொலர். இதில் 2.1 பில்லியன் டொலர் கடனாகவும் 24 மில்லியன் நன்கொடையாகவும் கிடைத்தது. வரும் மாதங்களில் அம்பாந்தோட்டை -மாத்தறை மார்க்க ஒரே லைன் ரயில் பாதையை நிர்மாணிக்க சீன எக்சிம் வங்கி 278.2 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கவிருக்கிறது.

இலங்கையில் உள்கட்டுமானப் பணிகளுக்கென சீன அரசு 240 மில்லியனை வழங்கவிருக்கிறது. அம்பாந்தோட்டை நகரை ஒருபோக்குவரத்து மையமாக உருவாக்கும் நோக்கில் மேம்பாலங்களையும் வீதிகளையும் கட்டி முடிப்பதற்கு சீன எக்சிம் வங்கி நிதிவழங்குகிறது. இலங்கையில் வேறொரு போதும் கட்டப்படாத இரண்டாவது பெரிய நீர்த்தேக்கமான மொராகந்த குளம் அமைக்கும் பணி சீன-ஹைட்ரோ கூட்டுத்தாபனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முழுமையான செலவு 382 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

## தகவல் அறிய முடியாது

உலகில் 100 நாடுகளுக்கு மேல் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் சட்டம் சீனாவிலும் இலங்கையிலும் நடைமுறையில் இல்லை. எனவே இந்தக் கடன்கள் எவ்வாறு செலவாகின்றது இதில் ஒப்பந்தங்களை வழங்கும் நபர்களுக்கு எவ்வளவு போகின்றது. அரசியல் கட்சி நிதிக் கிடங்குகளுக்கு எவ்வளவு போகின்றது. எவ்வளவு வீணாக்கப்படுகின்றது என்பதெல்லாம் ஒரு போதும் தெரியவராது. இந்தக் கடன்களையெல்லாம் எதிர்கால சந்ததியினர்தான் கட்டித் தீர்த்தாக வேண்டும். இதிலுள்ள அடுத்த பிரச்சினை என்னவென்றால் எல்லா முட்டைகளையும் ஒரே பைக்குள் போடுவதுபோல ஒரே நாட்டுக்கு கடன்பட்டிருப்பது என்பது புத்திசாலித்தனமாக இருக்குமா என்பதாகும். உலக விவகாரங்களில் இலங்கையின் பூகோள ரீதியிலான முக்கியத்துவம் கீழ் நிலைக்குப் போய்விடக் கூடாது என்பது எமக்குள்ள கவலை. சீனாவுக்கு இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் பூகோள அரசியல் மூலோபாய அக்கறை உண்டு என்பது வெளிப்படையான விடயம். ஆக இந்தத் திட்டங்கள் எல்லாம் எமது எதிர்கால சந்ததியினரின் நன்மைக்கு என்றால் மிகவும் நல்லதுதான். ஆனால் சீனக் கடன்கள் மூலம் தடல்புடல் காட்சிகளுடன் நிறைவேற்றப்படும் சில திட்டங்கள் புத்திசாலித்தனமானவையா? செயல்படுத்தப்படக் கூடியவைதானா? என்று ஆழமான கேள்விகள் எழுந்துள்ளன. உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதிக் கடன்களில் ஒருவித கடப்பாடுகள் ஒழுங்கு முறைகள் இணைக்கப்பட்டிருக்கும். அக்கடனை பெறுவதற்கு இலங்கை போன்ற நாடுகள் கடுமையாக உழைத்து பயன்பாட்டைக் காட்ட வேண்டும். சீனக் கடன்களை பொறுத்தமட்டில் ஏதோ வெற்றுக் காசோலை (Blank cheque) வழங்கப்பட்டதைப் போல் இருக்கிறது.

இது எப்படியிருக்கிறது என்றால் வோஷிங்டனிலுள்ள வங்கிகள் எதிர்கால நன்மைக்காக இன்றைய நிலைமைகளை வைத்து பேரம்பேசுகின்றன. பேஜிங் வங்கியானது நேர்மாறாக செயற்படுவதாகக் காணப்படுகின்றது.

எப்பொழுதுமே தாராளம் காட்டும் வங்கி அல்லது நாட்டிடம் இருந்து கடன்களைப் பெறுவது அதைச் செலவு செய்வதுபோல் கடுமையாக இருக்காதுதான். ஆனால் எந்தக் கடனாகவிருந்தாலும் அது வோஷிங்டனிலிருந்து வந்தாலென்ன பேஜிங்கிலிருந்து வந்தாலென்ன ஒவ்வொரு கடனுடனும் கயிறுகள் இணைக்கப்பட்டே இருக்கும்-சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனிமையான தவில் இசையின் பெருமகன்

# சொர்ணலிங்கம்

### சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

எமது பண்பாட்டுச் சடங்குகளிலும் ஆலய வழிபாடுகளிலும் பெரும் முக்கியத்தும் பெற்று விளங்குவது மங்கல இசையாகும். நாதஸ்வரம், தவில் ஆகிய கருவிகளின் அழகும் ஓசையும் அதனை வாசிக்கும் கலைஞர்களில் தோற்றமும் பார்ப்போரையும் கேட்போரையும் ஆனந்தமடையச் செய்வன என்பதில் சந்தேகமில்லை. ஈழத்தமிழரின் இசை வரலாற்றில் எமது மங்கல இசையாளர்களின் சாதனைகள் தனியான இடத்தைப் பெற்று விளங்குகின்றன என்பதும் யாவரும் அறிந்ததே.

இந்த வரிசையில் பேராற்றல் கொண்ட கலைஞராகவும் எண்ணற்ற தவில் கலைஞர்களை உருவாக்கிய ஆசானாகவும் தவில் வாசிப்பு முறையின் பக்குவங்களை அறிந்த வித்துவானாகவும் ஈழத்தின் அனைத்து நாதஸ்வரக் கலைஞர்களுடனும் பல ஆண்டுகளாக வாசித்து வருகின்ற அனுபவமுடையவராகவும் விளங்குபவர் தவில் நாதக் கலாமணி ச.சொர்ணலிங்கம்.

மறைந்த சங்கரப்பிள்ளை - பாலம்மா தம்பதியரின் மகனாக 19.12.1946இல் நெல்லியடியில் இவர் பிறந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்வி கற்ற இவர், தனது எட்டாவது வயதிலேயே தவில் கலையைத் தந்தையிடமே கற்கத் தொடங்கினார்.

இயற்கையான ஞானத்துடனும் அதீதமான ஈடுபாட்டுடனும் தனது தந்தையிடம் கற்று வந்த இவர் நுட்பமான இலயக் கோர்வைகள் அனைத்தையும் விரைவாகக் கிரகித்துக் கொள்ளும் ஆற்றல் உடையவராகவும் வளர்ந்து வந்தார்.

வாசிப்பு முறையில் வேகமும் விவேகமும் பக்குவமும் கொண்ட இவர் மாவிட்டபுரம் சண்முகநாதனின் மங்கல இசைக்குழுவில் தனது பன்னிரண்டாவது வயதிலேயே இணைந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் அந்தக் குழுவில் வாசித்தார்.

இவர் அந்தக்காலத்தில் ஈழத்தில் மட்டுமல்லாமல் தமிழகத்திலும் பெரும் புகழ் பெற்று விளங்கிய தவிலிசைச் சக்கரவர்த்தியான இணுவில் என்.ஆர். சின்னராசாவுடன் இணைந்து தன்னை மேலும் வளர்த்துக் கொண்டதுடன் அவருடன் இணைந்து பல நூற்றுக்கணக்கான மேடைகளில் ஏனைய ஈழத்தின் தவில் கலைஞர்களுடனும் இணைந்து சாதனை படைத்துத் தனது திறன்களை வெளிப்படுத்தி வந்தார்.

ஈழத்தின் இசைக் கலைக்கு உயிர் ஊட்டிய நாதஸ்வர மேதைகளான பி.எஸ்.ஆறுமுகம் பிள்ளை, என்.கே.பத்மநாபன், கே.எம்.பஞ்சாபிகேசன், திருமலை கணேசன், மூளாய் பாலகிருஷ்ணன், எம்.பி.பாலகிருஷ்ணன், கே.ஆர்.சுந்தரமூர்த்தி, வீ.கே.கானமூர்த்தி, வீ.கே.பஞ்சமூர்த்தி போன்றவர்களுடனும் தென்னிந்தய நாதஸ்வரக் கலைஞர்களான சுடலையாண்டிக் கம்பர், சாத்தனூர் கணேசன், கண்ணப்பா போன்றவர்களுடனும் இணைந்து தவிலிசை முழங்கிய இவர் கீர்த்தனைகளையும் அவற்றில் வருகின்ற நுட்பமான சங்கதிகளையும் சிட்டை ஸ்வரங்களையும் மத்திம காலச் சொற்கட்டுக்களையும் தன்னுள் உணர்ந்து அவற்றை அனுசரித்துத் தனது கருவியை இனிமையாக வாசிக்கும் இயல்புடையவர் ஆவார்.

ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இசைமழை பொழிந்த இவர் 1986இல் மலேசியாவிற்குச் சென்று அங்கே எட்டு மாதங்கள் தங்கியிருந்து ஆலய நிகழ்வுகளிலும் ஏனைய தமிழர் பண்பாட்டு நிகழ்வுகிலும் தவிலிசை வழங்கியவர். அத்துடன் தென்னிந்தியாவிற்கு அழைக்கப்பட்டு மாவேலிக்கரை சிவா தம்பதியரின் நாதஸ்வரக் குழுவினருடன் கேரளாவிலும், தஞ்சாவூர், திருச்சி போன்ற தமிழகத்தின் மாவட்டங்கிளிலும் இசைப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

**88**

நாதஸ்வர அரங்குகளில் மட்டுமல்லாமல் இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் கச்சேரிகளிலும் தவில் வாசித்து வருகின்ற அனுபவ முதிர்சியுடைய இவர் பண்பான, தன்னடக்கம் கொண்ட கலைஞராகவும் இளையோரிற்கு வழிகாட்டி வருகின்ற ஒப்பற்ற பட்டறிவாளனாகவும் எம்மிடையே விளங்கி வருகின்றார்.

பி.எஸ்.ஆறுமுகம் பிள்ளை தொடக்கம் இன்றைய இளம் கலைஞர் வரையான அனைவரிற்கும் தவில் வாசித்து வருகின்ற இந்தக் கலைஞர் இசைக் கலையின் ஆழம் தெரிந்த ஒருவராக இருக்கின்ற போதும் சிறிதளவும் தற்புகழ்ச்சி அற்ற ஒருவராகவும் அனைவரையும் மதிக்கின்ற நல் மனிதராகவும் கலைப் பணியாற்றி வருவதுடன் தனது கருத்துக்களையும் இவ்வாறு கூறுகின்றார்:

நாங்கள் அந்தக் காலத்தில் வாசித்த தவிலின் நாதம் தற்போதைய தவிலில் இல்லை என்பதே எனது கருத்தாகும். இயற்கையான பொருட்களால் உருவாக்கப்பட்ட அந்தக் கருவியின் ஓசை என்பது தனித்துவமானதே. ஆனால் தற்காலத்தில் எமது தவில் கலைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் தவிலில் மரம், தோல் தவிர்ந்த உலோகப் பொருள்களும் சேர்க்கப்படுவதால் சத்தம் மட்டும் அதிகரிக்கவில்லை சுமையும்தான் அதிகரித்துள்ளது. எனினும் 'மிசின் தவில்' என்று அழைக்கப்படும் தற்காலத் தவிலையே நானும் வாசித்து வருகின்றேன்.

ஏனெனில் அந்தக் கால வார்த் தவிலை நான் வாசித்தால் ஏனையவர்களது தவிலின் சத்தத்துடன் ஈடுகொடுக்க முடியாமல் போய்விடும்.

ஆனால் வார்த் தவிலில் தான் நாத சுகம் இருக்கின்றது என்பதையோ கையாளுவதும் இலகுவானது என்பதையோ எவரும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ மாட்டார்கள்.

தவில் என்னும் உலகப் புகழ் பெற்ற தமிழர் கருவியின் புனிதத்தைப் பேணுவதுடன் இனிமையுடனும் வாசிக்க வேண்டும் என்பதே எனது கொள்கையாகும்.

அத்துடன் பாடல்களை அனுசரித்து அமைப்பாகவும் பொருத்தமாகவும் வாசித்தால் கேட்கக் கூடியதாக இருக்கும் என்றும் மனம் திறக்கின்றார் லயஞான மணி சொர்ணலிங்கம். ★

# அருள்விஜயராணியின் கதைகள் சொல்லும் சேதி

■ க. அஜந்தகுமார்

இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிப்பன. அதிலும் மனிதர்களின் பிரச்சினைகளை ஆசைகளை, கற்பனைகளை யாவுமாய்க் கலந்த வாழ்வியலை உயிரோட்டத்துடன் தருவன. இலக்கியத்தில் பெண் பேசு பொருளாக இருந்த காலங்களோடு பெண்ணே பேசுபவளாக, எழுதுபவளாக உயிர்பெற்று மிளிரும் இந்தக் காலத்தில் பெண்களின் இலக்கியங்கள் எம் கவனத்தை ஈர்க்கின்றன. தனது பிரச்சினைகளை அவளே பேசுவதிலுள்ள உணர்வும் உணர்ச்சியும் உண்மையானவை. அவை கதைகளாகிற போது தனியே கதைகளாக மட்டுமல்ல அவளின் மகிழ்ச்சியாய், கோபமாய், பிரச்சினையாய் தன்னையே பிரதியில் தரும் நிகழ்வாய் மாறும் போது அதன் பெறுமதி அதிகமெனலாம். இந்த வகையில் தற்போது ஆஸ்திரேலியாவில் வாழும் அருண் விஜயராணி 1990 இல் வெளியிட்ட ''கன்னிகாதானங்கள்' என்ற தொகுதி எம் கவனத்தை ஈர்க்கின்றது.

''இங்கு தரப்பட்டுள்ள அத்தனை கதைகளுமே உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவைதான். உண்மைகள் கற்பனைகளை விடக் கசப்பானவை, துயரமானவை. நான் உண்மைகளை விரும்புகிறேன். எனவே உங்களையும் உண்மைகளைத் தரிசிக்க அழைக்கின்றேன். ஒவ்வொரு கதைக்கும் பின்னால் ஒரு கதை உண்டு. அவற்றைச் சொல்ல ஆரம்பித்தால் என்னுரையே தொடர்கதையாகி விடும்.

என் கதைகளில் பெரும்பாலும் பெண்களைப் பற்றி இருப்பவைக்குக் காரணம் பெண் சமத்துவத்தை மிகத் தீவிரமாக நான் ஆதரிப்பது தான்'' என்று கூறும் இவரது கதைகள் இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கதைகள் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்களில் அவள் சுருண்டு விழும் பரிதாபத்தை துணிவோடு அவள் எடுக்கும் முடிவுகளை பேசுகின்றன. ஆணின் வக்கிரம் கொடும் நிழலாய் பெண்ணின் வாழ்வை மறைக்கும் அபத்தத்தை கடுமையாகப் பேசுகிறார். தூய்மையானவள் மீது களங்கத்தைக் கற்பிக்கும் ஆணின் அதிகார விம்பத்தை துணிவோடு இவர் கதைகள் பேசுகின்றன. பெண்ணே பெண்ணுக்கு எதிரியாய் இருக்கும் சந்தர்ப்பங்களையும் அவர் பேசத் தவறவில்லை. புலம் பெயர் பண்பாட்டுச் சூழல் தமிழர் பண்பாட்டுப் பெறுமானத்திற்கு ஏற்படுத்தும் சவால்களையும் பெண்நிலை நின்று பேசுகிறார்.

பிள்ளை இல்லையென்று மலடியாய்ப் பட்டம் சூட்டி அவளை விலக்கி வைக்கும் மனதைப் புரிந்து கொள்ளாத ஆணையும் மனதைப் புரிந்து கொள்ளும் ஆணையும் '' ஒரு நிரந்தர நிழலைத் [illegible] ''இதே [illegible] உங்களிடம் இருந்திருந்தால் உங்களை விலக்கி விட்டு இன்னொருவரை நான் மணந்து கொள்வதைத்தான் நீங்கள் விரும்பியிருப்பீர்களா'' என்று துணிவாகக் கேட்கின்றனர். தன்னைப் புரிந்துகொள்ளும் டாக்டர் சுரேனை பின்வருமாறு சொல்லி ஏற்றுக் கொள்வது ஒரு பெண்ணின் இதயத்தைப் புரிந்து கொள்ள வழி செய்கிறது.

பூத்துக் காய்த்து கனிகளைத் தரும் மரங்களை மட்டும் பலன் கருதி நாட்டும் தியாகு போன்றவர்களிடையே பூக்காமல் கனியாமல் இருக்கும் குரோட்டன் செடிகள் போன்று இருக்கும் என்னைப் போன்றவர்களையும் ஆசையோடு வளர்ப்பவர்களும் இருக்கின்றார்கள் என்பது எனக்கும் இப்போது புரிந்துவிட்டது.

கணவன் ஓடிப்போனாலும் அதைப்பற்றிக் கவலை கொள்ளாமல் தன்னை நிமிர வைக்க முயன்றபோது தன்னைப் புரிந்து கொண்ட [illegible] ஆணொருவர் இறந்து போக திருமணம் செய்யாமலேயே வெள்ளைச் சேலை கட்டிக் கொள்ளும் தன்மையையும் அவளை அலுவலகத்தில் வக்கிரத்துடன் அணுகும் ஆண்களையும் 'சிலரது வாத்தியத்தில் இரண்டு பக்கங்கள்' என்ற கதையில் சொல்லுகின்றார்.

ஒரு பெண்ணின் ஆசையை எண்ணத்தைப் புரிந்து கொள்ளாததால் இறுதியில் அவளின் நடத்தை வீழ்ச்சிக்கு மரணத்துக்கு காரணமாக அமையும். சமூகத்தை குடும்பத்தை துணிவோடு குற்றம் சாட்டும் கதையாக 'ஆசையின் ராகங்கள் அபஸ்பர கீதங்கள்'' விளங்குகிறது.

'இதே அங்கிள் பானுவுக்குப் பிடித்தமானவனாக ஒருவனை எடுத்திருந்தால் அவள் ஏன் திலீப்பில் மயங்கிப் போகிறாள்; ஏன் தற்கொலை செய்யப் போகிறாள்? இப்பொழுது அவளுடைய கேவலமான நடத்தையை எண்ணிப்பாரும். குற்றத்திற்குக் காரணம் பானு இல்லை. அவளுடைய அப்பா என்றது உனக்கே நல்லாகப்புரியும். ஒரு பெண்ணெண்பதால் தவறில்லை என்றாலும், நியாயங்களின்றி வஞ்சிப்பதும் ஆணென்றால் தவறு செய்தாலும் அவனை ஏற்பதும் அவன் வார்த்தையை மதிப்பதுமான சமூக அபத்தத்தை 'பொதுவான நியாயங்கள் புரியாமல் போகின்றன. ' என்ற கதை பேசுகிறது.

அருண் விஜயராணியின் இந்தக் கதைகள் சீற்றங்களை உணர்ச்சித் தழல்களாய் எம் இதயத்தை தொடுகின்றன:

அவர் கூறும் குற்றங்களை நியாயங்களை துன்பங்களை நாமும் புரிந்து கொள்ளும் நிலையை உருவாக்குகிறார். ஆனாலும் சிறுகதைக்குரிய வடிவப் பிரக்ஞை, மொழிக்கூர்மை, அழகியல் உணர்வு வசப்படும் போது இவரின் கதைகள் உயர் நிலையை நோக்கி பயணிக்கும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கான சாதனையாளன்

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*பேராசிரியராக விளங்கும் நீங்கள், உங்கள் வாழ்க்கையில் யாரையாவது முன்மாதிரியாகக் (ரோல் மொடலாகக்) கொண்டுள்ளீர்களா? உங்களுடைய வெற்றிக்குக் காரணமானவர்கள் யார்?*

எனது தந்தை தான் எனது ரோல் மொடல். வேறு யாரும் கிடையாது. எனது தந்தை, தாய், மனைவி, குடும்பத்தி னர், சகபாடிகள் என்று அனைவருமே எனது வெற்றிக் குக் காரணமானவர்கள்தான். குறிப்பாக நான் கற்ற மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம் என்ப வற்றுக்கு எனது சாதனைகளில் பெரும் பங்கு உண்டு. அத்துடன் பௌதிகவியலில் என்னைப் புடம் போட்ட பெருமை பேராதனை பல்கலைக்கழகத்தில் எனக்குக் கற்பித்த பேராசிரியர் குமாரவடிவேல் மற்றும் பேராசிரி யர் லக்ஸ்மன் திசநாயக்க ஆகியோரையே சாரும்

**எனது பெற்றோருக்கு எனது இளமைக் காலத்தில் என்னை நன்னெறிப் படுத்தியதில் பெரும் பங்குண்டு. எங்களிடம் பெரிதாக வசதி வாய்ப்புக்கள் இருக்கவில்லை.** காசு பணம் பெரிதில்லை, கல்வி தான் முக்கியம், கல்வி இருந்தால் கூடவே அனைத்தும் வரும் என்று போதித்தவர்கள் எனது பெற்றோர் கள்தான்.

விழ விழ எழலாம். விழுந்ததும் விட்டுவிடக்கூடாது. என்னாலும் எழ முடியும். நடக்கும் போது விழத்தான் செய்வாய் - விழுந்தாலும் எழுந்து நட, உன்னால் முடியும் என்ற நம் பிக்கையை என்னுள் வளர்தது என் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் தான்.

அதேபோல என்னுள் விஞ்ஞான அறிவை வளர்த்து, தன்னம்பிக் கையை ஊட்டியது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. அங்குதான் எனக்கு தன்னம்பிக்கையும், தலைமைத்துவ மும் வளர்ந்தது. குறிப்பாக பொன் னம்பலம், கருணாமூர்த்தி போன்ற அறிவியல் ஆசிரியர்கள் என்றும் மறக்கப்பட முடியாதவர்கள். **எங்க ளுடைய வெற்றிதான் அவர்களின் வெற்றி என்று, எல்லாப் பிள்ளை களையும் தங்கள் பிள்ளைகள் போல அக்கறை எடுத்துக் கற்பித்தார்கள். அங்குதான் நான் பல திறமைகளைப் பெற்றுக்கொண்டேன்.**

**இலினோஸ் பல்கலைக்கழகம், சிவானந்தன் ஆய்வு மையம் ஆகிய வற்றுக்கும் எனது வெற்றிகளில் பங்குண்டு.**

*எதிர்காலத்தின் சிற்பிகளான இளையோருக்கு - குறிப்பாக சாதிக்கத் துடிக்கும் யாழ்ப் பாணத்து மாணவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும் புகிறீர்கள்?*

வெற்றி என்பதும் சாதிப்பது என்பதும் முடியாத காரியமல்ல. யாரும் சாதிக்கலாம். அதற்குக் கடும் உழைப் புத்தான் தேவை. கடும் முயற்சியும் தன்னம்பிக்கையும் கொண்ட எந்தக் கரியமும் தோற்றுப் போய்விடாது. எப்பொழும் வாழ்க்கையில் தடைகள் வரத்தான் செய்யும். ஆனால் கொண்ட கொள்கையில் விடாப் பிடியாக இருக்க வேண்டும்.

**ஒரு மலை உச்சியை அடைவதுதான் இலக்கென்றால் உடனடியாக அதனை அடைந்து விட முடியாது. ஏறுவதும் இறங்குவதுமாக தடைகள் பல வரும். ஆனால் என்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். தடைகள் மற்றும் தோல்வி களில் இருந்துதான் கற்றுக்கொள்ள முடியும். எப்பொழுதும் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எப்பொழுதும் உங்கள் தாய் தந்தையரை, பிறந்த நாட்டை, கற்றதை மறந்து விடாதீர்கள். தன் னம்பிக்கை கொள்ளுங்கள்: முயற்சி செய்யுங்கள். வெற்றி நிச்சயம்.**

***செவ்வி: ஆதிரையன்***



**ஒரு மலை உச்சியை அடைவதுதான் இலக்கென்றால் உடனடியாக அதனை அடைந்து விட முடியாது. ஏறுவதும் இறங்குவதுமாக தடைகள் பல வரும். ஆனால் என்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். தடைகள் மற்றும் தோல்வி களில் இருந்துதான் கற்றுக்கொள்ள முடியும். எப்பொழுதும் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.**

# ஆயிரத்தில் ஒருத்தி

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)



யிருக்கின்றது மாமா, மாமி, அந் தக் குழந்தையென தரப்பட்ட தரப் பாள் கொட்டில் நிரம்ப வழிந்தது. கடந்த ஆண்டில் அவளின் மாமா வையும் கவலையும், நோயும் காவுகொண்டிருக்கின்றன.

எனவே அவள் இப்போது பெண் தலைமைத்துவ குடும்பத்துக்குரிய பட்டியலுக்குள் அடக்கப்பட்டிருக் கிறாள்.

அரச உதவிகள் தரப்பட்ட கொட்டி லுடனும், ஐம்பதாயிரம் காசுடனும் நின்று போய்விட்டது. அடிக்கடி பதிவுகள் வருகின்றன. புதிய புதிய அதிகாரிகள் வந்துபோகின்றனர். ஆனால் அதற்கான விளைவுகள் வருவதில்லை என்பதை அடிக்கடி சுட்டிக்காட்ட விரும்புகின்றாள். ஒரு நிறுவனம் தையல் இயந்திரம் கொடுத்திருக்கின்றது. அவள் வசிக்கின்ற கிராமத்தில் பலரும் ஒட்டுத்துணிகளையே அணிந்து கொள்கின்றனர். அவர்களால் தொடர்ந்தும் புதுத் துணிகளை தைத்து அணிய முடியாது. ஏப் போதாவது மட்டுமே என் தையல் இயந்திரத்துக்கு உயிர் பிறக்கும் என்கிறாள் அவள்.

இவள் போன்ற பெண் தலைமைத் துவ குடும்பங்களுக்கு இராணு வம் பண்ணைகளிலும், கல் அறுக்கும் ஆலைகளிலும் வேலை வாய்ப்பு வழங்கியிருக்கின்றது. அதில் பங்கெடுக்க தனக்கிருக் கின்ற காரணங்களைக் காட்டி அச்சமடைகிறாள். ''யாரும் காட்டிக் குடுத்திற்றா?'' என்ற கேள்விக்கு எந்தத் தமிழனால் பதில் வழங்க முடியும்?. அவளோடு இருக்கின்ற மாமியின் வருமானமும், அயலவர்களின் உதவியும் உணவுப் பொழுதுகளை அறை குறைாகவேனும் கடத்திச் செல் கின்றன. மாமி கடைசியாக செய்த வேலை பாலைப் பழம் பிடுங்கி வந்து விற்பனை செய்ததுதான். அந்த வருமானத்தில் மூன்று நாள்கள் வெற்றிகரமாக நடத்தப்பட் டதாக அவள் தெரிவிக்கின்றாள். தன் சொந்த வீட்டோடு இணைந்து வாழலாமே என்ற கேள்வி எழு வது இயல்பானதே.


''நான் விரும்பி திருமணம் செய் தனான். சண்ட முடிஞ்ச நேரத்தில யும், அதுக்குப் பிறகும் எங்கட வீட்டுக்காரர் என்னில அக்கற காட்டினமாதிரி தெரியேல்ல. நான் என்ர பிள்ளயோட இயலுமான வரைக்கும் போராடுவன். ஏ.எல் வரைக்கும் படிச்சிருக்கிறன். வேல தேடிக் கொண்டிருக்கிறன். வீட்டுத் திட்டமும் தாரன் எண்டு சொல்லி யிருக்கினம். பாப்பம்'' என்ற நம்பக்கை வார்த்தைகள் அவளி டம் மிச்சமிருக்கின்றன. தன் கதையை நம்பிக்கையோடு, கண் ணீர் கரைய சொல்லி ஆறிய சந் தர்ப்பமாக இதனை அவள் நினைவுபடுத்துகின்றாள். ஆண் துணையற்று வாழும் இளம் பெண் மீது வழமையாக தமிழ் சமூகம் வீழ்த்தும் குற்றக் கறை யிலிருந்து தப்பிப்பதற்காகவே அவள் அதிகம் சிரமப்படுகின்றாள் என்பதையும் இறுதி வார்த்தை களில் குத்திக் காட்டினாள். அதனை யும் விமர்சனமின்றி ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அதிகாரிகளே! கணவான்களே! புள்ளிவிபரங்களை தவிருங்கள். மன விவரங்களைக் கேளுங்கள். இன்னும் சில வருடங்களின்பின் புள்ளிவிவரங்களின் உச்சத்தை பெறப்போகும் மனநோயாளர் களின் எண்ணிக்கையை கட்டுப் படுத்திக் கொள்வதற்காக.

பெண் தலைமைத்துவ குடும்பங் கள் தொடர்பல் வெளியான புள்ளி விவரங்களுக்குள் அடங்கிய, சில வேளைகளில் தவற விடப்பட்டி ருக்க கூடிய ஒருத்தியின் வாழ்தல் அனுபவமே இது. போரின் பின் னர் ஆண் துணைகளை இழந்த ஒவ்வொரு பெண்ணிடமும் இதை விட மோசமான, வலி மிக்க கதை கள் இருக்கின்றன. அவைகள் ஒவ்வொருவரின் மனதையும் நொருக்கிக் கொண்டிருக்கின்றன. அந்தத் துயரக் கதைகளுக்கான மனப் பகிர்வுவெளி இப்போது அவசியப்படுகின்றது. அதற்கான கதவுகளை வன்னியை நோக்கி திறவுங்கள். அதுவே ஆரோக்கிய மான சமூகமொன்றை மீள் கட்டியெழுப்புதலுக்கான முதன்மை வேலைத்திட்டமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறி வைக்கப்படும் மதத் தலங்கள்



மத அடையாளங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் இனங்களுக்கிடையிலான உறவில் விரிசலை மேலும் அதிகரிக்குமே அன்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்த இவை ஒரு போதும் உதவப் போவதில்லை. மத வன்முறைகளைத் தூண்டி மக்களை மீண்டும் ஒரு வன்முறைக் கலாசாரத்துக்குள் தள்ளி நாட்டில் இரத்த ஆறு ஓடச் செய்வதற்கான வழிவகைகளையே இந்த வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுத்துகின்றன என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளத்தவறியுள்ளனர்.



■ *அதிரன்*

நாட்டில் அண்மைக்காலமாக புதுவித வன்முறைக் கலாசாரம் ஒன்று உருவெடுத்து வருகிறது. அதுவும் சிறுபான்மையினர் வாழும் பகுதிகளிலேயே இந்த வன்முறை அரங்கேற்றப்படுகிறது. அதாவது தமிழர் பகுதிகளிலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மீதும் மதச் சின்னங்கள் மீதும் அண்மைக்காலமாகத் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. ஆலயங்கள், மதச் சின்னங்கள் என்பன இரவோடு இரவாக அடித்து நொருக்கப்பட்டு சிதைக்கப்படுவதுடன் அங்கு இருக்கும் பெறுமதியான பொருள்களும் சூறையாடப்படுகின்றன.
முற்றுமுழுதாக படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தமிழர் பகுதிகளிலேயே இவ்வாறு மதத்தலங்கள் மீது மிக மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இனந்தெரியாத சிலர் நன்கு திட்டமிட்டு இந்தத் தாக்குதல்களை நடத்துகின்றனர். இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது இதுவரை வெளிப்படவில்லையாயினும் தாக்குதல்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதால் அதனை செய்யக் கூடியவர்கள் யார் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே இரவில் நான்கு இந்து ஆலயங்களை இனந்தெரியாதவர்கள் உடைத்து சேதமாக்கியுள்ளனர். ஆலயங்களில் இருந்த மூலவிக்கிரகம், நவக்கிரகம் என்பவற்றை சேதமாக்கிய இனந்தெரியாதோர் அங்கிருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றையும் சூறையாடியுள்ளனர். கடந்த முதலாம் திகதி இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு பிள்ளையாரடி வளைவில் புத்தர் சிலையை நிறுவுவதற்கு நீதிமன்றினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அங்குள்ள நான்கு இந்து ஆலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன.
மட்டக்களப்பு குருக்கள் மடம் ஸ்ரீ செல்லக்கதிர்காமம் ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், கிரான்குளம் ஐயனார் ஆலயம், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் ஆகியவையே தாக்குதலுக்கு இலக்காகியவை ஆகும்.
மட்டக்களப்பு நகரின் நுழைவாயிலில் புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கு மட்டக்களப்பில் உள்ள விகாராதிபதி ஒருவர் முயற்சிகளை மேற்கொண்டார். அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அவர் அனுமதியையும் பெற்றுக் கொண்டார். புத்தர் சிலையை நிறுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதற்கு எதிராக அங்கு பெரும் எதிர்ப்பு வலுத்தது. முற்றுமுழுதாக தமிழர்கள் வாழும் பகுதியில் அதுவும் மட்டக்களப்பு நுழைவாயிலில் இவ்வாறு தன்னிச்சையாக புத்தர் சிலையை நிறுவுவது அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என அங்குள்ள அரசியல்வாதிகளும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் எதிர்ப்பு வெளியிட்டனர். விகாராதிபதியின் இந்த நடவடிக்கைக்கு எதிராக அவர்கள் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்தனர். இந்த விடயம் நீதிமன்றம் வரை சென்றது.
இதனையடுத்து இன நல்லுறவைக் குலைக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டமையால் நீதிமன்றம் இதற்கு இடைக்காலத் தடை விதித்தது. இந்நிலையிலேயே அங்குள்ள நான்கு இந்து ஆலயங்கள் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளன.
இதுமட்டுமல்லாமல் அங்குலானை புனித பிரான்ஸிஸ் தேவாலயத்துக்குள் புகுந்த இனந்தெரியாத குழுவொன்று அங்கு இருந்த பெறுமதிவாய்ந்த சொரூபங்களையும் பொருள்களையும் அடித்து நொருக்கி சேதமாக்கியுள்ளது. கடந்த வியாழக்கிழமை அதிகாலை இந்த தாக்குதல் அரங்கேற்றப்பட்டுள்ளது. தெற்கிலும் கிழக்கிலும் மதத் தலங்கள் மீது இவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில் தற்போது வடக்கிலும் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
கொழும்புத்துறைப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த யேசுநாதர் சிலையொன்று கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாததோரால் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டிருக்கிறது.
கொழும்புத்துறை மணியந்தோட்டம் 5 ஆம் குறுக்குச் சந்தியில் அமைந்திருந்த திரு இருதய ஆண்டவர் சொரூபமே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் இதேபகுதியில் மாதா சொரூபம் ஒன்றும் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இந்து, கத்தோலிக்க மக்களை கவலையடையச் செய்துள்ளதுடன் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளன.
நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்படாத நிலையில் சிறுப்பான்மையினர் வாழும் பகுதிகளில் இவ்வாறு மதத் தலங்கள், மத அடையாளங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் இனங்களுக்கிடையிலான உறவில் விரிசலை மேலும் அதிகரிக்குமே அன்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்த இவை ஒரு போதும் உதவப் போவதில்லை.
மத வன்முறைகளைத் தூண்டி மக்களை மீண்டும் ஒரு வன்முறைக் கலாசாரத்துக்குள் தள்ளி நாட்டில் இரத்த ஆறு ஓடச் செய்வதற்கான வழிவகைகளையே இந்த வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுத்துகின்றன என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளத்தவறியுள்ளனர். அரசியல் தீர்வு எட்டப்படாத நிலையில் தமது உரிமைகளை அடைவதற்காக ஜனநாயக ரீதியிலனான முனைப்புக்களில் தமிழர் தரப்புக்கள் உறுதியாக இறங்கியுள்ள இந்த நேரத்தில் அந்த முயற்சிகளைப் பலமிழக்கச் செய்வதற்காக - தமிழர் தரப்பைப் பயமுறுத்துவதற்காக இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் தூண்டிவிடப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன.
தாக்குதல் சம்பவங்கள் அனைத்தும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களிலேயே இடம்பெற்றுள்ளமையால் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அவர்களும் தான்.
தாக்குதலாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் பொலிஸாருக்கு உண்டு. அதனை அவர்கள் சரிவரச் செய்ய வேண்டிய தேவை உள்ளது. தனியே சிறுபான்மையினர் வாழும் பகுதிகளிலேயே இந்தத் நாக்குதல்கள் அதிகம் இடம்பெறுவதால் அதற்குப் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.
மத தலங்களைத் தாக்குவதன் மூலம் கலவரங்களை உண்டு பண்ணி குழப்பதை ஏற்படுத்தி தொடர்ந்தும் தமிழர்களை ஒரு பயப்பீதிக்குள் வைத்திருக்கும் திட்டத்துடன் இவை மேற்கொள்ளப்படுகின்றனவோ என்றும் எண்ணத்தோன்றுகின்றது.
எனவே இது விடயத்தில் பொறுப்புடன் செயற்பட்டு மக்களின் நிம்மதியான வாழ்வுக்கும் மத அனுட்டானங்களை மேற்கொள்ளும் சுதந்திரத்துக்கும் வழியேற்படுத்த அரசு தாக்குதலாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கி தொடர்ந்தும் இவ்வாறான செயல்கள் நடைபெறா வண்ணம் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பல நாடுகளிலும் 17,265 அணுகுண்டுகள் கையிருப்பில்

உலக நடப்புகள் ஒரு பார்வை

ரெங்கன்

- வல்லரசுகள் அணுகுண்டு எண்ணிக்கையைக் குறைத்துள்ளன
- சீனா, பாகிஸ்தான், இந்திய கையிருப்பு அதிகரித்துள்ளது.
- அராபிய கடல் பகுதிகள் தொடர்பில் அமெரிக்கா-ஜப்பான் சீனாவுடன் முரண்பாடு

ஆயுத குறைப்பு பற்றிய மாநாடுகள் அடிக்கடி ஐ.நா.வின் ஆதரவில் நடைபெற்று வந்திருந்தாலும் உலக நாடுகள் தன்னிச்சையாக ஆயுதக் குறைப்பில் ஈடுபடுவதாகச் செய்திகள் வரக்காணோம். ஆனால் பயங்கர ஆயுதப் போட்டிகள் மட்டும் ஓய்வில்லாமல் நடைபெற்று வருகின்றன. ஆரம்பத்தில் ஒரு சில நாடுகளிடம் மட்டுமே இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருந்த அணு ஆயுதங்கள் (குண்டுகள்) இப்பொழுது வல்லரசு நாடுகளிடம் மட்டுமின்றி வளர்ந்த மற்றும் வளர்கின்ற பல நாடுகளிடமும் இருப்பது தெரிய வந்துள்ளது. சில நாடுகள் ஐ.நா.வின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியிலும் அணு குண்டையும் அதனை ஏந்திச் சென்று குறித்த இடத்தில் வீசக்கூடிய ஏவுகணைகளையும் இரகசியமாக உற்பத்தி செய்ததாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறு ஐ.நா.சந்தேகப் பட்டியலில் இருந்த நாடுகள் வடகொரியாவும் ஈரானும் ஆகும். ஆனால் இப்போது வடகொரியா சில அணு குண்டுகளை பரிசோதித்துப் பார்த்துள்ளதுடன் ஏவுகணைகளையும் பரிசோதித்துள்ளது. இந்த நிலையில் வடகொரியாவிடம் ஒருசில அணுகுண்டுகளாவது இருக்கவேண்டும் என்று நம்பப்படுகின்றது. அணுகுண்டு வைத்திருக்கும் துணிச்சலில்தான் அந்த நாடு அமெரிக்காவையும், அமெரிக்காவின் தலங்கள் அமைந்துள்ள நாடுகளையும், தென்கொரியாவையும் அச்சுறுத்தும் அறிக்கைகளை சமீப காலமாக விடுத்துவருவதாக ஐ.நா.விலுள்ள சில ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

ஈரான் மீதும் ஐ.நா.விலுள்ள பல நாடுகள் சந்தேகம் கொண்டுள்ளன. ஆனால் அதனிடம் அணு குண்டு இருப்பதாக இன்னமும் நிரூபணமாகவில்லை. இவைகளுக்கிடையில் இஸ்ரேலிடமும் அணு குண்டு இருப்பது அரபு நாடுகள் பலவற்றுக்கு அச்சமூட்டுவதாக இருக்கின்றது.


ஆஸியாவில் இப்போது சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிடம் அணுகுண்டுகள் இருப்பது இரகசியமன்று. இந்த மூன்று நாடுகளும் பிணக்குகளில் சிக்குண்டிருப்பதால் அவைகளை எவரும் அணுகுண்டு தயாரிப்பை அல்லது ஏவுகணை தயாரிப்பை நிறுத்தும்படி வற்புறுத்தக் காணோம். சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லைப் பிரச்சினைகள் இருப்பது போலவே பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லை மற்றும் கஷ்மீர் பிரச்சினை இருந்து வருகின்றது.

இந்த நிலையில் ஆசியாவில் உள்ள முக்கியமான இந்த நாடுகளுக்கிடையில் பிணக்குகள் விஸ்தரிக்குமானால் ஒன்றையொன்று அச்சுறுத்தி பணிய வைக்கவும் பிணக்குகளை போர் மூலமன்றி பேச்சுக்கள் மூலமே தீர்த்துக் கொள்வதற்கும் உந்துதல் அளிக்கும் விதத்தில் அணுகுண்டுகள் பயன்படுவதாகக் கருதமுடியும். ஆனால் அணு ஆயுத மோதல் ஒன்று ஏற்படும் சூழ்நிலை உருவாகுமானால் இந்த நாடுகளும் அவைகளை சுற்றியுள்ள நாடுகளும் போர் அழிவினை எதிர்கொள்ள நேரிடும்.

ஸ்டொக்கோமிலுள்ள சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு பட்டியலின்படி இப்பொழுது உலக அணு ஆயுத நாடுகளிடம் மொத்தம் 17,265 அணு குண்டுகள் இருக்கின்றன. கடந்த வருடம் மேல் குறித்த முக்கிய மூன்று நாடுகளில் சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் தமது கையிருப்பை அதிகரித்துக் கொண்டுள்ளன. சீனாவிடம் 2012 இல் 240 குண்டுகள் தான் இருந்துள்ளன.

இப்பொழுது அது 250 ஆக அதிகரித்துள்ளது. பாகிஸ்தான் தனது கையிருப்பில் மேலும் பத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது. அதனிடம் 100 இல் இருந்து 120 வரை குண்டுகள் இருக்கின்றன. இந்தியாவும் தனது கையிருப்பை 90 இல் இருந்து 110 வரையில் குண்டுகளை அதிகரித்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸியாவில் 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலும் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் இடையிலும் வடகொரியா- தென்கொரியாவுக்குமிடையிலும் பதற்ற நிலை அதிகரித்ததனால் இங்கு அமைதிக்கு எந்த வேளையிலும் பங்கம் நேரலாம் என்ற நிலை உருவானதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது.




## வல்லரசுகள் கையிருப்பு குறைப்பு

சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின்படி உலகின் மிகப்பெரிய வல்லரசுகள் இரண்டு மட்டுமே தமது அணு குண்டு கையிருப்பைக் குறைத்துக் கொண்டுள்ளன. ரஷ்யா தனது கையிருப்பை 10,000 இல் இருந்து 8, 500 ஆண்டு குறைத்துக் கொண்டுள்ளது. அமெரிக்கா தன் கையிருப்பை 8,000 இல் இருந்து 7,700 ஆக குறைத்துக் கொண்டுள்ளது. அறிக்கையின்படி பிரான்சிடம் 300 குண்டுகளும் பிரிட்டனிடம் 225 குண்டுகளும் இஸ்ரேலிடம் 80 குண்டுகளும் உள்ளன.

இந்த அறிக்கை விவரங்கள் வெறும் கணிப்பீடு மட்டுமே. ஏனென்றால் அணு வல்லரசுகள் தம் கையிருப்புக்கள் குறித்து வெளிப்படைத் தன்மையைப் பேணுவதில்லை.

## ஆசிய கடல் பகுதியில் சில நாடுகளின் கெடுபிடி

ஆசிய கடற் பிரதேசங்களில் ஒரு சில நாடுகள் குறித்த சில இடங்கள் மீது சொந்தம் கொண்டாடவும் ஆக்கிரமித்துக் கொள்ளவும் முயற்சிப்பதாக வரும் குற்றச்சாட்டுகளுக்கு ஒரு முடிவுகட்டி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் மத்தியஸ்த தீர்ப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று அமெரிக்காவும் , ஜப்பானும் தெரிவித்திருந்த ஒரு யோசனையை சீனா நிராகரித்துவிட்டதாக செய்தி வந்துள்ளது. ஆசிய கடல் பிரதேசம் உலக வர்த்தக செயற்பாடுகளுக்கு மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. இந்தக் கடற் பயண பிரதேசங்களை தன்னிச்சையாக எந்தவொரு நாடும் தன்வயப்படுத்திக் கொள்ள முடியாது. அப்படியான முயற்சிகள் முறியடிக்கப்படும் என்று ஜப்பானும் அமெரிக்காவும் அறிவித்துள்ளன. இந்த விடயம் தொடர்பாக மத்தியஸ்த தீர்ப்பொன்றை நாடலாம் என்ற வகையில் ஜப்பானும்- அமெரிக்காவும் யோசனையொன்றை வெளியிட்டிருந்தன.இந்த யோசனையை சீனா நிராகரித்துவிட்டது. அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாடொன்றில் பேசிய சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பிரதித் தலைவரான கி ஜியாங் குவோ சீனாவின் எல்லைக் கரைகளுக்கப்பாலுள்ள சர்ச்சைக்குரிய கடல் பகுதியில் சீன கண்காணிப்பு படகுகள் பயணம் செய்வதானது முழுமையும் சட்டபூர்வமானது என்று தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் இப்போது இருந்து வரும் நிலைமைகளை மாற்றுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை அமெரிக்கா மிக உறுதியுடன் எதிர்த்து நிற்கும் என அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் சுக்ஹேகல் கருத்து வெளியிட்டிருந்ததையடுத்து சீன இராணுவத் தலைவரின் இந்தக் கருத்து வெளியாகி உள்ளது.

உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகள் இவ்வாறு பெருங்கடல் பகுதிகளைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாகக் கருத்து முரண்பாட்டுக்குள்ளாகியுள்ள அதேவேளை சீனா தன் இராணுவ பலத்தைமேலும்உயர்த்திக் கொண்டு வருவது கண்டு அண்டை நாடுகள் கவலை கொள்கின்றன. இவைகளுக்கிடையில் சமீபகாலமாக இணையத்தளங்களில் தலையீடு செய்து தகவல்கள் சேகரிக்கப்பட்டமை ஈரானின் ஆயுதத் திட்டங்கள் மற்றும் சிரியாவின் உள்நாட்டுப் போர் முதலிய விடயங்கள் சீன - அமெரிக்கத் தலைவர்களுக்கிடையில் விவாதிக்கப்படவிருப்பதாக தெரிகிறது.

பிலிப்பைன்ஸ் நாட்டுடன் ஏற்பட்டுள்ள கடல் பரப்பு பிரச்சினையை திறந்த மன கால்வாய்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்று சீன இராணுவ பிரதி இராணுவத் தலைவர் கூறினார்.

கடந்த ஒரு வருட காலத்தில் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கு அருகிலுள்ள சில நிலப்பிரிவுகளை சீனா ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

அதேபோல் ஜப்பானிய நீர்நிலைப் பகுதியிலும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இரண்டாவது உலகப் போரையடுத்து அமெரிக்க நட்பு நாடுகள் அதன் 7 ஆவது கடற்படையின் தயவையே நாடி நிற்கின்றன. பிலிப்பைன்ஸ் தனது பிரச்சினையை ஐ.நா. வுக்குக் கொண்டு வந்ததால் ஐ.நா.வின் ஆதரவில் நடுவர் மன்றம் ஒன்றின் தீர்வுக்கு விடப்பட்டது. அதன் தீர்ப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது கப்பல்களும் கண்காணிப்பு படகுகளும் எமது இறைமைக்குள்ள கடற்பகுதிகளிலேயே இருந்து வருகின்றன. இது முழுக்கவும் சட்டபூர்வமானது. இதில் சர்ச்சைக்கே இடமில்லை என்று சீன ராணுவ பிரதித் தலைவர் கிஷங் கிரிலா டயலொக் பாதுகாப்பு மாநாட்டில் கூறினார்.

## சிரியாவில் முக்கிய நகரம் அரச படைகளிடம் வீழ்ச்சி

சிரியாவில் அரச படைகளுக்கும் புரட்சிவாதிகளுக்குமிடையில் சமரசம் ஒன்றை உருவாக்கி அமைதியை நிலைநாட்டவும் இடைக்கால அரசு ஒன்றை நிறுவவும் அமெரிக்க- ரஷ்யா ஏற்பாட்டில் ஜெனிவாவில் மாநாடு ஒன்று நடைபெறவிருக்கும் சூழ்நிலையில் மிக முக்கியநகர் ஒன்றை அரச படைகள் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவின் மத்திய பகுதியில் இருக்கும் குவாசிர் என்ற மிக முக்கிய நகர் ஒன்றை அசாத் படைகளும் ஹெஸ்பொல்லா படையினரும் இணைந்து போராடி எதிர்த் தரப்பினரால் கைப்பற்றி வைக்கப்பட்டிருந்த குறித்த நகரை மீண்டும் கைப்பற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதலில் சுமார் 500 புரட்சிப் படையினர் கொல்லப்பட்டதாக் கூறப்படுகின்றது. அரச படைகளின் மூர்க்கமான தாக்குதலையடுத்து குவாசெயிர் நகரில் இருந்து புரட்சிவாதிகள் நகரின் சந்துகள் வழியாக வெளியேறியிருப்பதாகத் தெரிகின்றது.


வெளியேறியுள்ள புரட்சிப் படையினர் ஹெஸ்பொல்லாக்களின் முக்கிய லெபனான் எல்லைப் பகுதிகளில் ரொக்கட் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்திருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத்து வலியை உலகறியச் செய்வேன்

ஒவ்வொரு ஈழவனின் நெஞ்சிலும் ஆயிரக் கணக்கிலான வலிகள் மிகுந்த சம்பவங்கள் இருக்கிறது. இன்னும் செல்ல வேண்டிய இடங்கள், எழுத வேண்டிய துன்ப நிகழ்வுகள், சேகரிக்க வேண்டிய செய்திகள் கூடுலாக உள்ளது. அதை நோக்கிய தேடல் கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

## ஜூனியர் விகடனின் பத்திரிகையாளர் மகா. தமிழ் பிரபாகரன்



நேர்காணல்: மில்லர்

இளம் பத்திரிகையாளர், கவிஞர், ஆவணப்பட இயக்குநர் என பன்முக ஊடகங்களில் தனித்த ஆளுமையுடன் செயல்பட்டு கொண்டிருப்பவர் மகா.தமிழ்ப் பிரபாகரன். சமகாலத் தமிழ் ஊடக அரசியலில் உறுதியாகவும், உரத்தும், இடைவிடாது ஒலிக்கும் குரல் இவருடையது. நாமும் வாடிய பயிர் என்ற ஒரு கவிதைத் தொகுப்பும் ஒரு பாடல் ஒலி குறுந்தகடும் [யுத்தம் செய்வோம் மரணத் தண்டனைக்கு எதிரான பாடல்கள்] இதுவரை வெளியாகியுள்ளன. ஜூனியர் விகடனில் இவரின் புலித்தடம் தேடி.. இவரை தமிழுலகிற்கு பரவலாக அறிமுகப்படுத்தியது. ஈழத்தின் பல பகுதிகளுக்குச் சென்று நேரடியான பல தகவல்கள் தந்த அவரிடம் எழுத்துகள், பயணம், நிகழ்வுகள் பற்றி உதயனுக்காக ஒரு நேர்காணல்.

**உங்களைப்பற்றி?**

படித்தது வளர்ந்தது எல்லாம் தர்மபுரி - சேலம் - நாமக்கலிலும் தான். அப்பா பெரியாரிய சிந்தனையைக் கொண்டவர். அதனாலேயே இப்பெயரும் எனக்கு வைக்கப்பட்டது. நான் எட்டாவது படிக்கும் போது அப்பா இறந்து விட்டார், பின் எல்லாமும் அம்மா மட்டும் தான். கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி சென்ற வாழ்க்கை அப்பாவின் இறப்புக்கு பின் மீண்டும் கிராமத்துக்கே கூட்டி வந்தது. கல்லூரியின் போது மீண்டும் சேலம் நகரம். கல்லூரி நாள்களில் நான் படிப்புக்கு அப்பாற்பட்டு செய்த எழுத்து பணிகளுக்கும் மாணவ நிருபராக விகடனில் சேர்ந்ததற்கும், பெரிதும் உறுதுணையாக இருந்தது என் அம்மா. இன்று நான் இந்த நிலைமையில் இருப்பதற்கு காரணமும் அம்மா தான்.

**பொறியியல் துறை மாணவரான நீங்கள் எதற்காக கவிஞராகவும் எழுத்தாளராகவும் செயல்படத் தொடங்கினீர்கள்?**

விரும்பி எடுத்த படிப்பு தான் என்றாலும் நான் கல்லூரி படிப்பை தொடங்கிய செப்-2008 காலம் ஈழப் போர் உக்கிரத்தை தொட ஆரம்பித்த நேரம். மே 2009 தமிழர்களின் பின்னடைவை மனம் ஏற்றுக்கொள்ளாத நேரம். தொடர்ச்சியாக அது வேறு வேறு அரசியலுக்குள்ளும் படிப்பினைக்குள்ளும் என்னை கொண்டு சென்றது. இதன் தொடர்ச்சியே என்னை மேலும் மேலும் எழுதவும் வைத்தது.

**இப்போது தமிழகம் அறிந்த பிரபல நிருபர்களில் ஒருவர். உங்களிடத்தில் இந்த புகழ் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது?**

பிரபல நிருபர் எல்லாம் பெரிய வார்த்தை, கவனத்தை ஈர்த்த நிருபர் அவ்வளவே. யாரும் எதிர்பாராத நேரத்தில் ''புலித்தடம் தேடி'' தொடர் வெளிவந்ததும் , இதற்கான விளம்பரம் வெளிவரும் நேரத்தில் ஈழ விடயத்தில் மீண்டும் மற்றோர் உசுப்பேத்தும் தொடர் என்றும், விகடனிலிருந்து யாரோ ஒருவர் இன்பச் சுற்றுலா போய் வந்துள்ளார் என்றும்' எனக்கு தெரிந்தவர்களாலேயே விமர்சனங்கள் எழுதப்பட்டன. ஆனால் அவை யாவையும் இத்தொடரின் செய்திகள் தகர்த்தது. அவர்கள் பின் வாயடைத்து போனதையும் நான் அறிந்தேன். ''புலித்தடம் தேடி'' எனக்கான அடுத்த தேடலையும், என் வாழ்வை பத்திரிகை துறையிலேயே தொடரச் செய்துள்ளது.

**உங்களின் ஆளுமையில் தாக்கம் செலுத்தியவர்கள் பற்றி கூறுங்கள்?**

என் ஆளுமையில் தாக்கம் செலுத்தியதில் பெருமளவு பங்கு கொண்டவர் என் அப்பா. அவர் இருந்த காலத்தில் எனக்கு ஏற்பட்ட அறிவு ரீதியான தாக்கங்களை விட அவர் இறப்பில் ஏற்பட்ட மரணத் தாக்கமே என் எழுத்துக்களை ஆட்கொண்டுள்ளது. மனிதத்தின் மீதான முதல் தாக்கத்தையும் வேட்கையும்' எழச் செய்தது அப்பா தான். என் பள்ளி காலத்தில் ஏற்பட்ட இந்த மரணத் தாக்கமே ஒவ்வொரு மனித உயிரின் உன்னதத்தையும் எனக்கு அறியச் செய்தது.

பல ஆண்டுகள் கழித்து என் அப்பாவை போலவே ஓர் மனிதரை நேர்மைமிக்கவரை சந்தித்தேன் என்று சொன்னால் , அது ஆனந்த விகடன் சஞ்சிகையின் ஆசிரிய நிர்வாக இயக்குநர் ப.திருமாவேலன். அவரே எனக்கு பத்திரிகை துறையின் மீதான தாக்கத்தையும் தாகத்தையும் எழச்செய்தவர். இவர்கள் இருவரும் தான் என் ஆளுமையில் தாக்கம் செலுத்தியவர்கள்.

அது போக ''மனிதத்தை நேசிக்க தெரிந்தவர்கள்' யாவருமே என் ஆளுமையில் தாக்கம் செலுத்தியவர்கள்தான்.

**தமிழில் இன்றைய எழுத்துச் சூழல் எப்படி இருக்கிறது?**

தமிழில் இன்றைய எழுத்துச் சூழல் விகிதாச்சார ரீதியாக பார்த்தால் குறைந்து கொண்டே தான் வருகிறது. 40 வயதுக்கு மிகுந்தவர்களே தமிழின் எழுத்துச் சூழலை பெருமளவு ஆக்கிரமித்துள்ளனர். புதிதாக வருபவர்கள் இவர்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டும் தனிமைப்படுத்தப்பட்டுமே பார்க்கப் படுகின்றனர்.

புதிதாக வரும் இளையோர்களை தட்டிக்கொடுத்து போகும் போக்கு தமிழ் எழுத்துச் சூழலில் அருகி வருகிறது என்று சொல்லும் நிலையே உள்ளது. இதற்கு உதாரணம் விமர்சிப்பது தவறல்ல. ஆனால் எழுத்துச் சூழலிருந்து புதிய படைப்பாளிகளை ஒதுக்குவதற்காக விமர்சிப்பது தவறு. இது எழுத்துச் சூழலுக்கு வரும் இளைஞர்களுக்கு ஆரோக்கியமற்ற சூழலை ஏற்படுத்தும். ஒருவரின் எழுத்தையும் அனுபவத்தையும் வயதை வைத்து பார்க்க கூடாது ,செயலை வைத்து பார்க்க வேண்டும். அப்படியான நிலைமை தமிழ் சூழலில் இல்லை, வயதை வைத்தே தகுதி உட்பட அனைத்தும் நிர்ணயிக்கப் படுகிறது.

**ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் ஈழம் இன்று அடைந்திருக்கும் மாற்றம் குறித்து உங்களுக்குச் ஏதாவது சொல்ல இருக்கிறதா?**

இன்று ஈழம் அடைந்துள்ள மாற்றம் ராணுவ ரீதியாக மட்டுமல்ல, உளவியல் ரீதியாகவும் தான். இப்போது ஈழ அரசியல் என்பது குறிப்பிட்ட பகுதியின் அரசியல் என்பதிலிருந்து சர்வதேச அரசியலாக மாறி இருக்கிறது. இங்கு நாம் ஈழம் வேண்டும் என்ற கோரிக்கைக்கு செலுத்தும் முக்கியத்துவத்தில் பத்து வீதம் கூட அங்கு வாழும் மக்கள் மீது செலுத்தவில்லை. அதை இனியாவது செய்ய வேண்டும்''

**ஈழத் தமிழர்களின் நிலை பற்றி....?**

சொல்ல என்ன இருக்கிறது. ''நிர்க்கதிகள்' !

**நீங்கள் எழுதிய ''புலித்தடம் தேடி'' பகுதியில் உங்கள் மனதை மிகவும் பாதித்த பகுதி எது?**

இந்த முழுத்தொடரும் என் மனதில் ஏற்பட்ட பாதிப்பினால், அம்மக்களின் வலியை கண்டதால் எழுதப்பட்டது என்றாலும் என் ஆழ் மனதை தொட்டது என்று பார்த்தால் அது புது மாத்தளன் தான். இன்று வரை கடலையும் மணல் திட்டுகளையும் வெகுநேரம் பார்த்த படி இருக்க முடிவதில்லை, இவை என் கண்களை தானாக கலங்கச் செய்கின்றன. மீண்டும் ஈழ மண்ணிற்கு எப்பொழுது வருவேன் என்ற ஏக்கம் தான் என் மனமெங்கும் நிரம்பிக் கிடக்கிறது. மீண்டும் அம்மண்ணிற்கு செல்லும் போது அது ''விடுதலை பெற்று இருக்க வேண்டும்' என்பதே என் ஏக்கம்.

**ஈழத்தில் செய்ய வேண்டிய பணிகள் உள்ளதா?**

நான் புலித்தடம் தேடி தொடரில் இன்றைய இலங்கையைப் பற்றி எழுதியவை சிறு எச்சங்களே. ஒவ்வொரு ஈழவனின் நெஞ்சிலும் ஆயிரக்கணக்கிலான வலிகள் மிகுந்த சம்பவங்கள் இருக்கிறது. இன்னும் செல்ல வேண்டிய இடங்கள், எழுத வேண்டிய துன்ப நிகழ்வுகள், சேகரிக்க வேண்டிய செய்திகள் கூடுலாக உள்ளன. அதை நோக்கிய தேடல்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். ★

---

# தாய் நிலம் 19



–சடா கோபன்

சின்ன வயதில
தீ மிதிப்பு பார்க்கிறது
ஒருக்காலும் எனக்கு
அலுக்கிற காரியமில்லை

வீட்டுக்குப் பின்னால் இருக்கிற
வேலுச்சாமி கோயில்ல
அம்மம்மாவோட போய்
அதைப் பார்க்கிறதென்பது
என்ர
வருடாந்த நிகழ்ச்சி நிரலில்
நிச்சயமாய் இருக்கும்

வேலுச்சாமியார்
பக்திப்பரவசமாய்
நெற்றி முழுக்க திருநீறுபூசி
நெருப்புத்தணலில் கால்வச்சு
நடந்து வருவார்.....

என்ர நெஞ்செல்லாம் இறுகி
ஆச்சரியமாய் அற்புதமாய்
ஒருவகைப் பயத்தோட
பார்த்துக்கொண்டு நிற்க
இஞ்சால வந்து
தலையில அடிச்சு
இளணியும் உடைப்பார்....

இனி
அடுத்த வருடம் என்று சொல்லி
அந்த பயத்தை அனுபவிக்க
மனது ஆவல் கொள்ளும்....
சாமியாரின்
தீ மிதிப்பு பார்த்த எனக்கு
சுவாமிகளின் தீக்குளிப்பு
வித்தியாசமாய் தெரிகிறது...

சுவாமி....!
இம்முறை நீங்கள்
மாடுகளுக்காக பிறந்தீர்கள்
நன்றி...!

அடுத்தமுறை
ஆடுகளுக்காகவும்
பிறகொருமுறை
பண்டிகளுக்காகவும்
வேறொருமுறை
பறவைகளுக்காகவும்
பிறவுங்கள்...

சுவாமி
உங்களிடம் நான்
மன்றாட்டமாக கேட்பது
என்னவெனில்...
முடிந்தால் ஒருமுறை
சுவாமியாக அல்லாமல்
மனிதராக
இதே நிலத்தில் பிறவுங்கள்...

அப்போது சுவாமி
உங்களுக்கு புரியும்
இப்போது நான்
சொல்லவருவது
என்னவென்று...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக் கலைஞரை ஆதரிப்பார் யாருமில்லை

## 45 வருடங்களின்முன்பு ரி.எம்.எஸ்ஸின் ஆதங்கம்

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடி, திரை இசை, மெல்லிசை இரசிகர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்த டி.எம். சௌந்தரராஜன், சமீபத்தில் சென்னையிற் காலமான செய்தி ஆற்றமுடியாத சோகத்தைப் பலருக்கு ஏற்படுத்தியுள்ளது. இற்றைக்குப் பல்லாண்டுகளின் முன்னர்- 1958 ஆம் ஆண்டில் இங்கிருந்து சென்னைக்குச் சென்ற 'கலைச் செல்வி' ஆசிரியர் சிற்பி சிவசரவணபவன் அவரைப் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை 'கலைச்செல்வி' [மாசி 1959] இதழில் 'கீதன்' என்ற புனைபெயரில் வெளியானது. இலங்கை, இந்திய வித்துவான்களின் மதிப்பைப் பெற்ற சாகித்திய கர்த்தாவாக பாடலாசிரியராகத் திகழ்ந்த மகாவித்துவான் இணுவில் வீரமணி ஐயர் ஆக்கிய 'கற்பகவல்லி நின் பொற்பதங்கள்' என்ற பாடலுக்கு இசையமைத்துப் பாடியவர் டி.எம்.சௌந்தரராஜன் 'தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதிருந்தும் அதிகப்படியான தமிழ்ப் பாடல்களையே பாடித் தமிழிசைக்கு வளம் சேர்த்த அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அந்தப் பேட்டிக் கட்டுரையை மீள் பிரசுரம் செய்கிறோம்.

கீதன்

கே: படவுலகம் தங்களை எவ்வாறு கவர்ந்தது?
ப: பல ஆண்டுகளாகக் கச்சேரி செய்து வந்தேன். மகாவித்துவான்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஊக்கமளிக்கவில்லை. ஆனால் மக்களின் ஆதரவு நிறையக் கிடைத்தது. இதைக்கண்ட 'கிருஷ்ண விஜயம்' படத் தயாரிப்பாளர் 'ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி' என்ற பாடலைப் பாடுவதற்கு என்னை ஒப்பந்தம் செய்து கொண்டார். அதைத் தொடர்ந்து 'மந்திரி குமாரி', 'தேவகி', 'சர்வாதிகாரி' முதலிய படங்களிலும் சந்தர்ப்பம் கிடைத்தது.

கே: தாங்கள் பாடிய பாடல்களுள் தங்களுக்கு மிகவும் பிடித்தது எது?
ப: 'நான் பெற்ற செல்வம்' என்ற படத்தில் வரும் 'நான் பெற்ற செல்வம்'' என்ற பாடல்

கே: படப் பாட்டுக்களிலும் பார்க்க, தாங்கள் பாடிய தனிப்பாடல்கள் மிகவும் உருக்கமானவையாக இருக்கின்றனவே, காரணம்?
ப: அந்தப் பாடல்களுக்கு நானே மெட்டுகள் அமைத்தேன். பின்னணியையும் நான்தான் தெரிவு செய்தேன். சங்கீத இயக்குநர்களின் தலையீடு கிடையாது.

கே: தங்களுக்குப் பிடித்த சாஹித்ய கர்த்தாக்கள் யார்?
ப: இனிமையாக, அன்போடு, பண்போடு பழகக்கூடியவர்கள் மருதகாசியும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும். தரத்தைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

கே: தங்களுக்குப் பிடித்த சங்கீத இயக்குநர் யார்?
ப: ஜி.ராமநாதன் அவர்கள்.

கே: டப்பா சங்கீதத்தினால், கர்நாடக சங்கீதம் கெட்டுவிடாதா?
ப: 'டப்பா' என்ற பெயர் எப்படி ஏற்பட்டதோ தெரியவில்லை. சாதாரண மக்கள் மெய் மறந்து தாளம் போட்டு 'டப்பா' பாடல்களை ரசிக்கின்றார்கள். நல்ல சாரீர சம்பத்து உடையவர், தகுந்த பின்னணியுடன் , சுருதி தவறாது பாடினால் கர்நாடக இசையும், சங்கீத ஞானம் இல்லாத பொதுமக்களைக் கவரும். கர்நாடக சங்கீதம்தான் மூலஸ்தானம். அதன் அடிப்படையில்தான் எளிமை சங்கீதம் இயங்க முடியும்.

கே: அகில இந்திய வானொலியின் சங்கீத நிகழ்ச்சிகள் பற்றித் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
ப: நிலையத்திலுள்ளவர்கள் சாதித் தடிப்பு உள்ளவர்கள். 'ரிடையர்ட்' ஆக வேண்டிய வித்துவான்களை மட்டும் அடிக்கடி வரவழைத்து, சுருதியை மறந்துவிட்டுப் பாடச் செய்வதில் அவர்களுக்குத் தனி விருப்பமோ என்னவோ! இளம் வித்துவான்களுக்கு ஊக்கமளித்துப் பாடச் செய்தால்தான் , சங்கீதக்கலை வளரும். மக்களும் விரும்பிக் கேட்பார்கள். அல்லாவிட்டால், உங்கள் நாட்டு வர்த்தக ஒலிப்பரப்பைத் தான் எல்லோரும் கேட்பார்கள்.

கே: தாங்கள் யாருடைய கச்சேரியை விரும்பிக் கேட்பீர்கள்?
ப: மதுரை மணி ஐயரின் கச்சேரியை

கே: இருகுரல் இசையில் தங்கள் குரலுக்கு ஏற்றாற் போல் பாடுபவர்கள் யார்?
ப: முதலில் சுசீலா ; அடுத்தது ஜிக்கி.

கே: தாங்கள் ஏதாவது படங்களில் நடித்ததுண்டா?
ப: ''பெண்ணரசி''யில் புலவர் வேடம் தாங்கியிருக்கின்றேன்.

கே: யாழ்ப்பாணம் வீரமணியின் பாடல்களைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?
ப: மிகவும் நுட்பமான கருத்துக்களை வைத்துப் பாடல்களை இயற்றுகின்றார். கொத்தமங்கலம் சுப்பு, கி.வா.ஜகந்நாதன் போன்ற பெரியார்களே ... போது நான் என்ன சொல்ல முடியும்? எதிர்காலத்தில் அவர் சிறப்பாக விளங்குவார்.

''நம் நாட்டுச் சங்கீதத்தை உலகம் முழுவதுமே போற்றுகின்றது. ஆனால் இங்குள்ள கலைஞர்களை நமது அரசுகள் ஆதரிப்பதில்லை. ஐந்தோ, பத்தோ' என்று நாம் சம்பாதிக்கத் தொடங்கும்போது 'வருமான வரி' என்று சொல்லி எல்லாவற்றையும் தட்டிப் பறிக்கின்றது அரசு. எத்தனையோ பொதுஸ் நிறுவனங்களுக்காகக் கச்சேரி செய்து நிதி வசூலித்துக் கொடுத்த தியாகராஜ பாகவதர் இப்போது பணமின்றிக் கஷ்டப்படுகின்றார். நமது அரசாங்கம் இப்போதாவது உதவி செய்யக்கூடாதா?'' என்று கண் கலங்கக் கேட்டார்.
''அரசின் செவிகளில் ஏறாவிட்டாலும் , பொதுமக்களுக்கு இதை எடுத்துரைக்கின்றேன்'' என்று சொல்லிக் கொண்டே நான் புறப்பட்டேன். ''விரைவில் இலங்கைக்கு வந்து என் எண்ணற்ற ரசிகர்களைச் சந்திப்பேன் என்ற சந்தோஷச் செய்தியை 'கலைச்செல்வி' மூலம் இலங்கை ரசிகர்களுக்குத் தெரிவியுங்கள்'', என்று சொல்லி ''கலைக்கும் இலக்கியத்துக்கும் தொண்டு செய்யும் கலைச்செல்வி என்றும் வாழ்க'' என்று வாழ்த்தி வழியனுப்பினார் சௌந்தரராஜன்.

## இருப்பிடம் தெரியாத மனிதம்



சித்தத்தின் எண்ணங்கள்
சிறகடித்துப் பறக்கும்...!
மொத்தப் பிரபஞ்சமும்
முன்னாலே முடங்கும்...!
விடுதலையின் வாயிலில்
விடியாமல் போனது விடியோன்!
புயலில் அடிபட்டு
ஓய்ந்திருந்தது புழுதியின் படலம்...!
கண்ணில் விழுந்த
சிறு மணல்களை கசக்கி
விழித்தெழுந்து
திசைகளை நோக்கியது பயணம்...!
கால்கள் வேகத்தை இழந்திட
கோள்களும் மாற்று கிரகத்தை அடைந்தன..!
மதி ஒளியில் மயங்கிய நிலையில்
மண்ணுக்கும் வெறுப்பூட்டியது....!
விலங்கிட்ட கைகள் நடுங்கிட
வெண் பனியில் பாய்கள் உறங்கிட
குடங்கியது ... ல்கள்...!
பசித்த வயிற்றுக்கு
பாடையில் ஏற்றி
பட்டாசு ஊட்டிவிடும் உறவுகள்....!
இல்லாத கடவுளுக்காய்
இருக்கைகளை களைந்து
இருப்பிடம் தெரியாத மனிதர்களாய்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TATA

# பிரச்சினைக்குத் தீர்வு முன்னேற்றம் உறுதி




* இலவச காப்புறுதி

* மிகக் குறைந்த ஆரம்பக் கொடுப்பனவு

தரமுயர்ந்த சேவை

பிரச்சினைகள் இன்றி லீசிங் வசதி பெறுங்கள்

இன்றே அழையுங்கள்: பிரின்ஸ் 0773-523572

டானியல் 0777-813269

வர்த்தக வாகனத் துறையில் மாபெரும் நிறுவனமாகிய டிமோவும் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும் LOLC மைக்ரோ கிறெடிட்டும் இணைந்து உங்கள் வியாபார வளர்ச்சிக்குத் தேவையான **டிமோ பட்டி, டிமோ பட்டா அல்லது** TATA Super ACE வாகனத்தைப் பெறுவதற்கு அபூர்வ வாய்ப்பை வழங்குகின்றன. டிமோ பட்டியை அல்லது டிமோ பட்டாவை அல்லது TATA Super ACE ஐ கொள்வனவு செய்வதற்கு LOLC மைக்ரோ கிறெடிட் மூலம் இலவச காப்புறுதியுடன் இலகுவான லீசிங் வசதியைப் பெறுங்கள்.

டிமோ பட்டியை அல்லது டிமோ பட்டாவை அல்லது TATA Super ACE ஐ கொள்வனவு பிரச்சினையை தீர்த்து செய்முன்னேற்றப் பாதையில் விரைவாகப் பயணியுங்கள்!

* விலை ரூ.655,000 தொடக்கம்

dimo TECHNOLOGY
0777 393 597

LOLC மைக்ரோ கிறெடிட்

## லீசிங்கிற்காக அங்குமிங்கும் அலைந்து களைப்படைந்துவிட்டீர்களா?

# அப்படியானால், சரியான லீசிங் தெரிவிற்கு சம்பத் வங்கிக்கு வாருங்கள்!



நீங்கள் சம்பத் வங்கிக் கணக்கு இல்லாதவராய் இருந்தாலும் சரி, உங்களுக்கு சம்பத் வங்கியிடமிருந்து குறைந்த வட்டி வீதம் மட்டுமன்றி தேவைப்படும் குறைந்த ஆவணங்களுடன் சிறந்த லீசிங் வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

365 நாட்களும் சிறந்த சேவையை வழங்குகின்ற தர்மபால மாவத்தை, வெள்ளவத்தை மற்றும் கிரிபத்கொடை ஆகிய மூன்று சுப்பர் கிளைகள் உட்பட நாடு முழுவதிலுமுள்ள 210 சம்பத் வங்கிக் கிளைகள் உங்கள் வசதிக்காக திறந்திருக்கும்.

இன்றே 0112 30 30 50 எனும் இலக்கத்திற்கு அழையுங்கள்.

சம்பத் வங்கி லீசிங்

www.sampath.lk

சம்பத் வங்கி Sampath Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறையில் செல்போன் திருடிய பூனை கைது



ரஷ்யாவின் சிறை ஒன்றுக்குள் செல்போனை கடத்திச் சென்ற பூனை கைது செய்யப்பட்டுள்ளது. உழவு பார்த்து கைதிகளிடம் செல்போன், பற்றரிகளை எடுத்து சென்று தந்த குற்றத்துக்காக இந்த திருட்டு பூனை கைது செய்யப்பட்டுள்ளது. ரஷ்யாவின் கோமி மாகாணத்தில் உள்ள ஸ்கைடிவ்கார் அருகே உள்ள சிறைக்கு பூனை ஒன்று அடிக்கடி சென்று வந்துள்ளது. சிறை காவலர்கள் அதன் மீது சந்தேகப்பட்டு பிடித்து பார்த்தனர். அப்போது தான் அதன் வயிற்றுப் பகுதியில் செல்போன்கள் மற்றும் சார்ஜர்கள் இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து பொலிஸார் அந்தப் பூனையை கைது செய்தனர். சிறைக்குள் மேலும் என்னென்ன பொருட்கள் கடத்தி வரப்பட்டன என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக கடந்த ஜனவரி மாதம் பிரேசில் நாட்டு சிறை ஒன்றுக்குள் சென்ற பூனையின் உடம்பில் செல்போன், பற்றரிகள், பிளேடுகள் உள்ளிட்டவை இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.




# அசையும் ரோபோ புத்தர் தென்கொரிய கலைஞர் சாதனை

எம்மை வியக்கச் செய்யும் இயந்திர புத்தர் சிலைகளைத் தென்கொரியக் கலைஞரான வாங், ஷி ஒன் என்பவர் வடிவமைத்துச் சாதனை படைத்துள்ளார். புத்தர் மற்றும் ஞானமடைந்த புத்தரின் வடிவமான போதிசத்துவர் ஆகியோர் இயங்கும் விதத்தில் அமைக்கப்பட்ட இந்த C ¯ ¢ v ‖ (Mechanical) புத்தர் சிலை விஞ்ஞானம், தொழிநுட்பம் என்பவற்றுடன் மனிதனை இணைக்கும் பாலமாகச் செயற்படக் கூடியது. மின்சாரம் மூலம் இயங்கக் கூடிய பல கைகள் மற்றும் போதிசத்துவர் அமர்ந்திருக்கும் தாமரைப் பூ என்பவற்றுடன் மனித உருவில் (Humanoid) இச்சிலையில் திரும்பத் திரும்ப இடம்பெறும் அசைவுகள் மனதில் தியானம் ஒன்று கூட உதவும் வகையில் உள்ளது. இதே வேளை இப்படைப்புக்களை உருவாக்கியவர் இவ்வாறு கூறியுள்ளார். 'எனது நோக்கம் மனிதனும் தொழிநுட்பமும் இணையும் ஒரு எதிர்காலத்தைக் கண்டுபிடித்து அதன் மூலம் உருவாகும் நேர்மறையான ஒளியை உலகம் முழுதும் பரப்புவது தான்' என்று குறிப்பிட்டுள்ளார். சாந்தமாக அசையும் ரோபோ புத்தர் பார்ப்பவர்களை பரவசமுறச் செய்கின்றார் என்பதில் மிகையில்லை.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பயணிக்கும் புறா

வட அமெரிக்காவின் மலைப் பகுதிகளில் ஒரு காலத்தில் கூட்டம் கூட்டமாக பறந்து கொண்டிருந்தவை தான் பயணிப் புறா (Passenger Pigeon) எனப்படும் காட்டுப் புறாக்கள். எமது ஊர் காக்கையைப் போல இவை காணும் இடங்களில் எல்லாம் நிறைந்தி ருந்தன. வட அமெரிக்காவில் கோடிக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருந்த இந்த புறாக்கள், கூட்டமாக வானில் பறக் கத் தொடங்கினால் அந்த கண்கவர் ஊர்வலம் முடிய பல மணி நேரம் ஆகுமாம்.

1873ஆம் ஆண்டு, ஏப்ரல் 8ஆம் திகதி, மிச்சிகன் நகரின் வான்வெளியில் காலை 7.30 மணிக்கு தொடங் கிய புறா ஊர்வலம் ஒன்று மாலை 4 மணிக்குதான் நிறைவு பெற்றதாக உள்ளூர்வாசி ஒருவர் எழுதி வைத்த குறிப்பு இருக்கிறது. அண்ணாந்து பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பயணிப் புறாக்கள் சாரை சாரையாக வந்துகொண்டே இருக்கும் காட்சிகள் அந்த நாள்களில் சர்வ சாதாரணமான ஒன்றாக இருந்திருக்கிறது. வான்வெளியை அடைத்துவிடும் இந்த பெரிய ஊர்வலங்களால் அந்த பகுதியே கடும் மேக மூட்டத்துக்கு உள்ளானதைப் போல் மாறி விடுமாம்.

இவ்வாறு பார்ப்பவர் கண்ணை உறுத்தும் அளவுக்கு பறந்து பறந்து காட்டியது தான் கடைசியில் இவற்றுக்கு எமனாக அமைந்து விட்டது. வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் இந்த புறாக்களை வேட்டையாடத் தொடங்கினர். ஆரம்ப நாள்களில் குடியேறியவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், வேட்டையும் குறைவாக இருந்தது. பின்னர் இது அதிகரிக்க அதிகரிக்க, வேட்டையாடப்படும் பறவைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இவற்றை வேட்டையாடுவதும் ஒன்றும் கடினமாக இருக்கவில்லை. வலையை விரித்தால் கொத்துக் கொத்தாக வந்து சிக்கின. துப்பாக்கியால் சுட்டால் சத்தம் கேட்டே பல புறாக்கள் மூச்சை நிறுத்திக் கொண்டன. கூட்டமாக பறக்கும்போது சும்மா ஒரு கட்டையை வீசி எறிந்தே பல புறாக்களை வீழ்த்தியிருக்கிறார்கள்.

வட அமெரிக்காவில் அக்காலத்தில் இருந்த மொத்த பறவைகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு இந்த பயணிப் புறாக்கள் இருந்திருக் கின்றன. தோராயமாக 5 பில்லியன் பறவைகள் இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். பல பறவைகள் ஒரே மரத்தை ஆக்கிரமித்ததால், அவற்றின் பாரம் தாங்காமல் மரங்களின் கிளைகளும், சமயங்களில் மரங்களுமே முறிந்து விழுந்த சம்ப வங்களும் அரங்கேறியிருக்கின்றன. இப்படி நிறைந்து கிடந்த பயணிப் புறாக்கள், ரயில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மிக வேகமாக அழிவை நோக்கிச் சென்றன.

இவற்றை அதிகமாகக் கொன்று குவித்து ரயில் மூலம் நியூயோர்க் போன்ற இடங்களுக்கு அனுப்பத் தொடங்கினர். கப்பல் மூலமும் புறா வர்த்தகம் லாபகரமாக நடைபெற்று வந்தது. புறாக்கறி விலை மலிவாகக் கிடைத்ததால், இதற்கு அமெரிக்கர்கள் மத்தியில் கிராக்கி அதிகம். இதனை முழு நேரப் பணியாகவே செய்து புறாக்களை வேக வேகமாக பரலோகம் அனுப்ப ஆரம்பித்தார்கள். 1855ஆம் ஆண்டு நியூயோர்க் நகருக்கு மட்டும் 3 லட்சம் புறாக்கள் பார்சல் செய்யப்பட்டன. இது அசுர வேகத்தில் அதிகரித்து 1869ஆம் ஆண்டு மிச்சிகன் நகரில் இருந்து வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளுக்கு 75 லட்சம் புறாக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பொதுவாக ஒரு பெண் புறா ஆண்டுக்கு ஒரு முட்டைதான் இடும். எனவே அழிக்கப்படும் வேகத்துக்கு, அவற்றால் இனப்பெருக்கம் செய்ய முடியவில்லை. அதேபோல வட அமெரிக்காவில் குடியேறியவர்களால் அவற்றின் உணவு ஆதாரங்களும் மிகக் குறைந்துவிட்டன.


இதுபோன்ற காரணங்களால் பயணிப் புறா 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தனது பயணத்தை முற்றிலு மாக நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது. உலகின் கடைசி பயணிப் புறாவான மார்த்தா, சின்சினாட்டி உயிரியல் பூங்காவில், 1914ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு தன் மூச்சை நிறுத்தியது.


1873ஆம் ஆண்டு, ஏப்ரல் 8ஆம் திகதி, மிச்சிகன் நகரின் வான்வெளியில் காலை 7.30 மணிக்கு தொடங் கிய புறா ஊர்வலம் ஒன்று மாலை 4 மணிக்கு தான் நிறைவு பெற்றதாக உள்ளூர்வாசி ஒருவர் எழுதி வைத்த குறிப்பு இருக்கிறது. அண்ணாந்து பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பயணிப் புறாக்கள் சாரை சாரையாக வந்துகொண்டே இருக்கும் காட்சிகள் அந்த நாள்களில் சர்வ சாதாரணமான ஒன்றாக இருந்திருக்கிறது

---

இங்கு 8.6 மடங்கு உப்புச்செறிவு அதிகமானதால் உயிரினங்களின் குடி நீராகவோ வாழ்விடமாகவோ இது இருப்பதில்லை. அதனால் சாக்கடல் எனப்படுகிறது.

# இறந்து கொண்டிருக்கும் சாக்கடல்





சாக் கடல் அல்லது 'டெட் சீ' என்பது இஸ்ரேலிற்கும் ஜோர்தானிற்கும் இடையில் இருக்கும் ஓர் ஏரியாகும். ஆனால் கடல் என்ற அடை மொழியுடன் அழைக்கப்படுகிறது. இது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 400 மீற்றர் கீழே உள்ளது. சாதாரண கடல் நீரைவிட சுமார் 8.6 மடங்கு உப்பின் செறிவு அதிகமானது. அதனால் அடர்த்திகூடிய இக்கடலினுள் ஒரு நபர் குதித்தால் அவர் கடலால் அமிழ்த்தப்படமாட்டார், மாறாக மிதப்பார்.

**எவ்வாறு பிரபலமானது?**

உண்மையில் சாக்கடல் பிரபலமானது SPA {ஆரோக்கிய நீரூற்று சிகிச்சை / நிறுவனங்களின் பொதுப்பெயர்] நிறுவனங்களின் விளம்பரங்களால்தான். இங்கிருக்கும் அதி செறிவான உப்புநீர் உடலில் உள்ள கிருமித் தொற்றுக்களை நீக்கவல்லது என நம்பப் படுகிறது. அமிழ்த்தும் தன்மையற்ற கடல் என்பதால், விநோதத்துக்காக பல சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுகிறார்கள். [ஏனைய சுற்றுலாத் தலங்களுடன் இப்பிடுகையில்வருகைமிக்குறைவானது!]

**சாக்கடல் என அழைக்கக் காரணம்**

இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இங்கு 8.6 மடங்கு உப்புச் செறிவு அதிகமானதால் உயிரினங்களின் குடி நீராகவோ வாழ்விடமாகவோ இது இருப்பதில்லை. அதனால் சாக்கடல் எனப்படுகிறது. [எனினும் எந்த சூழலிலும் A öÇUT i ¯ £U¡¡ ¯ öUPí öÚ halophilis மற்றும் archea வகை பக்ரீரியாக்கள் இங்கு வாழ்கின்றன] பல ஆறுகளில் இருந்து வரும் நீர் இங்கு தேங்கி நிற்கின்றது. ஆனால், இங்கிருந்து வேறு எங்கும் நீர் விரயமாவதில்லை. ஆறுகளின் நீர் இறுதியாக வந்தடையும் இடம் என்பதால் 'டெட் சீ' அல்லது சாக்கடல் எனப்படுகிறது.

**இறந்துகொண்டிருக்கும் சாக்கடல்**

வெப்ப நிலை மாற்றம் காரணமாக நாளொன்றுக்கு சுமார் 7 மில்லியன் தொன் நீர்சாக்கடலைவிட்டுவெளியேறு கின்றது. அத்தோடு இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் நாடுகள் சாக்கடலின் மூல நீர் வருகைக்குப்பொறுப்பான ஜோர்தான் ஆற்றை பல கிளைகளாகப் பிரித்துப் பயன்படுத்தி வருவதால் சாக்கடலுக்குரிய மூல நீர் வருகை குறைவடைந்துள்ளது. இதனால் சாக்கடலின் பல பகுதிகளில் தரைத்திட்டுக்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org